Vol. XI 1933

செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

பதினொன்றாம் சிலம்பு

இதழாசிரியர் கூட்டத்தலைவர்,
மா. வே. நெல்லையப்ப பிள்ளை
அவர்கள், பி. ஏ.

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
லிமிடெட்.

சீ முக ஞூ

The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.,
Tinnevelly & Madras.

[Price Rs 2.

உள்ளுறை

[* இக்குறியிடப்பட்டவைகள் இத்தொகுதியில் முடிவு பெறாது தொடர்வன.]

படங்கள்

செந்தமிழ்ச்செல்விப் பைண்டுத்தொகுதிகள்

[இதுகாறும் வெளிவந்த பதினோராண்டு செல்வித்தொகுதிகள் அழகியனவாய்க கட்டிடஞ் செய்யப்பட்டிருக்கின்றன.]

இதன்கண் அரும் பெருந் தமிழ்ப்புலவர்களால் எழுதப் பெற்ற தமிழ் இலக்கணம், இலக்கியம், மொழி யாராய்ச்சி, சைவ சமயம், திருமுறை, புராணம், இதிகாசம், வியப்பு மொழிகள் (Wits & Humours), நண்ணூல் (Sciences) களின் சாரம், உவமை மொழிகள், சீர்திருத்த அறிவுரைகள், புதிய செய்யுள்கள் முதலியன வெளிவந்திருக்கின்றன.

தமிழ்க்கல்வி பயில விரும்புவோர் இத்தொகுதிகளை முறையே கற்பின், சிறந்த புலமை எய்துவர் என்பது திண்ணம்.

நூல்நிலையங்கட்கு இன்றியமையாதன.

விலை விபரம்

		ரூ	அ
1 முதல் 4, 9, 10-தொகுதிகள் தனித்தனி	விலை	3	8
5 முதல் 8 தொகுதிகள் தனித்தனி	விலை	4	8
11 வது தொகுதி	விலை	2	0
11 தொகுதிகளும்	மொத்த விலை	41	0

குறிப்பு:—மிகுதியான தொகுதிகளை ஒரே முறையில் வாங்குபவர்கட்குத் தாராளமான கழிவு கொடுக்கப்படும்.

தமிழ் மெய்யன்பர்கட்கு
ஒரு வேண்டுகோள்

நமது 'செந்தமிழ்ச் செல்வி' பதினோராவது தொகுதியை 6 பகுதிகளுடன் முடித்துக்கொண்டு பன்னிரண்டாவது தொகுதியை 1108-ஆம் ஆண்டு ஆவணி (10·9-3) முதல் துவங்குகின்றோம். இனி ஒவ்வொரு தொகுதியும் ஆவணிமுதல் ஆடி ஈருக திங்கள் தோறும் முறையே ஒவ்வொரு பகுதியாக வெளியிடப் பெற்று 12 இதழ்களில் முடிவு பெறும்.

நந் தமிழ்நாட்டில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக் கேற்பட்ட மாதப் பத்திரிகைகளில் நமது செந்தமிழ்ச் செல்வியே திங்கள் தோறும் தவருமல் வெளிவந்துகொண்டிருக்கிற தென்பதை அன்பர்கள் அறிவார்கள்.

இப்போது சில ஆண்டுகளாக நம் நாட்டில் விகடப் பத்திரிகைகள் பல தோன்றித் தமிழ் மக்களனைவர் கருத்தையும் இழுத்து வருவதால் இலக்கியப் பத்திரிகைகள் ஆதரவின்றித் தயங்குகின்றன.

ஒரு மொழி அதன் இலக்கிய வளர்ச்சி பற்றியே சிறக்கும் அவ் விலக்கிய வளர்ச்சி கருதும் நஞ் செந்தமிழ்ச் செல்வி போன்ற பத்திரிகைகளை வாங்கிப் போற்றிக் கற்று ஆராத் தமிழ்த்தேன் துய்க்குமாறு தமிழ் அன்பர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

நமது கையொப்ப நண்பர்கள் ஒவ்வொருவரும் செந்தமிழ்ச் செல்விக்கு ஒவ்வொரு புதிய கையொப்ப நண்பரைச் சேர்த்தனுப்பி யுதவுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்ருர்கள்.

பன்னிரண்டாவது தொகுதியில் அரிய புலமைக் கட்டுரைகளும் பிறவும் பல தலைப்புக்களில் வெளியிடப்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

தமிழ்நலங் கருதிச் செல்வியைப் போற்றுமின் !

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.



ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்

திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு கக | மெய்கண்டான் யாண்டு-எாய தைத் திங்கள் 1933ஞு ஜனவரிமூ—பிப்ரவரிமூ | பரல் க

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் தனித்திருத்தாண்டகம்

நற்பதத்தார் நற்பதமே ஞான மூர்த்தி நலஞ்சுடரே
நால்வேதத் தப்பா னின்ற
சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலா யிதுவுன் றன்மை
நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னு
ணிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யானுன்னை விடுவே
னல்லேன் கனகமாமணி நிறத்தெங் கடவுளானே.

பதவுரை :—

எம் கனகமாமணி நிறத்துக் கடவுளானே,—அடியார்களாகிய எங்களுக்குப் பொன்போலும், மிக்க ஒளியுடைய மாணிக்கம்போலுஞ் சிவந்த நிற மேனியையுடைய கடவுளே,

நற்பதத்தார் நற்பதமே—வீட்டின்ப நிலையில் நின்னோடு இரண்டறக் கலந்திருக்கின்ற முத்தர்களுக்குப் பேரின்பப் பொருளே,

ஞானமூர்த்தி—அறிவுப் பொருளே,

நலம் சுடரே—பேரொளிப் பொருளே,

சொற்பதத்தார் சொற்பதமும் கடந்துநின்ற—(சுத்தமாயையில்) சொல்லும் பதமுமாயுள்ள மந்திரங்களைக் கணிக்கின்ற மந்திரமூர்த்திகள் சொல்லுகின்ற மந்திரங்களைக் கடந்து நிற்கின்ற,

சொலற்கு அரிய சூழலாய்—(மனதினாலே நினைத்தற்கும்) நாவினாலே சொல்லுதற்கு முடியாத குறிப்பொருளா யிருப்பவனே,

நால்வேதத்து அப்பால்நின்ற—(பிரகிருதி மாயைக்குச் சேர்ந்த தூல வைகரி வாக்காற் கூறப்படுகின்ற) நான்கு வேதங்களையுங் கடந்து நிற்கின்ற

சொலர்கு அரிய சூழலாய்—(மனதினாலே நினைத்தர்கும்) நாவினாலே சொல்லுதற்கு முடியாத குறிப்பொருளாயிருப்பவனே,

இது உன் தன்மை—இவ்வாறு முத்தர்கள் நின்னோடு இரண்டறக்கலந்து உணரப்படுகிறவனாகியும், முத்தர்க ளல்லாதவர்களுக்கு அவர்களால் அறியப்படாதவனாகியும் இருத்தல் உனது இயல்பு. (ஆதலின் நான் உன்னை யடைதற்குச் செய்யும் உபாயமாவது)

நிலாவாத புலால் உடம்பு—ஒளிவிளக்க மில்லாத முடைநாற்றமுடைய எனது உடலில்

நிற்பது ஒத்து நிலையிலா நெஞ்சம் தன்னுள்—எப்பொழுதும் நிலைபெற்றிருத்தல்போல நின்று, அடிக்கடி மாறிக்கொண்டிருக்கிற நெஞ்சில்

புகுந்து நின்ற கற்பகமே—ஒளியாய் விளங்கி நிற்கின்ற கற்பகமரம் போன்று வேண்டுவார் வேண்டியதைக் கொடுக்கின்றவனே,

உன்னையான் விடுவேன் அல்லேன்—உன்னை விடாமல் இறுகப் பிடித்துக் கொள்வேன்.

இப்படிச் செய்வேனாகில் நீ என் சிந்தையைவிட்டுப் பிரியாமல் நிற்கவும், நான் தத்துவங்களை விட்டுப் பிரிந்து பிரிந்து தேய்ந்து தேய்ந்து எல்லாத் தத்துவங்களுக்கும் அப்பால் உன்னோடு ஒன்றாய்க்கலந்து முத்தர்களைப் போல் பேரின்பம் அடையும் பேற்றை அடைவேன் என்பது குறிப்பெச்சம்.

விளக்கவுரை :—

கனகமாமணி நிறம்=மாமணி—மாணிக்கம்; பொன்னினும் மிக்க ஒளியுடையது ஆதலின் அதனை மாமணி என்றார்.

நற்பதத்தார்—பதம்=இன்பம்; நற்பதம்=நல்ல இன்பம். வீட்டின்பம்; நற்பதத்தார்=வீட்டின்ப நிலையிலுள்ள முத்தர்கள். திருவாசகம் கண்டபத்து ௬-வது பாட்டில் 'நித்திக்கும் சிவபதம்' என்ற சொற்றொடரில் பதம் என்பது இன்பம் என்று பொருள்படுதல் காண்க.

நற்பதம்=பேரின்பப் பொருள். எல்லாப் பதங்களையுங் கடந்த பதம் ஆதலின் நற்பதம் என்றார். 'இன்பதனை யெய்துவார்க் கீயு மவர்க்குரு

வம்—இன்பகன மாதலினு லில்' என்று உமாபதி சிவாசாரியார் திருவருட்பயனிற் கூறியிருத்தல் காண்க. மாணிக்கவாசக அடிகள் "ஈறிலாப்பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே" என்றருளினர்.

ஞானமூர்த்தி—பேரறிவுருவன் - பேரறிவுப் பொருள். 'அருவு முருவு மறி ஞர்க் கறிவா முருவ முடையா னுளன்' என்று திருவருட்பயனிற் கூறியிருத்தல் காண்க. ஞானமூர்த்தி என்ற தொடரில் விளியுருபு தொக்கி நிற்கிறது.

நலஞ்சுடரே—பேரொளிப் பொருளே. நாதத்தையுங்கடந்த பேரொளி யாதலின் நலஞ்சுடரே என்ருர். அடிகள், கோயில் பெரியதிருத் தாண்டகம் ௰-வது பாட்டில் 'இருநிலனும் விசும்பும் விண்ணும் ஏழு லகுங் கடந்தண்டத் தப்பானின்ற பேரொளி' என்று கூறியருளினர்.

நலஞ்சுடர் என்பதனுல் சத்தும், ஞானமூர்த்தி என்பதனுல் சித்தும், நற்பதம் என்பதனுல் ஆனந்தமும் குறிக்கப்படுகின்றன. வீட்டின்பநிலையி லுள்ள முத்தர்களுக்கு அவர்கள் உணருகிற சத்தாயும் சித்தாயும் ஆனந்த மாயுஞ், சச்சிதானந்தமாய் அல்லது உண்மையறிவின்பமாய் விளங்கும் பொருள் என்பது கருத்து. பதி, பசு, பாசம் மூன்றும் நித்தியப் பொருள் கள்; உள்பொருள்கள். ஒளி பதிபசுபாசங்களுக்கும், அறிவு பதிபசுக்க ளுக்கும், இன்பம் பதிக்கும் உரிய குணங்கள். ஒளியாய் அறிவும் அறிவால் இன்பமும் உண்டாகின்றன.

சொற்பதத்தார்—என்பது இறைவனை மந்திர வடிவில் மந்திரங் கணித்து வழிபடுகிற சுத்தவித்தியா தத்துவத்திலுள்ள சப்தகோடி மகாமந்தி ரேசுவரர்களாகிய விஞ்ஞானகலர்களைக் குறிக்கிறது.

சொலற்கரிய சூழலாய்:—சூழல் என்பது சூழப்பட்ட இடம். குறியிடம். இறைவன் எல்லா உயிர்களும் எய்துதற்குரிய குறியிடமாயிருத்தலால் அடிகள் அவனைச் சூழல் என்ருர். 'மல்லை ஞாலத்து வாழு முயிர்க் கெலாம் - எல்லையான பிரானுர்' என்று அடிகள் திருக்கடம்பூர்த் திருக்குறுந்தொகை ௬-வது பாட்டிற் கூறியிருத்தல் காண்க. சொலற் கரிய என்பதற்கு இனமான (மனதினுல்) நினைத்தற்கரிய என்பதும் கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது. ஆய் - முப்பால்களுக்கும் பொது வாகிய முன்னிலை ஒருமைக் குறிப்பு வினைமுற்று விகுதி. மேலே 'நற்பதத்தார் நற்பதமே ஞானமூர்த்தி நலஞ்சுடரே' என்பதனுல் இறைவன் பதிஞானத்தால் சத்துச் சித்து ஆனந்தமாய் உணரப்படுகிற வன் என்பதும், அதன்பின்னே சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்துநின்ற (நினைத்தற்கரிய) சொலற்கரிய சூழலாய் என்பவற்ருல் முறையே பசுஞான பாசஞானங்களால் அறியப்படாதவன் என்பதுங்

கூறப்பட்டன. சத்துச் சித்து ஆனந்தம் மூன்றும் உணர்வின்கண் ஒன்றென அறிக.

நால் வேதத்தப்பானின்ற சொலற்கரிய சூழலாய்—சொலற்கரிய சூழலாய் என்ற 'சொற்ருெடரை சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற' என்பதனோடும், 'நால்வேதத்தப்பானின்ற' என்பதனோடுந் தனித்தனி கூட்டிப் பொருளுரைக்க.

சொற்பதத்தார் சொற்பதம்—என்பது சுத்தமாயையையும், நால்வேதம் என்பது பிரகிருதிமாயையையும் குறிக்கின்றன. நால்வேதம் பிரகிருதி மாயைக்குச் சேர்ந்த தூல வைகரிவாக்காற் கூறப்படுதலின் அது பிரகிருதி மாயையைச் சேர்ந்ததாகின்றது.

நிலாவாத புலால் உடம்பு—நிலவுதல்=ஒளிவிளங்குதல், நிலாவாத என்பதற்கு நிலையில்லாத என்றும் பொருள் கூறலாம். இறைவனது அருளொளி தடித்த தூல தன்மாத்திரை உடம்பில் மிகச் சிறிதே விளங்குதலால் நிலாவாத என்ருர். உடம்பே என்பதிலுள்ள ஏ - அசை. உடம்பு ஏழாம் வேற்றுமைத்தொகை உடம்பின்கண்.

நிற்பதொத்து நிலையிலா நெஞ்சம் தன்னுள்—நினைக்கிற நெஞ்சினுள் இறைவன் எப்பொழுதும் விளங்கினுலும், அந்நெஞ்சம் முதலாவது பிரகிருதி மாயையைச் சேர்ந்த அந்தக்கரணங்களிலும், பின் அசுத்த மாயையிலுள்ள வித்தியா தத்துவத்திலும், பின் சுத்தமாயையில் உன்மனுகலைவரையிலும் படிப்படியாய் மாறிநிற்க, அதில் அவன் விளங்கி வருதலால் 'நிலையிலா நெஞ்சம்' என்ருர். இப்படி மாறிவருகிற நெஞ்சிலும் இறைவன் அடங்கி நில்லாது அதனையுங் கடந்து நிற்றலால் நிற்பதொத்து என்ருர். தன் - அசைநிலை.

புகுந்துநின்ற கற்பகம்=இறைவன் எவ்விடத்திலும் எப்பொழுதும் நிற்றலால் புகுந்து நிற்றல் என்பது விளங்கிநிற்றல் ஆகும். கற்பகமரம் வேண்டியதை வேண்டுவார்க்குக் கொடுத்தல்பற்றி 'வேண்டுவார் வேண்டுவதே யீயும் இறைவனை'க் கற்பகம் என்ருர். 'வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்' என்று அடிகள் **திருமறைக்காடு திருத்தாண்டகம்** க-வது பாட்டிற் கூறியிருத்தல் காண்க.

உன்னையான் விடுவேனல்லேன்—சிந்தையில் **விடுவேன் அல்லேன்** - என்பது சிந்தையில் இடையருது நினைத்துக்கொண்டிருப்பேன் என்று பொருள்படும். விடுவேன் அல்லேன் - விடவேமாட்டேன் - இறுகப் பிடித்துக் கொண்டு சிறிதும் நழுவவிடேன். அவ்வாறு செய்கின்ற என்னை இறைவன் தத்துவங்களில் படிப்படியாய் இழுத்துச்சென்று, முடிவில் தத்துவங்களைக் கடந்த பெருவெளியை அடையச் செய்வன் என்ற கருத்தை அடிகள் கூறியருளினர். 'சிந்தையீர் உமக்கொன்று

சொல்லக்கேண்மின்—திகழ்மதியும் வாளரவுந் திளைக்குஞ் சென்னி - எந்தையார் திருநாமம் நமச்சிவாய - வென்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்கலாமே' என்று அடிகள் இக்கருத்தையே பலவகைந் திருத் தாண்டகம் ம-வது பாட்டிற் கூறியருளினர். "இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவதினியே' என்று மாணிக்க வாசக சுவாமிகள் திருவாசகம் பிடித்தபத்தில் கூறியருளினமை காண்க. "சிந்தையதென்னச் சிவமெனவேறில்லை - சிந்தையினுள்ளே சிவனும் வெளிப்படும்' என்ற திருமந்திரத்தின் கருத்தையும் நோக்குக.

இந்தத் தாண்டகப்பாட்டில் அடிகள் இறைவன் பதிஞானத்தா லுணரப்படுவதன்றி, பசுஞான பாசஞானங்களால் அறியப்படாத இயல்பு உடையன் என்பதும், அவ்வியல்புக்குத் தக்கதாக அவனை அடைதற்கு உபாயம் சிந்தையில் எப்பொழுதும் நினைந்து கொண்டிருத்தல் என்பதும், தாம் அந்த உபாயத்தைச் செய்து சிவப்பேறு பெற்றார் என்பதும் கூறித் தமது அநுபவத்தை உலகர்க்கு அவர்களுய்யுமாறு அறிவுறுத்துகின்றார்.

மா. வே. நெல்லையப்பபிள்ளை.

பண்டைத்தமிழ்ச் சொற்கள் (உ௫)

இயற்கை.

[திரு. மா. வே. நெல்லையப்பபிள்ளை அவர்கள், B.A.

இயற்கை என்ற பண்டைத்தமிழ்ச் சொல்லில் அடங்கிய கருத்துக்களை இக்கட்டுரையில் இயன்றவாறு கருதப்படும். இதனை இயவுள் என்ற பண்டைத்தமிழ்ச் சொற் கட்டுரைக்கு (செல்வி சிலம்பு பரல் பக்கம்) தொடர்ச்சியாகக் கொள்க.

(2) இயற்கை என்ற சொல் இயல் என்ற பகுதியும் கை என்ற தொழிற் பெயர் விகுதியுஞ் சேர்ந்து புணரியல் விதிப்படி லகர வொற்று றகர வொற்றாக மாறி ஆகியது. இந்த இயல் என்ற பகுதியிலிருந்து இயல்பு, இயல்வு, இயலல், இயலுதல் என்னுஞ் சொற்கள் முறையே பு, வு, அல், தல் என்ற தொழிற்பெயர் விகுதிகள் சேர்ந்து ஆயின. அவற்றுள் இயல்பு என்ற சொல் இப்பொழுது அருகி வழங்கப்பட்டு வருகிறது. ஒரு பகுதிச்சொல்லிலிருந்து பல சொற்கள் வந்தாலும் பிற்காலத்து அச்சொற்கள் சிறிது வேறுபாடுடைய பொருள்களில் வழங்கப்படுகின்றன. அவற்றுள் இயலல் இயலுதல் என்ற இரண்டு சொற்களும்

ஒருபொருளன. இயல்பு என்ற சொற்கும் இயலல் அல்லது இயலுதல் என்ற சொல்லுக்கும் சிறிது பொருள் வேறுபாடு உண்டு. அவ்வாறே இயல்பு என்ற சொல்லுக்கும் இயற்கை என்ற சொல்லுக்கும் சிறிது பொருள் வேறுபாடு உண்டு.

(3) இனி இயல் என்ற தெரிநிலைவினைப் பகுதிச்சொல்லே ஒருகாலத்தில் இய என்ற பகுதியடியாகப் பிறந்த தொழிற்பெயரா யிருந்தது. இய என்ற பகுதிச்சொல் தன்னுடன் அல் என்ற தொழிற்பெயர்விகுதி சேருங்கால் நிலைமொழி யகர வுயிர்மெய் யிலுள்ள அகரங் கெட்டு இயல் என ஆகியது, பல அணி பல்லணி என வருதல்போல. தலைவன் என்ற பொருளில் பண்டைக் காலத்தில் கடவுளுக்கு வழங்கப்பட்டு வந்த இயவுள் என்ற சொல் லும் இய என்ற பகுதிச்சொல் லடியாகப் பிறந்த சொல்லாகும். இய என்பது அசை (பிறவினை) - செலுத்து என்று பொருள்படும். கடவுள் உயிர்ப் பொருளையும் உயிரில் பொருளையும் தலைவனுய்ச் செலுத்தும் தொழிலைச் செய்து வருதலால் அவனுக்குப் பண் டைத் தமிழ்மக்கள் இயவுள் என்ற பெயரை வழங்கிவந்தார்கள். இயவுள் என்பது செலுத்துதலுக்கு ஆகி, ஆகுபெயரால் செலுத்து தலைச் செய்கிற கடவுளுக்கு ஆயிற்று. 'பெரியோரேத்தும் பெரும் பெயரியவுள்' எனத் திருமுருகாற்றுப்படை 274வது வரியில் வருதல் காண்க. இயவன் என்ற சொல்லும் (இய + அன்) தலைவன் என்ற பொருளில் வழங்கப்பட்டு வருகிறது.

(4) இய என்ற பகுதிச்சொல்லடியாக இயக்கு, இயக்கம், இயங்கு என்ற சொற்களும் வந்தன. வழியானது அதனில் நடக் கும் ஒருவனை ஓரிடத்துக்குச் செலுத்துதலால் இயக்கம் என்பது வழி என்ற பொருளில் வழங்கப்பட்டு வந்தது. 'வெயில் புறந் தருமின்ன இயக்கத்து' என்று மலைபடு கடாம் 274வது வரியில் அஃது இப்பொருள்படுதல் காண்க.

இன்னும் இய என்ற பகுதி சிறிது மாறி இயை என்ருகி அந் தச் சொல்லி லிருந்து இயைபு இயைவு இயைதல் என்ற சொற் களும் உண்டாயின. செலுத்துதல் செலுத்தப்பட்ட உயிருக்கு நன்மையைச் செய்தற்கு அவ்வுயிரினது தன்மைக்குப் பொருந்தும் படியிருத்தல் வேண்டுமாதலின் இயை என்ற சொல் பொருந்து அல்லது இணங்கு என்ற பொருளில் வழங்கப்பட்டது. இந்த

இயை என்ற சொல் இசை எனமாறிச் சுரம் பொருந்துதலையுடைய இசை (சங்கீதம்) என்ற பொருளிலும் வருகின்றது, வயம் வசம் என்று வருதல் போல. அவ்வாறே இயைவு என்ற சொல் இசைவு என்றாகிப் பொருத்தம் அல்லது இணக்கம், உடன்படுதல் என்ற பொருள்களில் வழங்கப்பட்டு வருகின்றது. பொருந்து என்ற பொருள் பெறும் இசை என்ற சொல் வாய், உதடு, பல் முதலிய உறுப்புக்கள் பொருந்துதலால் உண்டாகும் சொல்லுக்கும் பெயராயிற்று. இசைத்தான் என்ற தெரிநிலை வினைச்சொல் சொன்னான் என்று பொருள்படும்.

(5) இய அல்லது இயல் என்ற பகுதிச்சொல் வடியாக இயற்று என்ற சொல் செய்து என்ற பொருளில் வந்தது. அசைத்தலினால் செயல் உண்டாகிற காரணம் பற்றி இயற்று என்பதற்குச் செய்து என்ற பொருள் வந்தது.

(6) மேற்கூறியபடி இய என்ற பகுதியடியாகப் பிறந்த இயல் இயல்பு இயற்கை முதலிய தொழிற் பெயர்ச்சொற்கள் எவ்வாறு குணத்தைக் குறிக்க வரும் என்ற வினா நிகழ்த்தின் தொழிலிலிருந்து குணம் உண்டாகிறது என்பதே அதற்கு விடையாகும். ஒருவன் பிற உயிர்களுக்கு உணவளித்தல் கல்வி கற்பித்தல் முதலிய நற்றொழில்களைச் செய்து பழகுவானாயின் அவனுக்கு உயிர்களிடத்தில் அன்பு என்ற குணம் வளர்கிறதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

(7) இய என்ற பகுதியிலிருந்து இயல் என்ற சொல்லும் இயல் என்ற பகுதியிலிருந்து இயற்கை என்ற சொல்லும் வந்தமைபோல், செய் என்ற பகுதியிலிருந்து செயல் என்ற சொல்லும், செயல் என்ற பகுதியிலிருந்து செயற்கை என்ற சொல்லும் வந்துள்ளன.

(8) மேற்கூறியவாற்றால் இயற்கை என்ற சொல் முதலாவது இயக்குதல் (அசைத்தல்) என்ற பொருளில் வந்தது என்பதைக் கண்டோம். யாரால் அல்லது எதனால் இயக்கப்பட்டது என்ற கேள்வி ஒருவன் உள்ளத்தில் எழும். கடவுளுடைய அருட்சக்தியால் இயக்கப்பட்டது என்பதே அதற்கு விடையாகும். கடவுள் உயிர்ப்பொருளையும் உயிரில் பொருளையும் அருட்சக்தியால் இயக்கினாலன்றி அவைகள் தாமாக இயங்கா. கூத்தப்

பிரான் சிற்றம்பலம் என்ற பெருவெளியில் நடனம் செய்தல் அவ் வியக்கத்தைக் குறிக்கிறது. 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்ற தாயுமான அடிகள் திருவாக்கும் அவ்வுண்மையைப் புலப் படுத்தும். கடவுள், உயிர்ப்பொருளையும் உயிரில்பொருளையும் இயக்குதல் உயிர்களினது அறிவு வேட்கை செயல்கள் விளங்கி அவை நலமடைதற் பொருட்டு நிகழ்தலின் அவ்வியக்கம் ஒரு குறித்த நற்பயன்பற்றி நிகழ்தல் வேண்டும். ஆகவே இயற்கை என்ற சொல்லுக்குக் கடவுளால் உயிர்ப்பொருளும் உயிரில் பொரு ளும் உயிர்களுக்கு நலமுண்டாதற் பொருட்டு இயக்கப்படுந் தொழிலால் உண்டாகுந் தன்மை என்பது அச்சொல்லாற் பெறப் படும் முதற் பொருளாகும் (Primary meaning).

(9) கடவுள் உலகத்தை யெல்லாம் இயக்கினுலும் ஆறறி வுள்ள மக்களல்லாத உயிர்களினும், உயிரில் பொருள்களினும் விளங்கும் கண்கவர் வனப்பானது இயற்கை அழகு என்று புலவர் களால் கூறப்படுகின்றது. காரணம் என்னவெனில் மக்கள் மட்டும் தாங்களாகவே ஓரளவுவரை இயற்கைக்கு இணங்கியும் இணங்காதும் ஒழுகுந் தன்வயம் (Freedom) உடையவர்களா யிருக்கிறார்கள் என்பது. ஏனைய வெல்லாம் இயற்கை விதிக்கு அடங்கியே ஒழுகுந் தன்மையுடையன வாதலின் அவைகளில் இயற்கை யழகு காணப்படுகிறது. ஆதலின் பண்டைத் தமிழ்ப் புலவர்கள் ஆறறிவுடைய மக்கள், தேவர்களை உயர்திணையின் பாலும், ஏனை உயிர்களை உயிரில் பொருள்களோடு சேர்த்து அஃறிணையின்பாலும் வைத்து இலக்கணத்தில் திணைப்பிரிவு செய் தனர். கடவுள் மக்கட்குமட்டும் ஓரளவுவரை தன்வயம் கொடுக்க வேண்டிய காரணம் யாதெனில் அவர்கள் தங்கள் பகுத்தறிவை, முதலாவது புலன்வழிச் செலுத்தித் தீய வழியில் ஒழுகியும், பின் அதனுல் வருந் துன்ப அனுபவத்தினாலே புலன்வழிச் செலுத்தாது நல்வழியில் ஒழுகியும் அவ்வறிவு விளக்க மெய்தி முன்னேற்றம் அடைதல் என்பது. மக்கள் தன்வயமுடையவர்களா யிருந்தா லன்றி அவர்களுக்கு அறிவு விளக்கம் எய்தாது. மக்கள் இயற்கை வழிக்குப் புறம்பாயும் ஒழுகுதலால் அவர்களிடத்தில் எப்பொழுதும் இயற்கை யழகு காணப்படுதலில்லை. இக்கருத்துப் பற்றியே ஔவைப்பிராட்டியாரும் 'அழகலாதன செயேல்'' என்று ஆத்திசூடியிற் கூறியருளினர். இயற்கை வழியிலொழுகும்

அறிவுடையார்களையே பண்டைத் தமிழ்ப் புலவர்கள் 'உலகம்' என்று கூறினர். (உலகம் என்பது உயர்ந்தோர்மாட்டே என்பது தமிழ் நூல்வழக்கு.)

10. இயற்கை (Nature) என்ற சொல்லுக்குக் கடவுளால் இயக்கப்படுந் தன்மையென்ற பொருளை யறியாதும், உயிரில்லாத ஐம்பெரும் பூதங்களும் ஒருவனால் அசைக்கப்பட்டாலன்றித் தாமே அசையா என்பது அறியாதும் கடவுளில்லை யென்று கூறிய மேற்குநாட்டு இயற்கை யாராய்ச்சியாளர்கள் ஏறக்குறைய 50 ஆண்டுகட்கு முன்னே பூதங்கள் அசைவதும், பகலவன், திங்கள் முதலிய கோள்கள் அசைதலும் இயற்கை (nature) என்று கூறி வந்தார்கள். ஆனால் அவர்கள் இப்பொழுது உலகத்தை அசைக்கும் சத்தி ஒன்று உளதென்றும், அச் சத்தியைத் தாங்கள் இன்னதென்று அறிய முடியவில்லை (Agnostics) என்றும் கூறுகிறார்கள். ஆனால் ஆராய்ச்சியறிவுத்திறனில்லாத ஒரு சில மக்கள் நமது நாட்டில் இருத்தல்போல மேற்கு நாட்டிலும் கடவுளில்லை என்னும் மக்கள் இப்பொழுது மிருக்கிறார்கள். கடவுளில்லை யென்ற கொள்கையானது அவர்கள் ஒழுகும் ஒழுக்கத்திற்குப் பொருத்த முள்ளதாயிருத்தல் போலும். அறிவு உலகத்தில் கடவுளில்லை யென்று கூறுகிறவர்கள் இப்பொழுது எந்நாட்டிலும் இல்லை.

(11) பண்டைத் தமிழ் நூல்கள் கூறுகிறபடி பண்டைத் தமிழ் மக்கள் ஒழுக்கம் இயற்கை வழித்தா யிருந்ததனால் இயல் இயல்பு என்ற சொற்கள் ஒழுக்கம் என்ற பொருளில் வழங்கப் பட்டுவந்தன. குறிஞ்சிப்பாட்டு ௰௫ - வது வரியில் 'சால்பும் வியப்பும் இயல்புங் குன்றின்' என்பதில் இயல்பு என்ற சொல்லுக்கு நச்சினார்க்கினியர் ஒழுக்கம் என்று பொருள் கூறியிருத்தல் காண்க. இன்னும் இயல் என்ற சொல் இயற்கை வழியிலுள்ள தன்மைக்கும் இயற்கை மொழியாயிருக்கிற தமிழுக்கும் வழங்கப் பட்டு வந்திருக்கின்றது. ஆற்றுநீர்போல் ஒழுகுதல் என்று பொருள்படும் ஒழுக்கம் என்ற சொல்லே அவர்கள் ஒழுக்கம் இயற்கை யொழுக்கமாயிருந்தது என்பதைப் புலப்படுத்துகின்றது. அவ்வாறே அவர்கள் அன்பு இயற்கை அன்பென்றும், அவர்கள் அறிவு இயற்கை யறிவென்றும், அவர்கள் மொழி இயல்மொழி அல்லது இயற்கைமொழி யென்றும், அவர்கள் சமயம் இயற்கை

நெறி என்றும், அவர்கள் நுகரும் இன்பம் இயற்கை இன்பம் என்றும், அகப்பொருட்டுறையிற் கூறப்படுகிற புணர்ச்சி இயற்கைப் புணர்ச்சி யென்றும் பண்டைத் தமிழ்ப் புலவர்களாற் கூறப்பட்டு வந்தன. உலகில் விளங்கும் கடவுளுடைய அருட்சத்தி விளக்கம் அவர்களுடைய உலக நெறிக்கு வழி காட்டியாகவும், அவ்வருட்சத்தியினது நேர்விளக்கம் அவர்களுடைய வீட்டு நெறிக்கு வழிகாட்டியாகவுமிருந்தன. திருவள்ளுவர் திருக்குறளிலும் ஏனைய சங்க நூல்களிலும் கூறப்படுகிற கருத்துக்களால் பண்டைத்தமிழ் மக்கள் உழவு, வாணிகம், அரசியல் முதலிய பல துறைகளிலும் இயற்கை வழியிலே ஒழுகிவந்தனர் என்ற உண்மையை நாம் தெற்றென அறியலாம். ஏறக்குறைய 1800 ஆண்டுகட்கு முன் அவர்கள் இயற்கை ஒழுக்கத்தை விட்டுப் பிற மக்களுடைய செயற்கை ஒழுக்கத்தைப் பின்பற்றி ஒழுகியதனுல் அவர்கள் முன் அடைந்திருந்த உயர்ந்த நாகரிக நிலையினின்றும் வழுவித் தாழ்ந்த நிலையை யடைந்து விட்டார்கள். பொய் சூது, வஞ்சனை, அழுக்காறு முதலிய தீய குணங்கள் அவர்களிடம் புகுந்தன.

(12) புறநானூறு கசுஉ - வது செய்யுள் "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்று கூறுகிறபடி பண்டைத்தமிழ் மக்களது இயற்கை ஒழுக்கமானது பிறமக்கள் எல்லாருடைய நலத்தையும் தங்கள் நலம்போலக் கருதி ஒழுகுந் தன்மையதா யிருந்தது. இக்காலத்திலோ (உலகில் சிறுபகுதி மக்கள் தவிர பெரும்பகுதி மக்கள்) வஞ்சனை வன்கண்மைக் கருத்துக்களும் பொய் புனைந்துரைகளும் நடிப்பு நாடகச் செயல்களும் பொதிந்தனவாகிய செயற்கை ஒழுக்கத்தை மேற்கொண்டு ஒழுகுகிறூர்கள். இந்தச் செயற்கை ஒழுக்கம் நமது இந்திய நாடுமுதலிய கிழக்கு நாடுகளிலும் மேற்கு நாடுகளிலும் பரவி யிருக்கின்றது. தற்கால உலகில் கூர்ந்த ஆராய்ச்சி அறிவுத்திறனும் மிக்க ஆதிக்கமும் செல்வாக்குமுடைய மேற்கு நாட்டுமக்கள் இயற்கை ஒழுக்கத்துக்கு இணங்கியுள்ள நடுவுநிலை அற ஒழுக்க உணர்ச்சியில் (balanced moral sensibility) குறைபாடு உடையவர்களா யிருக்கிறூர்கள். அந்தக் குறைபாடு அவர்களது முன்னேற்றத்தைத் தடைப்படுத்துவதாயிருக்கிறது. அந்தக் குறைபாட்டினின்று நீங்கி மேற்கு நாட்டுமக்கள் மேம்பாடு அடைவார்

களானல் அந்த மேம்பாடான குணம் கிழக்கு நாடுகளிலும் பரவுவதுமன்றிக் கிழக்கு நாட்டு மக்களிடத்தில் முன் விளக்கம் பெற்று இப்பொழுது மழுக்கம் அடைந்திருக்கிற உண்மைச் சமய உணர்ச்சியும் விளங்கும். அப்பொழுது கிழக்கு நாடுகளில் விளங்குகிற உண்மைச்சமய உணர்ச்சி மேற்குநாடுகளிலும் விளங்கும். இவ்வாறு இருவகை நாடுகளிலும் நடுவுநிலை அற ஒழுக்க உணர்ச்சியும் உண்மைச் சமய உணர்ச்சியும் விளங்கி வளர்ந்து அதனல் இப்பொழுதுள்ள துன்பங் குறைந்து இன்ப நலம் பெருகும். இருவகை நாடுகளும் நலம் அடையுமாறு இறைவன் அருள் செய்வாராக.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை

பதிற்றுப் பத்து விளக்கம்

(பண்டிட் A. நடராஜபிள்ளையவர்கள்)

(பத்தாஞ் சிலம்பு ருடு௮-ம் பக்கத் தொடர்ச்சி)

(3) பூத்த நெய்தல்

(கரு) பாட்டு

தொறுத்தவய லாரல் பிறழ்நவு
மேறு பொருதசெறு வுழாது வித்துநவுங்
கரும்பின் பாத்திப் பூத்த நெய்த
லிருங்க ணெருமையி னிரைதடுக் குநவுங்
ரு. கலிகெழு துணங்கை யாடிய மருங்கின்
வளைதலை மூதா வாம்ப லார்நவு
மொலி தெங்கி னிமிழ் மருதிற்
புனல் வாயிற் பூம் பொய்கைப்
பாடல் சான்ற பயங்கெழு வைப்பி
க0. னாடுகவி னழிய நாமந் தோற்றிக்
கூற்றடூஉ நின்ற யாக்கை போல
நீசிவந் திறுத்த நீரழி பாக்கம்
விரிபூங் கரும்பின் கழனி புல்லெனத்
திரிகாய் விடத்தரொடு காருடை போகிக்

கவைத்தலைப் பேய்மகள் கழுதூர்ந் தியங்க
ஊரிய நெருஞ்சி நீறுகு பறந்தலைத்
தாதெரு மறுத்த கலியழி மன்றத்
துள்ள மழிய வூக்குநர் மிடறபுத்
துள்ளுநர்ப் பனிக்கும் பாழா யினவே
காடே கடவுண் மேன புறவே
யொள்ளிழை மகளிரொடு மள்ளர் மேன
வாறே யவ்வனைத் தன்றியு ஞாலத்துக்
கூலம் பகர்நர் குடிபுறந் தராஅக்
குடிபுறந் தருநர் பார மோம்பி
யழல் சென்ற மருங்கின் வெள்ளி யோடாது
மழைவேண்டு புலத்து மாரி நிற்ப
நோயொடு பசியிகந் தொரீஇப்
பூத்தன்று பெருமநீ காத்த நாடே.

கொண்டு கூட்டு

[21 பெரும! 21] [11 கூற்றடூஉ நின்ற யாக்கை
போல 11] [1 தொறுத்தவய லாரல் பிறழ்நவு
மேறு பொருதசெறு வுழாது வித்துநவுங்
கரும்பின் பாத்திப் பூத்த நெய்தல்
இருங்க ணெருமையி னிரைதடுக் குநவுங்
கலிகெழு துணங்கை யாடிய மருங்கின் 5]
[6 (b) ஆம்பல் (a) வளைதலை மூதா (c) ஆர்நவும் 6]
[7ஒலிதெங்கி னிமிழ் மருதிற்
புனல்வாயிற் பூம் பொய்கைப்
பாடல் சான்ற பயங்கெழு வைப்பி
னாடுகவி னழிய 10] [12 நீசிவந்து 12] [10 நாமந்
தோற்றி 10] [12 இறுத்த நீரழி பாக்கம்
விரிபூங் கரும்பின் கழனி புல்லெனத்
திரிகாய் விடத்தரொடு காருடை போகிக்
கவைத்தலைப் பேய்மகள் கழுதூர்ந் தியங்க
ஊரிய நெருஞ்சி நீறுடு பறந்தலைத்
தாதெரு மறுத்த கலியழி மன்றத்

துள்ள மழிய வூக்குநர் மிடறபுத்
துள் ளுநர் பனிக்கும் பாழா யினவே 19]
28] நீகாத்த நாட்(டிற்) 27] [20 காடே கடவுண்
மேன புறவே யொள்ளிழை மகளிரொடு
மள்ளர் மேன வாறே யவ்வனைத்
தன்றியு ஞாலத்துக் கூலம் பகர்நர்
குடிபுறந் தராஅக் குடிபுறந் தருநர்
பார மோம்பி யழல் சென்ற மருங்கின்
வெள்ளி யோடாது மழைவேண்டு புலத்து
மாரி நிற்ப நோயொடு
பசியிகந் தொரீஇ (யங்நாடு) பூத்தன்று 28]

பதவுரை

பெரும - பெருமானே, கூற்று - இயமன், அடூஉநின்ற - கொல்கின்ற, யாக்கை போல - உடல் ஒருகாலைக் கொருகால் அழகழிந்து கெடுவது போல, தொறுத்த வயல் - பொலிவு மிகுந்த வயல்களில், ஆரல் - ஆரல் என்னும் ஒருவகை மீன்கள், பிறழ் நவும் - புரண்டோடித்திரியும் நிலைமையினையும், ஏறு - காளைகள், பொருத - நின்று போர் செய்தமையினாலே வளப்பட்ட, செறு - சிறு வயல்கள், உழாது - உழவுத் தொழிலை வேண்டாமலே, வித்து நவும் - விதைக்கப்படு நிலைமையினையும், கரும்பின் பாத்தி - கரும்பு கள் நடப்பட்ட பாத்திகளிலே, பூத்த நெய்தல் - பூத்திருக்கும் நெய்தற் செடிகள், இருங்கண் - பெரிய கண்களுடைய, எருமை யின் இரை - எருமைகள் தமக்குப் பிரியமான கரும்புச் செடி கள் முதலிய மற்ற இரைகளைத் தின்னவிடாது; தடுக்கு நவும் - தம்மையே தின்னும்படி தடுக்கும்படியான நிலைமையினை யும், கலி கெழு - ஓசைமிக்கு நிறைந்துள்ள, துணங்கை ஆடிய - பெண்கள் ஆம்பற் பூக்களை யணிந்து துணங்கைக் கூத்தாடிய, மருங்கின் - இடங்களிற் கிடக்கும், ஆம்பல் - குமுதப்பூக்களை, வளை தலை - குனிந்த தலைகளோடு, மூதா - முதிய பசுக்கள், ஆர் நவும்- தின்னுகின்ற நிலைமையினையும், ஒலி - சல சலப்பினையுடைய, தெங்கின் - தென்னை மரங்களையும், இமிழ் - பறவைகள் தங்கி யொலிக்கின்ற, மருதின் - மருத மரங்களையும், புனல் - நீர்வளம்

நிறைந்த, வாயில் - வாய்க்கால்களையும், பூம் - அழகிய, பொய்கை - தடாகங்களையும், பாடல் சான்ற - புலவர்களாற் சிறப்பித்துப் பாடப்பட்ட, பயம் கெழு - வருவாய் மிகுந்த, வைப்பின் - ஊர்களையுமுடைய, நாடு - உனது எதிரிகளுடைய நாடுகள், கவின் அழிய - அழகு கெடும்படி, நீ சிவந்து - நீ கோபித்து, நாமம் தோற்றி - அவைகளுக்கு அச்சத்தை யுண்டாக்கி, இறுத்த - தங்கிய, நீர் அழி பாக்கம் - வெள்ளத்தால் மட்டும் அழியக்கூடிய துறைமுகத்தையும் அரசனிருப்பிடத்தையுங் கொண்ட பெரிய ஊர்கள், விரி - மலர்ந்த, பூங்கரும்பின் - பூக்களையுடைய கரும்புகள் நிறைந்த, கழனி - வயல்கள், புள் என - அற்பமாய் அழிந்து போகவும், திரிகாய் - திரிபோன்ற காய்களையுடைய, விடத்தர் ஒடுவிடத்தேர் என்ற ஒருவகை மரங்களுடனே, கார் - மேகங்கள், உடைபோகி (போக) - நீங்கவும், கவைதலை - இரட்டை மண்டைகளையுடைய, பேய்மகள் - பெண்பேய், கழுது - பிசாசின்மேல், ஊர்ந்து - சவாரிசெய்து, இயங்க - சஞ்சரிக்கவும், ஊரிய - படர்ந்துள்ள, நெருஞ்சி - நெருஞ்சி முட்கள், நீறு ஆடு - நெருப்பிற் பட்டனபோல் பொடியாய்ப்போன, பறந்தலை - போர்க்களத்தையுடைய, தாது - பொடியாகிய, எரு - சாணம், மறுத்த - நீங்கப்பெற்ற, கலி அழி - எவ்விதமான ஒலியுமில்லாத, மன்றத்து - களப்பலி கொடுக்கும் கோவிலிலே, உள்ளம் - மனமானது, அழிய - புகுவதற்கு வலியின்றிப் பின்வாங்கவும், ஊக்குநர் - தமது கரும வேட்கையினாலே புகுவதற்குமேற் கொண்டவருடைய, மிடல் - வலிமையினை, தபுத்து (தபுக்க) - கெடுக்க, உள்ளுநர் - பின்னும் போக நினைப்பவர்கள், பனிக்கும் - நடுங்குதற்குக் காரணமான, பாழ் ஆயின - கேடுகளை யடைந்தன, நீ காத்த நாட்டில் - உனது ஆளுகையிலுள்ள நாட்டின்கண்ணே, காடே - பெருங்காடான இடங்களிலெல்லாம், கடவுள் - தெய்வங்கள், மே(வி)ன - எழுந்தருளியுள்ள கோயில்கள் உண்டாயின, புறவே - சிறு காடான இடங்களெல்லாம் ஒள் இழை - பிரகாசமான ஆபரணங்களையணிந்த, மகளிர் ஒடு - பெண்களுடனே, மள்ளர் - நின்படைவீரர்கள், மே(வி)ன - தங்கியுறையு மிடங்களாயின, ஆறே - பெருங்காடும் சிறுகாடுமல்லாத பெருவழிகள், அவ் அனைத்து - வழிப்பறிக் கொள்ளைகளும் மற்ற இடையூறுகளுமின்றி அப் பெருங்காடுகளையும் சிறு காடுகளையும் போன்று தெய்வங்கள்

எழுந்தருளியுள்ள கோவில்களும் படைவீரர்கள் தங்கியுறையுமிடங்களுமாயின, அன்றியும் - அல்லாமலும், ஞாலத்து - உலகத்தில், கூலம் பகர்நர் - தானியம் விற்பவர்களாகிய, குடி - தமது கீழ்க் குடிகளாகிய வரிசையாளரை, புறந்தாரா அ - காப்பாற்றி, குடி புறந்தருநர் - தமது குடும்பத்தையும் காப்பாற்றும் மேற் குடிகளாகிய காணியாளருடைய, பாரம் ஓம்பி - கஷ்ட நஷ்டங்களை விளக்கி; அழல் - செவ்வாய் என்னும் கிரகம், சென்ற மருங்கின் - சேர்ந்துள்ள இராசியிலே, வெள்ளி - சுக்கிரன் என்னும் கிரகம், ஓடாது - சென்று பஞ்சம் ஏற்படாதபடி, மழை வேண்டும் புலத்து - மழை பெய்ய வேண்டிய இடங்களில், மாரிநிற்ப - மழை நிலைத்துப் பெய்யவும், நோய் ஒடு - நோய்களுடனே, பசி - பசிப் பிணியும், இகந்து ஒரீஇ (ஒருவ) விட்டு விலகவும், அந்நாடு - உன்னுளுகையிலுள்ள அந்தநாடு, பூத்தன்று - பொலிந்து விளங்கியது.

(தொடரும்.)

வைகறைத் துயிலெழு

[திரு. சேலை. சகாதேவ முதலியார்.]

தமிழ் மக்கள் ஓர் ஆண்டின் பன்னிருமாத காலத்தை ஆறு பெரும்பொழுதுக ளாகவும், ஒரு நாளை ஆறு சிறுபொழுதுக ளாகவும் வகுத்துக்கொண்டனர். பெரும் பொழுதுகளாவன, சித்திரை மாதமுதல் இவ்விரு மாதங்கள் முறையே கொண்ட, இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனிக் காலங்களாம். சிறுபொழுதுகளாவன சூரியோதயம் முதல் முறையே பப்பத்து நாழிகைகள் கொண்ட காலை, நண்பகல், மாலை, எற்பாடு, யாமம், வைகறை நேரங்களாம். தேவர்களின் நாள் தைமாதத்தில் துவங்கி மார்கழி மாதத்தோடு முடிவு பெறுகின்றதென்பது உலக வழக்காகையின் தேவர்களுக்கு மார்கழிமாதம் வைகறையின் பிற்பாதியாகும். ஆகையின் மார்கழி மாதத்தின் வைகறையாகிய விடியற்பொழுதில் தமிழ் மக்கள் தூய வுடலோடு முடையோடும் தம் மில்லத்தின்கண் விளக்கேற்றிவைத்துத் தெய்வபூசையும் தோத்திரமும் செய்து தூய மனத்தினராய் விளங்குவர்.

பகற்பொழுது உழைத்து இரவில் உண்டு உறங்கும் ஒருவனுடைய உடல் புத்துரம் பெற்றும் புத்துளம் பெற்றும் புத்தறிவு பெற்றும் விளங்கும் என்பது ஆயுள் நூல் வல்லோர் கண்டுணர்ந்து காட்டியதோர் உண்மையாம். இஃதுண்மையாதலை ஒவ்வொரு மகனும் தன் அநுபவத்தால் அறிவன். புரியாத யோசனையொன்றை விடியலில் யோசித்துத் தீர்மானிப்பதும் அறிய மாட்டாதநூல் நுட்பப்பொருள்களை விடியலில் விளக்கின்முன் கற்றுக் கண்டறிவதும் அநுபவ சித்தாந்தங்களே. நெட்டுருப் பண்ண முடியாத பாட்டையோ வசனத்தையோ விடியலில் எழுந்து உட்கார்ந்து வாசிக்க மிக வெளிதில் அது கூடுமாறுதலைப் பாடசாலை மாணுக்கன் ஒவ்வொருவனு மறிவான். இவற்றானன்றோ உலக வியலுக்கு ஒத்த பொருட்களை மக்கட்கு ஊட்டவந்த பெண்மணிப் பெரியாராகிய நம் ஔவைப் பிராட்டியார் 'வைகறைத் துயிலெழு' வெனச் செவ்வனே ஓதி வைத்தார்!

வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து - வாய்வதிற்
றந்தையும் தாயும் தொழுதெழுக வென்பவே
முந்தையோர் கண்ட முறை.

என்பது ஆசாரக்கோவையிலு முதவியுள்ளது. எனவே மக்கள் அவ் வைகறையி லெழுந்து அந்நாள் செய்யவேண்டிய கடமைகள் இன்னின்னவெனவும் அவைகளை எவ்வெவ்வாறு செய்ய வேண்டு மெனவும் யோசித்து, அறியவேண்டிய நேரமும் அவ்வைகறையேயாகும். வழிபாட்டிற்குரிய நேரமும் அதுவேயாம். வாரத்திற்கு ஒருமுறை எண்ணெய் இட்டுத் தலை முழுகுவதற்குத் தீபாவளியையும், ஒவ்வொருநாளும் வீடும் தட்டு முட்டுகளும் சுத்தமாக இருக்கவேண்டு மென்பதற்குப் பொங்கற் புது நாளையும், இலங்கணம் பரம ஔஷதம் என்பதுபோல மக்கள் தம்தம் தேக உரத்திற்குத் தக்கபடி அடிக்கடி ஒருநாள் உணவில்லாமல் இருக்கவேண்டும் என்பதற்கு ஏகாதசி, சிவராத்திரி விரதங்களையும் இன்னோன்ன வழக்குக்களை மக்கள் உடல் உயிர் நலன்களுக்கென்று காலிபுலாக நியாயமாக ஆன்றோர் கட்டளை யிட்டிருப்பதுபோல ஒவ்வொரு நாளும் வைகறையாகிய விடியலில் மக்கள் துயில் விழித்துத் தமது உடல் உயிர்களுக்கு வேண்டிய

யாவும் ஆராய்ந்து அறிய வேண்டியது என்பதற்கே மார்கழி மாதத்தில் விடியலில் எழுந்திருக்கவேண்டும் என்னும் கட்டளையை யிட்டருளினார்கள். இதுபற்றியே நமது பிராட்டியார் வாக்கும் எழுந்தது. மேல்நாட்டு ஆயுர்வேத நிபுணர்கள் இவ் வைகறையில் துயிலெழுவது உடல் நலத்திற்கு ஒவ்வாதெனக் கூறுவது இதனால் மறுக்கப்பட்ட தெனவறிக. அஃது கனியிருப்பக் காய் கவர்வதாகுமென்க.

நம் நாட்டு மக்களாகிய பெரியோர்கள் தமது புதல்வர்களையும் புதல்விகளையும் காலை நான்கு மணிக்காவது எழுந்து உடல் சுத்தி செய்துகொண்டு விளக்கின்முன் பாடசாலைப் பாடங்களைப் படிக்கவைப்பது அம்மக்கள் கல்வியில் சுறுசுறுப்பும் ஊக்கமும் அடைவதற்கும் அதனை எளிதில் கற்றுத் தேறுவதற்கும் காரணமாகும் என்பதை யறிந்து ஔவையாரின் கட்டளையை மேற்கொண்டு ஒழுகுவார்களாக. அவர்களும் தம்தம் நாட்கடமைகளை அந்நேரத்தின்போதே ஆராய்ந்து தக்கதறிந்து செய்வார்களாயின் அது நமது நாட்டுக்கும் தேசத்திற்கும் நன்மையைப் பயக்கும் என்பது திண்ணம். தெய்வ சிந்தனைக்கும் அவ் வைகறைப்பொழுதே சாலச் சிறப்புடைத்தாம்.

சுடரொளி பரந்தன சூழ்திசை யெல்லாம்
        துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி
படரொளி பசுத்தனன் பனிமதி இவனோ
        பாயிரு ளகன்றது பைம்பொழிற் கமுகின்
மடலிடைக் கீறிவண் பாளைகள் நாற
        வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ
அடலொளி திகழ்தரு திகிரியந் தடக்கை
        அரங்கத் தம்மா! பள்ளி யெழுந்தரு ளாயே.

தொண்டரடிப் பொடியாழ்வார்

அருணனிந் திரன்றிசை யணுகின னிருள்போ
        யகன்றது உதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரிய னெழவெழ நயனக்
        கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாக்

திரனிரை யறுபத முரல்வன விவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருணிதி தரவரு மானந்த மலையே
யலைகட லேபள்ளி யெழுந்தரு ளாயே.

மாணிக்கவாசகர்

திருவஞ்சைக்களம்

[திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள்.]

சேரர்கள் இராஜதானியான வஞ்சி என்பது எது என்ற விவாதம் சில ஆண்டுகளுக்குமுன் பலப்பட்டுச் சிலர் கொச்சி இராஜ்ஜியத்துத் திருவஞ்சைக்களம் என்றும், சிலர் திருச்சி ஜில்லா கரூர் என்றும் கூறுவார் ஆயினர். திரு. கனகசபைபிள்ளை, வின்சண்ட் ஏ. ஸ்மித் முதலானோர் திருவஞ்சைக்களம்தான் என்றும், வித்வான் மு. ராகவ ஐயங்கார் கரூர் என்றும் பல திருட்டாந்தங்களைக் கொண்டு நிரூபிக்கலானார்கள். ஆனால் தற்காலத்து ஆராய்ச்சி வல்லார்களில் பெரும்பான்மையினர் கொச்சிநாட்டுத் திருவஞ்சைக்களமென்றே கூறுகின்றனர். சிறிது காலத்திற்குமுந்தி "மிதிக் ஜர்னல்" (Mythic Journal) என்ற சஞ்சிகையில் எழுதிய K. இராமவர்மராஜாவும் இந்தக் கொள்கையினையே வற்புறுத்தி எழுதி இருக்கின்றனர்.

இந்த ஸ்தலமானது இப்போது அங்கே "திருவஞ்சிக்குளம்" என்று வழங்கி வருகிறது. இது ஒரு பிரபல சிவக்ஷேத்திரம். ஷோரனூர்-எரணகுளம் இருப்புப்பாதை மார்க்கத்தில் இருஞாலக்குடா என்ற ஸ்டேஷனிலிருந்து 10-மைல் கற்பாதையில் சென்றால் "கருவப்படன்" என்ற ஒரு ஊர் கழியோரமாக இருக்கிறது. அங்கிருந்து படகில் (வஞ்சி என்பது படகுக்கு மலையாளபதம்) 4-மைல் எறிச்சென்றால் எதிர்ப்புறமாக இருப்பது கோடுங்கோளூர். அங்கே பிரசித்தி பெற்ற பகவதி கோயில் ஒன்று உண்டு. அதற்கு ஒரு மைல் கிழக்கே யுள்ளது "திருவஞ்சைக்களம்." இங்கே இருக்கும் சிவன் கோயில் மற்ற மலையாளத்துக் கோயில்களைப்போலவே ஓடு மேய்ந்ததுதான். கிழக்கு நோக்கிய நிலை கொண்ட ஆலயம். ஒரு புறத்தில் சேரமான் பெருமாள் உருவச்

சிலை வைக்கப்பட்டிருக்கிறது. கர்ப்பக் கிருகத்துக்கு மேற்புறத்தில் தனியாக சுப்பிரமணியர், சாஸ்தா (ஐயனூர்), பகவதி, மாரியம் மன் முதலிய தெய்வங்களின் சிறு ஆலயங்கள் இருக்கின்றன. ஆலயத்துக்குச் சிறிது தூரத்தில் குளம் ஒன்று இருக்கின்றது. ஆலயத்துக்கு ஒருமைல் தூரத்தில் சேரமான் பெருமாளின் கோட் டை ஒன்றிருந்ததென்பதற்கு இடிந்துபோன ஆதாரங்கள் காணப் படுகின்றன. இவைகளைத் தவிர சுந்தரமூர்த்தி சுவாமிகளின் உரு வம் ஒன்றும் ஆலயத்தில் இருக்கின்றது. ஆனுல் கல் வெட்டுகள் யாதொன்றும் கிடைக்கவில்லை.

கொடுங்கோளூரில் பகவதி கோயில் முக்கியமானது. அம் மன் ஒருகல் சிலை, உயர்ந்திருக்கின்றது. அதற்கு முன்பாக இலிங்கம் போன்ற உருவங்கள் இரண்டு உண்டு. முன்புறமும் வலக் கைப்புற மும் அவைகள் வைக்கப்பட் டிருக்கின்றன. அர்ச்சகர் அவைகளுக் குத் தான் அர்ச்சனை செய்தார். அம்மன் வடக்குப் பார்த்த சந்நிதி. ஆனுல் அதே ஆலயத்தில் சிவலிங்கம் கிழக்குப் பார்த்த சந்நிதி யாக இருக்கிறது. அஃது அம்மனுக்கு இடப் புறமாக வைக்கப்பட் டிருப்பதால் ஒரே இடத்திலிருந்துகொண்டு இரு மூர்த்திகளையும் சேவிக்க முடியும். இக் கோயிலுக்கு வெளியில் மேற்கில் மாரியம் மன் ஆலயமும் வடகிழக்கில் க்ஷேத்திரபாலன் என்ற ஆலயமும் இருக்கின்றன. பகவதி ஆலயத்துக்குச் செல்கிறவர்கள் முதலில் மாரியம்மன் ஆலயம் தொழுதுதான் பகவதியை ஆராதிக்கச் செல்ல வேண்டுமென்ற நியதி இங்கே இருக்கின்றது. க்ஷேத்திர பாலன் விக்கிரகம் எட்டு அடி உயர்ந்து நிற்கிறது. அது பகவதிக்குப் பாதுகாப்புத் தெய்வமாம். அதற்கு அபிஷேகம் செய்வதற்காக ஏணிகள் நிரந்தரமாகக் கட்டி வைத்திருக்கிறார்கள். இக்கோயில் களில் பிராமணர்கள் அர்ச்சகர்கள். ஆனுல் வருடத்துக்கு ஒரு முறை 10-நாள்கள் சகல ஜாதியாருக்கும் திறந்து வைக்கப்படும். அப்போது தீண்டாத வகுப்பாரெனப்படுவோரும் கோயிலுக்குள் சென்று ஆடு கோழி பலி கொடுப்பார்களாம். இதற்குக் 'கோடி லிங்கபுரம்' என்று ஒருபேர் உண்டு என்பர்.

இக் கோயிலும் பிரபலமானதும் பழைமையானதும் ஆகத் தோன்றினுலும் யாதொரு கல்வெட்டும் கொண்டதாக இல்லை. ஊரின் பெயரை ஆராய்ந்தால் பெரும் உற்பாதம் நடந்தவூர் எனப் பொருள் பெறும். அதைக்கொண்டும் இவ்வூரில் பகவதிகோயில்

சிறப்புடையதாகையாலும் அது கண்ணகி சம்பந்தமாக இருத்தல் வேண்டும் என்று கொண்டு சிலப்பதிகாரக் கதையுடன் இதை இணைத்திருக்கிறார்கள். சேரர்கள் இராஜதானியாகக் கொடுங் கோளூர் இருந்ததாகக் கேரள தேசத்து நூல்களாலும் சேக்கிழார் அருளிய சேரமான் பெருமாள் நாயனுர் புராணம் "சேரர் குலக்கோ வீற்றிருந்து முறை புரியும் குலக்கோ மூதூர் கோடுங் கோளூர்" என்ற மேற்கோளினுலும் அறிகிறோம். இதற்கு மாகோதை அல்லது மாகோத பட்டினம் என்ற பெயர் இருந்த தாகப் பெரிய புராணத்தினுலும் "சுகசந்தேசம்," "கோகிலசந் தேசம்," முதலிய கேரளதேசத்து வடமொழிக் காவியங்களினுலும் தெரிகிறது. இப்பட்டினத்துக்குச் சுந்தரமூர்த்திகள் பல தடவை விஜயம் செய்திருந்தும் என் அவர் சின்னங்கள் அதிகமாகக் காணப்படவில்லையோ தெரியவில்லை அவரைப்பற்றிய கர்ண பரம் பரைகளும் காணேம்.

சேர ராஜதானிக்குக் கரூர் என்ற பெயரும் வழங்கி வந்ததை உத்தேசித்து, இதற்கு அருகில் உள்ள "கருவப்படன்" என்பதைக் கரூர் என்று சிலரும், கொச்சிக்கு 20-மைல் தூரத்தில் உள்ள "திருக்கரூர்" என்றதை அந்தக் கரூர் என்று சிலரும் கூறலானுர் கள். ஆனல் இராஜதானிக்கே அப்பெயர் இருந்தால் வேறு ஒரு ஊருக்கு அப்பெயர் வழங்கக் காரணம் என்னவோ? கண்ணகி செங்குன்றூர் சென்று அங்கு தெய்வாரோகணம் அடைந்ததாகச் சிலப்பதிகாரம் கூறும் செங்குன்றூரும் இக் கேரளநாட்டில் உண்டு. அங்கே ஒரு பெரும்பகவதி ஆலயமும் உண்டு. ஆகவே கண்ணகி சரிதத்தை ஒட்டியே இந்நாட்டில் பகவதி கோயில்கள் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று ஊகிக்கலாம்.

கொடுங்கோளூரும் திருவஞ்சைக்களமும் ஒரே ஊரின் இரண்டு பாகங்களைப்போல் காணப்படுகின்றன. முற் காலத்திலும் அவ்வாறே இருந்திருக்கலாம். ஏனெனில் சுந்தரர் தம் திருவஞ் சைக்களத்துத் தேவாரத்தில் "கடலங்கரைமேல் மகோதை யணி யார் பொழில் அஞ்சைக்களத்தப்பனே" எனப் பாடியிருக்கின்றனர் அன்றே? சுந்தரர் இவ்வூரை "அஞ்சைக்களம்" எனக் குறித் திருப்பது நோக்கத்தக்கது. அப்பதம் ஒருகாலும் வஞ்சி ஆகாது. ஆகவே பத ஒற்றுமையைக்கொண்டு திருவஞ்சைக்களத்தை வஞ்சி

என்று கொள்ளுதல் சரியன்று. வேறு ஆதாரங்கள் தேடவேண்டும் அல்லது வஞ்சி வேறு ஊராக இருத்தல் வேண்டும் அல்லவா!

இன்னும் சுகசந்தேசம் முதலிய மலையாள நூல்களும், ஆராய்ச்சி செய்து தேடக்கூடிய கல்வெட்டு முதலிய சாதனங்களும் ஆராய்ந்து இவ்விவாதத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டியது சரித்திர நிபுணர்கள் கடமையாகும்.

பண்டைத் தமிழ்நூற் பண்பு

[திரு. K. சிவராமகிருஷ்ண நாவலர் அவர்கள்]

சங்கநூற்களே பண்டைத் தமிழ் நூற்கள் எனப் பகரப்படுவனவாம். அவை எட்டுத்தொகை பத்துப்பாட்டு பதினெண் கீழ்க்கணக்கு ஐம்பெருங்காப்பியம் முதலியன. இவைகளின் ஈடற்ற சிறப்பே இன்றமிழணங்கின் வெற்றி முரசொலியாய் விம்முகின்றது. எம்மொழி நூற்களும் இம்மொழி நூற்களின் இசைக்கு வாயடங்கித் தலைகவிழ்க்குமென மொழியினும் அது மிகையாகாது. நூலாவது அறியப்படும் பொருட்களின் நுட்பத்தைத் திட்பமாயும் தெளிவாயும் திறனில் தெரிவிப்பதாம். இப்பண்பு இல்லா நூல் கற்பார்க்குத் தன் உண்மைப்பயனைத் தெரிவிக்கும் வழியின்றித் தகைமை இழக்கும். இந்நூலில் அரிய பொருள்கள் நிரம்பி யிருந்தும் ஈயாரிடத்துச் செல்வம்போல் பிறர்க்குப் பயன்படா தொழியும். இத்தகைய நூற்கள் உலகத் தோற்றமுதல் இன்றளவும் நீர்க்கோலம் போல் தோன்றுவதும் அழிவதுமா யிருக்கின்றன. ஆயின் நமது தண்டமிழ்ப் பண்டை நூற்களோ, தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகளாகியும் எல்லார் மனத்திலும், அறிவிலும், இன்றுபோ லிருந்து எழில்வீசுகின்றது. காரணம் யாது? நூலின் உண்மைப்பண்பு இந்நூற்களில் அமைந்து விளங்குவதே யாகும். நூற்களால் பெறப்படும் பயன்களில் இயற்கைக் காட்சியின் இனிமையை உணர்தலு மொன்று. எனெனில் மக்களுணர்வைக் கவர்கின்ற பேரழகு எங்கெல்லாம் உலக இயற்கையில் காணப்படுமோ அங்கெல்லாம் இனிய நூற்களின் ஓசை கேட்கின்றது. அவ்வினிய ஓசை பேரறிவாளனும் புலவன் செவி வழியே புக்கு, அவனறிவுலகில் அணிபெற்றுத்

தீஞ்சுவைப் பாக்களாய் மாறி வெளித் தோன்றுகின்றன. இப் பாக்களின் கோவையே உயரிய பண்பு வாய்ந்த நூற்களில் ஒரு வகை நூலாம். இவ்வகை இயற்கைக் காட்சி நூற்கள் எட்டுத் தொகை, பத்துப்பாட்டு முதலியன வாகும். ஏனைய சங்க நூற் களும் இடையிடையே இப்பெற்றி வாய்க்கப் பெற்றிருக்கின்றன. இவ் வரும் பெரும் பான்மையை உணர்ந்த டெய்லர் பண்டிதரும் "தமிழ் தனக்கிணையில்லாக் கவிநூல் தாங்கிய" தெனக் கழறிப் போந்தார்.

"செறியிலைக் காயா வஞ்சன மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் கால
கோடற் குவிமுகை அங்கை அவிழ
தோடார் தோன்றி குருதி பூப்ப
கான நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற்
றிரிமருப் பிரலையொடு மடமா னுகள"

என வருவன பத்துப்பாட்டில் ஒன்றான முல்லைப் பாட்டின் பாவடி கள். இவை போரிற் சென்ற தலைவன் வெற்றிபெற்று மீண்டு வருதலை அறிவிக்கின்றன. அரசிளங் குமரனான தலைவன் வெகு நாட் பிரிந்திருந்த தன்னாருயிர்க் காதலியைக் காணவேண்டு மென் னும் அவாப் பெருக்கால் தன் அணிபொற்றேரை விரைவாய் ஓட்டி வருகின்றான். இருசாரியிலுள்ள இலை தழைத்த காசாஞ் செடிகள் நீலமலர்கள் பூத்துப் பொலிகின்றன என்பது முதலடியின் பொருள். நீலமலர்களா அங்கு பூத்துப் பொலிந்தன? அல்ல, அல்ல. அரசிளந் தோன்றலின் மனத் தோற்றமான மங்கையின் நீல விழிகளல்லவோ அங்கு மலர்ந்து தோன்றியவை! ஆ! அவ்வியற் கை நுட்பப் பொருளின் பெருமையை என்னென் றுரைப்பாம்! காதலியையே எண்ணிக் கருத்துழலும் காதலன் கண்முன் காயாவின் நீல மலர் பூத்தது என்றபோது, காதலி தன் வருகை வழிமேல் கண் வைத்திருத்தலைக் காதலன் மனக்கண்ணால் காண் பதும், கண்டு மனமுருகி மயங்குவதும், மனங்கலந்த அன்பை உன்னி மதிகலங்கி வாடுவதும், பிறவும் எல்லாம் பாமுன்பு காட் டாது, நம் கண்முன்பு காட்டும் பண்பை என்னென் றிசைத்துப் பாவை யாதென்று புகழ்வாம்? (தொடரும்)

கல்வி—Culture

வித்வான் G. தேவநேசன் அவர்கள்

(யாம்வரையுங் கட்டுரைகளெல்லாம் எமது 'Classica Prima' என்னும் நூற்பகுதிகள். உரிமையெமது.)

மக்கள் நாகரிகமில்லாத மாண்முது பழைமையிற் குறுந் தொகையராய்க் குறிஞ்சி நிலத்து வாழ்ந்த போது காய்கனி கிழங்கு முதலிய இயற்கை விளைபொருட்களையே உண்டு வந்தனர். உண்பதும் உறங்குவதுமே அவர்க்கிருபெருந்தொழில். மக்கட்டொகை மிக மிக, இயற்கை விளைவு போதாதாயிற்று. விதைகள் தாவர வர்க்கத்தினின்றும் கீழே விழுந்து நிலத்தில் முளைப்பதை முன்னமே உற்று நோக்கி ஊகித்திருந்தனர். அஃதன்றி வள்ளிக் கிழங்ககழப் பன்றிகள் உழுதவிடத்து விழுந்த விதைகள் விரைவில் முளைத்து, அடர்ந்தோங்கி, விழுமிய பலன்றந்ததையுங் கண்டிருந்த னர். ஆதலால் அவரே அத்தகையிடங்களிற் செயற்கையிற் பயிர் பச்சைகளை விளைக்கத் தொடங்கினர்.

பன்றியுழுதவிடத்துப் பயிர்விளைப்பதை,

"அருவியார்க்குங் கழைபயி னனந்தலைக்
கறிவள ரடுக்கத்து மலர்ந்த காந்தட்
கொழுங்கிழங்கு மிளிரக் கிண்டிக் கிளையொடு
கடுங்கட் கேழ லுழுத பூழி
நன்னாள் வருபத நோக்கிக் குறவ
ருழாஅது வித்திய பரூஉக்குரற் சிறுதினை" (புறம்-168.)

என்பதாற் காண்க.

ஆகவே முதன்முதல் மக்கள் கற்ற கல்வி உழவுத்தொழில் என்பதே புலனாகின்றது, உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவு அதனாற் பெறப்படுதலின், கல்வி என்னும் சொல்லும் உழவுத் தொழிலையே முதன் முதற் குறித்தது. கல், பகுதி; வி, விகுதி. கல்லல் தோண்டல். கல்லென்னுஞ் சொல்லே இல்லென்று திரியும். பயிர்த்தொழில் வினைகள் பலவற்றுள்ளும் உழவே முதலதும் முதன்மை யதுமாதலின், அவ்வுழவென் பெயரே ஒருவகை ஆகுபெயராய்ப் பயிர்த்தொழில் முழுமைக்குமாயிற்று. அன்றியும் வானவாரிப் பயிர்கட்கு உழவொன்றே யமையும். உழவாவது

நிலத்தை அகழ்தலும் நிலை பெயர்த்தலும் பூழியாக்கலும், எரு மெருதங் கொண்டுழவறியாத பழங்காலத்துக் கல்லுங் கழியுங் கருவியாக நிலத்தை அகழ்தலே உழவாயிற்று. அக்காலத்தும் குறிஞ்சி நிலத்தும் மழைக்குக் குறையின்மையின் நீர்பாய்ச்சவும் வேண்டாதாயிற்று.

கல்லல், தோண்டல், உழுதல் என்பன ஒரு வினை குறித்தலின் ஒருபொருட் கிளவி. ஆகவே கல்வி என்பது முதன் முதல் உழவு குறித்த கிளவியே யென்பது பெற்றும். உழவிற்குப் பின் கற்கப் பட்டது கைத்தொழில். கைத்தொழிற்குப் பின்னது கலையறிவு அல்லது நூற்கல்வி. ஆகவே தொழிற்கல்வி நூற்கல்வி யெனக் கல்வி இருவகைத்தாயிற்று. உழவும் கைத்தொழிலும் தொழிற் கல்வி, கலையறிவு நூற்கல்வி. இவ்விரண்டனுட் டலைமையும் இன்றி யமையாமையும் பற்றி நூற்கல்வியே கல்வியென விதந்தோதப் பட்டது.

வடநூன்முறையில் வழங்கும் அறுபானுற் றெழில்களும் தொழிற் கல்வியாகும்; ஏனை நான்மறை யறுகலைகள் நூற்கல்வி யாகும்.

இருவகைக் கல்வியிலும் எந்நூலையும் மறை யென்பது பண்டை வழக்கு. இசை நூலை 'நரம்பின் மறை' என்முர் தொல் காப்பியர். மருத்து நூலை ஆயுர்வேதமென்பர் வடமொழியாளர். கண்கருவியாகக் கைகற்கும் தொழிற்கல்வியும் சிறுபான்மை நுண் மாண் நுழை புலத்தை நூல்வாயிலாயுணர்த்து மென்க.

ஒவ்வொரு நூலும் ஒருசார் மறை பொருளையுடைமையின் மறையெனப்பட்டது. இனி, எல்லா நூல்கட்கும் முடிபு வீடு பேறு கூறும் கடவுண்மறையாதலின், அம்மறை யுணர்ச்சிக்கு ஒருசார் கருவியாகும் பிற நூல்களும் அவ்வியைபானே மறையெனப் பட்டன வென்னலு மொன்று.

நூற்கல்வியும், உலக நூல், அறிவு நூல் என இருவகைத்தாம். அறிவு நூல் வீட்டு நூலெனவும்படும். கடவுள்வழிபாடும் வீடு பேறும் கூறும் மறையாகமக்கலைகளும் இலக்கண தருக்க தத்துவ நூல்களும் வீட்டு நூல்களாகும். உலக வாழ்க்கைக்குரிய வெல் லாம் உலக நூல்களாகும். ஆன்மவுணர்ச்சி சிறந்தகாலத்து வீட்டு நூலே நூலெனப்பட்டது. தமிழிலக்கண விலக்கியங்க ளெல்லாம் வீடு பேற்றிற்கே வழிகாட்டுவன.

"அறம்பொரு ளின்பம் வீடடைத னூற்பயனே"

"..................................தொலைவில்லாச்
சத்தமுஞ் சோதிடமு மென்றாங் கிவைபிதற்றும்
பித்தரிற் பேதையா ரில்"

"அலகுசால் கற்பின் அறிவு நூல் கல்லா
துலக நூ லோதுவ தெல்லாங்—கலகல
கூஉந்துணை யல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந்துணை யறிவா ரில்"

என்றார் பெரியோர்.

இக்காலத்துக் கற்கப்படும் அங்கிலக்கல்வி தமிழ் முறைப்படி உலக நூலின் பாற்படுவதே.

எழுத்தறியும் போதே அரி ஓம் நம: என்று தொடங்குவதும், எழுத்துக்களே மந்திரவடிவாயிருப்பதும், எழுத்துக்கூட்டி வாசிக்கப் புகுமாத்திரையே 'அறஞ் செய விரும்பு' 'ஆலயந்தொழுவது சாலவு நன்று' என்பன போன்ற அறவுரைகளை அறிவிப்பதும், இலக்கண முழுமையும் மெய்யுணர்ச்சியிலகுவதும், இலக்கிய மெல்லாம் வீடுபேற்றை யிலக்காக் கொள்வதும் தமிழுக்கே சிறந்த தகைமைகளாம்.

ஆகவே, கல்வியென்னுங் குறியீடு தமிழில் முதன் முதல் உழவிற் கியற்பெயராயிருந்து, பின்னர் கைத்தொழிற்கும் நூற் கல்விக்கும் இனவிலக்கணமாய் இறுதியில் நூலுக்கே சிறப்பாக வரையறுக்கப் பட்டதென்க.

நிலத்தைக் கல்லுவதினால், ஆழத்தின் மறைந்திருக்கும் கனி (Mine)யுந் தாவரமுமாகிய இருவகை விளைபொருட்களு மாராயப் படும்; விதைகளினின்றுங் கிளர்ந்தெழும் பயிர்பச்சைகளும் வளர்ச்சியடையும்; காய் கதிர்களும் முற்றி மக்கட்கு நுகர்ச்சியுண் டாகும். அதுபோலக் கல்வியினாலும் ஐம்பூதப் பகுதியான எல் லாப் பொருள்களு மாராயப்படும்; மனத்தின் ஆற்றல்களும் வளர்ச்சியடையும், (cf. Educate—to draw out the powers of mind); ஆன்ம நுகர்ச்சியாகிய வீடு பேறும் சித்திக்கும்.

கல்வி யென்னுந் தமிழ்ச்சொற்குச் சமமான அங்கிலச்சொல் Culture என்பதாகும். அது கல் என்னும் பகுதியடியாய்ப்பிறந்த

வினைப்பெயரே. கல்வி என்பதில் வி விகுதி; Culture என்பதில் தரம் (Ture) விகுதி. கல்வியென்னுஞ் சொற் குறிக்கும் பொருள்களையே Culture என்பதுங் குறிக்கின்றது. அவையாவன.—

1. Culture—n. Cultivation

L. Colo—to till. கல்=தோண்டு, உழு, பயிரிடு.

இஃதன்றி அங்கிலத்தில் உழவு குறிக்கும் ஏனைச்சொற்களில் இன்றியமையாத சிலவும் தமிழேயாத லறியப்படும்.

தொள்—till; தொள்—தொடு—தோண்டு. தொள்ளல்= தோண்டல் அல்லது உழுதல்.

ஏர்—n. Eng. ear, L. aro, Gr. aroo. adj. Eng. arable.
அகரம்—n. Eng. acre, Gr. agros, L. ager, a field.
அகரம் மருத நிலத்தூர்—சூடாமணி நிகண்டு. மருதம்=வயல்.
காறு (கொழு)—Share.

Culture என்னுஞ் சொல் கல்வியாலான ஒழுக்கத்தை அல்லது திருத்தத்தை உணர்த்திய பின்னர், உழவு அங்கிலத்தில் agriculture என அடைகொடுக்கப்பட்டது.

2. Culture—n. refinement.

கல்வியா லறிவும் அறிவா லொழுக்கமும் பயனுதலின் கல்வி யென்பது காரணவாகு பெயராய்த் திருத்தத்தையுங் குறிக்கு மென்க.

கல்வித் தொடர்பான சொற்கள் :

கழகம்—College, n. (orig) any collection or community of men with certain privileges or a common pursuit as a college of heralds or the college of cardinals: a seminary of learning; a literary, political, or religious institution—Chambers Etymological Dictionary

N. B. orig. 'g' was pronounced as 'g' in god and the final 'e' was not silent

கல்+அகம்=கல்லகம்—கழகம்.
கல்லகம் வினைத்தொகை.

Pedagogue—n. a teacher.

L.—Gr. paidos (பைதல்) a boy; ago—(உகை) to lead.
Pedantry—n. vain display of learning (same)
Cyclolpedia—n. the circle of human knowledge.
Gr. kyklos, (சக்கரம்) a circle; paideia (from the root-படி) learning.

3 Cult—n. worship.
L. colo—to worship.

"கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்ரு டொழாஅ ரெனின்"—குறள். 2

இதுகாறுங் கூறியவற்ருல் உழவே உலக முதற் கல்வி யென்றும் கல்வி யென்னுஞ் சொல் முதன்முதல் உழவு குறித்த சொல்லே யென்றும், பிற்காலத்து நூற் கல்வியை வரையறுத்தமையின் உழவுப் பொருளில் வழக்கற்றதென்றும், உலகில் முதன்முதல் நாகரிகமெய்தி உழவுங் கல்வியு மறிந்தார் தமிழ்மக்களே யென்றும் அவரானேயே அவ்விரு தொழிலும் மேனுடுகளிற் பரவியதென்றும், அவ்விருதொழிலேயுங் குறிக்கும் மேனுட்டுச் சொற்களில் இன்றியமையாத வெல்லாம் செந்தமிழ்த்திரிபே யென்றும் தெற்றெனத் தெரிந்து கொள்க.

கம்பர் காட்டும் அரசியல் தத்துவம்

(ஆசிரியர் மா. இராசமாணிக்கம்)

புவியரசேத்தும் கவியரசாய கம்பர் பெருமான் தம் இராம காதையின்கண் அவ்வவ்விடங்களிற் சமயம் வாய்க்கும் போதெல்லாம் சிறிதும் மனஞ்சலியாது தாம் உணர்ந்த பல உத்தம தத்துவங்களே நமக்கு விளக்கிக் காட்டுகின்ருர்.

நாட்டை ஆளும் நாயகன் எவ்வித இலக்கணத்துடன் இருத்தல் வேண்டும் என்று கம்பர் விவரிப்பது வியக்கத்தக்கது. குடிகளேத் துன்புறுத்திப் பாக்குமரத்தைத் தூக்கு மரமாக்கும் அரசர் அரசரோ? குடிகளின் பெண்டிரைக் கற்பழிக்க முயலுங் காவலர் உண்மைக் காவலரோ? தம் மதத்தைப் பரவச்செய்யப் பிறமதத்தாரையும் அவர் தம் கோவில்களேயும் பாழாக்கும் வேந்தர் உண்மை

வேந்தரோ? ஒற்றுமையின்றித் தம் குலத்துக்குத் தாமே தீமை விளைத்துக்கொண்ட 'ஜயசந்திரன்' போன்ற துர்க்குணம் நிறைந்த மன்னர் மன்னரோ? குடிகளை அச்சுறுத்தி அடக்கு முறையில் ஆளும் அரசர் உண்மை அரசரோ? அம்மம்ம! தேச சரித்திரத்தைப் படித்தாலன்றோ உண்மை விளங்கும்! அந்தோ! இத்தகைய கொடுங்கோல் மன்னரால் குடிகள் உற்ற துயர்தான் கூறற் கெளிதோ? குடிகள் என் நினைந்து ஏக்கமுற்றனரோ! இத்தகைய அரசர் அரசரல்லர். இனி, கம்பர் கூறும் அரசனையும் அவனது அரசியல் தத்துவத்தையும் கவனிப்போம்.

கம்பர் தாம் கூறும் தத்துவத்தைத் தயரதன் மேல் ஏற்றிக் கூறுகின்றார் என்பது வெள்ளிடைமலை. அரசன் 'அளிப்பவனே' அன்றி 'அழிப்பவன்' அல்லன். துப்பாக்கி முனையிலும் மூங்கிற் கழிகளின் முனையிலும் குடிகளைத் துன்புறுத்தி ஆளும் அரசன் அரசனாகான். "ஆள்பவன் அரசனாகான், காப்பவனே அரசன்" என்பதே கம்பர் கொண்ட அரசியல் தத்துவத்தின் சாரம். அன்பு வழிகாட்ட அறம் துணை செல்லக் குடிகளுக்குத் தொண்டுபூண்டு ஒழுகுபவனே உண்மை அரசன். அவன் தன் கடமைகளை உள்ள வாறு உணர்ந்திருத்தல் வேண்டும். அவன் அவற்றைக் கனவிலும் மறந்தானாகில் அவன் "புவியாசன்று பூவரசே." குடிகளைக்காப்ப தற்குரிய நற்குணங்களே முதலில் அரசன் பெறத்தக்கவை. இவை, சிறிதளவும் குன்றாது நிறைவுற்று இருக்கவேண்டும். இன்ன குணங்களை உடையவனே உத்தம அரசன் என்ற கம்பர் கூற்று, கற்போர் மனத்தைக் களிப்புறச் செய்கிறது.

'ஆதிம் மதியும் மருளும் மறனும் மமைவும்
எதின் மிடல்வீ ரமுமீகையு மெண்ணில் யாவும்
நீதிந் நிலையும் மிவைநே மியினோர்க்கு என்ற
பாதிம் முழுதும் மிவர்க்கேபணி கேட்ப மன்றோ'

'எப்பொருளையும் ஆராயும் அறிவும், அருளும், அறமும், பெருமை யும், வீரமும், ஈகையும், இவைபோன்ற உத்தம குணங்கள்யாவும், நீதிதவறு நடுநிலையும் பிற மன்னரிடத்து அவ்வளவற்றில் பாதி யே இருந்தன என்னும்படி தயரதன்பால் முழுமையும் இருந்தன; அவை அவன் ஏவற்படி நடந்தன," எனக்கூறும் கம்பர், தாம் கொண்ட அரசியல் தத்துவத்தைச் சிறிதே அதில் தோன்றச்

செய்தார். நம் கவி அரசு உணர்ந்திருந்த அரசியல் தத்துவம் இக்காலப் புவியரசர் மாட்டும் இலங்கக்காணோம்.

அரசன் இலக்கணங்களைக் கூறிய கம்பர் அவன் குடிகளிடம் எவ்வெவ்விதமாக இருத்தல் வேண்டும் என்பதைத் தயரதன் மூலமாக விளக்குகிறார்.

> தாயொக்கு மன்பில்; தவமொக்கு நலம் பயப்பில்
> சேயொக்கு முன்னின் றொருசெல்கதி யுய்க்கு நீரால்
> நோயொக்கு மென்னின், மருந்தொக்கும்; நுணங்கு கேள்வி
> ஆயப்புகுங்கா லறிவொக்கு(ம்), எவர்க்கும் அன்னான்.

'தயரதன் அன்பிலே எவர்க்கும் தாயை ஒத்தவன். நன்மைகளை விளைப்பதில் அவரவர் செய்துள்ள தவத்தையொத்தவன்; நோய்வந்து பொருந்துமாயின், அந்நோயைத்தீர்க்கும் மருந்தையும் ஒத்தவன்; அரிய விஷயங்களை ஆராயப் புகும்போது அவரவர் அறிவை ஒத்தவன். தன் நாட்டுக் குடிகளுக்கேயன்றி எவர்க்கும் தயரதன் இத்தன்மையனே" என்பது பொருள்.

தாய் நம் மாட்டுக் காட்டும் அன்பின் பெருக்கால் நாம் அவளிடமேயன்றி எவ்வுயிரிடத்தும் அன்பு கொள்ளுகிறோம். அங்ஙனமே, அரசன் உயிர்களிடத்து அன்பு காட்ட உயிர்கள் அரசனிடமே யன்றி, பிற உயிர்களிடத்தும் அவ்வன்பைக் காட்டுகின்றன. ஆதலின், நாட்டு உயிர்கள் அன்பையே அணியாகக் கொண்டு விளங்குகின்றன. அரசனது பழக்கத்தால், அவன், தன் மக்களை அன்புருவாகச் செய்து வைக்கின்றான். எனவே, அவன் அன்பு செலுத்தும் வகையில் குடிகளின் தாயை ஒத்தவன் அன்றோ? அன்பே அறத்திற்கு அடிப் படையானது. ஆகவே மன்னன் அன்பால் குடிகளிடம் அறத்தை வளரச் செய்கின்றான். மக்கள் பெறவேண்டிய பேறுகள் நான்கனுள் முதற்பேறு அறமேயன்றோ; அவ்வறத்தையே அரசன் குடிகளைப்பெறச் செய்கின்றான். எனின் அவ்வரசனை எத்தன்மையன் என்று கூறிப்புகழ்வது! இம்மட்டோ?

தயரதனைத் 'தவமொக்கும் நலம் பயப்பில்' என்றார் கம்பர். அவரவர் வேண்டியவற்றை வேண்டியவாறே பெறத் தவம் உதவி செய்யும். (அவ்வாறே பெண்மக்கள் வேண்டியவற்றை) வேண்டியவாறே பெற மன்னன் துணைசெய்வதால் அவன் தவத்தை

ஒத்தவனுவான். ஆகவே அரசன் இரண்டாவது பேருகிய 'பொருளுக்கும்' காரணன் ஆகின்றான்.

மூன்றுவதாக, தயரதன் 'சேயொக்கும் முன்னொரு செல்கதி உய்க்கு நீரால்' என்றார் கவி. ஒருவன் இம்மைப் பற்றைவிட்டு மறுமைக்குரிய நெறியிற் பழகப் புத்திரன் உதவுகின்றான். ஆகவே தந்தையின் செல்கதிக்கு வழி காட்டியாயுள்ளவன் மகனே. அவன் போன்று, தயரதன் மக்கள் அறம்பொருள் இன்பத்தில் ஆழ்ந்துவிடாது மறுமைக்குரிய நிலைமையையும் அவர் செய்யவேண்டிய சாதனங்களையும் அமைத்து வைத்துள்ளான். இந்நிலையில் அவன் 'குடிகளின் சேய்க்குச் சமமானவன்' என்று கூறுதல் அமைவுடைத்து. நம் கம்பர் காட்டும் அரசியல் தத்துவம் சால அழகியதே.

நான்காவதாக, தயரதன் 'நோயொக்குமெனின் மருந்தொக்கும்' என்கிறார். நோயை உண்டாக்குபவனும் அரசனே. அந்நோயை மருந்துபோல் உதவிப் போக்குபவனும் அரசனே. என்னே, கம்பர் காட்டும் அரசநிலை! அற்புதம்; அற்புதம்!! இந்நிலையில் வள்ளுவர் வாய்ச்சொல் ஒன்று நம் நினைவிற்கு வருகின்றது. அஃது, 'பிணிக்கு மருந்து பிறமனணியிழை தன்னோய்க்குத் தானே மருந்து' என்பதே.

'சாதாரண நோய்க்கு மருந்து வேறு; இம்மாதரசி தன்னால் விளைந்த நோய்க்குத் தானே மருந்துமாகின்றாள்' என்னும் வள்ளுவர் வாய்ச் சொல்லையே சாருக வடித்துக் கம்பர், 'நோயொக்குமென்னின் மருந்தொக்கும்' எனச் சுருங்கக் கூறி விளங்கவைத்துள்ளார். இக்கருத்தையும் கம்பர் கருத்தையும் ஒப்பிட்டால் தயரதன் குடிகளின் இன்பத்திற்கு ஆதாரமாய் விளங்கிய பரிசு நன்கு விளங்கும். எனவே அரசனுல் விளைந்த நோய்க்கு அவனே மருந்தாக அமைதல் அழகன்றோ? இதனினும் குடிகள் பெறத்தக்க பேறுதான் யாது? இன்பப்பேறு அரசன் நல்க, குடிகள் அதனையடைந்து இன்புறல் எத்துணைச் சிறந்தது! அம்மம்ம! 'இத்தகைய இன்ப அரசு' இக்காலத்து இல்லையே. இஃது யாம் செய்த முன்னை வினையோ?

ஆகவே, தயரதன் உலகத்து உயிர்களை 'அறம், பொருள்' இன்பம், வீடு' என்ற நான்கு பேறுகளையும் அடைவிக்கின்றான்' மேலும் நூல்களைக் கேள்விமூலம் ஆராயுமிடத்து இன்றியமையாத

அவ்வவர் அறிவேபோல் உடன் நின்று உதவுதல் வியப்பினும் வியப்பே! இதனைக் கம்பர் 'நுணங்கு கேள்வி ஆயப்புகுங்கால் அறி வொக்கும்' எனத் தயரதனைப் பாராட்டும் பரிசு மகிழத்தக்கதே.

தாயாயும் தவமாயும் சேயாயும் அன்பர் தாமாயும் அவ்வவர் அறிவுமேயாயும் தயரதன் தன் குடிகளுக்கு மட்டுமே அமைந் திலன். உலகமக்கள் அனைவர்க்கும் அவன் அத்தன்மையனே என்பதைக் கம்பர் எவர்க்கும் அன்னான்' என வற்புறுத்திக் கூறு கின்றார். இத்தகைய சிறந்த புவியரசை ஏழை இந்தியா எக்காலம் பெறுமோ?

குணத்தாலும் நலத்தாலும் உயர்ந்த தசரதன் வேந்தற்குரிய காற்படையும் நல்லமைச்சும் வேண்டிலன். அவன் கைவேலே அவனுக்குற்ற துணை; அவன் அறிவே நல்ல அமைச்சு, அரசர்க்கு ஒற்றர் என்னும் உளவு அறியும் கூட்டம் ஒன்று உண்டு. அதனையும் கம்பர்காட்டும் கருணைக்காவலன் பெற்றானில்லை. உலகெங்கும் தயரதன் புகழே கூறுவாரன்றி இகழ்வோர் சிலராயின் ஒற்றர் எற்றுக்கு? எம் வேந்தன் ஒற்றர் பெற்றிலன். அமைச்சும் படை யும் அவனுக்குத் தேவையில்லை; கைவில்லே அவனது துணை, அறமே அவனைக் காக்கும் கவசம்; மனுவினும் மிக்க நீதியுடை யான் எனக் கம்பர் தாம் காட்டிய தயரதனைக் கோசிகன் கூறிய தாகக் கூறி மகிழ்கின்றார்.

"துனியின்றி உயிர்செல்லச் சுடராழிப்படை வெய்யோன்
பனிவென்ற படியென்னப் பகைவென்று படிகாப்போன்
தனுவன்றித் துணையில்லான் தருமத்தின் கவசத்தான்
மனுவென்ற நீதியான் மகவின்றி வருந்துவான்"

(க. ரா. குலமுறைகிளத்துப் படலம்)

அரசியலின் முற்றிய தத்துவத்தைக் கம்பர் கழறியுள்ள விதம் கற்பவர் மனத்தைக் கனியச்செய்யும். 'அரசனும் குடிகளும் தம்முள் வேறுபாடு இன்றி இரண்டறக் கலந்தனர்' என்கிறார் கம்பர். உடலும் உயிரும் சேர்ந்து மனிதனாவதுபோன்று, குடிகளும், அரசனும் ஒன்றுசேர்ந்து 'அரசியல்' என்ற உருவத்தை அடைகின்றன. அத னில் அரசன் உடல்; குடிகள் உடலில் தங்கப்பெற்ற உயிர். உயிர் இன்றேல் உடல் ஏது? அங்ஙனமே குடிகள் இன்றேல் கொற் றவன் ஏது? ஆதலின் அரசன் தன் உயிர்போன்ற குடிகளைக்

காக்கக்கடமைப்பட்டவன். அவனும் குடிகளும் இரண்டறக் கலந்தனர் என்றால் அந்நாட்டில் இன்பமே இனிய நடம் புரியுமன்றோ? என்னே கம்பர் காட்டும் அரசியல் தத்துவ மகிமை!

"வயிரவான் பூணணி மடங்கல் மொய்ம்பினன்
உயிரெலாந் தன்னுயிர் ஒப்ப ஓம்பலால்,
செயிரிலா வுலகினிற் சென்று நின்றுவாழ்
உயிரெலா முறைவதோர் உடம்பு மாயினன்."

(க. ரா. அரசியற் படலம்)

'உலகினில் நின்றுவாழ் உயிரெலாம் உறையும் ஓர் உடம்பாயினன்' என்பதே கம்பர் காட்டும் விழுமிய அரசியல் தத்துவம். செங்கோலானும் தண்ணளியானும் ஆனமன்னன் இருக்கத் தக்க மாண்புநிலை இஃதேயன்றோ? வேந்தன் உடலானது பற்றி, தன் அழிவிற்கு வழி தேடாது, உய்வதற்கு வழிதேடக் கடமைப் பட்டவனாகின்றான்; எனவே, அவன் குடிகளின் நன்மதிப்பைப் பெற வழி தேடுகின்றான். அவனன்றோ உண்மை அரசன்!

வேந்தன் உடலாயும் குடிகள் உயிராயும் அமைகின்ற வாய்மையை வசிட்டனும் இராமனுக்கு உரைக்கின்றான்.

வறிஞன் தன் சிறுவயலில் ஒவ்வொரு பயிராய்ப் பார்த்து வளர்க்கும் பெற்றிபோல் தயரதன் வையத்து மாந்தரை ஒன்று சேர்த்துப் பாராமல் தனித்தனியே கண்காணித்து வருவதைக் கம்பர் கூறுவது கருதற்பாலது.

"வையக முழுவதும் வறிஞ னோம்புமோர்
செய்யெனக் காத்தினி தரசு செய்கின்றான்"

என்ற கம்பர் கூற்றுக் கனிந்த பொருள் பெற்றதன்றோ? "வறிஞன் தன்வயலில் உள்ள ஒரு பயிர் அழியினும் தனக்கு நட்டமாக எண்ணுவன். அஃதேபோல் தயரதன் மக்களுள் ஒவ்வொருவரையும் ஊறு அடையா வண்ணம் காத்துவந்தான்" என்று கம்பர் தயரதனை வறிஞனுக்கு ஒப்பிட்டமை சாலச் சிறந்ததே. அரசன் தன்னை வறிஞன் என்று எண்ணுதலே எற்புடைத்து.

தயரதன் 'நான் ஆள்பவன் என்னும் பதத்தைக் கனவிலும் எண்ணிலன்; தாங்குபவன்' என்னும் பொருள்படும் பதமே அவன் அறிந்தது.

அவன் அகராதியிலும் அப்பதமும் அப்பொருள் படும் 'ஓம்பு தல்' 'காத்தல்' என்னும் பதங்களுமே இருந்தன' என்று நினைத்தற் கிடனுகின்றது. அவன் பிள்ளையில்லாக் குறையை வசிட்டனுக்குக் கூறுகையில் " தாங்கினர், ஓம்பினேன், நிலங்காத்தேன் " என்றே தன் கடமையை உணர்த்தும் சொற்களைக் கூறுகின்றுனே யன்றி ஆணவச் சொல்லாப் 'ஆண்டான், ஆண்டேன், நில மாண்டேன்' என்று கூறினுனில்லை.

" எங்குலத் தலைவர்க ளிரவி நன்னினும்
தங்குலம் விளங்குளத் தரணி தாங்கினர்
மங்குன ரில்லென வரம்பில் வையகம்
இங்குள தருளினு லினிதி(ன்) ஓம்பினேன்,"

" அறுபதி னுயிர மாண்டு மாண்டுற
உறுபகை யொடுக்கியிவ் வுலகை ஓம்பினேன்
பிறிதொரு குறையிலை யெற்பின் வையகம்
மறுகுறும் என்பதோர் மறுக்க முண்டரோ "

என்று தயரதன் கூறுவதில் அவன் கொண்ட அரசியல் தத்து வக்கொழுஞ்சாறு இற்றெனை இனிது விளங்கும். 'எனக்குப் புத் திரன் இல்லையே; என் பின் வையகம் அல்லல் உறுமே' எனக் கூறிக் கவல்கின்றமை, அவன் நாட்டினிடத்தும் மக்களிடத்தும் கொண்ட கரைகடந்த பற்று இற்றெனை அறிவிக்கின்றதன்றே ?

'முனிவ! நான் இந்நிலம் காத்தேன் எனக்குப் பிறகு இப் பூமியைக் காப்பதற்குரியாரை நீ அளிப்பாய்!' என்று தயரதன் கலைக்கோட்டு முனிவனை வேண்டியதாகக் கோசிகன் சனகனிடம் கூறுகின்றுன். தன் நன்மைக்கே புத்திரனை வேண்டுவான் தந்தை! ஆனல் மூப்படைந்த தயரதன் இங்குத் தன்பொருட்டுப் பிள்ளையை வேண்டிலன்; தாணியைத் தாங்குவதற்கே வேண்டினன்.

" நீர்காத்த கடல்காத்த நிலங்காத்தே னென்னிற்பின்
பார்காத்தற் குரியாரைப் பணிநீயென் றடிபணிந்தான் "
(க. ரா. குலமுறை கிளத்துப்படலம்

இன்ன தன்மையனுன அரசனை யன்றே குடிகள் விரும்புவர்? கம்பர் காட்டிய அரசனின் அரசியல் தத்துவம் அன்பையே அடிப் படையாகக் கொண்டது. அரசியல் தத்துவம் அன்பிலே பொருந் தியது; அறத்தை வளர்ப்பது. கம்பர் காட்டும் அரசியல் தத்துவம் என்று பெறுவமோ அன்றே நாம் உயர்ந்தவராவோம்.

தமிழ் அறிவியற் சொற்கள்

Geometry-வடிவளவை

[திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள்]

(பத்தாஞ்சிலம்பு ௫௬௬-ம் பக்கத்தொடர்ச்சி)

Bracket என்பது Braca என்ற சொல்லடியாகப் பிறந்து ஒரு பொருளின் கீழ்ப்பகுதியைக் குறித்து நின்றது. கணக்கியலில் ஒரு பொருளைக் கவிந்து அல்லது சூழ்ந்து நிற்பதென்றும் எஞ்சினீயரிங் என்ற பொறியியலில் தன் உள்ளடக்கி நிற்பதென்றும் அது பின்னர்ப் பொருள்பட்டது. எனவே அதைக் கவிப்பு என்று கொள்வது சிறந்ததாகும்.

Bracket	...	கவிப்பு
Curved bracket	...	வளை கவிப்பு.
Starting bracket	...	தொடக்கக் கவிப்பு.
Ending bracket	...	இறுதிக் கவிப்பு.
Double bracket	...	இரட்டைக் கவிப்பு.
Square bracket	...	பாணக் கவிப்பு.
Dash	...	கோடு.
Top dash	...	உச்சிக் கோடு.
Vinaculum	...	உச்சிக் கவிப்பு.
Plus	...	கூட்டு
Plus 5 (+5)	...	கூட்டைந்து.
Plus K	...	கூட்டுக்கா.
Minus	...	குறை
Minus 7 (−7)	...	குறையேழு.
Minus P	...	குறை பா.
Into	...	பெருக்கு
Into 9 (×9)	...	பெருக்கொன்பது.
Divide	...	வகு
Division Sign (÷)	...	வகுப்புக்குறி.
5 upon or over 7	...	ஐந்தின் கீழேழு. (இதனை எழின் மேலைந்து என்று கூறுவது ஒக்குமாயினும் அது தமிழ்வழக்கன்று.)

"Square bracket commences, next, double bracket commences, next, small bracket commences, K plus P, small bracket ends, to the power of three, minus small bracket commences, M plus N minus T to the power of half, minus E to the power of one fourth, vinaculum over T and E, double bracket ends, into small bracket begins, I over L plus O divided by R small bracket ends, equal to U" என்று சொல்லப்படும் ஒரு கணக்கைப் பின்வருமாறு தமிழில் எழுதவேண்டும்:—

"தொடக்கப் பானுக் கவிப்பு, அடுத்துத் தொடக்க இரட்டைக்கவிப்பு, அடுத்துத் தொடக்கச் சிறு கவிப்பு, கா கூட்டுப் பா, ஈற்றுச் சிறு கவிப்பு, அதற்குப் பூ மூன்று, குறை, தொடக்கச்சிறு கவிப்பு, மா கூட்டு நா, குறை பூ அரையுடைய டா, குறை பூ காலுடைய ஈ, டா ஈக்களுக்கு உச்சிக்கவிப்பு, ஈற்று இரட்டைக் கவிப்பு, பெருக்கு, தொடக்கச்சிறு கவிப்பு, ஐயின் கீழ் லா, கூட்டு ராவால் வகுத்த ஒ, ஈற்றுச் சிறு கவிப்பு, பானுக்கவிப்பு இற்றது; இதற்கு இணை-யூ"

Concentric	...	பொதுமையமுடைய, ஒரே மையமுடைய.
Concetric circles	...	பொதுமைய வட்டங்கள்.
To Subtend	...	எதிர் நிற்க.
Subtended angle	...	எதிர்நிலை முடக்கு.
Angle subtended at the centre	...	மையத்துள்ள எதிர் - நிலை முடக்கு.
Subtended by	...	எதிர்கொண்ட.
Angle subtended by an arc		வட்டையால் எதிர்கொண்ட முடக்கு.
Major arc	...	பெரிய வட்டை.
Minor arc	....	சிறிய வட்டை.
Limit	...	கந்து
Method	...	முறை
Method of limits	...	கந்துமுறை.
Common tangents	...	பொதுத் தொடுவன்கள், பொதுத் தொடுவனைகள்.

Direct common tangents ... குறுக்கிடாப் பொதுத் தொடுவன்கள்.

Transverse common tangents குறுக்கிடு பொதுத்தொடுவன்கள்.

Escribe என்பது உள்வரை என்று பொருள்படும் Inscribe என்பதற்கு நேரெதிர் மொழியாகும்.

Escribe ... புறம் வரை

Escribed circle ... புறம்வரைந்த வட்டம், புறம்வரைவட்டம், புறவட்டம்

ஒரு மும்முடக்கின் புறம் வரையப்பட்ட ஒரு வட்டத்தின் மையத்திற்கு circumcenter என்று பெயர். ஒரு மும்முடக்கின் உள்வரையப்பட்ட வட்டத்தின் மையத்திற்கு in-center என்று பெயர்.

Circumcenter ... புறவட்டமையம்

In-center ... உள்வட்டமையம்

Multiple என்பதற்குப் பொதுவாகப் பெருக்கம் என்று பொருள் கொள்ளலாமாயினும் அப்பொருள் வடிவளவைக்குச் சிறவாது. ஏனெனின் ஈண்டுப் பெருக்கம் இத்துணை மடங்குப் பெருகியது என்று அளவுகுறித்த தொன்றாகலின். எனவே மடிப்பு அல்லது மடி என்று பொருள் கோடலே சிறந்ததாகும்.

Sub multiple ... உள்மடிப்பு, உள்மடி

"Magnitude K is said to be a multiple of another magnitude P. If K contains O an exact number of times, P is called a sub-multiple of K." ——"பா என்னும் பருப்பத்தின் முழு எண்ணிக்கைகள், கா என்னும் பருப்பத்திற்குச் சரியாகுமானால், காவைப் பாவின் மடிப்பு என்றும், பாவைக் காவின் உள்மடிப்பு என்றுஞ் சொல்லப்படும்."

Cyclic ... வட்டாவினது

Concyclic ... ஒருவட்டாவினது

"Four or more points through which a circle may be described are said to be con-cyclic"——"ஒரு வட்ட வித்தின்மேல் அமையக் கூடிய குற்றுகள் நான்கு அல்லது மேற்பட்டால் அவைகள் ஒருவட்டாவின என்று சொல்லப்படும்."

Conjugate என்பது சேர்ந்த என்று பொருள்படும் Con என்னும் சொல்லும் நுகம் என்று பொருள்படும் Jugare என்னும் மொழியடியாப் பிறந்த சொல்லும் சேர்ந்து உண்டானதாகும். அதற்கு நேர் தமிழ்மொழி ஒரு பிணை அல்லது பிணை என்பதேயாம். yoking-பிணைத்தல்.

Conjugate	...	பிணை
Conjugate arcs	...	ஒரு பிணை வட்டைகள், பிணை வட்டைகள்.
Quantuplicity	...	அடக்கிடம்
Homologous	...	ஒருவைப்பான
Homologous sides	...	ஒருவைப்புச் சிறைகள்.
Ratio of equality	...	சரிதகவு
Ratio of greater inequality		மிகைத்தகவு
Ratio of lesser inequality		குறைத்தகவு
Compounded ratio	...	அடுக்குத்தகவு
Addendo ratios	...	கூட்டுத் தகவுகள்
Dividendo ratios	....	வகுப்புத் தகவுகள்
Compoundo ratios	...	தொகுப்புத் தகவுகள்
Exequali ratios	...	சரிக்குச் சரிதகவுகள்
Test	...	ஆய்வு
Geometrical test	...	வடிவளவை யாய்வு
Algebraic test	...	குறியளவை யாய்வு
Numerical test	...	எண்ணிய லாய்வு
Arithmetical test	....	எண்ணளவை யாய்வு
Mathematical series	...	கணக்கியற்றொடர், அலகியற்றொடர்.
Arithmetic series	...	மேல்வாய் கூடற்றொடர், மேல் கூடற்றொடர்
Harmonic series	...	கீழ்வாய் கூடற்றொடர், கீழ் கூடற்றொடர்.
Geometric series	...	பெருக்கற்றொடர்.
Arithmetic mean	...	மேல்கூடற்பொது
Harmonic mean	...	கீழ்கூடற்பொது
Geometric mean	....	பெருக்கற்பொது

Co-polar	...	பொது நுகம், பொது நுகத்த
Co-axial	...	பொது இருசு, பொது இருசு டைய.
Solid angle	...	கட்டி முடக்கு.
Corner	...	மூலை.
Parallelepiped	...	முப்போக்குக் கட்டி, முப்போக்கி.
Sphere	....	உருண்டை, உருளை
Right cylinder	...	செவ்வட்ட உருளை.
Right cone	...	செவ்வட்டக் கூம்பு
Oblique cone	...	சாய்வட்டக் கூம்பு
Generating line	...	ஆக்குவரை.
Co-planar	....	ஒரு தட்டைய.
Cuboid	...	செங்கட்டிப்போலி
In-circle	...	உள் வட்டம்.
Area	...	பரப்பு.
Linear foot	...	அளவடி, அடியளவு.
Square foot	...	பரப்படி, அடிப்பரப்பு.
Cubic foot	...	பருமடி, அடிப்பருமன்.
Linear inch	...	அளவிஞ்சி, இஞ்சளவு, விரற் கணுவளவு, கணுவளவு.
Square inch	...	பரப்பிஞ்சி, இஞ்சிப்பரப்பு, விரற்கணுப்பரப்பு, கணுப்பரப்பு.
Cubic inch	...	இஞ்சிப் பருமம், பருமிஞ்சி விரற்கணுப் பருமம், கணுப்பருமம்.
To plot	...	பொறிக்க.
Plotting	...	பொறிப்பு.
To plot the locus	...	ஒழுகைப் பொறிக்க.
To plot a survey	...	அளப்பைப் பொறிக்க.
Plotting scale	...	பொறிப்பளவு பலகை, பொறிப் பளப்பன்.
Proportional compass		படிசுப்பிளவுகாலி.
Scale	...	அளவு திட்டம், திட்டம்.
To reduced scale	...	சுருக்கு திட்டத்திற்கு.

To enlarged scale	...	பெருக்கு திட்டத்திற்கு.
Error	...	பிழை.
To correct	....	திருத்த.
Positive	...	உடன்பாடு
Negative	...	எதிர்மறை.
Gradient	...	சாய்வு - (இது ஏற்றச்சாய்வு இறக்கச்சாய்வு என்ற இரண்டையுங் குறிக்குமாகலின் ஏற்றதாகும். இறக்கச்சாய்வொன்றே குறிக்கும் சரிவு என்ற சொல் ஏலாமை யறிக.)
Falling gradient	...	இறக்கச்சாய்வு, இறக்கம்.
Rising gradient	...	ஏற்றச்சாய்வு; ஏற்றம்.
Unit	...	அளவை
Electricity	...	மின்சாரம்.
Weight	...	நிறை, எடை.

Meter என்பது பிரெஞ்சு நாட்டு நீட்டளவை யாகும். அஃது அளவு என்றே நேர் பொருள் படுமாயினும் வழக்காற்றில் 9.3707904 ஆங்கில இஞ்ச்சிக்குச் சரியான ஒரு பிரெஞ்சு அளவையே குறிக்கும். எனவே இவ்வளவையுங் குறிக்கும் ஒரு தொடரைக் கற்பித்துச் சுருங்கச் சொல்லும் அழகை இழந்து சொல்லாக்க முயலுதலைவிட மீத்தர் என்றே அச்சொல்லையே தமிழில் எடுத்துக்கோடல் சிறப்புடையதாகும். பிரெஞ்சுக்காரர்கள் மீட்டர் என்று ஆங்கிலத்தில் உச்சரிக்கப்படும் சொல்லை மீத்தர் என்றே உச்சரித்தலும் இதற்கு வலிதருவதொன்றாகும்.

Metre	...	மீத்தர்
Deca metre	...	பதின் மீத்தர்
Hectometre	...	நூறன் மீத்தர்
Kilometre	...	ஆயிரமீத்தர்
Myriametre	...	பத்தாயிரமீத்தர்
Decimetre	...	கீழ்ப்பதின் மீத்தர்
Centimetre	...	கீழ்நூறன் மீத்தர்
Millimetre	...	கீழாயிர மீத்தர்

Square metre	...	மீத்தர் பரப்பு, பரப்பு மீத்தர்
Square centimetre	...	கீழ்நூறன் மீத்தர்பரப்பு
Yard	...	யார்டு, இருமுழம்.
Square yard	...	இருமுழப்பரப்பு,யார்டுப்பரப்பு பரப்பிருமுழம், பரப்பியார்டு.
Notation	...	குறியீடு, குறியிடுகை.
Numeration	...	எண்ணீடு, எண்ணிடுகை.
Whole numbers	...	முழு எண்கள்.
Integer	...	முழு எண்.
Squared paper	...	கொட்டறைத்தாள், அரங்கத் தாள் (கொட்டறைப்புடவை)
Fraction	...	கீழ்வாயெண்
Denominator	...	கீழ்வாய்
Numerator	...	மேல்வாய்
Graph	...	வரிவடிவம்

—— காழி. சிவ. கண்ணுசாமி, B.A.

அருஞ்செய்யுட் பொருட் பகுதி

மதுரைக் கலம்பகம்

75-வது செய்யுள்.

[சென்னை கோ. இராமலிங்கத் தம்பிரான் அவர்கள்]

இது தலைமகள் கிள்ளையை நோக்கி இரங்கிக்கூறுதல்.

வாழிமடக் கிள்ளாய் மதுரா புரிவாழும்
ஊழி முதல்வர்க் குருவழிந்தே-யாழியான்
சேய்தொடுத்த வம்போ திரண்முலையுங் கண்மலருந்
தாய்தொடுத்த வம்போ தலை.

பதவுரை :—மடக்கிள்ளாய் - இளமை வாய்ந்த கிளியே! ஆழியான் சேய் - சக்கரப் படையையுடைய திருமாலின் மகனாகிய மன்மதன், உருவு அழிந்தே - (சிவபெருமானால்) உடல் அழிந்து அநங்கனாயிருந்து கொண்டே, திரள் முலையும் - (எனது) திரண்ட தனங்

களிலும், மலர்கண்ணும் - மலர்போன்ற கண்களிலும், தொடுத்த - எய்த, அம்போ - அம்புகளின் கொடுமைகளோமாத்திரமோ, தாய் தொடுத்த - (எனது) தாய் உண்டாக்கிச்சொன்ன, வம்பு - பழிமொழி களையும், மதுராபுரி வாழும் - மதுரைப்பதியில் எழுந்தருளிய, ஊழி முதல்வர்க்கு - ஊழிக்காலத்தும் அழியாது எல்லாப்பொருட்கும் முதல்வராகிய சிவபெருமானுக்கு, ஓதலை - நீ சொன்னயில்லை; வாழி - இனி வாழக்கடவாய். (எ - று.)

(பாற்சோறூட்டி யுன்னை வளர்த்த கடன் இதுதானா? என்பது குறிப்பெச்சம்) வாழி - குறிப்புநிலை. கண்மலரும் என்புழி உம்மை பிரித்துக் கூட்டப்பட்டது.

1. கிள்ளாய்! மன்மதன் அநங்கனா யிருந்துகொண்டே திரண்ட தனங்களிலும் மலர்க்கண்களிலும் தொடுத்த அம்புகளின் கொடுமைகளை மாத்திரமா, எனது தாய் தொடுத்த வீண்சண்டை யையும் மதுராபுரிக் கடவுட்கு ஓதினையில்லை. வாழி - வைதல்மேற்று.

2. கிள்ளாய்! மன்மதன் ஊழிமுதல்வரானே உடலிழந் திருந்துகொண்டே தான் றொடுத்த அம்புகளோ திரண்ட முல்லை மலரும் தேனையுடைய மற்றை மலர்களுமாம்; எனது தாய் கற்பித் துச் சொன்ன பழிச்சொல்லோ அவற்றினும் கொடியதாம். (யான் என் செய்வேன்?) வாழி - அசை, தலை - கொடுமை மேற்று.

3. அம்பால் விளையும் வருத்தமோ திரண்முலையும் கண்மலரு மாகிய அளவில் நின்றன. தாய் தொடுத்த வம்பின் வருத்தமோ தலையளவாயிற்று. என்னை? அளவுகடந்த துன்பத்தைத் தலையள வாயிற்று என்றேனும், தலைக்கு மிஞ்சியது என்றேனும் கூறும் மரபுபற்றி இங்ஙனம் கூறினாராகலின்.

4. சேய்தொடுத்த அம்பு திரண்முலையினும் கண்மலரினும் பாய்ந்து தொடுத்த வம்பு ஓதலை. (வம்பு - வம்புபோல்வது என்க) ஊழி முதல்வர்க்கு (இதனை) ஓதலை. அம்பு பாய்ந்து தொடுத்த வம்பை ஓதலை எனலுமாம். தாய் - வினையெச்சப் பொருளது. எதுகைநயம் பற்றி வலிமிகாதாயிற்று. கவிநாயகன் ஊழிமுதல்வர் என்பது.

5. அம்பாகிய திரண்ட முல்லைமலரையும் மற்றைத் தேனை யுடைய மலர்களையும், தாவித்தொடுத்த ஊரலரையும் ஊழிமுதல் வர்க்கு ஓதலை என்க. இதுவும் கவிநாயகன்.

இனித் துறைநாயகன்.

6. முல்லையும் மற்றை மலருமாகிய மன்மதன் தொடுத்த அம்பையும் தாய் தொடுத்த வம்பையும் தலைவரிடத்துச் சென்று கூறுகிறாயில்லை.

7. சேய் தொடுத்த அம்போ என்முலைபோன்ற முல்லையும் என் கண்போன்ற கருங்குவளையுமேயாம். தாய்தொடுத்த வம்போ அவற்றினும் கொடியது. தலை - ஈண்டு கொடுமைமேற்று. முலைக்கு முல்லைமலர் உருவுவமை. (உரு - வடிவு)

8. சேய் தொடுத்த அம்போ, அல்லது முலையினையும் கண்ணினையு முடைய தாய் வெறிவிலக்கல் முதலிய காரியங்களில் தொடங்கிய வம்போ சிறந்தது? இவற்றுள் எது சிறந்ததோ அதைத் தலைவர்க்குக் கூறுவாயாக.

9. சேய்தொடுத்தவை அம்போ (அல்ல) திரண்ட முல்லையும் கள்ளையுடைய மற்ற மலர்களுமாம். தாய் தொடுத்தவையோ தலையம்பு (சிறந்த அம்பாகும்). ஓகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது.

10. கிள்ளையொடு புலம்பித் தாய்க்குக் கூறுவாயாக எனல்.

திரண்முல்லையுங் கள்ளையுடைய ஏனை மலருமாகச் சேய்தொடுத்தவை அம்பு. இவையே எம்முயிரைக் கொள்ளைகொள்ளப் போதுமானவையாகத் தாய்தொடுத்த பழிமொழிகள் வீண்; அவட்கு ஒதலை.

11. கிள்ளையொடு புலம்பல்.

முல்லையும் கள்ளையுடைய ஏனை மலருமாகச் சேய்தொடுத்த அம்பினும் தாய்தொடுத்தவை தலை அம்போ? (யான் அறியேன்.) தலையம்போ - சிரேட்டமான அம்போ யான் அறியேன் என்றபடி. ஓ - ஐயத்தொடு வினா என்க.

இவை, ஸ்ரீமத் - சிதம்பரம் - ஈசானியமடம் இராமலிங்க சுவாமிகள் இயற்றிய வுரையைத் தழுவி எழுதப்பட்டன.

திருநெல்வேலி
தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தின்
11, 12-ஆவது ஆண்டு நிறைவுவிழா

திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தின் 11, 12-ஆவது ஆண்டு நிறைவு விழா சென்ற (4,5-2-33) சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 4-மணிக்கு, மகிபாலன்பட்டி, திருவாளர். பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியாரவர்கள் தலைமையின் கீழ் நெல்லையப்பர் கோயில் வசந்த மண்டபத்தில் தொடங்கியது. மறைத் திரு. சா. சுந்தர ஓதுவா மூர்த்திகளால் தமிழ்மறை ஓதப்பெற்றபின் சங்கத்தலைவர் திருவாளர். மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் (B.A) அவைத்தலைவ ரவர்களைத் தலைமை வகிக்கும்படி முன் மொழிய, திரு. நா. சிவகுருநாத பிள்ளையவர்கள் வழிமொழிந்தார்கள். அவைத்தலைவரவர்கள் தலைமை இருக்கையில் அமர்ந்தபின் திரு வித்துவான் பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள் அவைத்தலைவரவர்கட்கு உரை நடையிலும் செய்யுள் நடையிலும் இரண்டு நல்வரவேற்புத் தாள்களைப் படித்துக் கொடுத்தார்கள். பின் சங்க அமைச்சர் திரு. வ. திருவரங்கம் பிள்ளையவர்கள் 11, 12-ஆவது ஆண்டறிக்கைகளை வாசித்தார்கள்.

பின் அவைத்தலைவரவர்கள் முன்னுரையாக 'சமயக்கண்' என்னும் பொருள்பற்றி ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். கண்ணை அகக்கண், புறக்கண் அகப்புறக்கண் என்று வகைப்படுத்தி, ஊனக்கண் புறக்கண் என்றும், கல்விக்கண் அகப்புறக்கண் என்றும், சமயக்கண் அல்லது ஞானக்கண் அகக்கண் என்றும், ஞானக்கண் கொண்டன்றித் தேவார, திருவாசக முதலிய அருள் நூல்களைத் தெளிவாய் அறிய முடியாதென்றும் தக்க மேற்கோள்களுடன் இனிது விளக்கி மொழிந்தார்கள். பின் தூத்துக்குடி, சித்தாந்த விரிவுரை யாசிரியர் திரு. ந. சிவகுருநாத பிள்ளையவர்கள், தூத்துக்குடி திரு ச. முத்துக்குமாரசாமிப்பிள்ளையவர்கள் முறையே உலகப் போது நெறியாது? என்பது பற்றியும், நான் யார்? என்பது பற்றியும் விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். திரு. ந. சிவகுருநாத பிள்ளையவர்கள் சைவசமயமானது அருளை அடிப்படையாகக்கொண்டு, எவ்வுயிரினும் இறைவன்

தங்கியிருத்தலால் அனைத்துயிர்களுக்கும் சிறிதுந் துன்பஞ் செய்யாது அன்பு செய்தல் வேண்டும் என்று சிறப்பித்துக் கூறுதல் பற்றி அது எக்காலத்திலும் எல்லா மக்கட்கும் பொதுவான சமயமாய் இருக்கிறதென்று சொன்னார்கள். திரு. ச. முத்துக்குமாரசாமிப்பிள்ளை யவர்கள் நான் இந்த உடல் அல்லவென்றும் நான் என்பது உயிரென்றும் அந்த உயிரும் இறைவன் அறிவித்தாலன்றி அறியக்கூடா தென்றும், தன்வயமின்றி யிருத்தலால் இறைவனருளையே நாடி அவ்வுயிர் வாழவேண்டு மென்றுங் கூறினார்கள். அவைத் தலைவரவர்கள் இவ் இருசொற் பொழிவுகளின் சாரத்தை இனிது எடுத்து விளக்கினார்கள். இதனோடு அன்றைய கூட்டம் தமிழ்மறை ஓதப்பெற்று இரவு 9-30-மணிக்கு முடிவு பெற்றது.

இரண்டாம் நாட் கூட்டம்

5-2-1933 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்குப் பேரவை தொடங்கியது. அவைத் தலைவரவர்கள் நடுநாயகராக விரிவுரையாளர்களும் சங்க வுறுப்பினர்களும் பக்கங்களில் இருக்கப் புகைப்படம் எடுக்கப்பெற்றது. பின் தமிழ்மறை ஓதப்பெற்று, திருநெல்வேலி, இந்து கலாசாலை, தலைமைத் தமிழாசிரியர் திரு. வித்வான் P. K. அருணாசலக் கவுண்டர் அவர்கள் 'கோவையார் நூல் நுட்பம்' என்பதுபற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். அவர்கள், தமிழ் மொழிக்கே சிறப்பாகவுரிய அகப்பொருள் இலக்கணங்களைக் கூறிக் கோவையாரிலுள்ள சில பாட்டுகளை எடுத்துக் காட்டாக விளக்கி இனிது மொழிந்தார்கள். சாத்தூர் வழக்கறிஞர் திரு. T. S. கந்தசாமி முதலியாரவர்கள் (B.A.) 'சேக்கிழார் கவித்திறம்' என்ற பொருள் பற்றி நயம்படப் பேசினார்கள். அவர்கள் சேக்கிழார் உள்ளத்துணர்வை நகைச் சுவை, அவலச் சுவை, வீரச் சுவை முதலிய சுவைகள் விளங்கச்சொல்லோவியம் அமைக்கும் பெரிய கவி என்று கூறினார்கள். அவர்கள் கம்பராமாயணத்திலும், சீவக சிந்தாமணியிலும் சில ஆங்கிலக் கவிகளிலும் உள்ள சுவைகளையும் பெரிய புராணத்திலுள்ள சுவைகளையும் ஒப்பிட்டுக் கூறி, பிறநூற்சுவைகட்கு பெரிய புராணச் சுவைகள் சிறிதும் பின்னிடா வென்றும் ஒருவேளை மேம்பட்டிருக்கலா மென்றுங் கூறி முடித்தார்கள். பின், திருநெல்வேலி நெல்லையப்பர் தேவஸ்தானம் கண்காணிப்பாளர் திரு. A. முத்தையபிள்ளை யவர்கள் B.A., B.L., 'ஐம்புலன் வென்ற அடியவர்' என்ற பொருள்பற்றி 'திருநீலகண்ட

நாயனுரைக் குறித்துப் பேசினுர்கள். அவர்கள் திருநீலகண்ட நாயனுர் இளமையில் சிற்றின்பத்துறையில் எளியராயிருந்தபோதி லும் அவர் மனைவியார் எம்மைத் தொடுவீராகில் 'திருநீலகண்டம்' என்று சூளுறவு செய்தபின் அவர் இறைவனிடத்து வைத்த ஆராக் காதலினுலே தம் மனைவியாரன்றிப் பிற பெண்களையும் மனத்தினு லும் நினையாதிருக்கும்படி இளமை துறக்கும் வலியரானுர் என்ற உண்மையை இனிது விளக்கினுர்கள். அவைத் தலைவரவர்கள் தமது சொற்பொழிவாகத் திருவாசக நூல் நயம் என்ற பொருள் பற்றி ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினுர்கள். மாணிக்கவாச கப் பெருந்தகையார் இறைவனுர் தம்மை ஆட்கொள்ளப் பெற்ற பின் அவருடைய அருட் பெருக்கிற் றிளைத்த பல செய்திகளைத் திருவாசகத்திற் கூறியிருக்கிறுர் என்றும் அவ் அருட்பெருக்குச் செய்திகள் சிலவற்றைக் கேட்போர் உள்ளங் கரைந்து உருகும் படி பிற நூல்களிலுள்ள மேற்கோள்களுடன் ஒப்பிட்டுக் கூறி னுர்கள். பின், 'கோவையார் நூல் நுட்பம்' 'சேக்கிழார் கவித் திறம்.' 'ஐம்புலன் வென்ற அடியவர்' என்ற சொற்பொழிவுகளி லுள்ள சில சிறப்பான உரைகளை எடுத்துக் கூறியதுடன் தாங்க ளும் அவைகளை விளக்கியும் புதுக்கியும் சேர்த்தும் பலவுரைகள் கூறினுர்கள். பின் திரு. வித்வான் பு. சி. புன்னைவனநாத முதலி யார் அவர்கள் அவைத்தலைவரவர்கள் பெருமையை எடுத்துக் கூறி வந்தனம் மொழிந்தார்கள். பின் சங்கத் தலைவர் திரு. மா. வே நெல்லையப்பபிள்ளை யவர்கள் 11, 12-வது ஆண்டு விழா நாட்களில் கேட்போர்க்குத் தமிழிலக்கியச் சுவையும், சமய வுண்மைச் சுவை யும் உண்டாகிப் பெருகும்படியாகவும் அவர்கள் உள்ளங் கரையும் படியாகவும் இரண்டு நாளுஞ் சொற்பெருக்குச் செய்து விழாநாட் களைச் சிறப்பாக நடைபெறும்படி செய்தார்களென்று வாழ்த்துக் கூறி அவர்கட்குப் பூமாலை யணிந்தார்கள். பின், விரிவுரையாளர் கட்கும் கோயில் வசந்த மண்டபத்தை இரண்டு விழாநாட்கள் நடைபெறுதற்கு இடம் உதவிய நெல்லையப்பர்கோயில் அறநிலைப் பாதுகாப்பாளர்கட்கும், விரிவுரை கேட்கவந்த பல அன்பர்கட் கும் வந்தனங்கள் கூறப்பட்டன. பின், தமிழ்மறை ஓதி வாழ்த் துக் கூறிக் கூட்டங் கலைந்தது.　　V. திருவரங்கம்பிள்ளை,

சங்க அமைச்சர்.

6-2-33

மதிப்புரை

யாழ்ப்பாணம் "கலாநிலயம்" முதலாம் ஆண்டின்

அறிக்கை:—

சமயம், தத்துவஞானம், இலக்கியம், சரிதம், ஓவியம், பௌதிக சாத்திரம், நாகரிகம் என்னுந் துறைகளில் இந்தியாவும், இலங்கையும் ஈட்டிய பேறுகளை இக்காலக் கலையறிவின் முறையில் ஆராய்ந்து விளக்கியும், கலைகளின் புத்துயிர்ப்புக்காகவும், சுதேச நாட்டங்கள் கைகூடுவதற்காகவும் ஒல்லும்வகை முயன்றும் தொண்டுபுரியும் உயரிய நோக்கத்துடன் யாழ்ப்பாணத்தின்கண் நிறுவப்பட்டுள்ள "கலாநிலயம்" என்ற சங்கத்தின் முதலாண்டு அறிக்கை எமது பார்வைக்கு வந்துள்ளது. அறிவு பிறங்கும் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் தமிழ் இலக்கணம், இந்திய தத்துவஞான நூலாராய்ச்சி, பொருள் நூல் ஆராய்ச்சி, முதலிய துறைகளில் வகுப்புகள் நடத்தியும், நூல்நிலயம் வாசகசாலை முதலியவற்றின் உதவியால் அறிவைப்பரப்பியும் பெருந்தமிழ்த் தொண்டு புரிந்துவரும் இச்சங்கம் ஏனைய தமிழ்ச் சங்கங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகுமென்று துணிந்து கூறலாம். மேற்கொண்ட பணியில் மேலும் மேலும் உழைத்து நாட்டுக்கு நலம் பெருக்கும் வகையில் அச்சங்கத்தினரை எல்லாம் வல்ல இறைவன் ஊக்குமாறு இறைஞ்சுகிறேம்.

"தமிழ்க்கடல்"

ஆசிரியர் கா. நமச்சிவாய முதலியாரவர்களை இதழாசிரியராகக் கொண்டு "தமிழ்க்கடல்" என்னும் பெயருடன் வெளிவந்துள்ள இப்புதிய திங்கட்டாளை நாம் ஆவலுடன் வரவேற்கிறோம். பூமி சாஸ்திரம், வான சாஸ்திரம், தாவர சாஸ்திரம், ரஸாயன சாஸ்திரம் பௌதிக சாஸ்திரம் முதலிய பொது மக்களுக்கு இன்றியமையாத செய்திகளை இனிய எளிய தமிழ் நடையில் இன்றியமையாத படங்களுடன் வெளியிடுவதே இப்பத்திரிகையின் நோக்கம் என்று கண்டு மகிழ்கிறோம். பூமி, மரம், நீலகிரி, திராவிட மொழிகளின் தொகுதி, தொண்டைமண்டலம், வித்துவான் பட்டதாரிகள் அங்கி என்ற கட்டுரைகள் இதன் முதலிதழில் வெளிவந்துள்ளன.

இதன் ஆண்டுச்சந்தா ரூ. 2.

வர்த்தக ஊழியன்

தொழிலாளரியக்கத்தில் பெரிதும் ஈடுபட்டுப் பேருழைப்புடன் பணியாற்றிவரும் திரு. டி. வி. கே. நாயுடு அவர்களை ஆசிரியராகக்கொண்டு திருச்சியிலிருந்து வெளிவரும் இப்பத்திரிகை எமது பார்வைக்கு வந்துள்ளது. கைத்தொழில் வளர்ச்சி கருதிப் பாடுபட்டுவரும் இந்நாளில் இத்தகைய ஒரு பத்திரிகை வெளிவந்து அறிவூட்டுவது பெரிதும் போற்றற் குரியதாகும். இத்தகைய பத்திரிகைகள் இன்னும் பல வெளி வருதல் வேண்டும். தமிழ் வணிக மக்கள் இப்பத்திரிகையைப் பெற்று நலமெய்துவார் களென்றே நம்புகிறோம்.

விஜயலக்ஷ்மி

தருமபுரியிலிருந்து சுகவனம் சிவப்பிரகாசனுரை ஆசிரியராகக் கொண்டு "விஜயலக்ஷ்மி" என்னும் பெயருடன் வெளிவரும் இப் புதிய மாதசஞ்சிகையைக் கண்ணுற்றோம். ஆங்கிலத்திலிருந்து தமிழிலும், தமிழிலிருந்து ஆங்கிலத்திலுமாக மொழி பெயர்க்கப் பட்டுள்ள பல கட்டுரைகள் இதன்கண் மிளிர்கின்றன. சேலம் ஜில்லாக் கல்வியதிகாரியான திரு. T. B. கிருஷ்ணசாமி முதலியா ரவர்களுடைய சிறந்த பல கட்டுரைகளை இச்சஞ்சிகை கொண்டிருப்பது இதன் சிறப்பாகும். இதன் வருடச்சந்தா ரூ. 2

தமிழரசு

முன்பு வாரப்பதிப்பாக இருந்து தற்காலம் மாதசஞ்சிகை யாக வெளிவரும் இப்பத்திரிகை இப்பொழுது டாக்டர். மே. மாசிலாமணி முதலியாரவர்களை ஆசிரியராகக் கொண்டு நடை பெற்று வருகிறது. இதன் ஆண்டுச்சந்தா ரூ. 1.

புறநானூறும் ஆங்கில மொழிபெயர்ப்பும்
(திரு. T. B. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள் M.A., B.L.)

கண்ணி கார்நறுங் கொன்றை காமர்
வண்ண மார்பிற் றாருங் கொன்றை
யூர்தி வால்வெள் ளேறே சிறந்த
சீர்கெழு கொடியு மவ்வே றென்ப
கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை
மறைநவி லந்தணர் நுவலவும் படுமே
பெண்ணுரு வொருதிற னாகின் றவ்வுருத்
தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும்

பிறைநுதல் வண்ண மாகின் றப்பிறை
பதினெண் கணனு மேத்தவும் படுமே
யெல்லா வுயிர்க்கு மேம மாகிய
நீரற வறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோற்கே.

400—ODES

Round His crest is a coronal of Cassia drenched with honey and autumnal rains! Of Cassia too is the garland that adorns His beautiful breast. On a spotless white ox He rides; and the ox is the blazoned emblem on His far renowned banner. The black poison beautifies His throat and as a symbol of the Celestials' Salvation it is praised by the wise Chanter of the Vedas.

The maid is a part of the Lord, hidden or manifest. The crescent decks the brow and there it is worshipped by the eighteen Ghanas (the whole Universe). Water, indispensable to all life, He bears in His holy vessel inexhaustible and in His low-falling long flowing locks of hair, He of the rare penances and austerities!

உ

ஓர் சோதிடப் பெரியார் பிரிவு

சீரிய ஒழுக்கமும் சிறந்த கல்வியும் நிரம்பிய திருவாளர் முத்துக்கருப்ப பிள்ளை யவர்கள் நிகழும் மெய்கண்டான் யாண்டு 710 தைமீ 25 உ (6-2-1933) மாலை மூன்று மணிக்குத் தமது எழுபத்தாறுவதுவயதில் சிவனுர் திருவடி நிழலடைந்தார்கள். அவர்கள் இராமீச்வரம் தேவஸ்தானம் சோதிடப் புலவராகப் பல ஆண்டுகளாக இருந்து வந்தார்கள்; சோதிடநூலில் மிகுந்த ஆராய்ச்சி யுடையவர்கள்; தமிழ்ச் சோதிட விளக்கம் என்ற 'வாக்கிய பஞ்சாங்கவழு' என்ற நூலை நமது கழக வாயிலாக அண்மையில் வெளியிட்டுதவினுர்கள். தமிழ் மருத்துவத்திலும் மிக வல்லார். அவர்கள் பிரிவால் தமிழுலகு ஒரு சிறந்த மணியை இழந்ததாகும். அவர்கள் குடும்பத்தார்க்கு இக்கழகத்தார் ஆறுதல் கூறுகின்றுர்கள்.

தென்னிந்திய சைவசித்தாந்தக்
கழகத்தார்.



பாம்பன் : குமரகுருதாச சுவாமிகள்

ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்

திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு கக | மெய்கண்டான் யாண்டு-எாய மாசித் திங்கள் 1933ஆ பிப்ரவரிமீ—மார்ச்சுமீ | பரல் உ

I. திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் தேவாரம்

கள்ளநெஞ்ச வஞ்சகக் கருத்தைவிட் டருத்தியோ
டுள்ளமொன்றி யுள்குவார் உளத்துளான் உகந்தவூர்
துள்ளிவாளை பாய்வயற் சுரும்புலாவு நெய்தல்வாய்
அள்ளல்நாரை ஆரல்வாரும் அந்தணாரு ரென்பதே.

பதவுரை:—

கள்ள நெஞ்ச வஞ்சகக் கருத்தை விட்டு—வஞ்சகத்தையுடைய நெஞ்சிலிருந்து எழுகின்ற வஞ்சகக் கருத்தை நீக்கி,

அருத்தியோடு—உண்மையான அன்புடன்

உள்ளம் ஒன்றி உள்குவார்—நெஞ்சோடு பொருந்தி நினைப்பவரது,

உள்ளத்துளான்—நெஞ்சில் நிலையாக விளங்கியிருக்கின்றவனாகிய சிவபெருமான்

உகந்த ஊர்—மகிழ்வுடன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் ஊரானது

சுரும்பு உலாவு நெய்தல் அள்ளல்வாய்—வண்டுகள் விளையாடுகின்ற கருங்குவளையும் சேறும் பொருந்தி யிருக்கின்றதும்,

வாளை துள்ளிபாய்—வாளைமீன்கள் துள்ளி விளையாடுகின்றதுமாயுள்ள,

வயல்—வயல்களில்

நாரை—நாரையானது

ஆரல் வாரும்—சிறுமீன்களைப் பிடிக்கின்ற

அந்தண் ஆரூர் என்பது—அழகும் குளிர்ச்சியுமுடைய திருவாரூர் என்று கூறப்படுவது.

விளக்கவுரை :—

கள்ள நெஞ்ச வஞ்சகக் கருத்து—கள்ளம், வஞ்சகம், கரவு என்பன ஒருபொருட் சொற்கள். வஞ்சகக் கருத்து வஞ்சக நெஞ்சிலிருந்து இயல்பா யெழுதலால் கள்ளநெஞ்ச வஞ்சகக் கருத்து என்றார். சிவ பெருமான் வஞ்சகர் நெஞ்சில் தங்கான் என்பது தேவாரங்களில் பல இடங்களில் கூறப்பட்டிருக்கின்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திரு நின்றியூர் தேவாரம் 5-வது பாட்டில் 'வஞ்சங் கொண்டார் மனஞ் சேரகில் லார்' என்று கூறியிருத்தல் காண்க.

உள்ளம் ஒன்றி உள்குவார்—உள்ளம் ஒன்றி உள்குதலாவது நெஞ்சில் அழுந்தி இடையறாது நினைத்தல்.

ஊர்—எழுவாய், ஆரூர் என்பது பயனிலை. ஏ. ஈற்றசை.

இந்தத் தேவாரப்பாட்டில் முன் இரண்டடிகளில் சிவபெருமான் எத்தகையருடைய உள்ளத்தில் விளங்கியிருப்பன் என்பதும் பின் இரண்டு அடிகளில் திருவாரூரில் காணப்படுகின்ற இயற்கை வருணனையுங் கூறப் படுகின்றன.

II. திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்பர் அவர்தமை நாணியே.

பதவுரை :—

நெக்கு நெக்கு நினைபவர்—(தமக்கு இறைவனிடத்துள்ள தொடர்பையும் அவர் தம்மைப் பேரின்ப மடையச்செய்ய இடையறாது செய்துவரும் பெருதவியையும் அறிந்து அங்ஙன் றியறிதல் காரணமாக) நெகிழ்ந்து உருகி நினைக்கின்ற மாந்தர்களுடைய

நெஞ்சுளே புக்கு நிற்கும்—உள்ளத்திலுள்ளே அருள் ஒளியாக விளங்கி நிலையாக வீற்றிருக்கும்

பொன்னார்சடைப் புண்ணியன்—பொன்போலும் நிறம் பொருந்திய சடையை உடைய இறைவன்

பொக்க மிக்கவர் பூவும் நீரும் கண்டு—பொய்த்தன்மையை மிகுதியாக உடையவர் (தமக்கு வழிபாடு செய்யுங்கால் துணைப் பொருள்களாகக் கொள்கிற) பூவினையும் நீரினையும் (பிறபொருள்களையும்) கண்டு

அவர் தம்மை நாணி—அவருடைய உள்ளத்தைச் சேர்தற்கு வெள்கி

நக்கு நிற்பர்—சிரித்துக்கொண்டு புறமாக நிற்பர்.

விளக்கவுரை :—

நெக்கு நெக்கு நினைபவர்—நெகுதல்-உள்ளம் குழைந்து உருகுதல்; உயிர் உள்ளம் குழைந்து உருகுதல் இறைவனைச் சார்ந்து அவனது தன்மையை அடைதற்கு இன்றி அமையாது வேண்டப்படுவது. இரண்டு கடினமான உயிரில்பொருள்களும்கூட இளகி உருகினாலன்றி ஒன்றுடனொன்று சேரமாட்டா.

நெக்கு நெக்கு—அடுக்குத்தொடர்.

நினைபவர்—உயர்திணைப் பலர்பாற் படர்க்கை எதிர்கால வினையாலணையும் பெயர். நினைக்கிறவர் என நிகழ்காலத்தாற் கூறற்பாலது இயல்பு பற்றி எதிர்காலத்தாற் கூறப்பட்டது.

நெஞ்சு உளே—உள்ளே என்பது உளே எனக்குறுகி நின்றது. நெஞ்சு, உள்ளம், சிந்தை, மனம் என்பன ஒருபொருட் சொற்கள்.

புக்கு நிற்கும்—புகுதல் என்பது விளங்கித்தோன்றல். இறைவன் எல்லாருடைய உள்ளத்திலும் எப்பொழுதும் இருந்தாலும் தம்மிடத்து அன்பு செய்கிறவர்களுடைய உள்ளத்தில் விளங்கி ஏனையர்களுடைய உள்ளத்தில் விளங்காது நிற்பர்.

பொன் ஆர் சடைப்புண்ணியன்—பொன் இங்கே ஆகு பெயராய்ப் பொன்னினது நிறத்தைக் குறிக்கிறது. புண்ணியன்—நன்மையே எல்லா உயிர்களுக்கும் எப்பொழுதும் செய்கிறவன்.

பொக்கம்—பொய்த் தன்மை; பொக்க மிக்கவர் உலகத்தை மெய் எனவும் இறைவனைப்பொய் எனவும் மயங்கி அறிந்து திருவருளை முற்றிலும் மறந்து ஒழுகும் ஒழுக்கம் உடையவர்.

பூவும் நீரும்—பூ, நீர், தூபம், தீபம் நிவேதனம் முதலியன இறைவனை வழிபடுங்கால் வழங்கப்படும் துணைப்பொருள்கள். உள் அன்பு இன்றிச் செய்யப்படும் வழிபாட்டில் இப்பொருள்கள் ஆடம்பரமாயுள்ளனவே யன்றி யாதொருபயனையும் தருவன அல்ல. வழிபாடானது சார்ந்ததன் வண்ணமாகுந் தன்மை உடைய உயிர் இறைவனைச் சார்ந்து அவன் தன்மையை அடைதற்குப் படிமுறையில் அவனிடத்து நெருங்கி அணுகும்பயனைத் தரத்தக்கது. உயிர் உள்ளம் குழைந்து உருகினாலன்றி இப்பயன் உண்டாக மாட்டாது.

நக்கு நிற்பர்—நிற்பர்-தெரிநிலை எதிர்காலவினை முற்று நிகழ் காலத்தாற் கூறற்பாலது இயல்பு பற்றி எதிர்காலத்தாற் கூறப்பட்டது. இவர்கள் தாங்கள் அன்பின்றி ஆடம்பரத்துடன் செய்யும் வழிபாடு பயனைத்தரும் என்று எண்ணுகிற அறியாமையை நோக்கி இறைவன் சிரிப்பர்.

உள்ளீடான உண்மை அன்பு இன்றி மாந்தர் செய்யும் வழிபாட்டினை இறைவன் ஏற்றுக் கொள்ளான் என்பது இத் தேவாரப்பாட்டின் கருத்து.

மா. வே. நெல்லையப்பபிள்ளை.

தமிழ் அறிவியற் சொற்கள்

வடிவளவை - Geometry

[திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள்]

(முன் சஙு-ம் பக்கத் தொடர்ச்சி)

Estimate	...	திட்டம்
Detail estimate	...	விவரத்திட்டம்
Abstract estimate	...	பொழிப்புத்திட்டம்
Accurate estimate	...	திருத்தத் திட்டம்
Rough estimate	...	கிட்டுதிட்டம் (ஈண்டுக் கிட்டு என்பது ஆங்கிலச் சொல்லாகிய approaching என்பதன் பொருட்டு.)
Off-sets / Off-set lines	...	விலக்க வரைகள்
Off-set pieces of scales	...	விலக்க வளப்பன்கள்.
Base line	...	பொதுவரை
To solve	...	ஈவுகாண; ஈவெடுக்க.
To solve an equation	...	இணையின் ஈவெடுக்க
Axes of co-ordinate	...	துணையாயங்களின் இருசுகள், மையவரைகள்.
Cardinal points	...	திசைகள், திசைமுனைகள்.
Cipher	...	சுன்னம், சுன்.

Normal	...	செங்குத்தாக, செம் முடக்காக.
Plummet	....	தூக்குக் குண்டு
Substitute	...	ஈடு.
To substitute	...	ஈடாக்க, ஈடுபடுத்த
Mensuration	...	அளவுகணக்கியல், அளவலகியல்
Problem	...	கணக்கு (கண்ண - To reckon)
To solve a problem	...	கணக்கிற்கு ஈவுகாண.
Fathom	....	ஆறு அடி அல்லது நான்கு முழம்; ஆளாழம்.
Cardinal	...	(எத்) தனை, (இத்) தனை, (அத்)தனை. தொகை.
Ordinal	...	(எட்டா) வது, (பத்தா) வது. சுட்டு
Cardinal numbers	...	தொகையெண்; தனையெண்
Ordinal numbers	...	சுட்டெண்; வதுவெண்.
Wedge	...	ஆப்பு

Spheroid என்பதற்கு முட்டைவடிவு என்று பொருள் கொள்ளக்கூடுமாயினும் முட்டையின் ஒரு முனையைவிட மறுமுனை அகலமாயிருப்பதால் அப்பொருள் சிறவாது. எனவே சூம்புருண்டை என்று பொருள் கோடல் நேரிதாம்.

அவ்வண்ணமே *Oval* என்பதற்குச் சூம்பு வட்டம் என்றே பொருள் கோடல் வேண்டும்.

Curved face	...	நெளி முகம்.
Ellipsoid	...	ஓரைவட்டக்கட்டி.
Poly-hedra	...	பலபட்டைக்கட்டி.
Cross section	...	குறுக்கு வெட்டு.
Undevelopable	...	பரப்பலாகா.
Ex-centre	...	புறமையம்
Eccentric	...	ஒதுங்கு மையம், மையமொதுங்கிய.

Perpendicular plane ... செங்குத்துத் தட்டை.
Globe ... உலகு, உலகவுருண்டை, உலகுருண்டை.
Wire globe ... கம்பியுலகுண்டை, கம்பியுண்டை.
Screw ... திருகு, மறை
Right handed screw ... வலந்திருகு, வலமறை.
Left handed screw ... இடந்திருகு, இடமறை.
Nail ... ஆணி
Screw nail ... திருகாணி, மறையாணி.

(திருகு என்பது சிறுவடிவினதற்கும் மறையென்பது பெருவடிவினதற்கும் வழங்கப்படுதல் தமிழ் மரபு.)

Thread of screw ... மறைச்சுற்று, திருகுச் சுற்று, சுற்று.
Screw gauge ... திருகுமட்டு, திருகியல் மட்டு.

Euclid Book 1. Theorem 34

யூக்லிட் 1-வது சுவடி-34-வது தேர்வு

The oppostie sides and angles of a parallelogram are equal to one another and each diagonal bisects the parallelogram—ஒரு இருபோக்கியின் எதிர் சிறைகளும் எதிர் முடக்குகளும் ஒன்றற்கொன்று ஒக்கும். ஒவ்வொரு முடக்குருவியும் இருபோக்கியைச் சரியிரு கூறுக்கும்.

Let A B C D be a parallelogram of which B D is a diagonal—கக்கா கிக்கி தான் ஒரு இருபோக்கியும் காக்கி அதில் ஒரு முடக்குருவியும் ஆகட்டும்.

It is required to prove that

(1) A B is equal to CD and AD is equal to CB
(2) The angle B A D is equal to the angle DCB
(3) The angle A D C is equal to the angle CBA
(4) The triangle A B D is equal to the triangle

C D B in area.

பின் வருவனவற்றைத் தெரிக்க வேண்டியது:—

1. கக்காவிற்குக் கிக்கீயும் கக்கியிற்குக் காக்கியும் சரியென்பது.
2. கிக்கக்கா முடக்கு காக்கிக்கி முடக்கிற்குச் சரியென்பது.
3. கிக்கீக்கம் முடக்கு கக்காக்கிம் முடக்கிற்குச் சரியென்பது.
4. கக்காக்கி மும்முடக்கி காக்கிக்கி மும்முடக்கிற்குப் பரப்பில் சரியென்பது.

Proof :—Because AB and DC are parallel and BD meets them, therefore, the angle A B D is eqnal to the alternate angle C D B.

தெரிப்பு:—கக்காவும் கிக்கீயும் ஒருபோகாக இருக்க அவைகளைக் காக்கி முட்டுவதனுல் கக்காக்கி முடக்கு ஒன்று விட்ட கிக்கீக்கா முடக்கிற்கு ஒப்பு.

Again, because AD and B C are parallel and BD meets them, therefore, the angle A D B is equal to the alternate angle C B D—இன்னும் கக்கீயும் காக்கியும் ஒருபோகாக இருக்க அவைகளைக் காக்கி முட்டுவதனுல் கக்கீக்கா முடக்கிற்கு ஒன்று விட்ட கிக்காக்கி முடக்கு ஒப்பு.

Hence in the triangles ABD and C D B because the angle A B D is equal to the angle C D B and B D is common to both—(proved) therefore the triangles are equal in all respects. (Euclid-Theorem 26)

இதனுல் கக்காக்கியும், காக்கிக்கீயுமான இருமும் முடக்கிகளில், காக்கக்கி முடக்கிற்குக் கிக்கீக்கா முடக்கும் கக்கீக்கா முடக்கிற்குக் கிக்காக்கி முடக்கும் ஒப்பாகையாலும் காக்கி பொதுவரை யாதலாலும்—(தெரித்தது) இரு மும்முடக்கிகளும் எல்லாவகையினும் ஒரு சரியானவை. (யூக்லிட்-தேர்வு 26)

So that A B is equal to C D and A D is equal to C B. (1) —அதனுல் கக்காவானது கிக்கீக்கும், கக்கீயானது கிக்காவிற்கும் ஒப்பு. (1)

and the angle B A D is equal to the angle D C B —(2) மேலும் காக்கக்கி முடக்கிற்குக் காக்கிக்கி முடக்கு ஒப்பு (2)

and the triangle A B D is equal to the triangle C A B in area (4)

இன்னும் கக்காக்கி மும்முடக்கியும் காக்கிக்கி மும் முடக்கியும் பரப்பில் ஒப்பு—(4)

And because the angle A D B is equal to the angle C B D (proved) and the angle C D B, is equal to the angle A B D therefore the whole angle ADC is equal to the whole angle C B A—(3) Q. E. D

அல்லாமலும் கக்கிக்கா முடக்கு, கிக்காக்கி முடக்கிற்கு ஒப்பானதாலும் (தெரித்தது) கக்கிக்கா முடக்குக் கிக்காக்கி முடக்கிற்கு ஒப்பானதாலும் முழுமுடக்குக் கக்கிக்கியானது முழு முடக்கு கக்கிக் காவிற்கு ஒப்பு—(3) தெ. எ. அ.

—காழி. சிவ. கண்ணுசாமி *B. A.*

திருவள்ளுவரும் உரைநூலும்

[திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் M. A., M. L.]

முற்காலத்திலேயே தமிழர்கள் மனதைப் பற்றி அறிந்திருக்கிறார்கள். ஆனால் அதன் தத்துவங்கள் அடங்கிய நூல் ஒன்றும் இப்பொழுது நமக்குக் கிடைத்திலது. அப்பொழுது இருந்திருக்கலாம். மேல் நாட்டினர் மனமும் (Mind) ஆன்மாவும் (Soul) ஒன்றென்றே சொல்லி விடுவர். தமிழர்கள் முன்பிருந்தே ஐம்பூதங்களைப்பற்றி உணர்ந்திருக்கிறார்கள். தொல்காப்பியத்தில் நிலம், நீர், தீ, காற்று, வான் என்ற ஐம்பூதங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. பஞ்சபூதங்களில் ஒரு பூதத்தை எடுத்துக்கொண்டால் வேறு பூதங்களும் அடங்கி யிருக்கின்றன. மண் என்று எடுத்துக்கொண்டால் பிருதிவி தத்துவம் மாத்திரம் இன்றி நீர் முதலிய வேறு தத்துவங்களும் அடங்கியிருக்கின்றன. திருவள்ளுவரும்,

> " வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
> ஐந்தும் அகத்தே நகும் "

என்று ஐந்து பூதங்களையும் சொல்லி யிருக்கிறார். மற்றும்

"சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு"

என்றும் கூறியிருக்கிறார். ஆனால் இவைகள் மேற்சொன்ன ஐந்து பூதங்களின் குணங்கள் என்று கொள்ளுதல் கூடாது.

திருவள்ளுவர் தம் குறளில் மனம், நெஞ்சு என்றே அநேக இடங்களில் கூறியிருக்கிறார். மனதிற்கு நினைத்தது முடித்தல் (Thought power) என்னுங் குணம் உண்டென்பதை,

'எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்னும் குறளிலும்,

"வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப
மற்றைய வெல்லாம் பிற"

என்னும் குறளிலும் சொல்லியிருக்கிறார்.

யான் முதலில் சைவசித்தாந்த கருத்துக்களுக்கேற்ப திருவள்ளுவர் மனதைப்பற்றிச் சொல்லியிருப்பதைக் கூறுகிறேன். முதலாவதாக, கலை, வித்தை, அராகம் என்ற தத்துவங்களை எடுத்துக் கொள்வோம். கலாதத்துவத்தை,

"மனத்தானும் மாந்தர்க் குணர்ச்சி யினத்தானும்
இன்னா னெனப்படுஞ் சொல்"

என்ற குறளில் அடங்கியிருப்பதைக் காணலாம். வித்தை தத்துவத்தை,

"மனத்து ளதுபோல காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு"

என்ற செய்யுளினின்றும் உணர்கிறோம்.

"உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்"

என்ற குறட்பாவிலும்,

"உள்ளிய தெல்லா முடனெய்து முள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின்"

8

என்ற குறட்பாவிலும் அராக தத்துவத்தைப்பற்றித் தெரிந்து கொள்ளுகிறோம். உள்ளத்தால்தான் உள்ள முடியும்; கண், வாய் முதலியவற்றால் உள்ள முடியாதல்லவா?

இப்பொழுது காலம், நியதி என்ற இரண்டையும் எடுத்துக் கொள்கிறேன். ஒருவனுடைய மனத் தன்மையால்தான் காலத்தின் நன்மை, தீமை தோன்றும். இக்கருத்தையே ஆங்கில மகா கவியொருவர், "It is the mind that makes a heaven of hell and a hell of heaven" என்று கூறியிருக்கிறார்.

"மாலைநோய் செய்தன் மணந்தா ரகலாத
காலை யறிந்த திலேன்"

என்ற குறளில் மாலை இவ்வாறு துன்பஞ் செய்யும் என்பதைக் காதலர் பிரியாத காலத்தில் நான் தெரிந்து கொள்ளவில்லை என்று தலைவி கூற்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முன்பு மாலை நன்றாகத் தோன்றியது; பின்பு அதே மாலை அப்படியில்லையென்ற கருத்தால், மனத்தன்மையால் கால வேறுபாடு தோன்றும் என்று அறிகிறோம். மற்றும்,

"ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ் சேட்சென்றார்,
வருநாள் வைத்தேங்கு பவர்க்கு"

என்ற குறளிலும்,

"கொடியார் கொடுமையிற் றாங்கொடிய விந்நா
ணெடிய கழியுமிரா"

என்ற குறளிலும், தலைவி, தலைவன் பிரிந்த காலை காலம் நீடித்துத் தோன்றுவதாகவும், தலைவன் தன்னுடனுறையுங் காலம் நீடித்திருக்க வேண்டு மென்றும் கூறுகிறாள். இதுவும் மனத் தன்மையால் காலபேதம் தோன்றுவதைக் குறிக்கும். சுந்தர மூர்த்தி சுவாமிகள் புராணத்தில் "ஊழியாம் ஒரு கணந்தான் அவ்வூழி யொருகணமாம்" என்று கூறியுள்ளார் சேக்கிழார்.

நியதி என்பதைப்பற்றியெல்லாம் "ஊழ்" என்னும் அதிகாரத்தினின்றும் தெரிந்து கொள்ளலாம். எனெனில் "ஊழ்" நியதி என்பவை ஒருபொருளனவே.

இனி, மனத்தின் வேறு சில தத்துவங்களைப்பற்றி யுரைக்கிறேன்.

பொறி யுணர்ச்சியை (Sensation),

"ஊடற்கட் சென்றேன்மற் றேழி யதுமறந்து
கூடற்கட் சென்றதென் னெஞ்சு"

என்ற குறளிற் காண்கிறோம். நினைவுணர்ச்சியை (Perception),

"படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா தொன்றன்
உடல்சுவை யுண்டார் மனம்"

என்று காட்டியிருக்கிறார். கருத்துணர்ச்சி (Conception)

"அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு"

என்ற பாவில் அடங்கியிருக்கின்றது. அளவறிந்தார் என் பதிலிருந்து முற்காலத்தில் தமிழர்கள் அளவுநூல் (தர்க்கம் logic) வல்லாராய் இருந்தார்கள் என்பது பெறப்படுகின்றது. தன்னெஞ்சு (Conscience) என்பதை,

"தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்"

என்ற குறளினின்றும் அறிந்து கொள்கிறோம்.

புனைவாற்றல் (Imagination),

"காணுங்காற் காணேன் தவறாய காணாக்காற்
காணேன் றவறல் லவை"

என்ற செய்யுளில் அறியக்கிடக்கின்றது. ஆராய்ச்சியை (Investigating faculty)

"நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே யெனைத்தொன்று
மெவ்வநோய் தீர்க்கு மருந்து"

என்ற குறளடிகளால் உணரலாம்.

அலமருதல் (Dilemma),

"காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேனிவ் விரண்டு"

என்ற கூற்றால் விளங்குகிறது.

ஐயம் (Doubt),

" அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு "

என்ற பாவிற் காணலாம்.

திரிபுணர்ச்சியை,

" மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று "

என்று கூறியிருப்பதால் தெரிந்து கொள்ளலாம்.

இனி நனவு, கனவு, துயில், துரியம் துரியாதீதம் என்பவற்றைப்பற்றித் திருவள்ளுவர் கூறியிருப்பதை ஆராய்வோம்.

நனவு, கனவு என்பவற்றை,

" நனவென வொன்றில்லை யாயிற் கனவினுற்
காதலர் நீங்கலர் மன் "

என்ற குறளில் காணலாம்.

துயிலைப்பற்றியோ,

" உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு '

என்றதினின்றும் அறிகிறோம். துரியநிலையை

" உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியே
னொள்ளமர்க் கண்ணாள் குணம் "

என்ற குறட் பாவில் அமைத்திருக்கிறார். துரியாதீதத்தை "அவாவறுத்தல்" என்னும் அதிகாரத்தில் "பேராவியற்கை" என்று கூறியிருப்பதினின்றும் தெரிந்து கொள்ளலாம். மனத்தின் அடக்கு மாற்றலை (Self control)

" புல்லி விடாஅப் புலவியுட் டோன்றுமென்
னுள்ள முடைக்கும் படை "

என்ற குறளில் கூறியிருக்கிறார்.

மனத்தின் உன்னுதல் (Will) தொழிலை

" ஊட லுணங்க விடுவாரோ டென்னெஞ்சங்
கூடுவே மென்ப தவா "

என்றதால் பெறப்படும்.

குணவுணர்ச்சியை (Emotion)

" மனநல மன்னுயிர்க் காக்க மினநல
மெல்லாப் புகழுந் தரும் "
என்ற பாட்டினின்றும் அறியலாம்.

" பெறுஅமை யஞ்சும் பெறிற் பிரிவஞ்சு
மறுஅ விடும்பைத்தென் னெஞ்சு "

என்பதிலிருந்து மனத்தின் அச்சத்தைப் பற்றிக் கூறிய துணர்கிறோம். மேலும் அவலம், கவலை, கோடு கொடேறுதல் முதலிய மனநிலைகளைப் பற்றியும் திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

" உறுஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறுஅய் வாழிய நெஞ்சு "
என்று நெஞ்சை நகையாடிக் கூறுகிறார்.

" எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு "
என்ற செய்யுளிலும்

" ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து "

என்ற செய்யுளிலும் சொல்லியவற்றை உற்று நோக்குழி மனம் ஒரு நுண்ணிய உடல் போன்றிருப்பதை அறிகிறோம்.

" மனத்துக் கண் மாசில ளுதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற "

என்று உள்ளத்திற் குற்றமில்லாமையே பெரிய அறம் என்று உணர்த்துகிறார். மனக்கவலை யறுதல்தான் முடிந்த இடம் என்பதை,

" தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது "

என்ற செய்யுளில் அறிவிக்கிறார். திருஞான சம்பந்த சுவாமிகள் " நன்னெஞ்சே வுனை யிரந்தேன் " என்று கூறியுள்ளார்.

" ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டாப் பிறப்பு "

பேர்த்துள்ள வேண்டாப்பிறப்பு என்றதில் மனம் உண்மையை ஆராய்ந்து அதனை அனுபவத்தி லுணருமாயின் மீட்டும்

அவனுக்குப் பிறவியில்லை என்கிருர். இப்படியெல்லாம் ஆராய்ந்து பார்க்குமிடத்து உளநூல் திருவள்ளுவர் காலத்துக்கு முன்பே யிருந்திருத்தல் வேண்டும் என்பது ஒருதலை. மக்கள் அப்படியறிந்திருந்தால் தான் திருக்குறளைப் படிக்க எளிதாயிருக்கும்; திருவள்ளுவரும் இந்நூலை எழுதவும் நேர்ந்தது. முன்பு ஒருவர் "திருவள்ளுவரும் தாவரநூலும்" என்ற பொருள் பற்றிப் பெரியதொரு சொற்பொழிவாற்றியுள்ளார். அளவு நூல் (Logic) கருத்துக்களும் திருக்குறளில் காணக்கிடக்கின்றன. இன்னும் வேறுவகை நூற்கருத்துக்களும் அதில் அடங்கியிருக்கலாம். அறிஞர்கள் அதை ஆராய்ந்து வெளிப்படுத்தினல் பலர்க்கும் பயன்படும்.

சித்தாந்தம்.

ஊணருட் பயன்

[சிவகங்கை நா. பரிதிமலை]

(அருணசலன்)

முன்னுரை

எழுத்தின் வகை யறியா எளியேனுங் கசடன் "ஊணருட் பயன்" என்னும் பொருள்பற்றி யெழுதத் தொடங்கினமை யெனக்கே நகைச்சுவை தாநிற்கின்றது. என்னை? பசுமை கண்ட விடத்தெங்கும் வாய்மடுத்துப் பசிப்பிணி யறாத தகரென யானும் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்லாசிரிய ரொருவரை யடுத்து வான்முறையாக நன்னூல் பலகல்லாமல் விழியிடத்துட்பட்ட பன்னூல்களையும் மீநோக்காக விளித்தமையானென்க. அன்றியும், படைக்கலமும் பயிற்சியுமில்லா ஞெருவன் அமர்க்களம் புகுந்திடர்ப்பட்டு இறுதியில் இன்னுயிர் நீத்தாலன்ன எய்ப்பினில் வைப்பாம் அருந்தமிழ்ச் "செல்விக்கு" நுழைமாண் புலமுடைப் பேரருட் பெருமாந்தர் பலர் அறிவொளிக் கட்டுரையாம் பொருளை யுவந்தளிக்கவும் அக்குழூஉ விடைக் கட்டுரைவன்மை யிலியாம் இவ்வேழையுங் கட்டுரைக்கப் புகுந்தமையுமாம். ஆயினும், அவா வென்னுந் திரையான் உந்தப்பெற்று அவரது அடிநிழலையே பின்றொடர்கின்றேனுகலின் வழியும் வழுக்காதென்னுந் துணிவு

கொண்டு இக்கட்டுரையை வரைவேனாக இதனுட் போந்த விழுப் பொருளைப் பருகிப் பருப்பொருளை வடித்தொழுக்கி யருளுமாறு மேலோர் தமிணையடிகளைப் பெரிதும் இறைஞ்சுகின்றேன்.

தந்துரை

"ஊணருட்பயன்" என்னும் இச்சொற்றொடர் உம்மைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாம். இஃது முறையே உயிரும் உடலும் ஒன்றி நிற்றற்பொருட்டு உண்ணப் படும் உணவும், அவ்வுணவுப் பொருள்களினிடத்து உயிர்கட்கு உண்டாகும் அருளும், அப்பொருட்கு இரங்கி யெழுந்த அருளான் உயிருமுடலும் பெறும்பயனும் எனவிரியும். இவற்றுள் முதற் கணின்ற உணவுப் பொருள்களை யாராய்தற்கு முன்னர், அப் பொருள்களின் றன்மைகளையும், அப்பொருள்களையும் பொருள் களியங்குதற்குரிய உலகத்தினையும் உவந்தளித்த பேரருட்பெருங் கடலாம் இறைவனது உண்மை நோக்கத்தையும் விளக்கியல்லது நுதலிய பொருளிடைப் புகின் அறிவுடையோர்க்கன்றி யேனை யோர்க்குப் பயன்படாவாகலின், ஈண்டுச் சிறிது நோக்குவாம்.

உயிர்களின் தோற்றமும் பண்பும்

வீங்குகடலுடுத்த வியன்ஞான் ஞாலத்துட் பாங்குடனமைந்த பல்பொருட்டொகுதி யனைத்தும் ஓங்கு புகழுடன் உலகினில் நடமிடும் உண்மை முற்றறிவினையுடைய ஓர் தனிமுதலாற் கருப்பை-முட்டை - மண்கிளத்தல் - வேர்வை யென்னும் நால்வகைத் தோற் றத்துள் அடக்கி, வானவர் - மக்கள் - விலங்கு - பறப்பன - ஊர் வன - நீர்வாழ்வன - மாமுதலிய - எழுவகைப் பிறப்புக்களாகவும் படைக்கப்பட்டனவாம். இவற்றுள் வானவர்முதல் நீர்வாழ்வன வீறாகவுள்ள அறுவகைப் பிறப்புக்களும் நடமாடுந்தன்மையவாக லின் இயங்கியற் பொருளென்றும், மாமுதலியன நின்ற நிலையினி ன்றும் பெயர்தலில்லனவாந் தன்மையவாகலின் நிலையியற் பொரு ளென்றுங் கூறப்படும். இப்பிறப்புக்களேழும் முறையே ஆறறிவு முதல் ஓரறிவு ஈறாக அறியுந்தன்மை வாய்ந்தனவாம். அவற்றுள் புல் மாமுதலியன நீர்வீழ்ந்தக்கால் தம்முடலைக் காத்தற்பொருட்டு நீரையுறிஞ்சும் அறிவொன்றனையே யுடையதாகும். நீர்வாழ்வன வற்றுள் இப்பி சங்கு முதலியன உடலைக் காத்தற்கு உண்ணப்படும் உணவை நாவாற் சுவைத்தறிதலையுங் கொண்டு ஈரறிவினையுடையன

வாகும். ஊர்வனவற்றுள் கறையான் எறும்பு முதலியன அவற்ரோடு மூக்கால் நாற்றத்தையும் உடனறியுந் தன்மையினவாய் மூவறிவுயிராம். பறப்பனவற்றுள் தும்பி வண்டு முதலியன மேற்கூறியவற்ரோடு கண்ணுற் பிறபொருளின் வடிவத்தையுங் கண்டறியுந் தன்மையினவாய் நாலறிவுயிராம். வானவரும் மக்களும் நரகருமாகிய மக்கட்பிறப்பினரும் களிறு முதலிய விலங்கின் பிறப்புக்களும் பறக்குந்தன்மையினவாம் புள்ளினங்களும் பிறவும்மேற்குறித்த நால்வகையறிவோடு செவிப்புலனுல் ஒலிநுட்பத்தையுமுடனறியும் தன்மை வாய்ந்த ஐயறிவினை யுடையனவாம். ஈண்டு ஓரறிவுமுதல் ஐயறிவு ஈருக வேறுபடுத்துக்கூறிய அறிவென்றது உடற்குறுவதையறிவதும், நாவினுல் அறுவகைச் சுவைகளையும் சுவைத்து அறிவதும், நாசியால் தூமணம் திமணம் என நாற்றத்தை நுகர்ந்தறிவதும், விழியினெளியால் உலகினுட்பட்ட பொருள்களனைத்தையும் கண்டறிவதும், செவிப்புலனுல் பல்லியங்களையும் பல்லிசைகளையும் பல்வேறுவகைப்பட்ட ஒலிநுட்பங்களையும் கேட்டறிவது மாகிய, அறியுந்தன்மையையேயாம். மக்கள் விலங்கு புள் என்னு மூன்றுமல்லாத எஞ்சிய நால்வகைப் பிறப்புக்களுக்கும் முறையே ஐந்தின் கீழ்ப்பட்ட அறிவினையுடைய தென்றது அவ்வவற்றின் உறுப்புக் குறைவையேயாகும். உலகிடைக்காணப்பெறும் பொருள்களனைத்தும் - தோன்றலும் - மறைதலும் ஆகிய இயல்பினையுடைய தென்பது யாவருமறிந்த தொன்றே. இவற்றுள் உடலாங்கூடொன்றே பிறப்பதும் இறப்பதுமாகிய இயல்பினை யுடைத்தாகும். உயிரோ என்றும் அழியாத்தன்மையினதாய் நீட்டித்து நிற்பதாகும். மேற்கூறிய ஐவகை யறிவோடு மெய்ப்பொருளிது பொய்ப்பொரு ளிதுவெனப் பகுத்தறியும் பண்பு மக்கட்பிறப்புக்கே யுரித்தாகும். இதுபற்றியே மக்கட்பிறப்பை உயர்திணை யென்றும், ஏனைய எல்லாவற்றையும் அஃறிணை யென்றும் தமிழ் இலக்கணம் விதந்தோதாநிற்கும். அப்பகுத்தறிவினைப் பெற்ற மக்களாய்ப் பிறந்த நாம் அதன்வழி நில்லோமாயின் மேலோரால் மாக்களினத்தொடு சேர்த்தெண்ணப்பட்டு இழிபிறப்பாளராகவே கருதப்படுவோம். உயிரும் உடலும் ஒன்றி நின்றுழி எல்லாவற்றையும் அளந்தறியும் அறிவும் அறிந்தவிடத்து அப்பொருள்களினிடத்து உண்டாம் விழைவும் விழைவான் வரும் அருள் - அச்சம் - மானம் - நிறை - பொறை - ஓர்ப்பு - கடைப்பிடி-

மையல் - நினைவு - வெறுப்பு - உவப்பு - இரக்கம் - நாண் - வெகுளி - துணிவு - அழுக்காறு - அன்பு - எளிமை - எய்ப்பு - துன்பம் - இன்பம் - இளமை - மூப்பு - தோல்வி - வெற்றி - பொச்சாப்பு - ஊக்கம் - மறம் - வெறி - மறதி - என வேறுபட்ட முப்பத்திருவகை நிகழ்ச்சிகளும் - உயிர்க்குண்டாம் பண்பென்றும்; தோன்றல் - மறைதல் - வளர்தல் - சுருங்கல் - நீங்கல் - அடைதல் - நடுங்கல் - இசைத்தல் - ஈதல் என்பனவாய நிகழ்ச்சிகள் ஒன்பதும் உடற்குரிய தொழிலென்றுங் கூறுப. இதுகாறுங் கூறியவாற்றால் பொருள்களின் தன்மையையும் அதற்குரிய தொழில்களையும் அவையெல்லாம் ஓர் முதல்வனால் படைக்கப்பட்ட தென்பதையும் ஒருவாறு துணிந்தோம். இனி அம்முதல்வனின் உண்மை நோக்கத்தையும் சிறிது நோக்குவாம்.

இறைவனதுண்மை நோக்கம்

உலகியற் பொருள்களனைத்தும் ஓர் முதல்வனாற் படைக்கப்பட்டனவாயின் ஒன்றில் விருப்பும் மற்றொன்றில் வெறுப்புமுடையவனாக வேறு வேறாந்தன்மையினவாய்ப் படைக்கப்படுதற் கேதுவென்னையோ வெனிற், கூறுதும்:—

“ தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான்செய்த வினைப்பயன் துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனு மாமே ”

— திருமந்திரம்

என்றபடி உயிர்கள் முற்பிறப்பிற் செய்த வினைகட் கேற்ப அதற்குரிய பிறப்புக்களும் வந்தடுத்ததே யன்றி இறைவனது விருப்பு வெறுப்பான் வந்தடுத்ததன்று. அஃதாவது தாயைக் காணாப் புனிற்றிளங்கன்று ஆனிரையைச் சென்றடைந்து அக் கூட்டத்துள் தன் தாயிடைச் சென்றணுகும் சேயைப் போன்றதாகும். முக்கட் செல்வனது முதலாய உண்மை நோக்கென்னையோவெனின், ஊழ்வினைப் பயனால் வந்தடுத்த புன்முதலாக ஒவ்வொரு பிறப்பும் தன்னின் மேலாய பிறப்புகளை நல்வினைப் பயனால் மேனோக்கிச் சென்று கிடைத்தற்கரிய மக்கட் பிறப்பையுமடைந்து அதன்பின் பிறப்பின் நோக்கத்தையும் அறிந்து அவனடி

நிழலை யடைந்து இடையறாத பேரின்பப் பெருவெள்ளத்தில் திளைத்திருத்தல் வேண்டுமென்பதே அவனது உண்மை நோக்கமாகும். இதுபற்றியே எல்லாம் வல்ல இறைவன்,

"அருக்கனிற் சோதி யமைத்தோன், திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன், திண்டிறல்
தீயின் வெம்மை செய்தோன், பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன், மேதகு
காலினூக்கங் கண்டோன், நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன், வெளிப்பட
மண்ணிற் திண்மை வைத்தோன்."

—திருவாசகம்

என்னும் பனிமொழியொடு சிவணுமாறு நாம் இனிதுறைதற்கு அழகிய மண்ணுலகினையும் நமது உடலுமுயிரும் ஓம்புதற்குரிய வளவிய பொருள்களையும் உலகியற் பொருள்களை விளக்குதற்கு ஞாயிற்றையும் திங்களையும் அப்பொருள்களை யடுதற்குத் தழலையும் அப்பொருள்கள் அழிவுறாமல் தழைத்தற்குக் காரையும் வெப்பமுறின் ஆற்றுதற்கு இனிய தென்றலையும் அமைத்து நாமும் துன்பின்றி யின்புற வேண்டிப் பல காட்சிகளைக் கண்டு மகிழ்தற்குக் கண்களையும் இன்மொழிகளைக் கேட்டுக் களித்தற்குச் செவிகளையும் நறுமண மலைதற்கு நாசியையும் இன்சுவை யறிதற்கு நாவையும் மெய்யுற்று இன்பந்துய்த்தற்கு எழில்மிகு நங்கையரையும் தந்திலனேல் நாம் ஒருவாற்றானும் நிலைபெறுதற்கு ஒல்லுங்கொல்! இவை யித்தனையும் கருவிகளாக அமைத்து நம்மையும் அக்கருவியாம் கல்விப் பெருங்கடலைக் கற்றுத் தெளிந்து தேர்வு பெறவேண்டியே இவ்வுலகமாம் பலகலைக் கழகத்திற்கு நமது ஒப்பிலாத தந்தை அனுப்பியதுமாகும். இதன் உண்மையறியாத புன்மக்கள் பலர் கைப்பொருள் ஒன்றுண்டாயின் உளம் சென்றவழி விடுத்து உன்மத்தராய்த் திரிந்து,

"துக்கத்துள் தூங்கித் துறவின்கட் சேர்கலா
மக்கட் பிணத்த சுடுகாடு—தொக்க
விலங்கிற்கும் புள்ளிற்குங் காடே புலன்கெட்ட
புல்லறி வாளர் வயிறு"

—நாலடி

என்பதை யொப்ப உண்பதும் உறங்குவதும் இன்பந் துய்ப்பது மாய பெருஞ் செயல்களே தனது உயர்பிறப்பின் பயனெனக் கருதிப் பாழடைகின்றனர். நல்குரவே தொல் விடமாக நைந்துழலும் கயவர் இன்பத்துள் திளைத்துச் செருக்குற்றுத் திரிவோரைக் கண்டு பொறாமை யென்னும் பேய் பிடித்தோராய் இடைவிடாது எம்பெருமானை வன்கணாளன் என்றும் நடுநிலைமையில்லாத நயப்புரைக்காரன் என்றும் தமது வாய்க்குவந்தவற்றைப் பிதற்றி வலிகுறைகின்றனர்.

செல்வமென்னும் அல்லலையும் நல்குரவு என்னுந் தொல்விடத்தையும் கல்வி யென்னும் பல கடலின் நீந்திக் கண்டறிந்த பான்மையாளரோ தெய்வ மென்பதோர் சித்தமுண்டாகித் துஞ்சலுந் துஞ்சலிலாத போழ்தினும் நெஞ்சகம் நைந்தழுது அரற்றிப்,

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேம்"

—திருவாசகம்

எம்பெருமானீர் இன்னும் பேரிடர்க்கட் படுவோமாயின் உய்யும் வழி யொன்றறியேமாய் உழல்வேமாகலின் இது போழ்து நின்னை யணுகும் விழைவால்,

"ஊடுவ துன்னோ டுவப்பது முன்னை
யுணர்த்து வது உனக்கெனக் குறுகி
வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்று அருள்புரி யாயே"

—திருவாசகம்

எனப் பாடிப்புகழ்ந்து பிறப்பு இறப்பு என்னும் மாமரத்தின் வேர் பறித்தெறிந்து பிறையணியும் பிஞ்ஞகன்றன் பேரருளைப் பெற்றுப் பேரின்பப் பெருமிதம் எய்துகின்றனர்.

—(தொடரும்)

அருஞ்செய்யுட் பொருட் பகுதி

புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம்

86-வது செய்யுள்.

[சென்னை கோ. இராமலிங்கத் தம்பிரான் அவர்கள்]

கலி-எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

அத்தியின்மே லரசிருக்கு மரசின் மீதே
  யாத்திபனை வேம்பிருக்கு மவையின் மீதே
நித்தியமு மாவிருக்கு மயக்க மின்றி
  நிச்சயமா யறிந்துரைத்த களிய ரப்பா
சித்திவிநா யகன்மூத்த தமைய னீசன்
  திருமடந்தை தலைமகன்மா யவனே யாகு
முத்தயன்வே ளூரர்மரு மகனென் பார்கண்
  முகுந்தனுக்குக் காமனண்ணன் முறைகண் டாயே.

இதன் பொருள்: அத்தியின் மேல் - அத்திமாத்தின்மேல், அரசு இருக்கும் - அரசமரம் முளைத்திருக்கும், அரசின் மீதே - அவ்வரச மாத்தின் மேலே, ஆத்தி பனை வேம்பு இருக்கும் - ஆத்திமாமும் பனைமாமும் வேப்ப மாமும் முளைத்திருக்கும், அவையின் மீதே - அவ்வாத்தி முதலிய மாங்களின்மேலே, நித்தியமும் - எப்பொழுதும், மா இருக்கும் - மாமரம் முளைத்திருக்கும், மயக்கம் இன்றி - மயக்கமில்லாமல், நிச்சயமாய் - உண்மையாய், அறிந்து - தெரிந்து, உரைத்த - (இவைகளைச்) சொல்லிய, களியர் - கட்குடியர் (யாங்கள்) அப்பா - அப்பனே ! (இன்னும் கேள்). சித்திவிநாயகன் - சித்திவிநாயகப் பெருமானுக்கு, மூத்த தமையன் - பெரிய அண்ணன், ஈசன் - சிவபெருமானுகும், திருமடந்தை - திருமகளுக்கு, தலைமகன் - முதல் மகன், மாயவனே ஆகும் - திருமாலே யாகும், முத்தயன் - முத்துக்குமார சுவாமியை (முருகனை) வேளூரார் - வேளூரில் எழுந்தருளிய வைத்தியநாதருக்கு, மருமகன் என்பார்கள் - மருமகன் என்று சொல்லுவார்கள், முகுந்தனுக்கு - திருமாலுக்கு, காமன் - மன்மதன், அண்ணன் முறை - அண்ணன்

முறையாகும்; (எ - று.) கண்டாய் - முன்னிலையசை. இங்ஙனம் முறை பிறழக்கூறினது கட்குடியின்றன்மை.

உள்ளுறைப் பொருள் : அத்தியின்மேல் - யானையின்மேல், அரசு இருக்கும் - சேர சோழ பாண்டியர் என்னும் அரசர்கள் இருப்பார்கள், அரசின் மீதே - அவ்வரசர்களின் மேலே, ஆத்திமாலையும் பனைமாலையும் வேப்ப மாலையும் அணியப்பட்டிருக்கும், அவையின் மீதே - அம்மாலைகளின் மேலே, நித்தியமும் - எப்பொழுதும், மா இருக்கும் - வண்டுகள் மொய்த்துக் கொண்டிருக்கும், மயக்கம் இன்றி - மயக்கமில்லாமல், நிச்சயமாய் - உண்மையாய், அறிந்து - தெரிந்து, உரைத்த - (இவைகளைச்) சொல்லிய களியர் - கட்குடியர் (யாங்கள்); அப்பா - அப்பனே !, (இன்னும் கேள்) சித்தி விநாயகன் - சித்தி விநாயகப் பெருமானுக்கு, மூத்த தம் ஐயன் - பழமையான தமது பிதா, ஈசன் - சிவபெருமானும், திருமடந்தை - திருமகளுக்கு, தலைமகன் - நாயகன், மாயவனே ஆகும் - திருமாலே யாகும், முத்தையன் - முத்துக்குமார சுவாமியை (முருகனை), வேளூரார் - வேளூரில் எழுந்தருளிய வைத்திய நாதருக்கு, மருமகன் என்பார்கள் - (அன்பு)பொருந்திய மகன் என்று சொல்லுவார்கள், முகுந்தனுக்கு - திருமாலுக்கு, காமன் - கற்பகச் சோலைக்கு அரசனாகிய இந்திரன், அண்ணன் முறை - அண்ணன் முறையாகும்; (எ-று.)

இது கலம்பகத்தின் உறுப்புகளுள் ஒன்றாகிய களி என்பதாம். கட்குடியர் தாம் குடித்த கள்ளின் சிறப்பை எடுத்துச் சொல்வதாகச் செய்யுள் செய்வது. கட்குடியர் கட்குடித்தும் மயங்கியும் சொல்வது உண்மையென்று இச் செய்யுளால் வலியுறுத்துகின்றார். அப்பா என்பது கட்குடியர், முனிவர் முதலியோர் விளிப்பதோர் சொல் விழுக்காடு (பரிபாஷை).

தமிழ் மொழியின் ஒலிகளும் எழுத்தும்

[ஈப்போ. திரு. தியாகராயன் அவர்கள்]

முன்னுரை

வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியார் எழுதிய தமிழ் மொழியின் வரலாறு என்னும் நூலில் (ப. 66) "ஆங்கிலம் முதலிய பிற பாஷைகளின் போலாது தமிழ் உயிரெழுத்துக்களின் வைப்பு

முறையும், மெய்யெழுத்துக்களின் வைப்பு முறையும் ஆகிய இவ்விரண்டும் மிக நேர்த்தியான ஒழுங்குடையனவாய் ஓசை நான்முறை அணுவளவும் பிறழாமல் ஏற்பட்டிருக்கின்ற தன்மை யாவரும் வியக்கத்தக்கதே" என்று கூறியுள்ளார்.

ஆனால் நம்மொழி எவ்வாறு ஓசை நான்முறை அணுவளவும் பிறழாமல் ஏற்பட்டிருக்கிறதென்பது பல நூல்களில் ஆங்காங்கு எடுத்துரைக்கப்பட் டிருப்பினும் ஒருங்கே ஓர் கட்டுரையாக விருப்பதை நான் காண்கிலேன். ஆகையால் அத்தன்மையைத் தொகுத்துரைக்கவும் மேற்கூறிய சான்றோர் அந்நூலின் 67-ம் பக்கத்தில் "எனவே முன்னர்க் கூறிய ஆறு ஓசைகளோடு இந்த மூன்று புதிய ஓசைகளையுங் கூட்ட வெழும் ஒன்பது ஓசைகளும் மிக்க தமிழ் ஓசைகள். ஒவ்வோரொலிக்கும் ஒவ்வோரெழுத்திருத்தலே நியமம். அவ்வாறன்றி ஒரெழுத்தால் இரண்டு மூன்று ஒலிகளைக் குறித்தல் நேரிதன்று. அது பாஷையின் குறைவே" எனவும் கூறியுள்ள குறைவை நீக்கி நேர்படச் செய்வ தெவ்வாறென்பதைக் காட்டவும், இன்னும் தற்காலத்திற் கேற்பப் புத்தொலிகளைப் புகுத்தி நம்மொழியைச் சிறப்பிக்க வேண்டுமென்னும் அவாவினால் தூண்டப்பட்டும் இச்சிறு கட்டுரை வரையலாயிற்று.

ஒலியின் பிறப்பு

How Voice is produced

"In producing voice, the vocal chords do not vibrate like strings, nor like thin membranes that swing in the breath current and set the air in vibration, as often formerly supposed, but like two cushions or pads which by alternate compression or relaxation close and open the slit, the larynx thus emitting puffs of air, as Siren does, with sufficient rapidity to make a tone" (Webster. dic. Introduction para 30).

இதையே "மொழிமுதற் காரணமாம் அணுத்திரள் ஒலி எழுத்து" (பவணந்தி எழு. சூ. 57) எனக் கூறியுள்ளார்.

இதில் அணுத்திரளே ஒலி யென உணர்ந்து ஓதியுள்ளது நம் முன்னோரின் உண்மை ஆராய்ச்சியை உணர்த்துகின்றது.

Articulation

உச்சரிப்பு அல்லது எழுத்தின் பிறப்பு

"All articulate sounds are produced by effort, by expenditure of muscular energy in the throat, lungs and mouth" (Papillon P. 28)

இதையே இன்னும் தெளிவாக "நிறையுயிர் முயற்சியினுள் வளிதுரப்ப எழுமணுத்திர ளுரங் கண்ட முச்சி மூக்குற் றிதழ் நாப்பல் லணத்தொழிலின் வெவ்வே றெழுத்தொலியாய் வரல் பிறப்பே"

என்று பவணந்தியார் கூறியுள்ளார் (எழு. சூ. 73)

இவ்வாறெழும் ஒலிகள் உயிர், மெய்யெனப் பகுக்கப் பட்டன. அவற்றுள் :—

Vowels

உயிர்

"Modification of the stream of the vocal sound, without interruption or compression by the organs of the mouth, produces vowels, so called because they have a sound of their own, being various modifications of the vocal sound produced by the "Chorda Vocales." All vowels, therefore, are soft sounds". (Papillon P. 30)

"The sounds by simple voicing of the breath are the vowels or open sonorous sounds of the language, which are capable of conveying meaning to the ear without being joined to other sounds" (Guide to the English Language—Austin K. Grey)

உயிரெழுத்துக்கள் இவ்வாறு எழுத்தொலிகளுக்கு முதலொலிகளாகவும் அம்முதலொலிகளின் வேற்றுமைகளாகவும் தன்னந்தனியா யியங்குந் தன்மை யுடையனவாயும் பொருள் உடையனவாயுமிருத்தலால் இவ்வொலிகளுக்கு உயிரெனப் பெயரிடப் பட்டிருக்கிறது.

" அவ்வழி ஆவியிடைமை யிடமிடறுகும் " எனக் கூறப்பட்டன (பவணந்தி எழு. சூ 74) அதாவது கண்டத்தில் பிறக்கும் ஒலிகளென வுணர்த்தப் பட்டது.

The Arabians designate vowels as "motion" and consonants as "barrier".

The Possible Vowel Sounds

உயிரொலிகளின் தொகையும் விரியும்

ஓசைநூன்முறைப்படி முப்பத்தாறு உயிரோசைகள் ஒலிக்கக் கூடுமென **Austin K. Grey** கூறுகின்றார். அவை யாவன:—

1. நாக்கைப் பின்னிழுப்பதால் உண்டாகும் ஓசைகள்.
   a கொஞ்சம் பின்னிழுப்பதால் உண்டாகும் உயிர் (Front Vowels).
   b பாதி யிழுப்பதால் வரும் உயிர் ஓசை (Mixed Vowels)
   c முற்றும் இழுப்பதால் வரும் ஓசை (Back Vowels)
2. நாக்கை வளைப்பதால் வரும் உயிர் ஓசைகள்
   a கொஞ்சம் வளைப்பதால் வரும் உயிர் ஓசை (Low Vowels)
   b பாதிவளைப்பதால் வரும் உயிர் ஓசை (Middle Vowels)
   c முற்றும் வளைப்பதால் வரும் உயிர் ஓசை (High Vowels)
3. a நாக்கைத் தளர்த்துவதால் உண்டாகும் உயிரோசைகள் (Slack Vowels)
   b நாக்கை இறுக்கிப் பிடிப்பதால் உண்டாகும் உயிரோசைகள் (Tense Vowels)
4. a உதடுகளை குறுக்குவதால் உண்டாகும் உயிரோசைகள் (Unrounded Vowels)
   b உதடுகளை அகலத் திறப்பதால் உண்டாகும் உயிரோசைகள் (Rounded Vowels)

இவ்வாறாக நாக்கு உதடுகள் இவைகளின் இயக்கங்களால் முப்பத்தாறு உயிரோசைகள் எம்மொழியிலும் ஒலிக்கக்கூடுமென அன்னார் கூறுகிறார். எனினும் ஆங்கிலத்தில் வழங்கும் உயிரோசைகள் பதினேழு எனக்கூறுகிறார். இதுபோல Chambers அகராதியின் நூலாசிரியர் பதின்மூன்று ஒரெழுத் துயிரொலிகளும் நான்கு ஈரெழுத் துயிரொலிகளுமாகப் பதினேழு உயிரோசைகள் குறித்துள்ளார் (Explanation to student Twentieth Century Dictionary).

தமிழின் உயிரொலி

அ. ஆ.

" அவற்றுள்
முயற்சியுள் அ ஆ வங்காப்புடைய'' (பவணந்தி எழு. சூ. 75)

அஃதாவது அகரம் உள்வளி தூரப்ப மிடறினின் றெலிக்கும் முதல் உயிராகும். இக்காரணத்தாலேயே "அகர முதல வெழுத் தெல்லாம்'' என்றனர் திருவள்ளுவரும்.

அகரத்தின் நெட்டொலி ஆகாரம்.

இ. ஈ.

அகர வோசையி லுற்பத்தியாகி வெளிவரும் காற்றின் வழியை (Passage) அடி நாக்கினுல் மேல்வாய்ப் பற்களின் விளிம் புறப்பொருத்த உண்டாகும் உயிரோசை இகரம் (i. e. the passage is reduced by the approximation of the base of the tongue and the edges of the upper molars).

உ. ஊ.

இவ்வோசைகள் அகர வோசையி லுற்பத்தியாய் அவ்வோசை வெளிப்படும் வழியின் கடையாகிய உதடுகளைக் குறுக்குவதால் உண்டாகும் உயிரொலிகள்.

ஒ. ஓ.

மேற்கூறியவாறு ஓசை யுற்பத்தியாய் உதடுகளை அகலத் திறந்து வழியைப் பெரிதாக்குவதால் உண்டாகும் உயிர் ஒலிகள்.

எ. ஏ.

இவை அகர இகரங்களின் இணையொலிகள் Diphthongs; அதாவது அகரத்தின் ஒலி மேல் இகரத்தின் ஒலியை இணைத்து அதிலும் இதிலும் பாதி பாதி ஓசைகளைக் கூட்டி ஒலிப்பதால் வரும் உயிரொலிகள். இவ்விணையொலிக்கு உதாரணமாக German மொழியில் A என்பது அகர ஒலியுடையது. E என்பது இகர வொலியுடையது. ஆனுல் இவ்விரு வெழுத்துக்களையும் Æ என இணைத்து வரையின் எகரவொலி யுடையதாகும். இவ்வொலிகள் Net, Fate என்னும் ஆங்கிலச்சொற்களிலுள்ள எகர, ஏகாரங்கள் போல் குறிலும் நெடிலுமாய் ஒலிப்பன.

இக்கூறுபாடுகளை எடுத்துக்காட்டியே "இ ஈ எ ஏ ஐ யங் காப்போ டண் பன் முதனு விளிம்புற வருமே" என்றும் "உ ஊ ஒ ஓ ஔ விதழ்குவிகவே" என்றும் கூறியுள்ளார் பவணந்தி. (எழு. சூ. 76, 77).

ஐ.

இவ்வெழுத்தொலி அகர இகரங்களை இடைவிடாது அடுத் தடுத்தொலிப்பதால் உண்டாகும் உயிர் ஒலி. ஐகாரம் அகர இகரங் களின் புணர்ச்சியென்பது இவ்வெழுத்தை நெட்டெழுத்தோடு சேர்த்ததாலும் அளபெடுக்குழி இகரமே இனக்குறியாய் நிற்ற லாலும், ஐகாரங் குறுகுங்கால் கடையொலியாகிய இகரம் நீக்கப் பட்டு எஞ்சி நின்ற ஒலி அகரமாகுவதாலும் உணர்ந்தறியலாம். இவ்வகர வெழுத்தால் உணர்த்தப்படுவதை "அய்யன்" "தய்யல்" என்னுஞ் சொற்கள் விளக்கும். இவ்வெழுத்தை மெதுவாக உச்ச ரிக்க நன்கு விளங்கும்.

ஔ.

இவ்வுயிரோசை அகர உகரங்களை இடைவிடாது அடுத் தடுத்து உரைப்பதால் உண்டாகும் ஈரெழுத்தின் தொகையாய் இருமாத்திரை யுடையதா யிருப்பதால் ஐகாரத்தைப்போல் இது வும் நெடிலோடு சேர்க்கப்பட்டது. அன்றியும் அளபெடுக்குங்கால் உகரத்தை இனக் குறியாகப் பெறுவது. மற்று அஃகுங்கால் ஈற் றொலி கெட்டு முதலொலி நிலைத்து 'அவ்வியம்' 'அவ்வை' என் னும் சொற்களில் அகர ஓசையுடன் இயங்கிற்று.

The digraph a i in words of foreign origin and of recent adoption often has the sound of ai or i as in Kaiser (i.e) kiser கைசர் ainu (i.e) Inoo (ஐ நூ). எனவே சில ஐரோப்பிய மொழிகளில் குற்றிகாரமும், குற்றுகரமும் இணைத் தொலிப்பின் ஐகாரம் போல் ஒலிக்கின்றது.

ஔகாரம் ஆங்கிலத்தில் O W என்னும் ஈரெழுத்தால் குறிக்கப்படுகிறது. (உ-ம்) Now, How. சில சமயங்களில் O U என்னும் எழுத்துக்களால் குறிக்கப்படுகிறது (உ-ம்) House. Short a + u—in words from the German, and most other languages, has the sound of ஔ as in 'out.'

—(தொடரும்)

பதிற்றுப்பத்து விளக்கம்

[பண்டிதர் A. நடராஜபிள்ளையவர்கள்]

(கரு-ம் பக்கத் தொடர்ச்சி)

விருத்தியுரை

போகி - போக எனவும், தபுத்த - தபுக்க எனவும், ஓரீஇ - ஒருவ எனவும் திரித்துக் கொள்க. மேன - மேவின என்பதன் இடைக்குறை. துணங்கைக் கூத்து - இரு கைகளையும் முடக்கிப் பழுப்புடைகளில் ஒத்திக்கொண்டு ஆடல். அக்கால அரசியலில் கீழ்க்குடிகள், மேற் குடிகள் என இரு பிரிவினர்கள் குடிமக்களில் இருந்தன ரென்பதும், கீழ்க் குடிமக்களைக் காப்பாற்ற வேண்டிய கடமை மேற் குடிமக்களைச் சார்ந்த தென்பதும், மேற் குடிமக்களைக் காப்பாற்ற வேண்டிய கடமை அரசர்களைச் சார்ந்த தென்பதும் இப்பாட்டால் புலப்படுகின்றன. கரும்புகள் நடப்பட்டிருக்கும் பாத்திகளிலே பூத்திருக்கும் நெய்தற் செடிகள் பெரிய கண்களையுடைய எருமைகளை அவற்றுக்குப் பிரியமான கரும்புச் செடிகள் முதலிய மற்ற இரைகளைத் தின்னவிடாது, தம்மையே தின்னும்படி தடுக்கும் வளமுடையன என்று கூறிய சிறப்பான் இதற்குப் பூத்தநெய்தல் என்று பெயர் கொடுக்கப்பட்டது. 'கூற்றடூஉ நின்ற யாக்கை - (மாண வேதனையுறு முடல்) ஒருகாலைக் கொருகால் அழகழிந்து கெடுவதுபோல நாடு கவினழிய,' எனக் கூட்டுக. 'ஆரல் மீன்கள் புரண்டோடித் திரியும் நிலைமையினையும், உழாது விதைக்கப்படு நிலைமையினையும், தம்மையே தின்னும்படி தடுக்கும் நிலைமையினையும், முதிய பசுக்கள் மேய்கின்ற நிலைமையினையும், தென்னைமரங்களையும், மருதமரங்களையும், வாய்க்கால்களையும், தடாகங்களையு முடைய நாடு,' எனக் கூட்டுக. புறந்தாஅ - செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். செவ்வாய் என்னும் கோள் சேர்ந்துள்ள இராசியிலே சுக்கிரன் சேர்ந்திருந்தால் மழையின்றி நாட்டில் பஞ்சமுண்டாமென்பது சோதிட நூலின் துணிபு. இப்பாட்டால் சேரலாதனது வெற்றிச் சிறப்பும், அரசியல் அமைப்பும் கூறப்பட்டன.

பொழிப்புரை

பெருமானே! இயமன் கொல்கின்ற உடல் ஒருகாலைக் கொருகால் அழகழிந்து கெடுவதுபோல, பொலிவு மிகுந்த வயல்

களில் ஆரல் என்ற ஒருவகை மீன்கள் புரண்டோடித் திரியும் நிலைமையினையும், காளைகள் நின்று போர் செய்தமையினாலே வளப் பட்ட சிறுவயல்கள் உழவுத் தொழிலை வேண்டாமலே விதைக் கப்படு நிலைமையினையும், கரும்புகள் நடப்பட்டிருக்கும் பாத்தி களிலே பூத்திருக்கும் நெய்தற் செடிகள் பெரிய கண்களையுடைய எருமைகளைத் தமக்குப் பிரியமான கரும்புச் செடிகள் முதலாகிய இரைகளைத் தின்னவிடாது தம்மையே தின்னும்படி தடுக்கு நிலை மையினையும், பெண்கள் ஆம்பற்பூக்களை யணிந்து ஓசை மிகும்படி துணங்கைக்கூத்து ஆடிய இடங்களிற் கிடக்கும் ஆம்பற் (குமுதப்) பூக்களை முதிய பசுக்கள் குனிந்த தலைகளோடு கூடியனவாய்த் தின்னுகின்ற நிலைமையினையும், சலசலப்பினையுடைய தென்னை மரங்களையும், பறவைகள் தங்கியொலிக்கின்ற மருத மரங்களையும், நீர்வளமிக்க வாய்க்கால்களையும், அழகிய பொய்கைகளையும், புலவர் களால் சிறப்பித்துப் பாடப்பட்ட வருவாய்மிக்க ஊர்களையுங் கொண்ட உனது எதிரியினுடைய நாடுகள் அழகுகெடும்படி நீ கோபித்து, அவைகளுக்கு அச்சத்தை யுண்டாக்கித் தங்கிய, வெள் ளத்தால் மட்டும் அழியக் கூடியனவும், பகைவர்களால் அதுவரை அழியாதனவுமாகிய துறைமுகத்தையும், அரசனிருப்பிடத்தையும் கொண்ட பெரிய ஊர்கள், மலர்ந்த பூக்களையுடைய கரும்புகள் நிறைந்த வயல்கள் அற்பமாய் அழிந்து போகவும், திரிபோன்ற காய்களையுடைய விடத்தேர் என்ற ஒருவகை மரங்களுடனே மேகங்கள் ஒழிந்து போகவும், இரட்டை மண்டைகளையுடைய பெண்பேய் பிசாசின்மீது சவாரிசெய்து சஞ்சரிக்கவும், படர்ந் துள்ள நெருஞ்சி முட்கள் நெருப்பிற்பட்டனபோல் பொடியாய்ப் போன போர்க்களத்தை யுடையதும், பொடியாகிய எரு நீங்கப் பெற்றதும், எவ்விதமான ஒலியும் இல்லாததுமாகிய களப்பலி கொடுக்கும் கோயிலிலே, மனமானது புகுவதற்கு வலியின்றிப் பின்வாங்கவும், தமது கரும வேட்கையினாலே புகுவதற்கு மேற் கொண்டவருடைய வலிமையினைக் கெடுத்தபடியினாலே, பின்னும் போக நினைப்பவர்கள் நடுங்குதற்குக் காரணமான பாழ் நிலங்க ளாயின.

உனது ஆளுகையின் கண்ணுள்ள நாட்டின்கண்ணே பெருங் காடான இடங்களிலெல்லாம் தெய்வங்கள் எழுந்தருளியுள்ள கோயில்கள் உண்டாயின; சிறு காடான இடங்களிலெல்லாம்

ஆபாணங்களை யணிந்த பெண்களுடனே நின்படை வீரர்கள் தங்கியுறையும் இடங்களாயின; பெருங்காடும், சிறுகாடு மல்லாத பெருவழிகள் வழிப்பறிக் கொள்ளைகளும், மற்ற இடையூறுகளு மின்றி, அப் பெருங்காடுகளையும். சிறுகாடுகளையும் போன்று தெய் வங்கள் எழுந்தருளியுள்ள கோயில்களும், படைவீரர்கள் தங்கி யுறையு மிடங்களுமாயின, மேலும், நீ காத்த நாடு, உலகத்தில் தானியம் விற்பவர்களும், தங்கீழ்க் குடிகளுமாகிய வரிசையாளரைக் காப்பாற்றும்படியான மேற் குடியாளருடைய துன்பங்கள் நீங்கப் பெற்று, செவ்வாய் என்னும் கிரகம் சேர்ந்துள்ள இராசியிலே சுக்கிரன் என்னும் கிரகம் சென்று பஞ்சம் உண்டாகாமல், மழை பெய்யவேண்டிய இடங்களில் நன்ருய்ப் பெய்து, நோய்களுடனே பசிப்பிணி விட்டு விலகப் பொலிந்து விளங்கியது.

புதிய நடை

பெருமானே! கூற்றுவன் கொல்கின்ற உடல் ஒருகாலைக் கொருகால் அழகழிந்து கெடுவதுபோல, நீ உனது எதிரிகளின் நாடுகள் அழகழிந்து கெடும்படி கோபித்தாய். அந்நாடுகளோ, பொலிவு மிகுந்த வயல்களில் ஆரல் என்ற ஒருவகை மீன்கள் புரண்டோடித் திரியும் நிலைமையினையும், காளைகள் நின்று போர் செய்தமையினலே, வளப்பட்ட சிறுவயல்கள் உழவுத் தொழிலை வேண்டாமலே விதைக்கப்படு நிலைமையினையும், கரும்புகள் நடப் பட்டிருக்கும் பாத்திகளிலே பூத்திருக்கும் நெய்தற் செடிகள் பெரிய கண்களையுடைய எருமைகளை அவைகட்கு விருப்பமான கரும்புச் செடிகள் முதலிய இரைகளினிடத்தே புகவிடாது, தம் மையே தின்னும் வண்ணம் தடுக்கும்படியான நிலைமையினையும், பெண்கள் ஆம்பற்பூக்களை யணிந்து ஓசை மிகும்படி துணங்கைக் கூத்தாடிய இடங்களிற் கிடக்கும் ஆம்பற் (குமுதப்) பூக்களை முதிய பசுக்கள் குனிந்த தலைகளோடு கூடியனவாய்த் தின்னுகின்ற நிலை மையினையும், சல சலப்பினையுடைய தென்னை மரங்களையும், பறவை கள் தங்கி யொலிக்கின்ற மருத மரங்களையும், நீர்வளமிக்க வாய்க் கால்களையும், அழகிய பொய்கைகளையும், புலவர்களாற் சிறப்பித் துப் பாடப்பட்ட வருவாய்மிக்க ஊர்களையும் கொண்டனவாகும்.

நீ, வெள்ளத்தால் மட்டும் அழியக் கூடியனவும், பகைவர்க ளால் அதுவரை அழியாதனவுமாகிய துறைமுகத்தையும், அரச

விருப்பிடத்தையும் கொண்ட பெரிய ஊர்களில், அந்நாடுகள் அஞ்சும்படி தங்கினுய். அவ்வளவில், அப் பெரிய ஊர்கள், மலர்ந்த பூக்களையுடைய கரும்புகள் நிறைந்த கழனிகள் அற்பமாய் அழிந்து போகவும், திரிபோன்ற காய்களையுடைய விடத்தேர் என்ற ஒருவகை மரங்களுடனே மேகங்கள் ஒழிந்து போகவும், இரட்டை மண்டைகளையுடைய பெண்பேய் பிசாசின்மீது ஊர்ந்து திரியவும் பெற்றுப் பாழ் நிலங்களாயின. அப் பாழ்நிலங்கள் படர்ந்துள்ள நெருஞ்சிமுட்கள் நெருப்பிற் பட்டனபோல், நீருய்ப்போன போர்க் களத்தினையும், பொடியாகிய எரு நீங்கப் பெற்று, எவ்விதமான ஒலியுமில்லாத களப்பலி கொள்ளும் கோயிலினையும் கொண்டிருந்தன. அக்களப்பலி கொள்ளும் கோவிலானது புகுவதற்கு வலியின்றி மனம் பின் வாங்கவும், தமது கரும வேட்கையாற் புகுதலை மேற்கொண்டவருடைய வலிமையினை நின் படையாளர் கெடுத்தபடியினுலே, பின்னும் போக நினைப்பவர்கள் நடுங்குதற்குக் காரணமாய் இருந்தது.

இனி, நினது ஆளுகையின்கண்ணுள்ள நாட்டிலே பெருங்காடான இடங்களிலெல்லாம் தெய்வங்கள் எழுந்தருளியுள்ள கோயில்கள் மிகுந்தன; சிறுகாடான இடங்களிலெல்லாம் ஆபரணங்களை யணிந்த பெண்களுடனே நின் படைவீரர்கள் தங்கி வாழ்க்கை நடத்தலாயினர்; மேற்கூறிய பெருங்காடும், சிறுகாடுமல்லாத பெருவழிகள் வழிப்பறிக் கொள்ளைகளும், மற்றைய இடையூறுகளுமின்றி, அவற்றினைப்போன்று தெய்வங்கள் எழுந்தருளியுள்ள கோயில்களும், படைவீரர்கள் தங்கியுறையும் இடங்களுமாயின. மேலும், நீ காத்த நாடு தானியம் விற்பவர்களும், தங்கிழ்க் குடிகளுமாகிய வரிசையாளரைக் காப்பாற்றும்படியான மேற்குடியாளருடைய துன்பங்கள் நீங்கப் பெற்றது; செவ்வாய் என்னுங் கோள் சேர்ந்துள்ள இராசியிலே வெள்ளி என்னுங் கோள் சென்று பஞ்சம் ஏற்படாமல், மழை பெய்யவேண்டிய இடங்களில் நன்றுய்ப் பெய்யப் பெற்றது; நோய்களுடனே பசிப்பிணி விட்டுவிலகப் பரந்து பொலியப் பெற்றது.

(தொடரும்)

பண்டைத் தமிழ்ச் சொற்கள்

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள்]

செல்வம் (24)

1. செல்வம் என்ற தமிழ்ச்சொல் பண்டைத் தமிழ்மக்களால் இறைவனுக்கு இட்டு வழங்கப்பட்ட பெயர்களுள் ஒன்று. அச்சொல்லில் அடங்கியுள்ள கருத்துக்கள் இக்கட்டுரையில் இயன்றவாறு கருதப்படும்.

2. செல்வம் என்ற சொல் செல் என்ற பகுதியும் அம் என்ற பண்புப்பெயர் விகுதியும் சேர்ந்து ஆகியது. செல் என்ற நிலைமொழி லகர மெய்யீற்றின்முன் அம் என்ற வருமொழி முதல் அகர உயிர் வர உடம்படு மெய்யல்லாத வகரம்தோன்றிச் செல்வம் என வந்தது, செல்வுழிச்செல்க என்பதில் வகரம் தோன்றுதல்போல. செல்வம் என்ற சொல் முதற் பொருளாக செல்லும் தன்மையுடையது என்று பொருள்படும். அது ஆகு பெயராய்ச் செல்லும் தன்மையுடைய உலகப்பொருளுக்கு (Worldly Wealth) ஆயிற்று. செல்வன் அல்லது செல்வர் என்ற சொல்லையும் பண்டைத் தமிழர் இறைவனுக்கு இட்டு வழங்கி வந்தார்கள். செல்வம் என்ற சொல்லுடன் அன் விகுதி சேர்ந்து செல்வன் என்ற சொல்லும் அர் விகுதி சேர்ந்து செல்வர் என்ற சொல்லும் வந்தன. உலகப் பொருளானது ஒருவரிடத்தில் நிலையாயிராமல் சகடக்கால் உருளுதல் போல மாறி மாறிப் பலரிடத்திலும் செல்லுதலால் அதற்குச் செல்வம் என்ற பெயரைப் பண்டைத் தமிழர்கள் இட்டு வழங்கினர்கள். அப்பெயரை என்றும் மாறுதலடையாது ஒருபடித்தாயுள்ள இறைவனுக்கு அவர்கள் என்ன காரணத்தினலிட்டு வழங்கினர் என்பதைப்பற்றி நாம் கருதுவாம்.

3. பண்டைத்தமிழர், மக்களாலடையப் பெறும் உறுதிப் பொருள்கள், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு என அறிந்திருந்தார்கள் என்பது திருக்குறள் முதலிய தமிழ் நூல்களால் நாம் அறிகிறோம். நான்கு உறுதிப் பொருள்களுள் பொருளானது அறத்தின்வழி ஈட்டப்படுதலானும் அறத்தின் வழிசெலவு செய்யப்படுதலானும் உலக இன்பத்துக்குக் கருவி

யாயிருத்தலானும் அறத்தின் பின்னும் இன்பத்தின் முன்னும் நடுவே வைக்கப்பட்டது. பொருள் நிலையில்லாததுபோல அதன் பயனாகிய உலக இன்பமும் நிலையில்லாதது என்ற உண்மையும் அவர்களியற்றிய நூல்களிற் கூறப்பட்டுள்ளது.

4. உறுதிப்பொருள்கள் நான்கனுள் மூன்றாவதாக வைக்கப் பட்டுப் பொருளினது பயனாக அடையக்கூடிய உலக இன்பமா னது மக்களால் உலகில் இடைக்காலத்தில் அடையும் இன்ப மாயும் நான்காவதாக வைக்கப்பட்ட வீடு முடிவிலடையும் நிலையான பேரின்பமாயு முள்ளன. ஆகவே, உறுதிப்பொ ருள்களுள் மூன்றாவதாகிய நிலையுதலில்லாத உலக இன்பமும் நான்காவதாகிய நிலையான வீட்டின்பமும் இன்பம் என்ற வகை யில் ஒன்றுபட்டுள்ளன. உலகிலுள்ள எல்லா உயிர்களும் துன் பத்தினின்று நீங்கி இன்பத்தை அடைதல் வேண்டும் என்ற வேட்கையை உடையன; ஆயினும் அவைகள் அடையத்தகுந்த இன்பமானது அவைகளுடைய கருவி அறிவினது (உலக அறி வினது) தரத்தைப் பொறுத்துள்ளது. ஆறறிவுடையமக்கள் அடை யும் இன்பமும், பலபடித்தாய் அவர்களது கருவி அறிவு நிலையைப் பொறுத்துள்ளது என்பது நாம் கண்கூடாக உலகிற் காண்கிறோம். மக்கள் அடையும் பலபடித்தாயுள்ள இன்பங்களில் உயர்ந்த தரத்திலுள்ள இன்பமும் துன்பத்துடன் கலந்திருப்பதாயும் நிலை யில்லாததாயு மிருக்கின்றது. ஆகவே என்றும் மாறாது ஒரு படித்தாய் நிலையுதலுள்ளதாயிருப்பதோ ரின்பத்தைக் கருவி அறிவி னது துணையினால் உலகவாழ்வில் நாம் அடைதல் முடியாது என்பது பெறப்படுகின்றது. அப்படியானால் துன்பங்கலவாது நிலையுதலுளதான இன்பத்தை மக்கள் எவ்வாறு அடைய முடியும் என்பதுபற்றிப் பண்டைத்தமிழ் அறிஞர் அறிந்த உண்மை யாதெ னக் கருதுவாம்.

5. பலதரப்பட விளங்குகிற மக்களுடைய கருவி அறிவு, பயிற்சிக்குத்தக்க அளவு விளங்குதலினால் கருவிஅறிவு விளங்கா திருந்தபொழுது ஒரு தடையிருந்து அவ்வறிவு படிமுறையில் விளக்கமுறும்பொழுது அத்தடை சிறிது சிறிதாய் நீங்கி வருகின் றது என்ற உண்மையையும் எத்தகைய விளக்கமுற்ற கருவி அறிவினாலும் உறுதியான நிறைவு (வியாபகம்) அறிவைப் பெற

முடியாதிருத்தலினல் கருவிஅறிவினல் அத்தடையை மக்கள் முற்றிலும் நீக்கமுடியாதென்ற உண்மையையும் பண்டைத்தமிழ் அறிஞர்கள் அறிந்திருந்தார்கள். அத்தடைதான் யாதோ என்னில் அது ஆணவ மல மறைப்பு என்று சைவசமயப் பெரியார் கூறுகின்றூர்கள். ஆணவ மலமறைப்புத் தடையைக் கருவி அறிவு, இருளிரவில் விளக்கொளிபோல ஒரு அளவில் நீக்குமே அன்றி முற்றிலும் நீக்காதென்றுல் அதனை முற்றிலும் நீக்குகிற கருவி யாது? அதுதான் இறைவனுடைய அருள் என்று சைவசமயப் பெரியார் கூறுகின்றூர்கள். மக்கள், கருவி அறிவின் துணையை முற்றிலும் நீக்கி அருளைத் துணையாகக்கொள்ளும் பருவம் அடைகின்றபொழுது அருளின் துணையால் நிறைவு அறிவை (வியாபக அறிவை)ப் படிமுறையில் பெற்று முடிவில் பேரின்பம் சேர்கிறூர்கள். ஆகவே உலகவாழ்வில் சிற்றின்பம் அடைதற்குக் கருவி அறிவால் ஈட்டப்படும் பொருள் காரணமாயிருத்தல்போலப் பேரின்பம் அடைதற்கு அருளினலடையப்பெறும் நிறைவுஅறிவு காரணமாயிருக்கின்றது. அத்தகைய பொருளையும் அருளையும் மக்களுக்குக் கொடுக்கிறவன் இறைவனே. ஆதலினல் பண்டைத் தமிழ் அறிஞர்கள் பொருளையும் அருளையும் செல்வம் என்ற வகையில் வைத்துப் பொருளைப் பொருட்செல்வம் என்றும் அருளை அருட் செல்வம் என்றும் பாகுபாடுசெய்து கூறியுள்ளார்கள். தெய்வப்புலமைத் திருவள்ளுவர் "அருட் செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட் செல்வம்—பூரியார் கண்ணுமுள" என்று 241-வது குறளிற் கூறுகின்றூர். அவ்வாறே அவர் அருட் செல்வத்தை உயர்த்தியும் பொருட் செல்வத்தைத் தாழ்த்தியும் திருக்குறள் நூல் 176, 247, 248, 252, 285, 755, 757, 914-ம் செய்யுள்களிற் கூறுகின்றூர். தங்கள் பேருணர்வில் விளங்கிய அருட் கருத்துக்களை உலகப்பயன் குறித்துத் தோத்திரச் செய்யுட்களாகப் பாடிய சமயாசிரியர் அந்த (அருட்) செல்வத்தை அதனுற் பெறப்படுகிற இன்பம் என்ற பொருளிலும், அருளையும் இன்பத்தையும் உயிர்களுக்கு அளிக்கிற இறைவனைச் செல்வன் அல்லது செல்வர் என்றும் கூறியருளினர். இன்னும் அவர்கள் மிக்க காதலால் இறைவனைச் செல்வமே என்று விளித்து அழைத்திருக்கின்றூர்கள். திருஞான சம்பந்த அடிகள் கோயில் திருப்பதிகம் 5-வது பாட்டு 3, 4 வரிகளில் வருகிற "தில்லைச்சிற்றம்பலமேய—செல்வன் கழலேத்துஞ்

செல்வம் செல்வமே" என்ற சொற்றொடர்களில் செல்வம் என்ற சொல்லை இன்பம் (பேரின்பம்) என்ற பொருளில் வழங்கியிருக்கின்றார். செல்வம் என்ற இச்சொல்லை இன்பம் என்ற பொருளில் அவர் வழங்கினர் என்பது இத் தேவாரத்துக்கு முந்திய 4-வது பாட்டில் "இறைவன் கழலேத்து மின்ப மின்பமே" என்று கூறியதனால் நன்கு விளங்கும். அவர் திருநெல்வேலித் தேவாரப் பதிகம் பதினொரு பாட்டுக்களிலும், அருளை அல்லது இன்பத்தை உடையவர் அல்லது கொடுக்கிறவர் என்ற பொருளில் இறைவனைச் செல்வர் என்று கூறி அருளினர். திருநாவுக்கரசு அடிகள் திருவையாறு திருத்தாண்டகம் 5-வது பாட்டில் "செல்வாய செல்வம் தருவாய் போற்றி" என்பதிலும் சுந்தரமூர்த்தி அடிகள் திருமுல்லைவாயில் தேவாரம் க-வது பாட்டில் "திருவுமெய்ப்பொருளும் செல்வமும்" என்பதிலும் செல்வம் என்ற சொல்லை இன்பம் என்ற பொருளிற் கூறியிருக்கின்றனர். மாணிக்கவாசக அடிகள் பிடித்தபத்து முதல் ஒன்பது பாட்டுக்களில் இறைவனைச் செல்வமே என்று அன்புடன் விளித்து இறுதிப் பாட்டில் இன்பமே என்று விளித்துக் கூறியிருக்கின்றார்.

6. சமயாசிரியர்களல்லாத புலவர்கள் பொதுவாகச் செல்வம் என்ற தனிச்சொல்லைப் பேரின்பம் என்றபொருளிலாவது செல்வன் அல்லது செல்வர் என்ற தனிச்சொல்லை இறைவன் என்ற பொருளிலாவது வழங்கவில்லை. இதனால் சமய ஆசிரியர்கள் தங்கள் அருள் உணர்வில் உணர்ந்த கருத்துக்களை உலகத்தாருக்கு அவர்களது உலக அநுபவத்தில் வைத்து "நீங்கள் பெரிதாக எண்ணுகிற பொருட்செல்வம் நிலையில்லாத சிற்றின்பத்தைத் தருகிற அழி செல்வம், நிலையான பேரின்பத்தைத் தருகிற அருள்தான் அழியாத செல்வம் அதனைப்பெற முயலுங்கள்" என்று இன்பத்தைத் தரவல்ல இருவகைச் செல்வங்களினது வேற்றுமையை அறிவுறுத்தி அருளினர் என்பது பெறப்படுகின்றது. இக்கருத்தை அவர்கள் நோய்க்கூறிய செய்யுள்கள் தேவார திருவாசகங்களில் பல உள.

7. சமயநூல்களல்லாத பண்டைத் தமிழ் இலக்கிய நூல்களில் செல்வம் என்ற சொல் பொருட் செல்வத்தையும் செல்வன் என்ற சொல் பொருட்செல்வத்தை உடையவனையும் குறிக்க வழங்கப்

ப்பட்டு வந்துள்ளது என்பதை நாம் அறிந்த அளவில் காட்டுதும்.

(1) திருக்குறளில் செல்வம் என்ற சொல் *27 செய்யுள்களில் வழங்கப்பட்டிருக்கின்றது. அவற்றுள் அது தனிச்சொல்லாக வழங்கப்பட்டுவந்த 22 இடங்களில் பொருட் செல்வம் என்ற பொருளில் வழங்கப்பட்டு வந்துள்ளது; ஓரிடத்திலாவது வீட்டுச் செல்வம் அல்லது அருட் செல்வம் என்ற பொருளில் வழங்கப் படவில்லை. அடைமொழியுடன் வழங்கப்பட்ட ஐந்து இடங்களில் அது 'அருட்செல்வத்தையும் (241) அட்டமாசித்தி (எண்பொருள் நோக்கு) செல்வத்தையும் (311) வேண்டாமைச் செல்வத்தையும் (363), கல்விச்செல்வத்தையும் (400), செவிச்செல்வத்தையும் (411), குறிக்க வழங்கப்பட்டு வந்துள்ளது. செல்வர் என்ற சொல் பொருட் செல்வத்தை உடையவர் என்ற பொருளில் நான்கு இடங்களில் (125, 731, 752, 1010) வழங்கப்பட்டிருக்கிறது.

(2) நாலடியாரில் செல்வம் என்ற சொல் †14 செய்யுள்களில் பொருட் செல்வம் என்ற பொருளில் வழங்கப்பட்டிருக்கின்றது; செல்வர் என்ற சொல் பொருட் செல்வத்தை உடையவர் என்ற பொருளில் ‡ ஆறு செய்யுட்களில் 9 இடங்களில் வழங்கப்பட்டுள்ளது.

(3) ஆத்திசூடி கொன்றைவேந்தன்(காப்புத்தவிர) நூல்களில் செல்வம் என்றசொல் வழங்கப்படவில்லை. வெற்றிவேற்கை நூலில் செல்வம் பொருட்செல்வம் என்ற பொருளிலும் செல்வர் பொருட் செல்வமுடையர் என்ற பொருளிலும் §3, செய்யுள்களில் வழங் கப்பட்டு வந்திருக்கின்றது.

(4) மூதுரை 7-வது பாட்டில் மாத்திரம் செல்வம் என்ற சொல் வழங்கப்பட்டிருத்தலில் அது பொருட் செல்வம் என்ற பொருளிலேதான் வழங்கப்பட்டிருக்கின்றது. அவ்வாறே நல்வழி

---

* மார்க்கசகாயச் செட்டியாரவர்கள் இயற்றிய திருக்குறள் சொற் குறிப்பு அகராதியைப் பார்க்க.

† செல்வம் நிலையாமை 1, 2; ஈகை 3; குடிப்பிறப்பு 2, நன்றியில் செல்வம் 2, 3, 7; ஈயாமை 2, 4; கீழ்மை 6; கயமை 10; பன்னெறி 8; செல்வ நிலையாமை 8; மெய்ம்மை 5.

‡ நன்றியில் செல்வம் 10 (2-இடம்); ஈயாமை 7; மெய்ம்மை 5 (2-இடம்); செல்வ நிலையாமை 8 கீழ்மை 7; மானம் 8 (2-இடம்)

§ 3, 45, 52; செய்யுட்கள்.

32-வது பாட்டிலும் நன்னெறி 14-வது பாட்டிலும் அச்சொல் வழங்கப்பட் டிருக்கிறது.

(5) நீதிநெறி விளக்கத்தில் செல்வம் என்ற சொல் * ஐந்து செய்யுட்களில் 6 இடங்களில் பொருட்செல்வம் என்ற பொருளிலே வழங்கப்பட்டிருக்கின்றது. 81-வது செய்யுளில் மக்கட்பேறென்பதோர் செல்வம் என்று அடைமொழியுடன் வழங்கப்பட்டிருக்கிறது.

(6) புறநானூறில் செல்வம் என்ற சொல் † 3 செய்யுட்களில் பொருட்செல்வம் என்ற பொருளிலும், செல்வர் என்ற சொல் ‡ 3 செய்யுட்களில் பொருட்செல்வத்தை யுடையவர் என்ற பொருளிலும், வழங்கப்பட்டிருக்கின்றது. அந்நூலில் செல்லும் உலகத்துச் செல்வம் என்ற அடைமொழியுடன் கூறப்பட்ட 18-வது பாட்டில் செல்வம் பேரின்பச் செல்வத்தைக் குறிக்கிறது. 6-வது பாட்டில் 'முக்கட் செல்வர்' என்ற தொடர்மொழி மூன்று கண்களையுடைய சிவபெருமானையும், 56-வது பாட்டில் கதிர்ச் செல்வன் என்ற தொடர்மொழி ஒளியையுடைய பகலவனையும் குறிக்க வழங்கப்பட்டு வந்துள்ளது.

(7) செல்வன் என்ற சொல், புதல்வன் தாய் தந்தைக்கு இன்பம் தரும் அருஞ் செல்வம் ஆதலின் தமிழ் நூல்களில் புதல்வன் என்ற பொருளில் வழங்கப்படுகின்றது. (திருக்குறள்- 65, 67, 68 செய்யுள்கள் பார்க்க) அவ்வாறே செல்வி என்ற சொல் புதல்வி என்ற பொருளில் வழங்கப்படுகின்றது.

(8) மேலே கூறிய எடுத்துக்காட்டுகளால் சமயாசிரியர்கள் காலத்துக்குமுன்னும் பின்னும் இலக்கியப் புலவர்களால், செல்வம் என்ற தனிச் சொல் அருளையாவது பேரின்பத்தையாவதும் செல்வன் என்ற சொல் அருளை அல்லது இன்பத்தை அளிக்கின்ற இறைவனையாவதும் குறிக்க வழங்கப்பட்டு வரவில்லை என்றும் சமயாசிரியர்கள் மாத்திரம் செல்வம் என்ற சொல்லை அருளையும் பேரின்பத்தையும் குறிக்கவும் அருளையும் பேரின்பத்தையும் அருளுகிற இறைவனைக் குறிக்கவும், செல்வன் அல்லது செல்வர்

---

* 6, 16, 63, 66, (2-இடம்) 67, செய்யுட்கள்.

† 28, 148 (2-இடம்) 215.

‡ 34, 35, 47, 188.

என்ற சொல்லை அருளை அல்லது பேரின்பத்தை உயிர்களுக்கு அளிக்கிற இறைவனைக் குறிக்கவும் பல செய்யுட்களில் வழங்கி வந்திருக்கிறார்கள் என்றும் நாம் அறியலாம். மேலே கூறியவைகள் தவிர சில எடுத்துக்காட்டுகள் பின்னே வரையப்படுகின்றன :—

1. 'ஆசை யார அருள் நல்கிய செல்வத்தர்'

திருஞானசம்பந்த அடிகள் திருக்குருகாவூர்த் தேவாரப் பதிகம் 6-வது பாட்டு.

2. 'சிவனென்று நானுன்னை யெல்லாஞ் சொல்லச் செல்வந் தருவானே என்றேனனே.' திருநாவுக்கரசு அடிகள் திருவையாறு திருத்தாண்டகம் 8 வது பாட்டு.

3. 'திருவே யென் செல்வமே தேனே வானோர் செழுஞ் சுடரே'

திருநாவுக்கரசு அடிகள் திரு ஆவடுதுறைத் திருத்தாண்டகம் 1-வது பாட்டு.

4. 'செப்பவானிழற் கீழிருந்தருளுஞ் செல்வனே'

சுந்தரமூர்த்தி அடிகள் திருவாவடுதுறைப்பதிகம் 3 வது பாட்டு.

5. 'சிற்றம்பலத் தெங்கள் செல்வம்பாடி.'

திருவாசகம் திருப்பொற் சுண்ணம் 19 வது பாட்டு.

6. 'மறிவறியாச்செல்வம் வந்துபெற்றார்'

திருவாசகம் அடைக்கலப்பத்து 9-வது பாட்டு.

7. 'திருவார் பெருந்துறைச் செல்வனுகி'

திருவாசகம் கீர்த்தித் திருவகவல் 54 வது வரி.

9. வடமொழியில் ஈஸ்வரன் (ईश्वरः ஈஸ்வர:) என்ற சொல் மிக்க பொருட் செல்வத்தையுடைய அரசனையும், அல்லது பொருளாளனையும், இறைவனையும் குறிக்க வழங்கப்படுகின்றது. ஐசுவரியம் (ऐश्वर्यम्) என்ற சொல்லும் மானுட சத்தியையும் தெய்வ சத்தியையும் குறிக்க வழங்கப்படுகின்றது.

(10) செல் என்னும் பகுதியும் அல் என்னும் தொழிற் பெயர் விகுதியும் சேர்ந்துவந்த செல்லல் என்ற சொல் துன்பம் என்ற பொருளில் வழங்கப்படுகின்றது. துன்பமானது மக்களுக்கு உலக வாழ்க்கையில் அடையத்தக்கதாய்ப் பின் கழியத்தக்கதாயுள்ளது என்ற கருத்தே (Pain is Temporary) அச் சொல் அப் பொருளில் வழங்கப்படுதலுக்கு அடிப்படையான காரணம்.

"காதலும் மோகமும்"

(திரு. மா. இராசமாணிக்கம்)

காதலும் மோகமும் ஒன்றெனநினைப்போர் பலர். அவர்தம் கருத்துத் தவறு என்பதைக் கம்பர்பிரான் தெளிவாகத் தம் இராம காதையில் கூறியுள்ளார். காதல் என்பது தான் விரும்பிய ஒரு பொருளுக்குத் தன்னை யளிக்கவேண்டும் என்னும் ஊக்கம். காதலின் கிளர்ச்சியே அதன் நோயாய்த் தோன்றுகின்றது. தன்னை அளித்தாகின்ற வரையில் அந்நோய் தீராது. மோகம் என்பது பிறரைத் தான் அடையவேண்டும் எனும் முயற்சி. இதற்கு முடிவே யில்லை. எத்துணை பெற்றாலும் அம்மோகம் தணிந்திலது. 'காதல் நோய்க்கு மருந்தில்லை; மோக நோய்க்கு முடிவில்லை' என்பதே கம்பர்கொண்ட கருத்தாகும்.

சீதையைக்கொண்டு காதலையும் சூர்ப்பநகையைக்கொண்டு மோகத்தையும் கம்பர் விரிக்கின்ற திறம் வியக்கத் தக்கது! தென்றற் காற்றும், இருளும், மதியமும் இருவரையும் வருத்தின, என்றாலும் நோய் ஒவ்வொருவரையும் ஒவ்வொருவிதமாக வருத்தியது. காதல் நோயால் சீதை நலிந்தாள். 'அவள் கண்கள்—— வழி புகுந்த காதல்நோய் பாலில் இட்ட பிரைபோல எங்கும் (அவளது உள்ளத்தில்) பரந்தது' எனக் காதல் பரவும் தன்மையைக் கூறினர். சூர்ப்பநகைக்குற்ற காமக்கனல் 'கொடிய நாகத்தின் விஷம் ஏறியதைப்போல், பரந்தது என்றார். இதனால், காதல் நோய் நுண்மையது, அது அமைதியாகப் பிரைபோலப் பரவும்; மோகநோய் விஷம் ஏறுவதைப்போல விரைவாக ஏறும் என்பன தெரிந்தோம்.

> "மாலுற வருதலு மனமு மெய்யுந்தன்
> நூலுற மருங்குல்போல் நுடங்குவாள்நெடுங்
> காலுறு கண்வழி புகுந்த காதனோய்
> பாலுறு பிரையெனப் பரந்த தெங்குமே."
>
> —(க. ரா. மிதிலைக்காட்சிப்படலம்)

சூர்ப்பநகைக்கு மோக நோய்,

> "அழிந்த சிந்தைய ளாயயர் வாள்வயின்
> மொழிந்த காமக் கருங்கனல் மூண்டதால்

வழிந்த நாகத்தின் வன்றொளை வாளெயிற்
றிழிந்த கார்விட மேறுவ தென்னவே."

—(க. ரா. சூர்ப்பநகைப் படலம்)

'சானகியின் காதல் நோயைக் கண்ணுற்ற மன்மதனும் கருத்தோடு ஒரு சரத்தை அவள் மீது எய்தான். அச்சமயம் எரிகின்ற நெருப்பில் விறகையிட்ட தொத்திருந்தது. சூர்ப்பநகையை நோக்கி மன்மதன் விட்ட அம்பு அகிற்கட்டைபோல் பற்றியெரிந்து அவள் மோகத்தை அதிகமாக எரியவிட ஊடுருவிப் பாய்ந்தது' என்று காதல் நோய்க்கும் மோகத்திற்கும் உள்ள ஏற்றத் தாழ்வைக் கம்பர் அழகாகச் சித்திரித்துக் கூறுகின்றார். காதல் நோய் கொண்டவர்பால் மன்மதனும் இரக்கம் காட்டுகின்றான் போலும்! மோகநோய் பட்டார்பால் அவன்கணைகள் ஊடுருவிச் செல்கின்றன.

"நோமுறு நோய்நிலை நுவல கிற்றிலள்
ஊமனின் மனத்திடை யுன்னி விம்மினாள்
காமனும் ஒருசரங் கருத்தின் எய்தனன்
வேமெரி யதனிடை விறகிட் டென்னவே."

—(க. ரா. மிதிலைக்காட்சிப்படலம்)

"தாடகைக் கொடியாள் தடமார் பிடை
ஆடவர்க் கரசன் அயிலம்பு போல்
பாடவத் தொழில் மன்மதன் பாய்கணை
ஓட வுட்கி உயிருளைந் தாளரோ."

—(க. ரா. சூர்ப்பநகைப்படலம்)

சீதை, தனக்கு வெப்பந்தந்த தண்மதியைப் பார்த்து; "குளிர்ச்சியான கடலில் தோன்றிய சந்திரனே! நீ எத்துணைதான் என்னை வருத்துவதாகத் தோன்றினும், யாரையு நீ இதுகாறும் கொன்றதில்லை ஆதலால் கொடியவன் அல்லை. மரணத்தைப் போக்கும் இனிய அமிர்தத்தோடு வந்த நீ கொல்வது எங்ஙனம் அமையும்! அதுவுமன்றி நீ ஒரு பெண்ணோடு பிறந்துளாய் என்றால், பின், நீ என்னைச் சுடத்தான் செய்வையோ?" எனத் துதித்தாள். இவ்வாறு சந்திரனைப் பெருமைப் படுத்திப் பேசியது அவள் கொண்ட காதல் நோய்க்கு ஏற்ற இலக்கணம்! சூர்ப்பநகையோ,

தனக்கு அதிகமாக மோகவெப்பத்தைத் தந்து வாட்டிய சந்திரனைத்தின்ன இராகு, என்னும் பாம்பினைக் கொண்டுவரத் துணிந்தாள். இதனால், காதல் நோய்க்கும் மோகநோய்க்கும் உள்ள வெப்பத்தின் அளவு கணித்தறியப்படும் அல்லவா! காதல்கொண்டவள் அப்புருஷனுக்குத் தன்னை அளிக்கத்தக்க உபாயங்களைச் செய்வாள். அப்புருஷன் தன்னைத் துறந்தால் அதன்பொருட்டு நைவாள், ஆயினும் அவனுக்கொரு தீங்கும் செய்யாள். மோகம் கொண்டவளோ ஆடவன் தன்னை மறுத்தால், அவனுக்கு ஏதேனும் இடையூறு செய்து தன் பகைமையைத் தீர்த்துக்கொள்ளுவாள். திங்களைக்கண்ட சீதையின் நினைவும், சூர்ப்பநகையின் நினைவும் கண்டு ஆராயத்தக்கனவே. சீதை கூறுகின்றாள்:—

"கொடியை யல்லைநீ, யாரையுங் கொல்கிலாய்;
மடிவி லின்னமு தத்தொடும் வந்தனை
பிடியின் மென்னடைப் பெண்ணொடென் றூலெனைச்
சுடுதி யோகடற் றோன்றிய திங்களே."

(க. ரா. மிதிலைக்காட்சிப்படலம்)

சூர்ப்பநகை கூறுகின்றாள்:—

"அணவில் திங்களை நுங்கவ ராவினைக்
கொணர்வெ னேடி யெனக்கொதித் துன்னுவாள்."

—(க. ரா. சூர்ப்பநகைப்படலம்)

சூர்ப்பநகை இராமனைக் கண்ட இரவு நித்திரையற்றவளாய் மோகக் கனலில் வெந்துகொண்டு இருந்தாள். அப்போது அவள் கார்மேகம் ஒன்றைக் கண்டாள். அது இராமனின் உருவம் என எண்ணி அதனைத் தன் முலை பொருந்தத் தழுவினாள். என்னே அறியாமை! மோகக்கனல் செய்யும் மூடச் செயல் இது!

"ஆகக் கொங்கையி னையானென் றஞ்ச
மேகத் தைத்தழு வும்மவை வெந்தன."

—(க. ரா. சூர்ப்பநகைப்படலம்)

சீதையோ தன் மெல்லிய தனங்களை நோக்கி, 'இளைக்காமல் மேன்மேல் பருக்கின்ற என் முலைகளே! நீங்கள் விம்மிப்பருத்து என்ன பயனைப் பெற்றீர்? எழுகின்ற சந்திரனை நிகர்க்கும் காந்தியுள்ள முகமுடையவனும் ஒருவராலும் வளைக்க இயலாத வில்லைக்

கையாண்டவனும் ஆன வள்ளல் இராமனது மார்பின் உள்ளே குடைந்து போய்ச் சேர்வதற்கு வேண்டிய தவங்களைச் செய்யுங் கள் என்று, தன் தனங்களுக்குப் புத்திமதி கூறுகின்றாள். இது வல்லவோ அறிவுடைமை! இஃதே, காதலின் உத்தம லட்சணம்.

"இளைக்கலாத கொங்கைகாள்! எழுந்து விம்மி என்செய்தீர்?
முளைக்கலா மதிக்கொழுந்து போலும்வாண் முகத்தினன்
வளைக்கலாத விற்கையாளி வள்ளல் மார்பின் உள்ளுறத்
திளைக்கலாகு மாகிலான செய்தவங்கள் செய்மினே."

—(க. ரா. கார்முகப்படலம்)

முடிவாகக் கம்பர் சீதை-சூர்ப்பநகை இருவர் தம் விரகதாபத் தையும் நுணுகி ஆராய்ந்து, இருவர் தம் மனத்திலும் இயங்குகின்ற விகாரத்தின் தன்மையைக் கூறி 'ஆசை நோய்க்கு மருந்துமுண் டாங்கொலோ' 'மோகத் துக்கோர் முடிவுமுண்டாங்கொலோ' என்று கூறி முடிக்கின்றார். சீதையின் நிலையைக் கூறுகிறார் கம்பர்,

"வாச மென்கல வைக்களி வாரிமேற்
பூசப் பூசப் புலர்ந்து புழுங்கினள்;
வீச வீச வெதும்பினள் மென்முலை
ஆசை நோய்க்கு மருந்துமுண் டாங்கொலோ."

—(க. ரா. மிதிலைக்காட்சிப்படலம்)

சூர்ப்பநகையைப் பற்றிக் கூறுகின்றார்.

"ஆகக் கொங்கையி னையனென் றஞ்சன
மேகத் தைத்தழு வும்மவை வெந்தன;
போகக் கண்டுபு லம்புமப் புன்மையாள்
மோகத் துக்கோர் முடிவுமுண் டாங்கோலோ."!

—(க. ரா. சூர்ப்பநகைப்படலம்)

வான ஊர்திகள்

(ஆகாய விமானங்கள்)

(திரு. T. V. நீலகண்டப்பிள்ளையவர்கள் B.A. B.L.)

நம்முடைய நாட்டிலே தொன்றுதொட்டு வழங்கிவரும் காவியங்களில் கூறப்பட்டிருக்கும் பொருள்களில் முற்றிலும் நம்பக் கூடாதது என்று இதுகாறுங் கருதப்பட்டிருந்த ஒரு பொருளின் உண்மை இவ்விருபதாம் நூற்றாண்டில் உள்ளங்கை நெல்லிக்கனி போல மிக வியத்தகு முறையில் நிலைநாட்டப்பட்டுள்ளது. நமது புராணங்களில் வான்வழியாய்ப் பறந்து செல்லும் வானஊர்திகளைப்பற்றிக் கூறப்பட்டிருக்கின்றதாயினும் அப்படியான வான்வழிப்போதல் முடியாததன்று என்பது இப்பொழுதுதான் நமக்குத் தெரியவந்தது.

வானில் பறந்து செல்லக்கூடிய திறமை தற்காலத்து நாம் பெற்ற பெரும்பேறுகளில் ஒன்று. இதைப்பற்றிய பழக்கங்கள் மிகப் புதியனவாயினும் சில ஆண்டுகளுக்கு முன்னே நடந்த மிகக் கொடிய ஐரோப்பியப் பெரும்போரிலே வானஊர்திகள் (ஆகாய விமானங்கள்) மிகுதியாகப் பயன் படுத்தப்பட்டன.

இயற்கையை வெல்வதே எப்பொழுதும் மக்களுடைய கருத்து. மக்கள் பண்டுதொட்டே இயற்கைப் பொருள்களின் உண்மைகளை உய்த்தறியும் நோக்கத்தை யுடையவர்கள். அந்நோக்கத்துடன் மிக ஊக்கமாக நம் முன்னோர்கள் உழைத்ததின் பயனாக வியக்கக்கூடிய அரிய பேறுகளை நாம் பெற நேரிட்டது. நீராவியின் வல்லமையைச் செவ்வனே அறிந்தவுடன் இடம் காலம் என்பனவற்றை இம்மட்டோ என்று இகழச்செய்கிற புகைவண்டி புகைக் கப்பல் முதலியன கண்டு பிடிக்கப்பட்டன. மின்சாரத்தின் இயல்பு தெரிந்துகொண்டபின் நொடிப்பொழுதில் ஆயிரக்கணக்கான மைல் தொலைவு செய்திகள் தெரிவிக்கும் வல்லமையுள்ள மின் சாரத்துடிவிடுப்பும் (Electric Telegraph); அதைவிடப் பன் மடங்கு வியக்கத் தகுந்ததும் தந்திக் கம்பிகளின் உதவி வேண் டாததும் திரைகடலோடித் திரவியம் தேடும் கப்பல்களின் நன் மைக்கு இன்றியமையாததுமான Wireless என்ற “ தந்தியில்லாத்

துடிவிடுப்பும்" பகலோன் வெளிச்சம் ஊடுருவிச்செல்ல முடியாத தோல், மாமிசம், மரம், இரும்பு முதலிய பொருள்களையும் ஊடுருவிச்சென்று அவற்றிற்கப்புறம் இருக்கும் பொருள்களை நம் கண்ணுக்குத் தெரிவிக்கக்கூடிய வல்லமையுள்ள Rontgen Rays என்னும் மின்சார ஒளியும், இவைபோன்ற பிற நன்மைகளும் நமக்குக் கிடைத்தன. மக்கள் இவ்வாறு ஒவ்வொரு பூதங்களையும் வென்றார்கள், வானத்தைமட்டும் வெல்லமுடியாது திகைத்தார்கள்.

முற்காலத்தில் பறவைகளைப்போல மக்கள் இறக்கைகளின் உதவியாற் பறந்து செல்ல முயன்றார்கள். ஆயின் போதுமான அளவு பெரிய இறக்கைகளை அசைத்துச் செல்லப்போதிய வல்லமை மக்கள் Muscles தசைகளுக்கில்லை யாகையால் அது முடியாது போயிற்று.

1766-ஆம் ஆண்டு ஒரு முதன்மையான பொருள் கண்டு பிடிக்கப்பட்டது. Hydrogen (ஹைட்ரொஜன்) நீர்வளி என்ற பெரிய வாயு காற்றைவிடப் பன்மடங்கு இலேசானது என்று (Cavendish) என்ற அறிஞர் அவ்வாண்டில் வெளியிட்டனர். அதிலிருந்து பதினாறு ஆண்டுகளுக்குப்பின், அதாவது 1782-ல், Cuvallo என்பவர் இந்த வாயு நிறைந்த சோப் குமிழிகள் ஆகாயத்தில் உயர்ந்து எழும்பும் தன்மையுடையன என்று தெரிவித்தார். இது தெரிந்ததும் வானப் புகைக்கூண்டுகள் (Balloons) செய்துமுடிக்க நேரிட்டன.

மிகவும் எளிதான பொருளால் செய்யப்பட்டதும், வாயு ஊடுருவிச் செல்லமுடியாததுமான ஒரு பெரிய கூண்டு 'ஹைட்ரொஜன்' என்ற வாயுவால் நிரப்பப்பட்டால் உயர்ந்து எழும்புவதோடு மக்களையும் தூக்கிச் செல்லக்கூடியதாயிருக்கும் என்று தெரிந்து (Prof. Charles) சார்ல்ஸ் என்ற இயற்கை யாராய்ச்சி வல்லார் ஒருவர் அவ்வகையான வானஊர்தி ஒன்று செய்து தாம் அதில் ஏறி வானில் உயர்ந்து எழும்பினார்.

சூடேறிய காற்றுச் சாதாரணக்காற்றைவிடச் சற்று நுண்ணிதாகையால், விலை மிகுந்த 'ஹைட்ரொஜனு'க்குப்பதில் அதனைப் பயன்படுத்தி வானஊர்திக் கூண்டுகள் செய்யக்கூடும் என்ற உண்மை யறிந்து, பாரிஸ் பட்டணத்தில் 1783-ம் ஆண்டில் மாண்ட்கால்பர் (The Brothers Montgolfer) என்ற உடன்பிறப்பினர்


கள் சூடான காற்றைப் பயன்படுத்தித் தாம் செய்த ஒரு புகைக் கூண்டின் மேலே சென்றார்கள்.

இதுகாறும் கூறியவற்றிலிருந்து கூர்ந்து அறிந்துகொள்ளக் கூடிய குறை ஒன்று இப்புகைக் கூண்டுகளினிடத்துக் காணப்பட்டது. உயர்ந்து செல்லும் வல்லமையுடையனவாயினும், உயர்ந்த பிறகு வேண்டியவிடத்து வேண்டியபடி திருப்ப வசதியில்லா தொழிந்ததால் இக்கூண்டுகள் மக்கட் போக்குவரவுக் கேற்றவை யாய் இருக்கவில்லை. இவைகள் காற்றில் உயர்ந்து எழும்பிக் காற்றுத் தம்மை அடித்துக்கொண்டுபோகும் திசைக்குப் போகுமே யல்லாமல் அவற்றைக் குறிப்பிட்ட ஓர் இடத்தை அடையச் செய்வது முடியாததா யிருந்தது.

இக்குறையானது சில ஆண்டுகளுக்குமுன் நீக்கப்பட்டுக் குறித்த இடத்துக்குப் போகக்கூடிய வானஊர்திகள் இப்பொழுது செய்யப்பட்டிருக்கின்றன. இதை முதலில் செய்து முடித்தவர் ஜெர்மானிய நாட்டினரான செப்பலின் (Count Zeppelin) என்ற பிரபு. இவர் பெயரே இவ்வகை வானஊர்திகளுக்கு வழங்குகிறது.

செப்பலின்

செப்பலின் என்று அழைக்கப்படும் வானக் கப்பலும் பழைமை வாய்ந்த புகைக்கூண்டும் செயலில் ஒன்றேயாயினும், தோற்றத்தில் மிக்க வேறுபாடுடையன. புகைக் கூண்டுகள் உருண்



டைவடிவமானவை; செப்பலின்களோ பருத்து நீண்ட உருவத்தை உடையன. இந்த நீண்டுருண்ட பகுதியிலே நீர்வளி அடைக்கப்பட்டிருக்கிறது. இப்பகுதி 20 அல்லது 25 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். குடைத்துணியானது நன்றாய் விரிந்து நிற்

கும்படி எப்படிக் கம்பிகள் வைக்கப்பட்டிருக்கின்றனவோ, அப்படியே செப்பலினில் இருக்கும் நீர்வளிப் பைகளும் உறுதியாய் இருக்கும்படி அவற்றுள் "அலுமினியம்" (Aluminium) என்ற கனங்குறைந்த பருப்பொருள்களால் செய்யப்பட்ட கம்பிகள் அமைக்கப்பட் டிருக்கின்றன. இப்பைகள் ஒவ்வொன்றும் தனித்தனியாக இருப்பதால் அவற்றுள் ஒன்று கிழிந்துபோக நேரிடினும் மற்றவைகள் வாயுவை வெளிவிடாது கப்பலைத் தாங்கிக்கொள்கின்றன.

நீர்வளி (Hydrogen)

செப்பலின் என்ற வான ஊர்தியின் நீர்வளி அறை மிகப் பெரிய உருவமுடையது. அதன் நீளம் 550 முதல் 600 அடி வரையும், சுற்றளவு 240 அடிமுதல் 300 அல்லது 400 அடி வரையும் இருக்கும். இந்த அறையைச்சுற்றி நாற்புறமும் மக்கள் உலாவக்கூடிய அகலமான தாழ்வாரம் (வாரந்தா) அமைக்கப்பட்டிருக்கிறது. இவ் அறையிலிருந்து இரண்டு பெரிய ஊர்திகள் (வாகனங்கள்) தொங்குகின்றன. இவற்றுள் ஒன்றில் 650 முதல் 800 (Horse-power) குதிரையின் வலிமைகொண்ட மூன்று அல்லது நான்கு (எஞ்சின்) பொறிகளும் மற்றியந்திரங்களும் வைக்கப்பட்டிருக்கும். இவ்வியந்திரங்களின் உதவியால் கப்பலானது இயக்கமுறுவதோடு, முன், பின், இடம், வலம் என்ற எல்லாத் திசைகளுக்கும் திரும்பக் கூடியதாக இருக்கிறது. இன்னொரு ஊர்தி (வாகனம்) மக்கள் இருப்பதற்கும் பொருள்கள் வைப்பதற்குமாக அமைந்தது.

இதுகாறும் கூறிய ஊர்திகள் காற்றினும் நிறை குறைந்தவை; தாமே உயர்ந்து எழும்பக்கூடியவை ; இவை ஒருவகை. காற்றை விடக் கனம் மிகுந்ததும் தாமாய் உயர்ந்தெழும்பும் வல்லமையில்லாததுமான மற்றொருவகை ஊர்திகளும் (விமானங்களும்) இருக்கின்றன. இவைகள்தாம் 'எயிரோப்லேன்' Aeroplane என்றழைக்கப்படுவன.

(தொடரும்)

திருவருட் பெரியார்

பாம்பன் குமரகுருதாச அடிகள்

(முகப்புப் படம் பார்க்க)

அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு திருவருட்பெரியார் குமரகுருதாச அடிகளார் பாம்பன் சிவாலய அகத்திருப்பணி வேளாளராய சாத்தப்பப் பிள்ளை யென்பாருக்கும் இராமேச்சுரத்துச் செங்கமல அம்மாளென்பாருக் கும் தலைப்பிள்ளையாகப் பத்தொன்பதாம் நூற்றூண்டின் பிற்பகுதித் தொடக்கத்திற் பிறந்தவராவர். இவருடைய பிள்ளைத் திருநாமம் அப்பாவு என்பதாம். ஆரியத்தொடு செந்தமிழ்ப்பயன் நன்கறிந்த இப்பெரியார் தமது இளமைப் பருவந் தொட்டே முருகவேளின் மீது அன்பு முகிழ்த்து வரப்பெற்றவர். அப்பெருமானருளைப் பல நிலைகளிற் கனவிலும் நனவிலும் தரிசிக்கும் பேறு பெற்றவர். சுமார் 20 ஆண்டு இல்லற நடாத்திப் பின்னர்ச் சுமார் 34 ஆண்டு நேரிய துறவறத்தினின்று அச்செவ்வேளின் சீரைத் தாம் செய் தருளிய சாத்திர தோத்திரங்களாலும், தம் வாழ்க்கையாலும் தமிழ்நாடெங்கணும் பரப்பிவந்தவர். தமிழ்மொழிக்கும் சைவநற் சமயத்திற்கும் கொழுகொம்பா யிலகிவந்த அடிகளார் இயற்றி அருளிய நூல்கள் பலப்பல. அந்நூல்களின் செய்யுள்களின் தொகை 6666 என்பதை அவர்கள் தொகை நூலாகிய "குமார சுவாமியம்" என்பதிற் ருமே கூறியுள்ளார்கள். திருவருட்பிரகாச வள்ளலாருக்குப் பிறகு தமிழ்நாட்டின் தவப்பயனுய்த் தோன்றி யிலகியவர் இப்பெருமானே என்னலாம். அறிவியற்றுரையில் அவர்களுக்கிருந்த ஆராய்ச்சி வியக்கற்பாலது. இக்கால அருணகிரி நாதரென இலங்கிய இப்பெரியார் 30-5-1929-ல் செவ்வேட்சேவடி நிழலடைந்தனர். இப்பெரியாரின் வரலாறு மகா தேஜோமண் டலம் என்ற அவர் சீடர் குழாத்தினரால் வெளியிடப்பட்டுள்ள சரித்திர நூலில் ஒருவாறு பரக்கக் குறிக்கப்பட்டுள்ளது.

மதிப்புரை

செந்தமிழ் மலர்—ஔவையார் தனிப்பாட்டு ஆராய்ச்சி

செந்தமிழ்ச் செல்வியாராகிய ஔவையார் பெருமையை யார் அறியாதார்? அவர் பாடல்களிற் போந்த அருமை பெருமைகள் இன்னவென அறிய முயலாத அறிஞர் யார்? அத்தமிழன்னையார் இயற்றியுள்ள தனிப்பாடல்கள் பலவுள. சொற்பொலிவும் பொருட் பொலிவும் அமைந்து அணிநலம் திகழ்ந்து ஒளிர்கின்ற அத் தனிப் பாடல்களை யறிவார் பலராயினும் அவற்றின் நலங்களை ஆராய்வார் அரியராயிருக்கின்றனர். ஆகவே அவற்றையும் ஔவையார் தம் கல்வி வலனையும் நலனையும் ஒருவாறு விளக்கும் நோக்கத்துடன் நாகர்கோவில் பண்டிதர். இராமசுப்பிரமணிய நாவலர் அவர்கள் "ஔவையார் தனிப்பாட்டு ஆராய்ச்சி" என்ற பெயருடன் "செந்தமிழ் மலர்" என்ற திங்கள் வெளியீட்டின் மூலமாக அரியதொரு ஆராய்ச்சியுரை எழுதிவருகின்றனர். இம்மலரின் முதவிதழின்கண் ஔவையாரின் பெயர், காலம், சமயம் என்ற ஆராய்ச்சிகள் வெளிவந்துள்ளன. ஒரு ஆண்டிற்குப் பதினைந்து இதழ்கள் வீதம் இம்மலர் மலர்ந்திடும் என்றும் இதன் ஆண்டுக் கட்டணம் ரூ 1-12-0 என்றும் மாணவர்கட்கு ரூ. 1-0-0 என்றும் நாகர்கோவில் செந்தமிழ் நிலையத்தார் அறிவிக்கின்றனர்.

வர்த்தக ஊழியன்

தொழிலாளர் உலகம் நன்கறிந்தவரும், "இரயில்வே தொழிலாள"ரியக்க ஊன்றுகோலா யுள்ளவருமான திரு. டி. வி. கே. நாயுடு என்பவரை ஆசிரியராகக்கொண்டு வர்த்தக முன்னேற்றத்தைக் கருதி இத் திங்கட்டாள் திருச்சியிலிருந்து வெளிவருகிறது. தமிழ் நாட்டு வர்த்தகர் இதனால் நற்பயன் பெறுவார்களென்று நம்புகிறோம்.

தனவணிகன்

திருமகள் செல்வர்களான நாட்டுக்கோட்டைத் தனவணிக மரபினர்களின் இரங்கூன் சங்கத்தின் சார்பாக வாரந்தோறும் திரு. கருப்பன் செட்டியார் ஆசிரியத் தலைமையின்கீழ் "தனவணிகன்" என்ற ஒரு தமிழ்ச் சஞ்சிகை வெளிவருகின்றது. கைத்

தொழில் வளர்ச்சி வாணிக முன்னேற்றம், பொருளாதார நிலை முதலியவற்றைப்பற்றிய அரிய பெரிய கட்டுரைகளையும் தமிழ் வளர்ச்சியைப் பற்றிய தனிக் கட்டுரைகளையும் உட்கொண்டு கண்ணைக் கவரும் பல படங்களுடன் இச் சஞ்சிகை வெளி வருகின்றது. தமிழ்நாட்டு வர்த்தகர்கள் ஆதரித்து நலமுறுவார்களாக.

கைலாசநாதர் பதிகமும் நித்யகல்யாணியம்மை மும்மணிக் கோவையும்

இத் தமிழ்ச் செய்யுணூல் முத்தமிழ் இரத்னுகரம் பானுகவியார் மாணவர், புரிசை சு. முருகேச முதலியார் அவர்களால் இயற்றப்பட்டது. கண்டனூரைச் சார்ந்த பாலையூர் கைலாசநாதபுரமுடையாரான திரு கைலாசநாதர் மீதும் கைலாசபுரம் ஆண்டாளான திரு நித்திய கல்யாணி யம்மையின் மீதும் இச்சிறு நூல் பாடி யமைக்கப்பட்டுள்ளது. தமிழ்க் கல்வி தந்நிலை தவறி இழிவுற்று வரும் இந்நாளில் இத்தகைய நூற்கள் வெளிவந்து அக் கல்வியின் துளங்கா நிலையை யாவர்க்கும் அறிவுறுத்துவது பெரிதும் போற்றற் குரியதாம்.

சீவக நம்பி

நமது செல்வியின் இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினருள் ஒருவரும், வாலுகுடி போர்டு உயர்தர பாடசாலைத் தமிழாசிரியருமான திரு. அ. மு. சரவண முதலியாரவர்கள் சிங்கார காவியமாகவும் சங்க காலக் காவியங்களி லொன்றெனை மதிக்கப்படுவதாயுமுள்ள "சிவகசிந்தாமணி" யென்ற பெருஞ் செய்யுணூற் கதையை அழகிய வசன நடையில் சிறு நூலாக எழுதி வெளியிட்டுள்ளார்கள். அப்பெரியார்தம் தமிழ் நடையின் அருமை பெருமைகள் இன்னவென்று யாம் விவரித்துக் கூறவேண்டுவதில்லை. அவர்களால் வரையப்பட்டுள்ள நூல் தெள்ளிய இனிய செந்தமிழ் நடையில் அமைந்திருக்குமென்பதும் பாடசாலைகளின் பாடமாக வைக்கும் பெற்றியமைந்ததா யிருக்குமென்பதும் கூறுமே போதரும். இவ்வழகிய சிறுநூலின் விலை அணு 10. வசன நடையில் வெளிவந்துள்ள இச் சிறிய நூலை யாம் மனமுவந்து வரவேற்கிறோம்.



திருப்போரூர்ச் சந்நிதிமுறை ஆசிரியர்

ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சுவாமிகள்

ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு ௧௧	மெய்கண்டான் யாண்டு-எாய பங்குனித் திங்கள் 1933௵ மார்ச்சு௴—ஏப்ரல்௴	பரல் ௫

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்தி ரமுங் குலமுங்கொண் டென்செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்கு ளருளுமாற் பேறரே.

பதவுரை :—

சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்—வேதாகமம் முதலிய பல நூல்களைக் கற்று அவைகளிற் கூறியபடி ஒழுகாமல் அவைகளை(ப்பிறர் மெச்சும் படி) பேசுகின்ற தீயவர்களே

கோத்திரமும் குலமும்கொண்டு—(அருள் அறிவும் அருள் ஒழுக்கமுமின்றி) நீங்கள் பிறந்த கோத்திரமும் குலமும் உயர்ந்தனவாயுள்ளன என்று பெருமிதம் பேசித்திரிதலினால்

என்செய்வீர்—என்ன பயனை அடையப்போகின்றீர்கள் ? (ஒருபயனுமில்லை என்றபடி)

பாத்திரம் சிவம்என்று பணிதிரேல்—(அவ்வாறு பேசுத லொழிந்து நூல்களைக் கற்றதன் பயனாக) இறைவர் உங்கள் பிறவித் துன்பத்தை ஒழித்துப் பேரின்பம் தருதற்கு வணங்கப்படும் தகுதி உடையவர் என்று அறிந்து நீங்கள் அவரை வணங்குவீர்களாயின்

மாற்பேறர்—திருமாற்பேறு என்ற தலத்தில் திருக்கோயில் கொண்டருளியிருக்கின்ற இறைவர்

மாத்திரைக்குள் அருள்வர்—விரைவில் நீங்கள் விரும்பியதை உங்களுக்கு அருள் செய்வர்

(ஆகலான்நீங்கள் அவ்ரை வணங்குங்கள் என்பது குறிப்பெச்சம்),

விளக்கவுரை:—

சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்—சழக்கர்-நீதிக்குமாறாக ஒழுகுந் தீயவர். "சட்டநேர்பட வந்திலாத சழக்கனேன்" எனத் திருவாசகத்தில் கூறியிருத்தல் காண்க. சழக்கர் என்று கூறப்பட்டதனால் பல நூல்களைக் கற்று அவைகளின்படி ஒழுகாத என்று உரை செய்யப்பட்டது. "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாடொழாஅ ரெனின்" என்று திருவள்ளுவர் அதே கருத்தைக் கூறியருளினர். சழக்கர்காள்-கள் என்னும் பன்மைப் பெயர்விகுதி சழக்கர் என்னும் உயர்திணைப் பலர்பாற் பெயர்க்குப் பின் விகுதிமேல் விகுதியாய் வந்தது. சழக்கர்கள் என்பது ஈற்றயல் நீண்டு சழக்கர்காள் என விளிப் பெயர் ஆயிற்று.

கோத்திரமும் குலமும்—குலம் என்பது ஒரு மக்கட் கூட்டம். கோத்திரம் அக்குலத்திற்குள் ஒருசிறிய மக்கட்கூட்டம். ஒரு குலத்தில் பலகோத்திரங்கள் உள்ளன.

பாத்திரம்—தகுதி: சத்பாத்திரமெனப் பேச்சு வழக்கில் வருகின்றது.

மாத்திரை—அளவு, இங்கே கால அளவைக் குறிக்கிறது. விரைவு-என்பது பொருள்.

ஏ—ஈற்றசை.

பல நூல்களைக்கற்ற கல்வி அறிவும் உயர் குலப்பிறப்பும் இறைவனைத் தொழுதற்குத் துணையாயில்லாவிடின் அவைகளால் மாந்தருக்கு யாதொரு பயனுமில்லை என்பது இத்தேவாரப்பாட்டின் கருத்து.

கல்விகற்று வாய்வன்மை பேசி அகங்காரம் கொள்ளுகிறவர்களையும் உயர் குலத்திற் பிறந்ததாக அகங்காரம் கொள்ளுகிறவர்களையும் குறித்து அவர்கள்மேல் இரக்கங்கொண்டு அடிகள் இப்பாட்டைக் கூறியருளினர் என நாம் அறியலாம்.

"வேத மோதிலென் சாத்திரங் கேட்கிலென்
நீதி நூல்பல நித்தல் பயிற்றிலென்
ஓதி யங்கமோ ராறு முணரிலென்
ஈசனை யுள்குவார்க் கன்றி யில்லையே"

என்றும் அடிகள் பாவநாசத் திருக்குறுந்தொகை தேவாரப் பதிகத்திலும் இக்கருத்தையே கூறியருளினர்.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

தனிக்குறள்

(சாத்தூர் திரு. T. S. கந்தசாமி முதலியார் அவர்கள், B.A.)

திருவள்ளுவதேவரைப்போல் தெள்ளி வடித்தறிந்த பொருளைச் செவ்விய தீஞ்சொற்கள் தொடுத்துச் சுருங்கச் சொலல் முதலிய அழகுகள் பிறங்கக் கூறுமாற்றல் பெற்ற கவி வேறெவரும் இற்றைஞான்றுவரை உலகத்தில் தோன்றவில்லை. அத்தேவர் குறளில் பாயிரவியலிற் காணப்படும் அதிகாரங்கள் நான்கும் அவர் திருவாய்மலரிற் பிறந்தன அல்லவென்று சில ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அவ் வதிகாரங்களுள் 'அறன்வலியுறுத்தலு' மொன்று. தேவரல்லரேல் அவ்வதிகாரத்திற் காணப்படும் குறள்களை யாத்தற்கேற்றவாற்றலுடையராய்த் தோன்றிய புலவர் வேறு எவரும் இல்லை. தேவரே அவ்வதிகாரம் செய்தாரென்பது நடுநின்றுராய்வார்க்கெல்லாம் நன்கு விளங்கும். அவ்வதிகாரத்துட் காணப்படும் குறள்கள் மிக்க பொருட் செறிவும் கலைநுட்பங்களும், நிறைந்து மிளிர்கின்றன. அவ்வதிகாரத்தில் ஓர் குறளை யீண்டெடுத்தாராய்வ தெம் கருத்து.

'ஒல்லும் வகையா னறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்'

இக்குறளை யறியாத தமிழறிஞரும் போற்றாத புலவரும் இலர். சமயம் வாய்த்துழியும் அறஞ்செய்யாது விட்டாரும், ஏதேனும் ஒன்றைச் செய்து, தாம் ஒல்லும் வகையி னறவினை செய்துளதாகக் கருதி மகிழ்ந்து இக்குறளைத் தமதொழுக்கத்திற்கு மேற்கோள் காட்டுவர். பரிமேலழகர் உரையைப் பெரிதுந் தழுவியும், விரிக்கவேண்டுழி விரித்தும் திருக்குறளுக்குரைகண்டுள்ள புலவராம் திரு. அருணசலக் கவிராயர் அவர்கள், இக்குறளுக் குரை விரித்துக்கூறி இறுதியில், கூடுமானவகையிலாவது அறஞ்செய்ய வேண்டுமென ஆசிரியர் யாப்புறுத்துவதாகக் கருதிப் பொருள் வரைந்துள்ளார்கள். அங்ஙனம் மக்கள் கூடுமான வகையிலாவது அறஞ்செய்ய வேண்டுமெனக் கூறுவது தேவர் கருத்தெனின் 'ஓவாதே', 'எல்லாம்' என்ற விருசொற்கள் பெய்து குறள் செய்திருக்கவேண்டியதில்லை. அவ் விருசொற்களின் பொருள்கள் கவிராயர் அவர்கள் கூறும் பொருண்மையுடனியை பிலவா யிருத்தல் காண்க.

'தத்தமக் கியலுந் திறத்தான் அறமாகிய நல்வினையை ஒழியாதே அஃது எய்து மிடத்தானெல்லாம் செய்க' என விக் குறளுக்குப் பரிமேலழகர் பொழிப்புரை கூறி, இயலுந் திறமாவது இல்லறம் பொருளளவிற் கேற்பவும், துறவறம் யாக்கைநிலைக் கேற்பவும் செய்தல் என்றும், எய்து மிடமாவன, மனம் வாக்குக் காய மென்பனவென்றும் அகல உரைத்தனர். மணக்குடவரோ எனின், 'தமக்கு இயலும் திறத்தானே, அறவினையை ஒழியாதே செய்யலாம் இடமெல்லாம் செய்க' என்றும், இயலும் திறம்: மனமொழி மெய்களும் பொருளும் என்றும், செல்லும் வாய்: அறம் செய்தற்குத் தக்க பல இடங்களும் என்றும் பொருள் கண்டுளார். இக் குறளால் அறஞ் செய்யுமாற்றை விளக்குகிறார் என்று பரிமேலழகரும், அறம் வலிதென்றறிந்தவர்கள் அதனை இவ்வாறு செய்கவென்று கூறிற்றிது என்று மணக்குடவரும் கூறியுள்ளார்.

இக்குறளை நன்காராயின், அறம் செய்யுமாற்றை இக்குறளில் விளக்குவதுடன், அது கூறுமுகத்தால் அறமித்தகைய தென்பதை யும் தேவர் கூறுகிறார் என்பது வெளியாகும். இருபேருரையாசிரியர்களும் 'எல்லாம்' எனும் சொல்லை வாயெனும் சொல்லொடு மட்டுஞ் சேர்த்து "இயலுந்திறத்தால் அறவினையை ஒழியாதே எய்து மிடமெல்லாம் செய்க" வென்பது பொருளெனக் கூறினர். 'ஒல்லும்' என்னும் சொல்லை முதலிலும், 'எல்லாம்' என்ற மொழியை ஈற்றயலிலும் வியங்கோள் வினைமுற்றிற்கு முன்னும் தேவர் வைத்துள்ள சிறப்பை நோக்கின், அவ்விரு சொற்களின் பொருள்களும் இக்குறள் பொருட்பகுதிகள் பலவற்றையும் தழுவி நிற்பதைக் காணலாம் ஆகவே அச்சொற்களை வேண்டு மிடங்களிற் கூட்டிப் பொருள் செய்தல் வேண்டும் என்பது தேவர்க்கு கருத்தாதல் தெளியப்படும். எனவே, 'இயலுந்திறத்தான் எல்லாம், இயலும் அறவினை எல்லாம், ஒழியாதே எய்தும் இயலு மிடமெல்லாம் செய்க' என்பது இக்குறளின் சிறந்த பொருளாகத் துணிதற் கிடமுளது. 'வகை' என்ற மொழிக்கு 'திறம் என்று இருபேருரை யாசிரியர்களும் பொருள் கொள்ளினும், பரிமேலழகர் "அது இல்லறம் பொருளளவிற் கேற்பவும், துறவறம் யாக்கை நிலைக்கேற்பவும் செய்தல்" என்றும், மணக்குடவர் அது மன மொழி மெய்களையும் பொருளையும் குறிக்கு மெனவும் கூறினர்.

'வகை' எனும் சொல் அறஞ்செய்யும் வழிகளையும், அறம் செய்தற்கு உதவும் மனமொழி மெய் பொருளாய கருவிகளையும் சுட்டும். ஆதலால் ஒல்லும் வழிகளனைத்தானும்ஒல்லும் கருவிகளனைத்தானும், அறவினை யெல்லாம் செய்க வெனத் தேவர் ஆணை தந்தாராகக் கொள்ளல் வேண்டும். ஒல்லும் வழிகளி லொன்றை (நீத்தாயினும் ஒல்லும் கருவிகளி லொன்றை) ஒழித்தாயினும் ஒருவன் அறம் செய்யின் அவன் அறமுடையனாகான். 'இயலுந்திறம்' என்பதற் கவ்வாறு பொருள் செய்தமையாற்றான், பரிமேலழகர் தத்தமக்கியலுந் திறத்தால் என்றும், இல்லறத்தார், துறவறத்தாராகிய இருவரையும் தனித்தனி பிரித்தும் சுட்டினார்; அன்றியும் எய்து மிடமென்பதற்கும் மனம் மொழி மெய்களென்றும் பொருள்கொண்டார். இல்லறத்தார் பொருள் கொண்டும் மனம் மொழி மெய்கள் கொண்டும் அறம் செய்யலாம். துறவிகள் மனம் மொழி மெய்களாற் செய்யலாம். 'இடம்' என்பதற்கு மணக்குடவர் கொண்ட பொருளே ஏற்புடைத் தாகும்.

ஆதலின் இக்குறட்கண்,

1. ஒல்லும் அறவினை எல்லாம் செயல்
2. ஒல்லும் வழியா னெல்லாம் செயல்
3. ஒல்லும் கருவியா னெல்லாம் செயல்
4. ஒல்லும் காலமெல்லாம் செயல்
5. ஒல்லுங் காலமிடைவிடாது செயல்
6. ஒல்லுமிடங்களி லெல்லாம் செயல்
7. ஒல்லு முயிர்கட் கெல்லாம் செயல்

என்னும் பொருள்கள் எல்லாம் பெய்துரைக்கப்பட்டமை காண்க.

'ஓவாதே' எனக் கூறப்பட்டமையால், இடைவிடாது அறம் செய்யவேண்டு மென்பதும், ஒல்லும் வகையா னென்றமையால் ஒல்லும்வகையா னொழியாது செய்யவேண்டுமென்பதும், எவ்வளவு நீண்டகாலம் அறம் செய்யலாகுமோ அவ்வளவு நீண்டகாலமும் அறம் செய்க என்பதும் பெறப்படும். 'செல்லும் வாய்' என இடத்தைக் குறித்தமையான், ஒல்லுமிடங்களி லெல்லாவற்றிலும் என்றும், இடவாகுபெயராய் அவ்விடத்திலுள்ள உயிர்களுள் ஒல்லுமுயிர்கட் கெல்லா மென்றும் உய்த்துணரலாகும். அறம் ததும்பிய நெஞ்சினர் அறம் செய்யக் காமுறுவர். அவருள்ளத்

தால் மறந்தும் தீயன சிந்தியார். தமக்கும் பிறர்க்கும் இன்பம் பயப்பனவற்றையே என்றுங் கருதுவர். ஏதந் தருவனவற்றை மறந்தும் எண்ணார். அவர் நா, மெய்ம்மையையே பேசும்; இனியனவே கூறும். ஆதலின் அவர் மனவாசகங்கள் அறவழிநிற்கும். இவ்வுடம்பாற் செய்வினைகளும் அறமேயாகுக வெனக் கருதி அதனையே செய்வர். அறத்தின் வழி யீட்டிய பொருளையும் அறத்திற்கே செலவிடுவர். தம்மா லியன்ற அறவினைகள் பலவற்றையும் எஞ்சாது குறைவறச் செய்வர். எல்லா வழிகளானும் அறவினையைச் செய்வர். எல்லாக் கருவியானும் அறமே செய்வர். இயலு மிடங்களிலெல்லாம் அறவினையே செய்வர். இயலு மிடங்களிலுள்ள இயலுமுயிர்கட் கெல்லாம் அறமே புரிவர். அதை யிடைவிடாது செய்வர். அவருயிருள்ள வரையினும் செய்வர். அப்பெற்றியினின்று ஒருவன் அறஞ் செய்தால் மட்டும், அவனை அறங்கிடந்த நெஞ்சினன் என்னலாம். அவன் செய்கையே அறமாகும், ஈண்டுக் கூறிய பொருள்கள் யாவும் அழகு பிறங்க இக்குறளில் கூறப் பட்டுள்ளன.

கி. பி. பதினெட்டாவது நூற்றாண்டினிருந்த ஆங்கில நாட்டுச் சமயக்கணக்கருட் பெரியாராய John Wesley ஜான் வெசிலியார் ஒழுக்கமுறை விதிகள் வகுத்து அவ்விதிகளின்படி தாமும் ஒழுக முயன்று, பிறரையும் அவ்விதிகளின் ஒழுகத்தூண்டினர். அவ்விதிகளாவன.

1. Do all the good you can.
2. By all the means you can.
3. In all the way you can.
4. In all the places you can.
5. At all the times you can.
6. To all the people you can.
7. As long as ever you can.

—*John Wesley*

வெசிலியார் விதிகளை தேவர் குறளோடொப்பிட்டு, தேவர் குறளின் அழகு கண்டு, அக்குறளின் பொருள் நுகர்ந்து மகிழ்க.

திருவள்ளுவர் திருவடி வாழ்க.

பண்டைத் தமிழ்ச் சொற்கள்

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள்]

நம்பன் (உரு)

நம்பன் என்னும் சொல் பண்டைத் தமிழ் மக்களால் தாங்கள் வணங்கி வந்த இறைவனுக்கு இட்டு வழங்கின பெயர்களுள் ஒன்று. அச் சொல்லில் அடங்கிய கருத்துக்கள் இக்கட்டுரையில் இயன்றவாறு கருதப்படும்.

2. நம்பன் என்ற சொல் நண்பன் என்ற சொல்லினது மரூஉ ஆகும். "மீகிழிதழுறப் பம்மப் பிறக்கும்." பகர உயிர்க்கு மகர மெய் இனவெழுத்தாகும் ஆதலின் பகர உயிர்மெய்க்கு முன்னின்ற ணகரமெய் அதனது இனவெழுத்தாகிய மகரமாக மாறியது, வன்பு வம்பு என்றும், தென்பு தெம்பு என்றும், மேன் பாடு மேம்பாடு என்றும் மாறுதல்போல. தண்பு என்ற சொல் தம்பு என உலக வழக்கில் வழங்கப்படுகின்றது. நண்பன் என்ற சொல் நண்பு என்ற பண்புப் பெயரும் அன் என்ற உயர்திணை ஆண்பால் விகுதியும் சேர்ந்து ஆகியது. நள் என்ற பகுதிச் சொல்லும் (Root) 'பு' என்ற பண்புப்பெயர் விகுதியும் சேர்ந்து ஆகிய நட்பு என்ற சொல் நண்பு எனத் திரிந்தது. நட்பு நண்பு என்ற இரண்டு சொற்களும் இப்பொழுது நூல் வழக்கிலும் உலக வழக்கிலு மிருக்கின்றன. நள் என்ற பகுதிச் சொல்லுடன் 'தல்' 'அல்' தொழிற்பெயர் விகுதிகள் சேர்ந்து நட்டல் (நள் + தல்), நள்ளுதல் (நள் + உ + தல்), நள்ளல் (நள் + அல்) என்ற தொழிற் பெயர்ச் சொற்கள் பிறந்தன. நள் என்ற பகுதிச் சொல்லின் முதற் பொருள் சேர் என்பது. அதனிலிருந்து உண்டான நண்பு அல்லது நட்பு பின்னர் சேர்தலினு லுண்டாகும் கேண்மைக்குப் (friendship) பெயராய் வந்தது. நள் என்ற பகுதிச் சொல் சிறிது வேறுபட்டு அதனிடமிருந்து சேர்தல் என்று பொருள்படும் 'நண்ணுதல்' 'நணுகுதல்' என்ற சொற்கள் பிறந்தன. அண்மை (proximity) என்று பொருள்படும் நண்மை என்ற சொல்லும் நள் என்ற பகுதிச் சொல்லி லிருந்தே வந்தது. "நட்பெதிர்ந் தோர்க்கே அங்கை நண்மையன்" என்று புறநானூறு 380-வது பாட்டில் வருதல் காண்க. நன்மை என்ற சொல்லும் நண்மை என்ற சொல்லினது திரிபு என்று கொள்ளுதற்கு இடமுண்டு.

அதுவும் நள் என்ற பகுதியிலிருந்து வந்த சொல்லாகும், இறைவனை அல்லது இறைவன் அருள் விளங்கும் பெரியார்களை நண்ணிலன்றி நன்மை உண்டாகாது ஆதலின். ஆகவே நண்பன் என்ற சொல்லின் திரிபாகிய நம்பன் என்ற சொல்லை இறைவனுக்கு இட்டுப் பண்டைத் தமிழ் அறிஞர் வழங்கி வந்ததற்குக் காரணம் அவன் எல்லா உயிர்களுக்கும் கேள்வனும் (Friend) துணையாளனும் அவைகளினது நலம் கருதி உலகில் படைத்தல்முதலிய ஐந்தொழில் செய்து வருதல் ஆகும். "துணையாளனே (Friend) தொழும்பாளரெய்ப்பினில் வைப்பன்" என்றும் "தோழ (Friend) போற்றி" என்றும் மாணிக்கவாசக அடிகளும் "தோன்றாத்துணை" என்று திருநாவுக்கரசு அடிகளும் கூறியருளினமை காண்க.

3. இறைவன் ஐந்தொழில் செய்யாமல் எந்த உயிரும் நலம் அடையாது. ஆனால் அவன் உயிர்களுக்குக் கருதிய நலத்தைப் பகுத்தறிவுடைய மக்கள் அடைதற்கு அவர்கள் அவனை நண்ணி (சேர்ந்து) நம்பனாகக் கொள்ளுதல் வேண்டும். "நலமிலனன் றூர்க்கு நண்ணினர்க்கு நல்லன்" என்று உமாபதி சிவாசாரியார் திருவருட் பயனிலும் "சார்ந்தவர்க் கல்லால் நலமிலன்" என்று திருநாவுக்கரசு அடிகள் நமச்சிவாயப் பதிகத்திலும் "சார்ந்தவர்க் கின்பங் கொடுக்கும் தழல் வண்ணன்" என்று திருமூலர் திருமந்திரத்திலும் (2114) கூறியருளினமை காண்க. மக்கள் இறைவனைச் சேர்தலன்றி அவன் தங்களுக்குச் செய்து வரும் பேருதவியை அறிந்து அவனிடத்தில் அன்புடையர்களாயிருத்தல் வேண்டும். ஒருவரை ஒருவர் சேர்ந்து அன்பு செய்யாத இருவர்களுக்குள் நட்பு உண்டாகாதது கண்கூடு. மக்கள் உலகிற் பழகும் நற்குணங்களெல்லாம் இறைவனைச் சேர்ந்து இன்பமடைதற்கு ஏதுக்களாயுள்ளன. நல்லாரிடம் கொள்ளப்படுகிற உண்மை நட்பினாலுண்டாகும் அன்பு முதலிய நற்குணங்கள்பற்றி திருவள்ளுவ நாயனார் தாம் இயற்றிய திருக்குறளில் நட்பு என்ற பொருள் பற்றி ஐந்து அதிகாரங்கள் சிறிது வேறுபட்ட தலைப்புகளின் கீழ் கூறினார். அன்பு நட்பின் பயனும் அல்லது நட்பு அன்பின் பயனும், உண்டாகலாம்: அதுபற்றி நண்பன் 'அல்லது நம்பன் என்ற சொல் அன்பன் என்ற பொருளிலும் வழங்கப்படுகின்றது. நண்பர்கள் ஒருவரை ஒருவர் நம்புவார் ஆதலின் நண்பு

என்ற சொல் நம்பு என்ற சொல்லாய்த் திரிந்தபின் நம்பு என்ற சொல் விரும்பு என்ற பொருளில் வழங்கப்படுதலன்றி நம்பு (Trust) என்ற பொருளிலும் வழங்கப்படுகின்றது. நம்பு என்ற சொல்லிலிருந்து கை விகுதி சேர்ந்து நம்பிக்கை என்ற தொழிற் பெயர் வந்தது.

4. மேலே கூறியவாற்றால் இறைவன் எல்லா உயிர்களுடைய நலத்தையும் நாடி அன்புசெய்தலால் மக்கள் எல்லா உயிர்களுடைய நலத்தையும் நாடி அவைகளிடம் அன்பு செய்தல் வேண்டும் என்பதும் அவ்வாறு அவர்கள் உயிர்களிடம் அன்பு செய்து அன்புப் பண்பைப் பழகுதல் இறைவனை அடைதற்கு வழியாயுள்ளது என்பதும் இந்த உண்மையை அறிந்து பண்டைத் தமிழ் மக்கள் இறைவனை நண்பனாகக்கொண்டு அவனிடம் அன்பு செய்து வந்தார்கள் என்பதும் பெறப்படுகின்றன. இறைவனை மக்கள் தங்களுக்குக் கொடியன் என்று நினைந்து அவனிடம் அச்சம் வைத்து வழிபடுதல் அவனை அடைந்து இன்பமடைவதற்கு வழியாயுள்ள வழிபாடாகாது. இறைவன் எல்லா உயிர்களுக்கும் நம்பன் (நண்பன்) என்ற அவனுடைய இலக்கணம் தெரியாத மக்கள் அவனுக்கு அஞ்சி வழிபடுதல் எத்துணை பேதைமை! அவர்கள் இறைவனை அஞ்சி வழிபடுதலுக்கு முக்கியமான காரணம் அவர்கள் தங்களிற் றாழ்ந்த மக்களைத் துன்புறுத்தி அஞ்சும்படி செய்து உலகில் வாழ்தலேயாகும். கீழோரிடம் அன்பின்றி அவர்கள் அஞ்சும்படி ஒழுகுகிறவர்கள் தாம், மேலோரிடம் அன்பின்றி அஞ்சி ஒழுகுவார்கள்.

5. நம்பன் என்ற சொல் நம்பான் என இறைவனுக்கு வழங்கப்படுதலு முண்டு.

6. நம்பன் என்ற சொல் பழைய சங்கநூல்களில் இறைவனுக்கு வழங்கப்படவில்லை. எடுத்துக்காட்டாக அச்சொல் சீவக சிந்தாமணியில் ஆறுபாட்டுக்களில் (363, 410, 469, 670, 809, 2568 செய்யுள்கள்) வழங்கப்பட்டு வந்தாலும் ஓரிடத்திலாவது அது இறைவனைக் குறிக்க வழங்கப்படவில்லை; மனிதர்களைப் பற்றிக் கூறப்படுகிற நூலில் எவ்வாறு அவ்வழக்குக் காண முடியும்? சமயாசிரியர்கள் தங்கள் தூய உள்ளத்தில் இறைவனைத் தங்கள் நம்பன் என்று உணர்ந்தவர்கள் ஆதலின் அவர்கள் உணர்வில் நிறைந்துள்ள கருத்துக்கள் அவர்கள் இறைவனை அன்பாய்ப்

பாடுந் தோத்திரப்பாக்கள் பலவற்றில் அச்சொல் வாயிலாய் வெளி விடப்படுதல் இயல்பேயாகும். சில மேற்கோள்கள் மாத்திரம் எடுத்துக் காட்டுக்களாக இங்கே கூறப்படும்.

"நாதனமை யாளுடைய நம்பனிடமென்பர்" 1.
திருஞானசம்பந்த அடிகள் திருப்பழவூர்த் தேவாரப்பதிகம் 5-வது பாட்டு.

"உலகுக்கெல்லாம் நம்பன்நாமம் நமச்சிவாயவே." 2.
திருஞானசம்பந்த அடிகள் நமச்சிவாயத் திருப்பதிகம் 2-வது பாட்டு.

"நம்பான் மேய நன்னகர் போலுந் நமரங்காள்." 3
திருஞானசம்பந்த அடிகள் திருக்குற்றாலப்பதிகம் 1-வதுபாட்டு.

"நந்திவட்டத்தொடு கொன்றை வளாவிய நம்பனையே" 4
திருநாவுக்கரசு அடிகள் திருவையாறு திருவிருத்தம் 1-வது பாட்டு.

"நாள்வாயும் பத்தர் மனத்து ளானை நம்பனை." 5
திருநாவுக்கரசு அடிகள் திருஆரூர்த் திருத்தாண்டகம். 7-வது பாட்டு.

"நம்பனேயுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே." 6
சுந்தரமூர்த்தி அடிகள் திருப்பாண்டிக் கொடுமுடிப்பதிகம் 8-வது பாட்டு.

"நம்பனைநள்ளாறனை யமுதை நாயினேன் மறந்தென்னினைக்கேனே." 7
சுந்தரமூர்த்தி அடிகள் திருநள்ளாற்றுப்பதிகம் 1-வது பாட்டு.

"நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி." 8
திருவாசகம் போற்றித்திரு அகவல் 109-வது வரி.

"நம்பனையுந் தேவனென்று நண்ணுமது வென்னேடீ," 9
திருவாசகம் திருச்சாழல் 17-வது பாட்டு.

"கம்பஞ்சிவந்த சலந்தானுகங் கறுத்ததில்லை நம்பன்" 10
திருக்கோவையார் 209-வது பாட்டு.

"நடுவு நின்றார் நல்ல நம்பனுமாமே." 11
திருமந்திரம் 321-வது பாட்டு.


"சிவன்றான் பல பல சிலருமாகி நவின்று ளுலகுறு நம்பனுமாமே."
திருமந்திரம் 3011-வது பாட்டு.

வான ஊர்திகள்

(ஆகாய விமானங்கள்)

[திரு. T. V. நீலகண்டப்பிள்ளையவர்கள் B.A. B.L.]

சிறுகுழந்தைகள் வானிற் பறக்கச்செய்கின்ற காற்றாடியின் அமைப்பும் 'எயிரோப்லேன்' என்ற வான ஊர்திகளின் அமைப்பும் பலவகையிலும் ஒன்று. அகலமான பாரத பொருள் ஒன்றை, முற்றிலும் மட்டமாய் இராமல் ஒரு நுனி சற்றே உயர்ந்திருக்கும்படி வைத்து மிக விரைவாக அதை முன்னுக்குப் போகும்படி செய்தால், காற்று அதன் அடிப்பக்கத்தில் தாக்குவதினால் உண்டாகும் பாரம் (pressure) கீழிழுக்கும் வலிமையைத் தடைசெய்வத



னால் அந்தப் பொருளானது உயர்ந்து எழும்பக் கூடியதாகவிருக்கிறது. இதுவே 'எயிரோப்லேன்' என்னும் வான ஊர்தியின் அமைப்பின் அருமை. இவ் வானஊர்திகளுக்கு நீர்வளி வேண்டுவதில்லை. ஆகையால் வானக் கப்பலில் இருக்கும் நீண்டு ருண்ட நீர்வளி அறையும் முதன்மையில்லை. இந்த ஊர்திகளை, இறக்கைகளோ என்று எண்ணக்கூடிய இரண்டு பெரிய தட்டையான பொருள்களையும், அவை இரண்டுக்கும் நடுவில் சில இயந்திரங்களையும் உடையன என்று பொதுவாகக் கூறலாம். புறப்படுவதற்கு முன்னே எயிரோப்லேன் ஆனது தரைமீதிலே (பைசைக்கிள்) ஈருருளிச் சக்கரங்கள் போன்ற இரு சக்கரங்களால் தாங்கப்பட்டு நிற்கும். புறப்படவேண்டிய நேரத்தில் "எஞ்சின்" கள் ஊர்தியை முன்னுக்குச் சிறிது தூரம் ஓட்டும்; அதற்குள்ளே மேல் எழும்பும் வல்லமை உண்டாய்விடுகிறது. உடனே, எழும்பிச்செல்லும் எஞ்சின்கள் இயங்கிக்கொண்டேயிருக்க (விமான

மும் ஊர்தியும் பறந்து செல்வதோடு, மாலுமி வேண்டும் இடத்திற்கு அதைத் திருப்பக் கூடியதாகவும் இருக்கிறது. எந்த உயரத்திலும் செல்லவல்லது; எவ்வளவு திடீரென்றும் திருப்பக்கூடியது; ஆனால் பளுவான பொருள்களையும் மிகுந்த சுமையையும் கொண்டு போக வல்லதன்று. ஒன்று அல்லது இரண்டு ஆட்களையும் சிறு சுமையையும் மட்டுமே எடுத்துச் செல்லும் வல்லமை யுடையது.

இவ்வகையான ஊர்தியில் முதன்முதற் பறந்து சென்றவர் ப்லேரியட் (Bleriot) என்ற பெயரிய பாரீஸ்வாசி. 1909-ல் 'காலே' (Calais) என்கிற பட்டணத்தில் இருந்து 'டோவர்' (Dover) என்கிற பட்டணத்துக்கு இவ்வூர்தியிற் பறந்தது அக்காலத்து மிக வியப்பாகவே இருந்தது. இவ்விருபட்டணங்களுக்கும் நடுவிலிருக்கும் 24 மைல் அகலம் உள்ள ஆங்கிலக் கால்வா (English Channel) யை 40 நிமிட நேரத்திற் கடந்தார். அவருடைய 'எயிரோப்லேனில்' வைத்திருந்த பொறி (எஞ்சின்) 25 குதிரை வலியையுடையது. இவ்வகை ஊர்தியின் வல்லமையைச் சிறிதும் ஆராய்ந்தறியாத அக்காலத்தில் அவருடைய செய்கை மிகத் துணிகரமாகவே தோன்றிற்று.

இவ்விருவகை ஊர்திகளும் அப்போரிலே பயன்படுத்தப்பட்டன. பொதுவாகக் கூறுமிடத்துச் செப்பலின்கள் ஜெர்மனியர்களாலும், எயிரோப்லேன்கள் ஆங்கிலேயர்களாலும் ஐக்கியக் கட்சியாராலும் பயன்படுத்தப்பட்டன. போர் தொடர்வதற்கு வெகு காலத்திற்கு முன்னரே ஜெர்மானியர் செப்பலின் செய்வதில் தம் கவனத்தையும் பொருளையும் செலவுசெய்தனர். மற்ற அரசியல்களில் செப்பலின்கள் அவ்வளவு மிகுதியாகச் செய்யப்படவில்லை. வேடிக்கைக்காக மட்டும் சில எயிரோப்லேன்கள் இங்கிலாந்து முதலிய நாடுகளில் செய்யப்பட்டன. இப்பொழுது இருக்கின்ற நிலைமையைக்குறித்துப் பேசுகையில், ஜெர்மானியர்களின் முதன்மையான வானஊர்திகள் 'செப்பலின்கள்' என்றும், நம்மவர்களின் முக்கிய ஊர்திகள் 'எயிரோப்லேன்' என்றும் சொல்வதில் தடையில்லை.

போர்க்காலத்தில் வானஊர்திகள் செய்யக்கூடிய வேலைகளில் மிகவும் முதன்மையானது வேவு அறிதல். எதிரியின் நிலையையும் அவன் செய்கையையும் எவ்வளவு தூரம் நன்கறியக்கூடுமோ அவ்வளவு அறிந்துகொள்ளல் வெற்றிக்குரிய வழிகளில் ஒன்று. எந்த

இடத்தில் எதிரியின் பீரங்கிகள் எத்திசையில் அமைக்கப்பட்டிருக்கின்றன? எதிரிக்கு உணவு முதலியன வரும் பாதையெது? எவ்வெப்பக்கங்களில் நெருங்கின சண்டை நேரிடக்கூடியதாக இருக்கிறது? என்பவைகளை வான ஊர்திகள் தத்தம் படைகளுக்குத் தெரிவித்துக்கொண்டேயிருக்கின்றன. இவைகளை அறிந்து கொள்வதற்கு எதிரியின் நாட்டுள் செல்வது இன்றியமையாதது. ஆகையால் அதைச் செவ்வனே செய்துமுடிக்கும் வல்லமை ஏனைய ஊர்திகளைவிட இதற்கு மிகுதியாய் இருக்கிறது. பெரிய உருவத்தையும் எளிதில் கிழிந்துபோகக்கூடிய நீர்வளி அறையையும் உடைய செப்பலின்கள் எதிரியின் நாட்டில் பகல் நேரம் சென்று பிழைத்துத் திரும்புவது அருமை.

வான் 'வழியாய்'ச் செல்கின்ற வேவுகாரர்கள் மிகுந்த மன வலிமையுள்ளவர்களாக இருக்கவேண்டுவது இன்றியமையாத தாகும். நூறு இருநூறு அடி உயரமான கோபுரங்களின் உச்சியில் இருந்து தரையைப் பார்க்கையில் அச்சமடையாதவர்கள் மிகச் சிலரே. இவ் வாகாய வேவுகாரர்கள் (Air-Scouts) செல்லும் உயரமோ 6000 அடி; அவ்வுயரத்திலும், வாயுவேகம் மனோ வேகம் என்றபடி ஒரு மணிநேரத்துக்கு நூறு மைலுக்கு மிகுந்த விரைவாகப் பறந்துசெல்ல வேண்டியதாக இருக்கிறது. அம்மட்டோ? அவர்களால் உன்னிக்கப்படவேண்டுவன பலவுள. தாம் போகின்ற பொழுது தமக்குக் கீழே இருக்கும் நிலம் எதிரியின் கைவசம் இருப்பதால் அதைப்பற்றித் தெரிந்து கொள்ளக்கூடியவையெல்லாம் தெரிந்து கொள்ளவேண்டியது முதன்மையாகும். ஊர்தி 6000 அடி உயரத்தில் இருப்பதினாலும் வெகு விரைவாகச் சென்று கொண்டிருக்கிறதினாலும் அதிலிருந்து நிலத்தைப் பார்க்கின்றவர் மிகக் கருத்தாகவும் நுட்பமாகவும் பார்க்கவேண்டும்; பார்ப்பதோடு கண்டவைகளில் முதன்மையானவைகளைப் பற்றிக் குறிப்புகளும் படங்களும் எழுதிக்கொள்ள வேண்டும்; பின்னும் புகைப்படங்கள் (Photos) எடுத்துக்கொள்ளவும் வேண்டும். இதற்கிடையில் தம் படையிலிருந்து (Wireless) கம்பியில்லாச் செய்தி ஏதாவது வந்தால் அதை ஏற்றுக்கொண்டு, முதன்மையானது ஏதாவது படைக்கு அப்பொழுதே தெரியப்படுத்தவேண்டியதாக இருந்தால் (Wireless) கம்பியில்லாச் செய்தி மூலம் அனுப்பவும் வேண்டும். இவ்வேலைகளைச் செய்யும்பொழுதே

எதிரியின் ஆகாயப்பீரங்கிகள் (Anti-aircraft guns) ஏதாவது தமக்குத் தீங்கிழைக்கக்கூடிய அண்மையில் இருக்கின்றனவோ என்றும் கவனிக்கவேண்டும்.

தண்ணீரில் மூழ்கிச்செல்கின்றனவும் வாணிகக்கப்பல்களுக்கும் மக்கள் ஏறிச்செல்லும் கப்பல்களுக்கும் தீங்கிழைத்துக் கொண்டிருக்கிறதாக நாம் கேள்விப்படுகின்றனவுமான (Submarines) என்ற நீர்மூழ்கித்தோணிகள் தண்ணீர்க்குள் இருப்பதைக் கப்பல்களில் இருந்தபடியே காண்பதரிது; அவற்றிற்கு நேர் உச்சியில் இருந்தால்மட்டுமே காணமுடியும். ஆகவே வான ஊர்திகள் இவற்றிற்கு மிகவும் இன்றியமையாதவைகளாகக் காணப்படுகின்றன. அவ்வூர்திகள் பறந்து செல்லும்பொழுது அடிக்கடி நீர்மூழ்கித்தோணிகளைக் கண்ணுற்று, தம் கப்பல்களுக்குச் செய்திகளைத் தெரியப்படுத்துவதினால் இடரிலிருந்து தப்பித்துக்கொண்ட நம்மவர்களின் கப்பல்கள் மிகப்பல.

வானவூர்திகள் செய்கின்ற இரண்டாவது தொழில், பீரங்கிகளுக்குக் குறிப்பறிவித்தல். பீரங்கிகள் மட்டமாகப்பிடித்துச்சுடப்படுகின்றவையல்ல. அவைகளைச் சாய்வாக வைத்துக்கொண்டுதான் சுடுவார்கள். குண்டானது (Parabola) வளைந்த பாதையாகச் சென்று குறித்த இடத்தைத் தாக்கும். அப்படித் தாக்குகிறதா இல்லையா என்று சுடப்பட்டவர்களுக்கு நேரில் பார்த்துத்தெரிந்து கொள்ள முடியாது. பீரங்கியின் சாய்வு சரியாய் இருக்கிறதா, குறித்த பொருள்மேல் படுகின்றதா என்ற உண்மை தெரிந்து கொள்வது பீரங்கியைச் செலுத்துவதற்கு இன்றியமையாதது. இதையறிந்து சொல்வதற்கு வானஊர்திகள் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வூர்திகளிலும் புகைக்கூண்டு மாதிரியானவை (Balloon type) மிகவும் நன்கமைந்தன.

இந்த வகைக்குப் பயன் படுத்தப்படுகின்ற புகைக்கூண்டுகள் Captive balloons என்றழைக்கப்படுகின்றன. மிக வலுவான கயிற்றினால் இப்புகைக்கூண்டுகள் கட்டப்பட்டிருக்கும். அக்கயிற்றை பீரங்கிகளுக்கு அண்மையில் தறி அடித்து அதில் கட்டி வைத்திருப்பார்கள். புகைக்கூண்டு அவ்விடத்திலே நின்று கொண்டிருக்கும். அதன்மீது இருக்கும் ஆள் குண்டுகள் குறித்த இடத்தைத் தாக்குகின்றனவா என்றும் இல்லாவிட்டால் எந்தத்

திசைக்கு எவ்வளவு திருப்பவேண்டும் என்றும் Telephone வாயிலாக சொல்லிக்கொண்டே இருப்பான்.

இப்படியான கைதிப்புகைக்கூண்டுகள் (Captive baloons) கயிற்றினல் கட்டப் பட்டிருக்கிறதினுல் நின்ற நிலையிலே சுழன்று கொண்டிருக்கின்றன. இது நுண்ணிய பார்வைக்குத் தடையாக இருந்ததனுல், அக் குறையில்லாதபடி புகைக்கூண்டினை வேறு படுத்தியிருக்கிருர்கள். முற்றிலும் உருண்டையாக இராமல் ஒரு நுனிபருத்து அகன்றும் மற்றது சிறுத்தும் இருக்கின்ற சுசேஜ் பலூன் (Sausage Baloons) என்ற புகைக்கூண்டுகள் இவ்விதமாகச் சுழல்கிறதில்லை. இவைகள் தாம் இப்பொழுது பயன்படுத்தப் படுகின்றன.

பீரங்கிகளுக்குக் குறிப்புத்தெரிவிக்க புகைக்கூண்டுகளே நன்கமைந்தனவேனும் சிறு சிறு தொலைவுக்குள் இருக்கும் பல பீரங்கிகளை ஒரு ஆளே குறிப்பறிவிக்க வேண்டிவரின் எயிரோப் லேன் மிக நன்ருய்ப் பயன்படுகின்றது.

வானவூர்திகளுக்கு நேரிடக்கூடிய பேரிடர்கள் மிகப்பல.

பெரியபட்டணங்கள் ஒவ்வொன்றும் இந்தப் போர்க்காலத்திலே மிகக் கருத்தாய்க் காக்கப்பட்டுள்ளன. வானவூர்திகள் வெகு தொலைவில் வரும்பொழுதும், நம் காதுக்கு எட்டாத சிற்றிரைச் சலை எற்று அறிவிக்கவல்ல பொறிகள் (Listening Posts) முக்கிய பட்டணங்களின் பலபக்கங்களிலும் இருக்கின்றன. இரைச்சல் கேட்டவுடனே அவ்வுண்மை கம்பி வழியாகப் பட்டணமுழுதும் பரவுகிறது. உடனே பெரிய சோதனை விளக்குகள் Search Lights வானில் எல்லாத் திசைகளிலும் தம் வெளிச்சத்தைப் பரப்புகின்றன. ஆகாயப்பீரங்கிகள் (Anti-air-craft guns) ஒவ்வொன்றும் எந்த நேரத்திலும் வெடி குண்டுகளைக் கிளப்ப எச்சரிக்கையாய் இருக்கின்றன. இவ்வளவும் ஊர்தியில் இருப்போர்களுக்குச் சிறிதேனும் தெரியாமலே நடக்கின்றன. இடர்ப்பாட்டைச் சற்றும் தெரிந்து கொள்ளாமலே ஊர்தி பட்டணத்துக்குள் வரவும், நாற்புறமும் இருந்து பீரங்கிகள் குண்டுகளைச் செலுத்தி ஒரு நொடிக்குள் அதனைத் தரைக்குக் கொண்டுவந்து விடுகின்றன.

வானவூர்திகளுக்குக் காலவேறுபாடுகளாலும் துன்பங்கள் நேரிடுகின்றன. திடீரென்று புயற்காற்று எழும்பினல் அவை பிழைத்துத்

திரும்புதல் கூடாமையாகும். பின்னும் தாம் எதிரி விமானங்களின்மேல் போடுகின்ற வெடிகுண்டுகள் தம் விமானத்துக்கு அண்மையில் வெடிக்க நேரிட்டால், அப்பொழுதுண்டாகும் ஆகாயத்தின் கலக்கத்தினால் தம் விமானம் தலைகீழாகத் திரும்ப நேரிடுகின்றது. இத்தகைய இடர்களிலிருந்து அவை தப்புதல் மிக அருமையாகும்.

இனி, "செப்பலின்" "எயிரோப்லேன்" ஆகிய இவைகளுக்கு அமைந்திருக்கும் ஏற்றத்தாழ்ச்சி இன்னதென்பதை ஆராய்வாம்.

செப்பலின் போன்ற வான் கப்பல்கள் மெதுவாய்த்தாம் போகக்கூடியவை. இவற்றின் மிகுந்த ஓட்டம் ஒரு மணி நேரத்திற்கு 55 அல்லது 60 மைல்; எயிரோப்லேன்கள் மணிக்கு 100 மைலுக்கு மிகுதியாகச் சொல்லக்கூடியவை.

எழும்பக் கூடிய உயரம் எயிரோப்லேன்களுக்குச் செப்பலின்களைவிடப் பன்மடங்கு மிகுதி. செப்பலின்கள் மேலேறிச்செல்லும் உயரம் 12,200 அடி; எயிரோப்லேன் மேலேறிச் செல்லும் உயரம் 26,000 அடியாகும்.

செப்பலின் வந்து இறங்குவதற்கு, அகலமான வெளியிடம் இன்றியமையாதது. அவைகளை வைத்திருக்கும் அறைகளில் இருந்து அவற்றை வெளியே கொண்டு வரும்பொழுதும் உள்ளே கொண்டுபோகும் பொழுதும் அவைகளுக்கு எளிதில் தீங்குநேரிட இடமுண்டு. எயிரோப்லேன்களுக்கு அத்தகைய தீங்குகள் நேரிடமாட்டா.

செப்பலின் செய்வதற்கு மிகுதியான பணம் செலவாகிறது ஒரு செப்பலினைச் செய்யக்கூடிய பணத்தினால் 50 எயிரோப்லேன்கள் செய்து கொள்ளலாம். மேலும் செப்பலின் செய்து முடிக்க எயிரோப்லேன்களைவிட மிகுதியான காலம் வேண்டியிருக்கிறது.

மழை புயற்காற்று முதலியவற்றின் கொடுமையைத் தடுக்கும் வன்மை செப்பலின்களுக்கில்லை.

செப்பலினை ஓட்டுவதற்கு நன்றாய்ப் பழக்கமுள்ளவர்கள் 30பேர் வேண்டும். எயிரோப்லேன் காணாது போகவோ, அல்லது எதிரி கையில் அகப்பட்டுக்கொள்ளவோ நேரிட்டால் ஒருவனே கேடுறுவன்; செப்பலின்களுக்கு அவ்வித இடர் எற்பட்டால் கப்பல் ஒன்றுக்கு 30 பேர் கேடுறுவர்.

இங்குக் கூறியவைகளில் செப்பலின்கள் எயிரோப்லேன்களை விட மேன்மை குறைந்தன; ஆயினும் இரண்டு முறைகளில் எயிரோப்லேன்கள் செப்பலின்களுக்கு நிகராகா. எயிரோப்லேன் தாங்கக் கூடிய சுமை மிகச் சிறிது. செப்பலின்கள் அதைவிட எத்தனையோ மடங்கு மிகுதியான சுமையைக் கொண்டு செல்லும் வன்மையுடையன. இரண்டாவதாக, எயிரோப்லேன் ஓட்டுகின்ற மாலுமிகள் 4 அல்லது 5 மணி நேரத்துக்கு மிகுதியாக வானில் இருத்தல் அரிது செப்பலின் மாலுமிகளோ எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் இருக்கமுடியும்.

போரிலே பயன்படுகின்ற ஆயுதங்களும் மற்றவைகளும் போரொழிந்த அமைதிக் காலத்தில் முற்றிலும் பயனிலவாய் முடிகின்றன. அண்மையில் நடைபெற்ற ஐரோப்பியப் பெரும் போரிலே பயன்பட்ட "ஜாக் ஜான்ஸன்" என்ற பட்டப்பெயர் பெற்ற குண்டுகள்; 16 அங்குல வாயகலமும், 20 அல்லது 25 மைல் தொலைவுக்கு வெடிகுண்டுகளை எறியும் வன்மையும் பொருந்திய Howitzer என்னும் மிகப் பெரிய பீரங்கிகள்; நிமிட நேரத்துக்கு நூறு இரு நூறு குண்டுகளைச் சரமாரியாகக் கிளப்பக்கூடிய "மெஷின் கன்" என்ற பீரங்கிகள்; ஒரு படை முழுமையும் நச்சுக் காற்றினால் ஒரு நொடிக்குள் மூழ்கியிறக்கச் செய்கிற "பாம்" என்னும் குண்டுகள்; எவருமறியாதபடி திடீரென்று கப்பல்களை மூழ்கச்செய்யவல்ல Submarines என்னும் நீர் மூழ்கித்தோணிகள்; இன்னும் மிக வல்லமை பொருந்திய பீரங்கிகளைத் தம்முட் புறத்துக் கொண்டதும், எஃகினால் செய்யப்பட்ட கவசமணிந்திருப்பதால் எதிரியின் குண்டுகளுக்குச் சற்றேனும் அஞ்ச வேண்டாததும், நெகிழ்ச்சி பொருந்திய வண்டிச்சக்கரங்களை யுடையதால் கல் மண் மணல் சேற்றுநிலம் முதலிய எதிலும் சற்றும் தடைபடாமல் ஊர்ந்து சென்று எதிரியின் படையை அடியோடு தொலைக்கும் வலிமை பொருந்தியதுமான (Tanks) டாங்க்ஸ் என்னும் பெயரையு முடைய மிகப் புதுமையான இயந்திரங்கள், ஆகிய இவைகளும் இவைபோன்ற பிறவும் போர் நின்று அமைதி வரும்பொழுது எவ்விதத்திலும் பயனிலவாய்ப் போகின்றன.

ஆனால், வானவூர்திகள் சண்டையிற் போலவே சமாதான காலத்திலும் பயன்படக்கூடியவையாக இருக்கின்றன. தேசயாத்திரை செய்ய இவற்றைவிடப் பயனுடையவூர்தி அமைதல் அரிது

எவ்வளவு நன்ருய்ச் செய்யப்பட்ட மோட்டார் வண்டிகளும் மற்ற வாகனங்களும் இவைக்கு ஈடாகா. இவைகள் யாதொரு சத்தமோ அசைவோ எற்படாமல் உடல் நலத்துக்கு மிகவும் எற்றதாக இருக்கும். வானில் பறந்து செல்லும் பொழுது உடல் உள்ளம் இவைகளுக்கு இதுகாறும் தெரியாத நலமும் ஊக்கமும் தாக் கூடியவை. பின்னும் மேடு, பள்ளம், கடல், மலை, காடு, மணல் வெளி என்ற எவ்விதமான தடைகளுக்கும் அஞ்சவேண்டியதாக இராது.

ஆகவே, வான்வழியாக தேசயாத்திரை செய்வது கைகூடக் கூடியது. இப்பொழுது இரயில் கம்பனி, புகைக்கப்பல் கம்பனி மோட்டார் கம்பனி முதலியவைகள் இருப்பதுபோல ஆகாயவிமானக் கம்பனிகள் எற்பட்டிருக்கின்றன. இந்தியாவில் இருந்து ஐரோப்பாவுக்கோ, ஆபிரிக்காவுக்கோ, அல்லது இதர கண்டங்களுக்கோ ஆகாயவிமானக் கம்பனிகளின் உதவியால் நாம் போகக் கூடியதாக விருக்கிறது.

பின்னும், கப்பல் இரயில் முதலியவைகளில் இப்பொழுது வருகின்ற தபாற் கட்டுக்கள் வான் வழியாயும் வருகின்றன.

மோட்டாரைவிட மிகவேகமாக இருப்பதினுலும், மோட்டாருக்கு எற்படும் பலவிதமான செலவுகள் இதற்கு அவசியமில்லையாதலாலும், வான வூர்திகள் வாணிகத்துக்கு எற்ற வாகனங்களுமாம்.

இன்னும் குதிரைப் பந்தயம், மோட்டார்ப் பந்தயம் என்ற பலவகைப் பந்தயங்கள் நடைபெறுவதுபோல வானவூர்திப் பந்தயங்களும் நடைபெறுகின்றன.

இப்படி வான்வழிப்போக்குப் பொதுவாக எற்படவே, ஆகாயச் சட்டங்களும் ஆகாயப் போலீசார்களும் இன்றியமையாதன ஆகும்.

போரில்லாக் காலங்களில் மேற்குறித்தபடி இனிமேல் ஆகாய விமானங்கள் நன்ருய் விருத்தி பண்ணப்பட்ட பிறகு போரானது எப்படியிருக்கும் என்பது நினைத்தற்கும் முடியாததாகும். போர் எல்லை (War zone) இது என்று வரையறுத்துக் கூறமுடியாதபடி பட்டணங்கள் கிராமங்கள் ஒவ்வொன்றும் எதிரிகளின் குண்டுகளுக்கு எப்பொழுதும் அஞ்சியே இருக்கவேண்டியதாக இருக்கும். இன்ன இடத்தில் என்றபாடில்லாமல் எவ்விடத்தும் போர்

நடக்கக்கூடியதாக இருக்கும். ஆகவே போர் இதுகாறும் இருந்ததைவிடப் பன்மடங்கு கொடியதாகவும் அஞ்சத் தகுந்ததாகவும் முடியும். அப்படி முடிவதினால் போர் செய்வதற்கே உடம்படாது ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் தங்கள் தர்க்கங்களைத் தண்டமொழிந்த மற்ற முறைகளால் முடித்துக்கொள்ளத் தலைப்படுவார்கள். அப்படிச் சண்டையே இல்லாது உலகம் முற்றும் அமைதியோடு இருக்கத் தலைப்படுமானால் அதைவிடப் பெரிய நன்மையும் விரும்புதற்குண்டோ? 'தமிழன்'

பதிற்றுப்பத்து விளக்கம்

[பண்டிதர் A. நடராஜபிள்ளையவர்கள்]

(எஅ-ம் பக்கத் தொடர்ச்சி)

(4) சான்றோர் மெய்ம்மறை

(கச) பாட்டு

நிலநீர் வளிவிசும் பென்ற நான்கி
னளப்பரி யையே
நாள்கோ டிங்கண் ஞாயிறு கனையழ
லைந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை
போர்தலை மிகுத்த வீரைம் பதின்மரொடு
துப்புத்துறை போகிய துணிவுடை யாண்மை
யக்குர னனைய கைவண் மையையே
யமர்கடந்து மலைந்த தும்பைப் பகைவர்
போர்பீ டழித்த செருப்புகன் முன்ப!
கூற்றுவெகுண்டு வரினு மாற்றுமாற் றலையே
யெழுமுடி கெழீஇய திருஞெம ரகலத்து
நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை
வானுறை மகளிர் நலனிகல் கொள்ளும்
வயங்கிழை கரந்த வண்டுபடு கதுப்பி
னொடுங்கீ ரோதிக் கொடுங்குழை கணவ!
பல்களிற்றுத் தொழுதியொடு வெல்கொடி நுடங்கும்
படையே ருழவ! பாடினி வேந்தே!
இலங்குமணி மிடைந்த பொலங்கலத் திகிரிக்

கடலக வரைப்பினிப் பொழின்முழு தாண்டநின்
முன்றிணை முதல்வர் போல நின்றுநீ
கெடாஅ நல்லிசை நிலைஇத்
தவாஅ லியரோவிவ் வுலகமோ டுடனே.

கொண்டு கூட்டு

[13 வானுறை மகளிர் நலனிகல் கொள்ளும்
வயங்கிழை கரந்த வண்டுபடு 14] [15 ஒடுங்கி
ரோதி 15] [14 கதுப்பின் 14] [15 கொடுங்குழை கணவ!
பல்களிற்றுத் தொழுதியொடு வெல்கொடி நுடங்கும்
படையே றுழவ! பாடினி வேந்தே! 17]
[8 அமர்கடந்து (b) தும்பை (a) மலைந்த (c) பகைவர்
போர்பீ டழித்த செருப்புகன் முன்ப!
கூற்றுவெகுண்டு வரினு மாற்றுமாற் றலையே
யெழுமுடி கெழீஇய (b) ஞெம ரகலத்து (a) திரு
நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை 12]
[1 நிலநீர் வளிவிசும் பென்ற நான்கி
னளப்பரி யையே
நாள்கோ டிங்கண் ஞாயிறு கனையழ
லைந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை
போர்தலை மிகுத்த வீரைம் பதின்மரொடு
துப்புத்துறை போகிய துணிவுடை யாண்மை
யக்குரா னனைய கைவண் மையையே 7]
[18 இலங்குமணி மிடைந்த பொலங்கலத் திகிரிக்
கடலக வரைப்பினிப் பொழின்முழு தாண்டநின்
(b) திணை (a) முன் (c) முதல்வர் போல, (b) நீ (a) நின்று
(c) கெடாஅ நல்லிசை நிலைஇ
(b) இவ்வுலகமோ டுடனே (a) தவாஅ லியரோ 22]

பதவுரை

வான் - தெய்வ உலகில், உறை - வாழுகின்ற, மகளிர்-தேவ மாதர்கள், நலன் - அழகில், இகல் கொள்ளும் - அவளை ஒப்பாபவள் யானே; அவளை ஒப்பாபவள் யானே என்று மாறுகொள்ளும்படியான, வயங்கு இழை - பிரகாசமான ஆபரணங்களை,

காந்த - மறைத்துக்கொண்டு சூழ்ந்த, வண்டு - வண்டுகள் படு- மொய்க்கும்படியான, ஒடுங்கு - சுருளோடு, ஈர் - நெய்ப்பினை- யுடைய, ஓதி - பெண்மயிராகிய, கதுப்பின் - கூந்தலோடுகூடிய, கொடுங்குழை - வலிய காதணிகளையுடைய மங்கையின், கணவ - நாயகனே, பல்களிற்றுத் தொழுதி ஒடு - பலவாகிய யானைக்கூட் டங்களுடன், வெல்கொடி - முன்கிடைத்த வெற்றி காரணமாகக் கொண்ட கொடிகள், நுடங்கும் - காற்றில் அலைந்தாடும்படியான, படை - சேனைகளாகிய, ஏர் - உழவுகருவிகளையுடைய, உழுவ - விவசாயியே, பாடினி-பாடிப் புகழும் விறலியர்களை யாதரிக்கும், வேந்தே-அரசனே, அமர்கடந்து-பல போர்களில் வெற்றிபெற்று, தும்பைமலைந்த - வெற்றிமாலையணிந்த, பகைவர்-எதிரிகளுடைய, போர்பீடு - போர்ப்பெருமையினை, அழித்த - கெடுத்த, செரு - போரில், புகல் - வெற்றியுறுகின்ற, முன்ப - வலிமை மிக்கவனே, கூற்று - இயமன், வெகுண்டு - கோபித்து, வரினும்-போர்செய்ய வந்தாலும், ஆற்றும்-எதிர்த்து நின்று வெற்றிகொள்ளும்படியான, ஆற்றலை - நீ வலிமையுடையவனுவாய், (ஆகையால்), எழுமுடி , ஏழு அரசர்களை வென்று அவர்களுடைய ஏழு முடிகளாலும் செய்த எழுமுடிமாலையானது, கெழீஇய - பொருந்திய, ஞெமர் அகலத்து - பரந்த மார்பில், திரு - வீரலட்சுமியினை, நோன்புரி - நிலைத்து நிற்கச்செய்யும்படியான, தடக்கை - நீண்ட கைகளோ டும், சான்றோர் - போரில் அமைதியாய்நின்று போர்புரியும் வீரர் கட்கு, மெய்ம்மறை - மெய்புகுந்துமறையும் கவசம்போல் போரில் வலியவனுய் முன்னிற்கின்றனை, நிலம் - பூமி, நீர் - ஜலம், வளி - காற்று, விசும்பு - ஆகாயம், என்ற - என்று சொல்லப்பட்ட, நான்கின் - நான்குபூதங்களைப்போன்று, அளப்பு அரியை - அள விடப்படாத பெருமையினை யுடையவனுவாய், நாள் - நட்சத்திரங் களும், கோள் - (செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி என்ற ஐந்து) கிரகங்களும், திங்கள் - சந்திரனும், ஞாயிறு - சூரியனும், கனை - ஒலித்தெரிகின்ற, அழல் - அக்கினியும் (ஆகிய) ஐந்து-ஐந்து வகையான ஒளியுடைப் பொருள்களும், ஒருங்குபுணர்ந்த - ஒன் ருய்க் கூடியதாலுண்டாகிய, விளக்கத்து-பிரகாசத்தை, அனையை- ஒப்பாவாய், போர்-சண்டையில், தலைமிகுத்த-தலையிட்டுக்கொண்ட, ஈரைம்பதின்மரொடு - துரியோதனுதியர் நூற்றுவரோடுகூடி, துப்பு - வலிமையில், துறைபோய - பேர்வாங்கிய, துணி

வுடை - துணிகரமிக்க, ஆண்மை - ஆண்தன்மையோடுகூடிய, அக்குரன் - இடையெழுவள்ளல்களில் ஒருவனாகிய அக்குரூரனை, அனைய-ஒத்த, கைவண்மையை-கொடையாளியாவாய், இலங்கு - விளங்குகின்ற, மணி - இரத்தினங்கள், மிடைந்த - கலந்துவைக்கப்பட்ட, பொலம் கலம் - பொன்னாபரணங்களையும், திகிரி - ஆஞ்ஞாசக்கரத்தையும், (கொண்டு), கடல் அகம்-கடலாற் சூழப்பட்ட, வரைப்பின் - பூமண்டலத்திலே, இப்பொழில் - இத்தமிழ்நாடு, முழுது ஆண்ட - முழுவதையும் ஆட்சிசெய்த, நின்-உன்னுடைய, திணை - குடியிற்பிறந்த, முன் முதல்வர்போல - முன்னோர்களைப் போல், நீ நின்று - நீ இருந்து, கெடா - நெடுங்காலமாய் அழியாது வருகின்ற, நல் இசை - நல்ல புகழை, நிலீஇ - நிறுத்தி, இவ் உலகமோடு உடனே - இவ்வுலகத்தோடுகூட, தவாலியரோ - கெடாது வாழ்வாயாக!

விருத்தியுரை

பூதங்கள் ஐந்தில் நான்கினைமட்டுங்கொண்டு தீயினை விலக்கியது, பின்னர் விளக்கத்திற்கு உவமையாகக் கொள்ளவேண்டியது கருதியாம். 'கோள்,' என்று பொதுப்படக்கூறியிருப்பினும், விளக்கமில்லா இராகு கேதுக்களையும், சிறப்புப்பற்றிப் பின்னர் எடுத்துச்சொல்லப்பட்ட திங்கள் ஞாயிறுகளையும் விலக்கி மிகுந்துநின்ற ஐந்தும் கொள்ளப்பட்டன. இங்கு, சேர மன்னனின் வீரத்தை, 'வீரர்கட்கு மெய்புகு கவசம் போல்வான்,' என்று புகழ்ந்த அருமைகொண்டு இப்பாட்டிற்குச் சான்றோர் மெய்ம்மறை எனப் பெயர் கொடுக்கப்பட்டது. இப்பாட்டால் சேரனது பலவிதமான குணங்களும், ஆற்றலும் எடுத்துக்கூறப்பட்டன; நல்லரசனது நீண்டகால வாழ்க்கை நாட்டுக்கு இன்றியமையாதவொன்றாகலின் அவன் வாழ்த்துக்கூறப்பெற்றான். கெழீஇய, நிலீஇ, சொல்லிசையளபெடைகள். கெடாஅ - இசைநிறையளபெடை. தவாலியர் - வியங்கோள் வினைமுற்று. ஓ - அசைநிலை.

பொழிப்புரை

தெய்வ உலகில்வாழுகின்ற தேவமாதர்கள், 'அழகில்' அவளை ஒப்பாபவள் யானே, அவளை ஒப்பாபவள் யானே என்று மாறுகொள்ளும்படியான, ஒளியுடைய ஆபரணங்களை மறைத்துக்கொண்டு சூழ்ந்த வண்டுகள் மொய்க்கும்படியான சுருண்ட நெய்ப்பினையுடைய பெண்மயிராகிய கூந்தலோடு கூடிய வலிய காதணிகளை

யுடைய மங்கையின் கணவனே! பலவாகிய யானைக்கூட்டங்களு டன் முன்கிடைத்த வெற்றிகாரணமாகக் கொண்ட கொடிகள் காற்றில் அலைந்தாடும்படியான சேனைகளாகிய உழவு கருவிகளைக் கொண்ட விவசாயியே! பாடிப் புகழும் விறலியர்களை ஆதரிக்கும் அரசனே! பல போர்களில் வெற்றிபெற்று, வெற்றிமாலை யணிந்த எதிரிகளுடைய போர்ப் பெருமையினைக் கெடுத்த போரில் வெற்றி யுறுகின்ற வலிமை மிக்கவனே! இயமன் கோபித்துப்போர்செய்ய வந்தாலும், எதிர்த்து நின்று வெற்றிகொள்ளும்படியான வலிமை யினை நீ உடையவனுவாய். ஆகையால், எழு அரசர்களை வென்று அவர்களுடைய எழு முடிகளானுஞ் செய்த எழுமுடிமாலையானது பொருந்திய பரந்த மார்பில் வீரலட்சுமியினை நிலைத்து நிற்கச்செய் யும்படியான நீண்ட கைகளோடும், போரில் அமைதியாய் நின்று போர்புரியும் வீரர்கட்கு மெய்யானது புகுந்து மறையும் கவசம் போல் போரில் வலியவனுய் முன்னிற்கின்றனை.

நீ பூமி, ஜலம், காற்று, ஆகாயம் என்றுசொல்லப்பட்ட நான்கு பூதங்களைப்போன்று அளவிடப்படாத பெருமையையுடையவனு வாய். நட்சத்திரங்களும், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்ற ஐந்து கிரகங்களும், சந்திரனும், சூரியனும், ஒலித் தெரிகின்ற அக்கினியுமாகிய ஐந்துவகை ஒளியுடைப் பொருள் களும் ஒன்ருய்க் கூடியதாலுண்டாகிய பிரகாசத்தை யொப்பா வாய். போரில் தலையிட்டுக்கொண்ட துரியோதனுதியர் நூற்று வரோடுகூடி, வலிமையிற் பேர்வாங்கிய துணிகரமிக்க ஆண்தன் மையோடுகூடிய இடையெழு வள்ளல்களி லொருவனுகிய அக்கு ரூரனையொத்த கொடையாளியாவாய். விளங்குகின்ற இரத்தினங் கள் பதிக்கப்பட்ட பொன்னுபரணங்களையும், ஆஞ்ஞா சக்கிரத்தை யும் கொண்டு, கடலாற் சூழப்பட்ட பூமண்டலத்திலேயுள்ள இத் தமிழ்நாடு முழுவதையும் ஆட்சிசெய்த நினது குடியிற் பிறந்த முன்னோர்களைப்போல் நீ இருந்து, நெடுங்காலமாய் அழியாது வருகின்ற நல்ல புகழை நிறுத்தி இவ் வுலகத்தோடுகூடக் கெடாது வாழ்வாயாக!

புதியநடை

தேவவுலகில் வாழுந் தேவ மகளிர் பலரும், 'அழகில் அவளை யொப்பவள் யானே,' என்று மாறு கொள்ளும்படியான வனப் பினையுள்ள மங்கையின் கணவனே! ஒளியினையுடைய நகைகளை

மறைத்துக்கொண்டு சூழும் வண்டுகள் மொய்க்கும்படியான சுருண்டு நீண்டு செப்பமினைக்கொண்ட கூந்தலழகியின் கொண் கனே! வலிய காதணிகளை யணிந்த மடவாளின் மன்னனே! பல வாகிய யானைக் கூட்டங்களுடன் முன்கிடைத்த வெற்றி காரணமா கக்கொண்ட கொடிகள் காற்றில் அலைந்தாடுதலையுடைய படைக ளாகிய உழவு கருவிகளைக்கொண்ட ஒரு பெரும் உழவா ளியே! பாடிப் புகழும் விறலியர்களைக் காக்கும் பண்புடைய வேந்தனே! பல போர்களில் வெற்றியுற்று, வெற்றிமாலையணிந்த எதிரிகளுடைய போர்ப் பெருமையினைக் கெடுத்த போரில்வெற்றி யுறுகின்ற வலிமை மிக்க மாபெருஞ் சோனே! நீ, கூற்றுவன் கோபித்துப் போர்செய்யவந்தாலும் அஞ்சாது, எதிர்த்து நின்று வெற்றிகொள்ளும் ஆண்மையினை உடையவனுவாய். ஆகலின், எழு அரசர்களை வென்று, அவர்களுடைய எழு முடிகளாலுஞ் செய்யப் பட்ட எழுமுடிமாலையானது பொருந்திய பரந்த மார்பினையுடை யாய். வீரலட்சுமியினை அம்மார்பில் நிலைத்து நிற்கச்செய்த நீண்ட கைகள் உனக்குண்டு. நீ, போரில் அமைதியாய் நின்று போர்புரி யும் வீரர்க்கு மெய்யானது புகுந்து மறையும் கவசம்போல், போரில் வலியையாய் முன்னிற்கின்றனை.

மேலும், நீ நிலம், நீர், காற்று, விசும்பு என்று கூறப்படும் நான்கு பூதங்களைப் போன்று அளவிடப்படாத பெருமையினை யுடையவனுவாய். விண்மீன்களும், செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி என்ற ஐந்து கோள்களும், திங்களும், ஞாயிறும், ஒலித்தெரிகின்ற தீயுமாகிய ஐந்துவகை ஒளியுடைப் பொருள் களும் ஒன்ருய்க் கூடியதாலுண்டாகிய ஒளியினை யொப்பாவாய். போரிற் புகுந்துநின்ற துரியோதனுகியர் நூற்றுவரோடு கூடி வலிமையிற் பேர்வாங்கியவனும், துணிவுமிக்க ஆண் தன்மை யோடு கூடியவனும் இடையெழு வள்ளல்களிலொருவனுமாகிய அக்குரூரனை ஒத்த கொடையாளியாவாய். விளங்குகின்ற மணி கள் பதிக்கப்பட்ட பொன்னகைகளையும், ஆஞ்ஞாசக்கரத்தை யும் கொண்டுளாய். கடலாற்சூழப்பட்ட பூமண்டலத்திலே யுள்ள இத் தமிழ்நாடு முழுவதையும் ஆட்சி செய்தாய். நினது குடியிற் பிறந்த உனது முன்னேர்களைப்போல் நீயும் நெடுங்கால மிருந்து, அழியாது வருகின்ற நல்ல புகழை இவ்வுலகத்தில் நிறுத்தி, அதனேடு கூடக் கெடாது வாழ்வாயாக! (தொடரும்)

தமிழ் மொழியின் ஒலிகளும் எழுத்தும்

[ஈப்போ. திரு. தியாகராயன் அவர்கள்]

The Order of Vowels

உயிரின் வரிசை அமைப்பு

(௪௬-வது பக்கத் தொடர்ச்சி)

ஒலியின் பிறப்பென்னும் பகுதியில் கூறியவாறு, இவ்வோசை உச்சரிப்பிற்கு ஆதாரமான காற்று வாயின் வழி தடங்கலின்றி வெளியே செல்வது. எனவே இவ்வகர ஒலியை முதல் ஒலியாகவும், அவ்வொலியைக் குறிக்குமெழுத்தை முதல் எழுத்தாகவும் அமைக்கப்பட்டது.

இகரமானது ஒலிக்குங்கால், அகர ஒலியில் பிறந்து, (அப்பொழுது வாயின் அடியில் படுத்திருந்த அடி நாக்கு மேற்பற்களின் விளிம்பில் ஒற்றி வழியை அடைப்பதால்) குறுகிய வழியில் வெளியிடுவதால் இவ்வொலியும், அதைக் குறிக்குமெழுத்தும் இரண்டாவதாக வைக்கப்பட்டது. உகரமானது முற்கூறியவாறு பிறந்து, வழியின் இறுதியைக் குவிக்க, அதாவது உதடுகளைக் குவிக்க, உண்டாகும் ஒலி; எனவே இவ்வொலியும் இவ்வெழுத்தும் மூன்றாவதாயிற்று.

இவ்வெழுத்துக்கள் வழியின் அடி இடை கடையின் வேற்றுமையால் வேற்றுமைப்படுவதால் முறையே முதல் இரண்டு மூன்றென நின்றன. இவ்வெழுத்துக்கள் உயிருக்கு முதல் எழுத்துக்களாம். மேற்கூறியதுபோல் எகரம் அகர ஒலியில் பாதியும், இகர ஒலியில் பாதியும் இணைத்தொலிப்பதால் இவ்வெழுத்து முதல் மூன்றெழுத்துக்குப் பிறகு வைக்கப்பட்டது.

ஐகாரம் முதலீரெழுத்துக்களின் முழுப் புணர்ச்சியால் வருவதால் (conjunct vowel) எகாரத்திற்குப் பின் வந்தது.

ஒகரம் உகரத்தின் வேற்றுமை; எனவே முதலீரெழுத்தின் இணையையும், புணர்ச்சியையும் கூறியபிறகு, மூன்றாவதாகிய உகரத்தின் வேற்றுமை இங்கே வைக்கப்பட்டது.

ஔகாரம் முதலும், மூன்றாவதும் புணர்ந்தொலிப்பதால் இவ்வெழுத்து உகரத்தின் வேற்றுமைக்குப் பிறகு நின்று உயிர்த் தொகுதியின் கடைசியில் நிறுவப்பட்டது.

இவ்வாறு இவ்வெழுத்துக்கள் அகரத்தை அடிப்படையாக உடையனவே யாயினும், வழியாலும், இணையாலும், வேற்றுமையாலும், புணர்ச்சியாலும், வேற்றுமைப் பட்டனவால் அவ்வேற்றுமைக் கேற்க முறை முறையே வைக்கப்பட்டது தமிழ் எழுத்தின் சிறந்த அமைப்பை நன்கு விளக்கும்.

இனி, இக்காலத்தில் மிகப்பரவிவரும் ஆங்கில மொழியின் உயிரெழுத்துக்களின் தன்மை, வகை, தொகை முதலியவற்றையும், வேண்டியவரையில் இதர மொழிகளையும் ஆராய்ந்து நம் மொழியின் (முற்கூறிய) தன்மையுடன் சீர்தூக்கி ஒப்புயர்வை எடுத்துக்காட்டின் தமிழின் சிறப்பு நன்கு விளங்கும்.

ஆங்கிலம்

நான் அறிந்த இதரமொழி ஆங்கிலமொன்றே யாகையால் இம்மொழியின் உயிரெழுத்துக்களின் தன்மையை விரிவாக எடுத்துரைக்கிறேன்.

ஆங்கிலத்தில் A, E, I, O, U என ஐந்துயிர்களும், W, Y என இரண்டு அரை உயிர்களும் (Semivowels) உள்ளன.

எனினும் மேற்காட்டிய உயிர்களின் தலையில்—, ·, ··, ‿, ʌ, இக்குறிகளை எழுதி ஓர் எழுத்தே பல்வேறு வகையாக ஒலிக்கப் படுகிறது.

இத்தகை, A என்னும் எழுத்தை எடுத்துரைத்தலால் 8 உச்சரிப்புகளும், படுத்துரைத்தலால் 4 உச்சரிப்புகளும் கொடுக்கப் பட்டு ஆக 12 ஒலிகள் உள்ளன. ஆனால் am, ale, all, arm. இந் நான்கு சொற்களில் உள்ள aயின் உச்சரிப்புகளே முக்கியம்.

E என்னும் எழுத்திற்கு மேற்கூறியவாறே 11 உச்சரிப்புகள் உண்டெனினும் Eve, End, There, English, என்னும் சொற்களில் E க்கு உள்ள உச்சரிப்புகளே முக்கியம்.

I என்னும் எழுத்திற்கு 6 ஒலிகள் காட்டினரே யாயினும், Ice, Ill, Machine என்னும் சொற்களில் உள்ள மூன்று உச்சரிப்புகளே முக்கியம்.

O என்னும் எழுத்திற்கு 13 உச்சரிப்புகள் உளவாயினும், Old, Orb, Son, Work என்னும் வார்த்தைகளில் உள்ள நான்கொலிகளே முக்கியம்.

U என்னும் எழுத்திற்கு 9 ஒலி கூறினும் Use, Rule, Pull, Up என்னும் சொற்களில் U க்கு உள்ள உச்சரிப்புகளே முக்கியமாகும்.

எனவே இவ்வைந்துயிர்களுக்கு 51 உச்சரிப்புகள் காட்டி அவற்றுள் 19 முக்கியமெனக் கூறப்படுகிறது.

இதுவும் போதாதென இணையெழுத்துக்களெனவும் (Diphthongs) ஈரெழுத்துக்களெனவும் (Digraphs) மூன்றெழுத்துக்களெனவும் (Triphthongs) பிரிவினைகள் செய்து உயிரொலிகள் உச்சரிக்கப்படுகிறது இவ்வாறு உயிரொலிகளைக் குறிக்க 24 ஈரெழுத்துக்களும் மூவெழுத்துக்களும் உள்ளன.

இதன் விரிவை Unabridged Webster's Dictionary-யில் Elements of Spoken English என்னும் பகுதியில் காண்க.

முற்கூறியவைகளிலிருந்து, ஆங்கிலத்தில் ஓரெழுத்திற்கு பல ஒலியென்பது நன்கு விளங்கும். அன்றியும் ஓரொலிக்குப் பல எழுத்துக்களுமுண்டு. உதாரணமாக, ஊகார ஓசையை அடியில் கண்ட பல எழுத்துக்கள் குறிக்கும்:—

Rude, Group, Drew, Fruit, Manoeuvre, Who, Mood, Canoe. மேலும் ஈரெழுத்துக்கள் ஓரொலியைக் குறிப்பதன்றி, அதே ஈரெழுத்துகள் பல ஒலியையும் குறிக்கும்; (உ - ம்) Hoe (ஓ) Shoe (ஊ) Boot (ஊ) Flood (அ) Foot (உ)

ஓரொலிக்கு ஓரெழுத்தின்றித் தாறுமாறாய் மனம் போனபடி நடப்பது ஆங்கிலத்திற்குப் பெருங்குறை (Defect). இதைப் பின்னால் விவரித்துக் காட்டுகிறேன்.

நிற்க, முற்கூறியதுபோல் இவ்வுயிர்களுக்கு 19 ஒலிகளே முக்கியம். சேம்பர்ஸ் அகராதி யியற்றியோரும் 19 ஒலியே உயிருக்குடையதென்றார். எனவே இப்பத்தொன்பதொலிகளும் தமிழில் உளதோவென ஆராய்வோம்.

நெ.	வெப்ஸ்டர் அகராதியின்படி உயிரொலிகள்.	ஏற்ற தமிழ் உயிரெழுத்துக்கள்.	சேம்பர்ஸ் அகராதியின்படி உயிரொலிகள்.
1	**Am**	குற்றியலிகரம்	**Lad**
2	**Ale**	ஏ	**Fate**
3	**Far**	ஆ	**Arm**
4	**All**	...	...
5	**End**	எ	**Led**
6	**Eve**	ஈ	**Me**
7	**There**	ஏ	**Her**
8	**English**	இ	**Lid**
9	**Ice**	ஐ	**Mine**
10	**Ill**	இ	...
11	**Machine**	ஈ	...
12	**Old**	ஓ	**Mote**
13	**Orb**	ஆ	**Lot**
14	**Son**	அ	...
15	**Work**	ஒ	...
16	**Use**	யூ	**Mute**
17	**Rule**	ஊ	...
18	**Pull**	உ	**Book**
19	**Up**	அ	**But**
20	**Now**	ஔ	**Cow**
21			**Boy**

தொல்காப்பியம் பதிப்பித்த **K.** சுப்பிரமணியபிள்ளை அவர்கள் ஆங்கில மொழிகளாகிய **Sad, Mad, Am** முதலியவைகளில் உள்ள **A** யின் ஒலி குற்றியலிகர மெனக் கூறியுள்ளார். அதையே முன் அட்டவணையில் காட்டினேன்.

A என்னும் Fate, Name, என்னும் வார்த்தைகளில் உள்ள ஏகார ஒலி மற்ற எம்மொழியிலும் கிடையாது.

German, Spanish, Hungarian மொழிகளில் இவ்வெழுத்திற்கு அகர ஆகார ஒலிகளே உண்டு.

"A in most languages other than English never has a sound like that in the English words Fate or Name, but is usually like the A in Far, or in Artistic as in Italian, German & Spanish, or is like the A in Fast. In Hungarian A is like A in Father' (Websters' Dictionary page 2376, Section II).

அவ்வட்டவணையில் 3-வது சொல்லாகிய **Far** என்பது ஆகாரத்தினுடன் கொஞ்சம் ஒகார ஒலிகொடுக்க இயலுமெனத் தோற்றுகிறது. 7-வது சொல்லாகிய **There** என்பது இகார எகாரங்களுக்கிடையே யுள்ள ஒலியோவென நினைக்கிறேன். எவ்வாருயினும் மேற்கூறிய ஆங்கில உயிரொலிகள் தமிழ் உயிர்களால் குறிக்கப்படுவது நன்கு விளங்கும்.

ஆனல் ஆங்கிலத்தின் தாறுமாருன வழியில் நடவாமல் தமிழ் ஓரொலிக்கு ஓரெழுத்தென்னும் விதியைமாருது சிறந்த ஒழுக்கமுடையது. இவ்விதியைச் சுருக்கெழுத்தென்னும் **Short Hand** லும் அல்லது ஒலியெழுத்தென்னும் **Phonography** யிலும் வழுவற வமைத்தே நடைபெறுகிறது. ஐரோப்பாவில் **International Language** எனும் **Esperanto** வாகிய நூதன மொழியிலும் இவ்விதி அநுசரிக்கப்படுகிறது. அன்றியும் **Esperanto** விலும் உயிர்களுக்குத் தமிழ் உயிர் போன்ற உச்சரிப்புகளே உண்டு.

A as in Father	ஆ
E as in Bet	எ
I as in Bit	இ
U as in Boot	ஊ
O as in Not	அகாரத்திற்கும் ஒகாரத்திற்கும் இடையொலி.

(தொடரும்.)

கோட்புலி நாயனுர்

ஒருவரா இருவரா?

[திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்.]

திருநாட்டியத்தான்குடி என்ற ஊர் திருவாரூரின் அருகே இருக்கிறது. அங்கே வேளாளர் குலத்திலே கோட்புலி என்பார் ஒருவர் தோன்றினர். அவர் அரசருக்கு அமைச்சுரிமையும் சேனைத்தலைமையும் பூண்டு தமது கடமைகளை இனிது நடாத்தி வந்தார். அவர் ஒரு சமயம் வடபுலத்துப் பகை மன்னரோடு போரிட்டு அவர்களைப் புறமுதுகு காட்டி ஓடும்படி வெருட்டி வெற்றி பெற்ருர். அவருக்கு அரசர் "சென்னி" என்ற பட்டம் தந்து போற்றிப் புகழ்ந்தார்.

கோட்புலியாருக்கு இரண்டு பெண்கள். ஒருவர் பெயர் சிங்கடியார், மற்ருெருவர் பெயர் வனப்பகையார். அவர்கள் இருவரும் அழகிற் சிறந்தவராய், நல்லொழுக்க முடையவராய், ஒப்பற்ற சிவபத்தி யுடையவராய்த் திகழ்வாராயினர்.

இக்காளிலேயே தம்பிரான் ருேழராகிய சுந்தரமூர்த்தி நாயனுர் திருவாரூரிலே பரவையா ரோடு இல்லற நடத்தி இனிதிருந்தார். அவர் பொருட்டுக் குண்டையூர்க் கிழவர் வேண்ட இறைவர் தந்தருளிய நென்மலையை அள்ளிவர ஆளில்லாமல் சுந்தரர் திருக் கோளிலி என்ற நகரை யடைந்து.

'நீள நினைந்து அடியேன் உமை நித்தலும் கைதொழுவேன்
வாளனகண் மடவாள் அவள் வாடிவருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச் சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே.'

என்று புகழ்ந்து பதிகம் பாடினுர். இறைவர் அந்நெல் மலை முழுவதையும் அள்ளித் திருவாரூர்த் தெருக்களில் குவிக்கும்படி தமது கணங்களுக்குக் கட்டளையிட, அவை அவ்வாறே செய்தன. பரவையார் அவ்வூரவரனைவரும் தங்கள் தங்கள் வீட்டின் முன் னிருந்த நெல்லையெல்லாம் எடுத்துக்கொள்ளலாம் எனப் பறை யறைவித்து மகிழ்ந்து இறைவர் திருவருளை வியந்திருந்தார்.

இந்நிகழ்ச்சியின்பின் சில நாட்கள் கழிந்தன. கோட்புலி நாயனுர் தம்பிரான் ருேழரைக் கண்டு தமது ஊருக்குஅழைத்துவா

ஆவல்கொண்டு திருவாரூருக்கு வந்து அவரைப் பணிந்து தமது வேண்டுகோளையும் புகன்ருர். சுந்தாரும் அதற்கு இசைந்தனர். கோட்புலியார் தம்முடைய ஊருக்குப் போய், அதனைப் பலவித மாக அணிபெறச் செய்து, தமது நண்பர் வருகையை எதிர்பார்த் திருந்தார்.

சுந்தரர் திருநாட்டியத்தான்குடியை அணுகினர். கோட்புலி யார் அவரை எதிர்கொண்டழைத்து, வேண்டும் பணிவிடைகள் செய்து, திருவமுது செய்வித்து, தமது பெண்களிருவரையும் அவ ருடைய திருவடிகளில் பணிவித்து, அவரை நோக்கி "இப்பெண் களை அடிமையாகக் கொண்டருளவேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். சுந்தரர் அவர்கள் இருவரையும் தமது பெண்களாக ஏற்றருளித் தமது மடிமிசை வைத்து உச்சிமோந்து அவர்களுக்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் தந்தார். பின்னர், அவர் கோவிலுக்குச் சென்று "சேடார் பூங்குழற் சிங்கடியப்பன்" என்று தம்மைக் குறித்து, பதிகம் பாடினர். இங்ஙனமே அவர் பலவிடங்களிலும் பதிகம்பாடும் போதெல்லாம் தம்மை "சிங்கடி யப்பன்" என்றும், "வனப்பகை யப்பன்" என்றும் பாடி மகிழ்வா ராயினர்.

சுந்தரர் தமது நண்பராகிய கோட்புலியாரைத் திருநாட்டியத் தான்குடியில்தாம் அப்போது பாடிய திருப்பதிகத்தில்,

"கோட்புலி சென்னி குஞ்சிப் பூவாய் மலர்ந்த சேவடியாய்" என்றும்

"கூடாமன்னரைக் கூட்டத்து வென்றகொடிறன் கோட் புலி சென்னி" எனவும் புகழ்ந் தருளினர்.

இங்கே நாம் ஆராய வேண்டுவது, "அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய கோட்புலி நாயனர்தாம் சுந்தரரைத் தமது ஊருக்கு அழைத்துச் சென்ற கோட்புலி நாயனரா?" என்பது. இருவரும் திருநாட்டியத்தான் குடியினரே. இருவரும் வேளாளமரபினரே. இருவரும் அரசரிடம் சேனைத்தலைமை நடத் தியவரே. பகைப்புலத் தரசரைவென்று வெற்றிமாலை சூடினவரே அவர்களிருவரும். இங்ஙனமாக, "அவர்களிருவரும் என் ஒரு வராக இருத்தல் கூடாது?" என்ருல், "அடல் சூழ்ந்த வேல் நம்பி கோட் புலிக்கும் அடியேன்" என்று சுந்தரரால் திருத்தொண்டத்

தொகையில் புகழப்பெற்ற கோட்புலி நாயனருடைய வரலாற்றில் அவர் சுந்தரரைச் சந்தித்ததாக வள்ளல் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் கூறவில்லை. நம்பியாண்டார் நம்பிகளும் தாம் பாடியருளிய திருத்தொண்டர் திருவந்தாதியில் கோட்புலியார் சுந்தரர் காலத்தவரென்று கூறினரில்லை. மேலும் பல பதிகங்களின் திருக்கடைக் காப்புக்களில் சுந்தரர் புகழ்ந்து கூறும் சிங்கடியார், வனப்பகையார் இருவரும் இக் கோட்புலி நாயனர் பெண்களெனவும் புராண ஆசிரிய ரிருவரும் கூறுகின்றிலர்.

அப்படியானல் அறுபத்துமூன்று நாயன்மாரில் ஒருவராகிய கோட்புலி நாயனர் எக்காலத்தவர்? அவர் சுந்தரர் காலத்திற்குப் பல நூற்றாண்டுகளின் முன்னர் இருந்தவராதல் வேண்டும்.

அவர் பகைப்புலத்து அரசரை வெல்லச் சென்ற போது சிவனருக்கென வைத்துச் சென்ற நெல்லைப் பஞ்சத்தால் வாடிய சுற்றத்தார் எடுத்துண்டமை யறிந்து, பகைவென்று மீண்டவுடன் அவர்களை யெல்லாம் தமது போர்வாளால் வெட்டிக் கொன்ருர். அவர் தமது தாய், தந்தை, மனைவி, மக்கள், சுற்றத்தார், பணியாட்கள் அனைவரையும் கொன்ருர். ஒரு சிறு ஆண் குழந்தையை அவர் கொல்லச் சென்ற போது அவருடைய பெயரையே தாங்கிய கோட்புலி என்ற காவலன், "இது அவ்வுணவை உண்டிலது. பச்சிளங்குழவி" என்ன, "இது உணவுண்டிலதாயின் பாலைக்குடித்திலதோ?" என்று கூறி அதனையும் அவர் கொன்ருர். அதனல் கோட்புலியார் வழியே அற்றுப் போயிற்று. அக் கணமே சிவனர் தோன்றி அவரைத் தமது திருவடிக்கண் சேர்த்தருளினர்.

ஆதலினலே சுந்தரர்காலத் திருந்த கோட்புலியார் அவராயிருத்தல் முடியாது. அவருடைய வழியே அற்றுப் போயினமையால் அவருடைய வழித்தோன்றலாகவும் இவர் இருத்தல் முடியாது. அவருடைய காலத்திலேயே அவருக்கு வேலைக்காரனக இருந்தவன் கோட்புலி என்ற பெயருடன் இருந்தான் என்ற செய்தியை நாம் அறிவதால், திருநாட்டியத்தான்குடியில் பலர் தமது குழந்தைகளுக்குக் கோட்புலி என்று பெயரிடுவது வழக்கமாம் என்ற உண்மை புலனகின்றது. அதனல் சுந்தரர் காலத் திருந்த அடியாருக்கும் அவர் பெற்ருேர் கோட்புலி எனப் பெயரிட்டிருந்தனராதல் வேண்டும்.

மேலும், நாம் மற்றொன்று கவனித்தல்வேண்டும். என்னை? சுந்தர மூர்த்தி நாயனாருடைய வரலாற்றைக் கூறப் புகுந்த சேக்கிழார் அதனை 1. திருக்கயிலாயச் சிறப்பு, 2. தடுத்தாட் கொண்ட புராண மெனத் தொடங்கி, பின்னர் சுந்தராருடைய காலத் திருந்த அடியார்களுடைய புராணங்களைக் கூறுமுகத்தானே 3. ஏயர் கோன் கலிக்காம நாயனார் புராணம் 4. கழறிற்றறிவார் நாயனார் புராணம் என்பவற்றைப் புகன்று, பின் அவர் திருக்கயிலாயத் திற் கெழுந்தருளியதை ௫. வெள்ளானைச் சருக்கம் என்ற பகுதி யிற் கூறிப் பெரியபுராணத்தை முடித்தருளுகின்றார். ஆதலினால் அறுபத்து மூவருள் ஒருவராகிய கோட்புலி நாயனார் தம்பிரான் றோழருடைய காலத்தவராயின் கோட்புலி நாயனார் புராணம் என அதன்கண் வைத்தும் சுந்தரர் வரலாற்றைச் சேக்கிழார் கூறியிருப்பார்.

இவ் வாராய்ச்சியினால் கோட்புலி நாயனார் இருவர் என்பதும் ஒருவர் சுந்தாருக்குப் பல நூற்றாண்டுகளின் முன்னர் இருந்து இறைவருக் கெனத் தாம் வைத்துச் சென்ற நெல்லை உண்ட குற் றத்திற்காக தமது பெற்றோரையும் மனைவி மக்களையும் வெட்டி இறைவர் திருவடியடைந்தவர் என்பதும், மற்றவர் சிங்கடியாருக் கும் வனப்பகை யாருக்கும் தந்தையாராகிச் சுந்தாருடைய நட்பைப் பெற்று அவரால் திருநாட்டியத்தான்குடிப்பதிகத்தினால் கோட்புலி சென்னி என்று புகழப்பெற்ற பெரும் பேற்றினர் என்பதும் புலனாகின்றன.

தமிழ் அறிவியற் சொற்கள்

Geometry-வடிவளவை

[திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள்]

(முன் ௧௯௬-ம் பக்கத்தொடர்ச்சி)

23. Problem

23-வது ஆக்கம்

To draw a common tangent to two circles.

இரண்டு வட்டங்களுக்குப் பொதுத் தொடுவன் ஒன்று இழுப்பது.

Let A be the centre of the greater circle and 'a' its radius and let B be the centre of the smaller circle and 'b' its radius.

பெரிய வட்டத்தின் மையம் மா-வும் அதின் கதிர் காவு மாகட்டும். சிறிய வட்டத்தின் மையம் மவ்வும் கதிர் கவ்வு மாகட்டும்.

Analysis — Suppose D E to touch the circles at D & E. Then the radii A D, B E are both perpendicular to D E and therefore parallel to one another.

வகுத்துக்காட்டு— இரண்டு வட்டங்களையும் தோத் தொவ் என்கிற இடங்களில் தோத்தொவ் வரைத் தொடுவதாக நினைத்துக் கொள். அப்படியானல் மாத் தோவும் மத்தொவ்வும் தோத் தொவ்விற்குச் செம்முடக்காக இருப்பதோடு இரண்டும் ஒன்றற் கொன்று ஒருபோகாகவும் இருக்கவேண்டும்.

Now, if BC were drawn parallel to DE, then the figure DB would be rectangle so that CD is equal to BE which is equal to 'b'.

இப்போது மப்பொவ்வைத் தொத்தோவிற்கு ஒருபோகாக இழுத்துவிட்டால், மத்தோ வடிவம் ஒரு செம்முடக்கி யாவதோடு மத்தொவ்வும்—பொத்தோவும் கவ்வும் ஒப்புவனவாம்.

And if AD, DE are on the same side of AB then AC will be equal to (a-b) and the angle ABC is a right angle.

மேலும் மாத்தோவும் மத்தொவ்வும் மா, மவ்வின் ஒரு சிறையிலேயே இருக்க நேர்ந்தால், மா, பொவ்வானது, கா, குறை கவ்விற்கு ஒப்பதோடு மப்பொம்மா முடக்கு செம்முடக்குமாகும்.

These hints enable us to draw BC first and thus lead to the following construction:—

இந்தக் குறிப்புகள் மப்பொவ்வை முதன் முதலாக இழுக்க வும் கீழ்வரும் ஆக்கத்தைச் செய்யவும் நமக்கு வழி காட்டுகின்றன.

Construction :—With centre A and radius equal to the difference of the radii of the given circles, describe a circle and draw BC to touch it.

ஆக்கம் :—மாவை மையமாக வைத்து குறித்த வட்டங்களின் கதிர்களின் வேற்றுமையை ஒரு புதுக் கதிராக வைத்து ஒரு வட்டம் வீத்தி அதைத் தொடும்படி மப்பொவ்வை இழு.

Join AC and produce it to meet the circle (A) at D.

மப் பொவ் வின் இடை வரைந்து அது மாவட்டத்தைத் தோவில் முட்டும்படி நீட்டு.

Through B draw the radius BE parallel to AD and in the same sense.

மவ்வின் வழியாக மா, தோவிற்கு ஒருபோகாக மத் தோவை ஒரே புலமாக இழு.

Join DE. Then DE is a common tangent to the given circles.

தொத் தோவை இடைவரை. இனி தொத் தோவானது குறித்த இரண்டு வட்டங்களுக்கும் பொதுத் தொடுவனுகும்.

Observation :— Since two tangents such as BC can in general be drawn from B to the circle of construction this method will furnish two common tangents to the given circles. These are called the direct common tangents.

குறிப்பு :—மப் பொவ்வைப் போல இயற்கையில் இரண்டு தொடுவன்கள் மவ்விலிருந்து இழுக்க இயலுமாகையால் இந்த முறையால் குறித்த வட்டங்களுக்கு இரண்டு பொதுத் தொடுவன்கள் வரைய இயலும். இவைகளுக்குக் குறுக்கிடாப் பொதுத் தொடுவன்கள் என்று பெயர்.

Some of the advantages of Tamil notation surpassing the English may be noted here.

The long *மா* is used to denote the *மையம்* or centre of the large circle and the short '*ம*' to denote the centre of the small circle.

The long *கா* is used to denote the *கதிர்* or radius of the large circle and the short *க* for the smaller circle.

The long தோ is used to denote the தொடு குற்று or the point of touch on the large circle and the short தொ for the small circle.

The letter பொ is used to denote the point where the ஒருபோகு, the parallel line meets the radius of the larger circle.

The ம, மா, for மையம் or centre points, தொ தோ for தொடும் or touching points க, கா for கதிர் or radii and பொ for the meeting point of போகுவரை or parallel line are so chosen that they may themselves suggest what they denote. No doubt, similar attempts are made in English also choosing R for radius and C for centre etc. but the scope is too limited in it.

To draw the radical axis of two given circles.

குறித்த இரண்டு வட்டங்களுக்கு மையவரையை இழுக்கும் வகை.

Let A and B be the centres of the given circles.

ம, மா வென்பன குறித்த இரண்டு வட்டங்களின் மையங்களாகட்டும்.

It is required to draw their radical axis.

அவைகளின் மையவரையை இழுக்கவேண்டியிருக்கிறது.

If the given circles intersect then the straight line drawn through their points of intersection will be the radical axis.

குறித்த இரண்டு வட்டங்களும் ஒன்றை யொன்று வெட்டுமானல் அப்படி வெட்டு விழும் குற்றுக்களின் வழியாக ஒரு வரையை இழுத்தால் அதுதான் இரண்டு வட்டங்களுக்கும் மையவரை.

But if the given circle do not intersect,

அப்படி அந்த வட்டங்கள் ஒன்றையொன்று வெட்டாவிட்டால்

describe any circle so as to cut them in E F and G H.

அவைகளைப் பெப்பேயிலும் சிச் சீயிலும் வெட்டும்படி யாதாமொரு புது வட்டத்தை வீத்து.

Join E F and H G produce them to meet in P.

பெப் பே யையும் சிச் சீ யையும் இடைவரைந்த அவைகளை மையில் முட்டும்படி நீட்டு.

Join A B and from P S draw a perpendicular to AB.

மம்மாவை இடைவரைந்து அதன் மேல் செங்குத்தாக விழும்படி மையிலிருந்து மையவ்வை யிழு.

Then P S shall be the radical axis of the circles (A) (B).

ஆகவே மைய வென்பதே மம்மா வென்னும் இரண்டு வட்டங்களின் மைய வரை.

—காழி. சிவ. கண்ணுசாமி B. A.

ஊணருட் பயன்

[சிவகங்கை நா. பரிதிமலே]

(அருணுசலன்)

(௬௭-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கூறிய மூவகைத் துறைகளில் நாம் மேற் கொண்டொழுகுதற்கு எற்ற துறை யாதெனச் சற்றே அமைதியோடு உற்று நோக்குமின்கள். நல்வினைப் பயனுகக் கைப்பொருள் உண்டானுல் இன்ப நுகர்ந்து இளைப்பாறுவோமென நினைப்போமாயின், அப்பொருளும் எஞ்ஞான்றும் ஒரேபடித்தாக ஒருவரிடத்து நிலைபெறுமாறில்லாமல் சகடக் காலெனச் சுழன்று செல்லுந் தன்மையவா மாகலின் ஒரோவழி நம்மிடத்து நில்லாதாயின் நம் முனைப் பென்னும். பிறப்பிறப்போ டொப்புமையுடையதாய்க் காணப்பெறும் இன்பமுந் துன்பமும் பரவையுட் பட்ட மரக்கலமொன்று பெருங் காற்றலைப்ப அதன் வழிச் செல்லுமாறு போல மாறி மாறிச் சுழலும் அளவின வாதலின் முற்கூறிய இவர்தம் கூற்றும் மாண் புடைத்தாமோ ?. அல்லவே. ஆக மூன்ருமவர் செல்லுந் துறையே நந்தா விளக்காயும் நலிவிலா நற்றுறையாயுங் காணப் பெறுதலின் அதற்குரிய ஒழுக்காறுகளையும் பின்பற்றிச் செல்வாம்.

கட்டுரைப் பொருள்

தூய வுணவு

மண்ணிடைப் பிறந்த மன்னுயிரனைத்தும் நீரும் உணவுமின்றி யுயிர்வாழ்தற்கு இயலாதென்ப தொருதலை. உயிரு முடலும் ஒன்றி நிற்றற்பொருட்டு உண்ணப்படும் உணவுகளைத் தூய உணவு தூயில்லுணவு என இருவகையாகப் பகுக்கப்படும். அவற்றுள் தூய உணவென்பது அகத்தும் புறத்தும் தூயவாய்க் காணப் பெறுதலினென்க. அவை யாவன செடி கொடி புல் மரமுதலிய வற்றாலாகும் உணவுப்பொருள்களேயாம். இவற்றைத் தூயவாந் தன்மை வாய்ந்ததெனக் கூறிய தென்னையோவெனின், தவமியற் றுவோர் வெயில் மழை குளிர் பனி முதலிய காலங்களிலும் மெய் வருத்தம் பாராமல் தம்முயற்சி யினிதுமுடிப்பான் வேண்டித் தம் மனத்தை யிறைவன்பால் ஒருவழிப்படுத்து நிற்குமாறு போல மாமுதலியவையும் வெயில் முதலியவற்றை நனியுமுட்கொண்டு கவின்பெற மிளிர்ந்து முனியாமல் தம்மை யடுத்தோர்க்குக் குறை விலாப் பெரும்பொருளை யளித்தலானும் அப்பொருள்களைச் சின்னுளாகச் சேர்த்துவைத்திருப்பினும் தன்னுடற்பண்பாம் பசுமையும் சுவையுஞ் சிறிதுங் குன்றாமலும் தீ நாற்றங்கமழாமலும் உண்பவருடலை யூட்டிவளர்த்தலினாலுமென்க. உடல் நிற்றற்கு உண்ணப்படும் உணவுப்பொருள்கள் உண்பன தின்பன நக்குவன பருகுவனவென நால்வகைப்படும். அவற்றுள் நெல் கோதுமை கம்பு தினை சோளம் முதலியவற்றாலாய அடிசிலை யுண்ணப்படுவன வென்றும், மரக்கறி கிழங்கு பயறு பழம் முதலியவற்றாலாய உணவு களைத் தின்னப்படுவனவென்றும், இவற்றாலாய சாறுகளையும் நீர் முதலியவற்றையும் நக்கப்படுவன பருகப்படுவன வென்றுங்கூறுப. இவற்றுள் உண்பனவற்றை முதற்கருவியென்றும், ஏனைய மூன் றையுந் துணைக்கருவியென்றுங் கூறலாம். ஈண்டு முதற்கருவி துணைக்கருவியென்றது சோறின்றி உடல் நில்லாதாகலானும், அது விருப்போடும் உண்ணற்பொருட்டே சுவைமிகுந்த ஏனைய மூன் றையும் அருந்துதலினாலுமாம். ஆகவே, இப்பொருள்களனைத்தும் அறிவுப்பெருக்கத்தைத் தருதலானும் அவ்வறிவே யிம்மை மறுமைப் பயனிரண்டிற்கும் ஏதுவாகலானும் தூய உணவுகளையே விரும்பி யுட்கொள்ளுதல் பெரிதும் நன்மையுடைத்தாம்.

தூவில் லுணவு

இனித் தூவில் உணவு என்பதியாது ?

பிறிதோருயிரின் ஊனைப் புசித்தலேயாம். ஒரு பிறவியி னுயிரை நீப்பின் அதனைத் தாங்கிநின்ற வுடல் பிணமாகலானும், அவ்வுடலைச் செகுத்துப் பார்ப்பின் புண்போலக் காணப் பெறுத லானும் அவ்வூன் ஒற்றைப் பகலேனும் தீ நாற்றங் கமழாமலிரா தாகலானும் அவ்வூனைப் புசித்தலால் அறிவுக் குறைவு சினமிகுதல் இரக்கமின்மை முதலிய குணங்கள் வந்தடுத்தலானும் இவை காரணமாக இம்மைக்கண் அறிவுடையோரால் எள்ளப்பட்டும் மறுமைக்கண் இறைவன தருளைப் பெறுதற்குந் தடைப்படுத லானும் தூவில் லுணவையுட் கொள்ளுதல் உளப்பான்மைக்குச் சிறிதும் ஒவ்வாத தொன்றாகும். அன்றியும், சுவைமிகுந்த கரும் பிருக்க அதனை வெறுத்து அஃதொப்ப எஃகாலோர் வடிவமைத் துக் கடித்தினைத்தவாறு போலுமாகும்.

மக்கள் வரலாற்றிற் கெட்டாத பழமையான காலத்தில் நாடோடிகளாய்த் திரிந்து பின் நாகரிக வளர்ச்சி பெற்றுத் தன்னையும் கடவுளையும் உலகத்தினையும் கண்டறிந்து அதற்குத் தகப் பொருள்களையும் பகுத்தறியத் தொடங்கிய காலத்து ஊன் புசித்தல் தீச்செயலாமென முதன்முதலில் நுணுகி யாராய்ந்தவர் நம்பரத கண்டத்தவரே யாவர். அவருள்ளும் ஆரியக்குழூஉவினர் இம்மைப் பயன் கருதிச் செய்யப்படும் வேள்விக்கண் அருளின்றி யுயிர்ப்பலி யிடுதலானும் அதுதானுந் தீதாமென அவரது கூற்றை,

“ அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று ”
“ நன்றாகும் ஆக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கங் கடை ”

—திருக்குறள்

என்று பொய்யில் புலவர் மறுத்துரைத்தலானும், வழி நடப் புழி ஒளிப் புலனுக் கெட்டாது ஊர்ந்து திரியும் நுண்ணிய வுயிர் பல இறந்து படுமெனக் கருதி மயிற் பீலிகளாற் றூர்த்துச் செல் லும் புறத்துறவினராம் அமண் குழூஉவினர் எம்மடிகளாம் பாலறாவாயர்க்கும் பாவேந்தர்க்கும் பற்பல புலைத் தொழில்களை யியற்றியதாலும் அவரொடுந் துன்னிப் பழகித் தாம் கண்டறிந்த

அவரது கொடுஞ் செயல்களை ஆரூரடிகள் திருவாரூர் திருவிருத்த முழுதினும் பிற தேவாரப் பண்களிலும் நன்கு விளக்கி யிருத்த லான் அமணரது கூற்றும், நாம் கொல்லோம் எவரேனும் கொன்று தந்தால் உண்போம் எனக்கூறும் இற்றைக் காலப் புத்தரது கூற்றும் அத்துணை விழுமிய நோக்காமோ ?

ஐய ! நம் பழந் தமிழரோ வெனின்,

" தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.

—திருக்குறள்

என அச்சுறுத்துக் கூறுவாராகலின் இந் நுண்ணிய ஆராய்ச்சியும் அவர்க்கே யுரித்தாமென்க. அவரது வழித்தோன்றலாக வெழுந்த தமிழ்ச்சங்கத்தாரின் காலமுதல் இன்றுகாறும் அவ்வப்போது தோன்றிய சைவப்பெரியார் பலர் பெரிது முயன்று பலரையும் ஊன்புசித்தலாங் கடலின்றும் கரையேற்றி வந்தனர், வருகின்றனர். அவரது பேருழைப்பிற்கு நாம் என்னோ கைம்மாறு செய்யக் கருதுவதெனின் அவரது முயற்சி கொன்னே பாழ்படாவண்ணம் மேற்கொண்டொழுகுவதே நாம் ஆற்றுங் கைம்மாறாகுமெனக் கொள்க. ஊனையே மிகவும் விரும்பி யுண்டுவந்த மேல்நாட்டினரும் பிற்காலத்து அறிவியற் புலவர்களான் நுணுகியார்ந்து ஊன் புசித்தலான் வருங்கேட்டை நன்கு விளக்கிவந்ததன் பயனைத் தூய உணவையே யுட்கொண்டு வருதலையும் ஆழ்ந்து நோக்குமின்கள்.

ஊன்புசிப்பாரின் உட்கிடக்கை

இனி ஊன் புசிப்பாரின் உட்கருத்தையும் வேறுபாட்டையும் நோக்குவாம். இவர் கூற்றெனக் கொலைபுரிவாரும், ஊன் தின் றுவப்பாருமென இருதிறத்தினராவர். அவருள் கொலைஞராவார் பிழைப்பின்பொருட்டாகவும், தம்பொருட்டாகவும், சிறுதெய்வங் கட்குப் பலியிடுவதன்பொருட்டாகவும் கோறற்றொழிலை மேற் கொண்டொழுகுவார் மூவகைப்படுவர். முதலாமவரை நோக்கி நீவிர் பிறிதோருயிரைக் கூறுபடுத்துதற்கு ஏதுவென்னையோ வென வினவின், ஐய ! எமது பெண்டுபிள்ளைகளைக் காத்தற்பொருட் டேயாமென்பர். இரண்டாமவரோ தமதில்லிற் பல்லுயிர்களையும் பரிவொடு வளர்த்து நாவாம் நமனது ஏவலான் நைவிலாமனத் தொடு வைவாள்கொண்டு நறுநறெனத்துணித்து நல்லுணவாக்கி

நகைச்சுவைததும்பத் தங்கிளைஞர் நட்டாரொடும் எக்களிப்பாகப் பொக்கங்கள் பேசி உண்டு களிப்பர். கடையவர் காளி கருப் பண்ணன் மாடன் வீரன் முதலிய பெயரொடழைக்கும் கன்மனக் களித் தெய்வங்களைப் பரவுதற்பொருட்டு கருங்கடாய் கருங்கோழி களைக் கருவறுக்கின்றனர். ஐயகோ ! இன்னாத கொடுஞ்செயலை யென்னென்றியம்புவல். இன்னாரை விடுப்பதோ அன்றியெடுப்ப தோவென் றறிகிலேன். ஆயினும், இவர் அறியாமையாற் பிறி தோருயிரை யலைப்பவராகலான், இவர்க்குச் சிறிது கூறுவாம் :—

கொலைஞர்களாம் அன்பர்களே! அமைதியோடு கேட்டருள்க.

"உற்றதாராய்ந்து ஓம்புவாரில்லாத மயிலினது முட்டையால், ஈன்றவருத்த மறியாத இளமந்திகள், மயிலின் வருத்தமும் முட்டையின் மென்மையும் பாராது பந்தாடுகின்றாற்போல்"

(திருக்கோவையார் 276-ஆம் பாட்டின் உரைப்பகுதி)

ஏழையுயிர்கட்கிரங்கித் தடுப்பாரில்லாது தயங்கிய உயிர்களின் தன்மையையும், கடவுளின் அரும்பொருளென்பதையும் ஆராய்ந் தறியாது நாடோறும் பல்லுயிர்களும் நும்மைக்கண் டஞ்சுமாறு நமன்றொழிலை மேற்கொண்டொழுகுகின்றீர். ஊறுபடுத்துழிக் கூரியவாளின் குறிதப்பி நும்மேற்பட்டுச் சிறுதுளியேனும் செந் நீர் காணப்பெறின், நும்முடலு முயிரும் பெரிதும் நடுங்குவதைக் காண்பீரன்றோ? அன்றி, நும் பகைவரொருவர் நும்மைச் சிறியவழி யிருவரும் பொருதுபட்டு ஒருவர் மாளநேரின் உயிர் துறப்பவன் எத்துணையிடர்ப்படுவான்? அஃதான்று; அவரது சுற்றம் எத்துணை யின்னலுறும்! நும்முடலை வீக்குதற் பொருட்டுக் கூறுபடுத்து முயிரும் நும்மை யொத்ததன்றோ? கூரிய வாளொடுங் கூறு படுத்த நினைத்த ஆடு 'கோழிகட்கு அருகில் நெருங்குவீராயின், அவ்வுயிர் பேரச்சத்தொடு கூ. கூ. வெனக் கதறுவதைக் கண் டறியீரோ ? யானை, கரடி புலி முதலிய கொடிய விலங்கினங்களைக் கண்டு நீவிர் கதறி யோடுவதென்னையோ ? நும்மின் வலியுடைத் தாகலினன்றோ ! அதுபோல ஆடு கோழிகளும் நும்மொடு பொருதற்குரிய திறனுடையவேல், அவற்றிடத் தணுகுவீர்கொல்? நம்பால் அடைக்கலமென் றணுகி வந்த நல்லுயிரை நசுக்கிப் பிழிதல் நமன்றனக்கும் நன்மை யுடையதாமோ !

"ஏழையழுத கண்ணீர் கூரிய வாளொடொக்கும்"

என்பதை நீவிர் அறியிரோ! நுமது வலிமையை வல்லாரிடத் தன்றி அஞ்சி நடுங்கும் ஆடு கோழிகளிடத்துக் காண்பிப்பது ஆண்டகைமைக்கும் அழகாமோ!

இதனை யறிவீராயின், கொலைத்தொழிலே விலைத் தொழிலாகக் கொண்டொழுகுதற்கு ஒருப்படுவீரோ? கூறுமின். இப்பொல்லாக் கொலைத் தொழிலன்றி யிவ்வியன் பேருலகிடைப் பிறிதொரு பணி யாற்றிப் பிழைத்தற்கும் வழியறியீரோ! ஆகவே, பிறிதோருயிரை யலைத்தல் பாவமென்பதை யறிந்து விட்டொழித்தருள்வீராக. இவை யனைத்தையும் மறுத்துப் பாவமென்ப திதுவேயெனக் கை யிரண்டையும் நீட்டிக் காண்பிப்பீராயின், ஒன்று கூறுவல்.

நும்மினும் கொடிய வேடுவர் குலத்திற் றோன்றிய வான்மீகி முனிவர் திருப்புத்தூர் என்னும் திருத்தலத்திற் கருகிலுள்ள காட்டிடைத் திரிந்து கண்ணிடைப்பட்ட விலங்கு, புள் முதலிய வற்றை யலைத்தும், அவ்வழி நடப்பாரை வருத்தி அவரது பொருள்களைப் பறிப்பதாய தொழிலை மேற்கொண்டும் இல் லறம் நடாத்தி வந்தனர். வருநாளில் ஒருநாள் அவ்வழியாக அகத்தியர் முதலிய எழு முனிவரும் போதர, அம்முனிவரையும் அலைப்பான் நண்ணி கடுஞ்சொற் பல கழறக்கண்ட முனிவர் வான்மீகியின் கொடுந்தொழிற்கிரங்கி இத்தொழிலை மேற்கொண் டொழுகுவ தென்னையோவெனக் கடாவுழி, இல்லோம்புவான் வேண்டியென்றார்; அது கேட்ட முனிவரர் வேடுவரை நோக்கி நாங்கள் அகலாமல் இவ்விடத்தே நிற்கின்றோம். நீ சென்று நின் சுற்றத்தாரிடம் இத்தொழிலான் வரும் பழி யனைத்தும் யாரைச் சாருமெனக் கேட்டுத் திரும்புகவென விடுப்ப, அவ்வாறேகித் தமதிற்கிழத்தியை வினவுழி அவளும் எமையோம்புதல் நின் கடனாமாகலின் நும்மையே சாருமென விடையிறுப்ப, அது கேட் டஞ்சிய வேடர்பெருமான் முனிவரிடத் தணுகி உற்ற துரைத்து உய்யும் வழியும் இயம்புமாறு இறைஞ்சி நிற்க, முனிவரும் ஏதோ மறைமொழிகூற அதனையும் கூறவறியாராக எதிர்நின்ற மராமரத்தைக் காட்டி அதனையே கூறுமாறு பணிப்ப, அதனைச் சிரமேற்கொண்டு ஓரிடத்தமர்ந்து தம்மீது மண்புற்று வளர்ந்த தையு மறியாமற் கடுந்தவம்புரிந்து அதன்பயனாக வடமொழி இராமாயணமு மியற்றினரென்ப. இராமாயணத்தையும் வான்மீகி

முனிவரையும் கேட்டறியாதார் நம் பழந்தமிழ் நாட்டில் ஒருவர் உளராங்கொல்! இதனைக் கேட்டேனும் நும் புலைத்தொழிலை இன்றே விடுத்தருள்க.

(தொடரும்)

கம்பர் காட்டும் அரசியல் தத்துவம்

[ஆசிரியர் மா. இராசமாணிக்கம் அவர்கள்]

(௧௬-ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் முன்னர்க் கூறியபடி, புவியரசேத்தும் கவியரசாய கம்பர் பெருமான் தம் இராமகாதையின்கண் அவ்வவ்விடங்களில் அமயம் வாய்க்கும் போதெல்லாம் சிறிதும் மனஞ்சலியாது தாம் உணர்ந்த பல உத்தம தத்துவங்களை நமக்கு விளக்கிக் காட்டு கின்றார். இவ்விதழில் 'கம்பர் காட்டும் அரசியல் தத்துவம்' யாதென ஆராய்வோம்.

நாட்டை ஆளும் நாயகன் எவ்வித இலக்கணத்துடன் இருத்தல் வேண்டும் என்று கம்பர் விரிப்பது வியக்கத்தக்கது. குடிகளைத் துன்புறுத்திப் பாக்கு மரத்தைத் தூக்கு மரமாக்கிய அரசர் அரசரோ? குடிகளின் பெண்டிரைக் கற்பழிக்க முயன்ற காவலர் உண்மைக் காவலரோ? தம் மதத்தைப் பரவச்செய்யப் பிறமதத்தாரையும் அவர் தம் கோயில்களையும் பாழாக்கிய வேந்தர் உண்மை வேந்தரோ? ஒற்றுமை யின்றித் தம் குலத்துக்குத் தாமே தீமை விளைத்துக்கொண்ட 'ஜயசந்திரன்' போன்ற துர்க்குணம் நிறைந்த மன்னர் மன்னரோ? குடிகளை அச்சுறுத்தி அடக்கு முறையில் ஆளும் அரசர் உண்மை அரசரோ? அம்மம்ம! தேசசரித்திரத்தைப் படித்தாலன்றோ உண்மை விளங்கும். அந்தோ! இத்தகைய கொடுங்கோல் மன்னரால் குடிகள் உற்ற துயர்தான் கூறற்கெளிதோ? குடிகள் என் நினைந்து ஏக்கமுற்றனரோ! இத்தகைய அரசர் அரசர் அல்லர். இனிக் கம்பர் கூறும் அரசனையும் அவனது அரசியல் தத்துவத்தையும் கவனிப்போம்:

கம்பர் தாம் கூறும் தத்துவத்தைத் தயாதன்மேல் ஏற்றிக் கூறுகின்றார் என்பது வெள்ளிடைமலை. அரசன் 'அளிப்பவனே' யன்றி 'அழிப்பவன்' அல்லன். துப்பாக்கி முனையினும் மூங்கிற்

கழிகளின் முனையிலும் குடிகளைத் துன்புறுத்தி ஆளும் அரசன் அரசனுகான். "ஆள்பவன் அரசனுகான்; காப்பவனே அரசன்" என்பதே கம்பர் கொண்ட அரசியல் தத்துவத்தின் சாரம். அன்புவழிகாட்ட, அறம் துணைசெல்லக் குடிகளுக்குத் தொண்டு பூண்டு ஒழுகுபவனே உண்மை அரசன். அவன் தன் கடமைகளை உள்ளவாறு உணர்ந்திருத்தல் வேண்டும். அவன் அவற்றைக் கனவிலும் மறந்தானுகில், அவன் "புவியரசன்று; பூவரசே". குடிகளைக் காப்பதற்குரிய நற்குணங்களே முதலில் அரசன் பெறத் தக்கவை. இவை, சிறிதளவும் குன்ருது நிறைவுற்று இருக்க வேண்டும். இன்ன குணங்களை உடையவனே உத்தம அரசன் என்ற கம்பர் கூற்று, கற்போர் மனத்தைக் களிப்புறச் செய்கிறது.

'ஆதிரும்மதியும் மருளும் மறனும் மைமவும்
எதின் மிடலவீ ரமுமீகையு மெண்ணில் யாவும்
நீதிந் நிலயுர் மிவைநேமியி ஞேர்க்கு நின்ற
பாதிம் முழுதும் மிவர்க்கேபணி கேட்ப மன்னே'.

'எப்பொருளையும் ஆராயும் அறிவும், அருளும், அறமும், பெருமையும், வீரமும், ஈகையும், இவைபோன்ற உத்தம குணங்கள் யாவும், நீதி தவருு நடுநிலையும் பிற மன்னரிடத்து அவ்வளவற்றில் பாதியே இருந்தன என்னும்படி தயரதன்பால் முழுமையும் இருந்தன'. அவை 'அவன் ஏவற்படி நடந்தன' எனக் கூறும் கம்பர், தாம் கொண்ட அரசியல் தத்துவத்தைச் சிறிதே அதில் தோன்றச் செய்தார். நம்கவி அரசு உணர்ந்திருந்த அரசியல் தத்துவம் இக்காலப் புவியரசர் மாட்டும் இலங்கக் காணேம்.

அரசன் இலட்சணங்களைக் கூறிய கம்பர் அவன் குடிகளிடம் எவ்விதமாக இருத்தல் வேண்டும் என்பதைத் தயாதன் மூலமாக விளக்குகிருர்:

'தாயொக்கு மன்பில்; தவமொக்கு நலம் பயப்பில்;
சேயொக்கு முன்னின் றெருசெல்கதி யுய்க்குநீரால்;
நோயொக்கு மென்னின், மருந்தொக்கு; நுணங்கு கேள்வி
ஆயப்புகுங்கா லறிவொக்கு(ம்), எவர்க்கும் அன்னுன்'

'தயரதன் அன்பிலே எவர்க்கும் தாயை ஒத்தவன்; நன்மைகளை விளைப்பதில் அவரவர் செய்துள்ள தவத்தை யொத்தவன்; நோயொப்பவன், ஆயின், அந்நோயைத் தீர்க்கும் மருந்தையும்

ஒத்தவன்; அரிய விஷயங்களை ஆராயப்புகும்போது அவரவர்கள் அறிவை ஒத்தவன்; தன் நாட்டுக் குடிகளுக்கேயன்றி எவர்க்கும் தயரதன் இத்தன்மையனே' என்பது பொருள்.

தாய் நம்மாட்டுக் காட்டும் அன்பின் பெருக்கால் நாம் அவளிடமேயன்றி எவ்வுயிரிடத்தும் அன்பு கொள்ளுகிறோம். அங்ஙனமே, அரசன் உயிர்களிடத்து அன்பு காட்ட உயிர்கள் அரசனிடமேயன்றி, பிற உயிர்களிடத்தும் அவ்வன்பைக் காட்டுகின்றன. ஆதலின், நாட்டு உயிர்கள் அன்பையே அணியாகக் கொண்டு விளங்குகின்றன; அரசனது பழக்கத்தால், அவன், தன் மக்களை அன்புருவாகச் செய்து வைக்கின்றான். எனவே, அவன் அன்பு செலுத்தும் வகையில் குடிகளின் தாயை ஒத்தவன் அன்றோ? அன்பே அறத்திற்கு அடிப்படையானது. ஆகவே, மன்னன் அன்பால் குடிகளிடம் அறத்தை வளரச் செய்கின்றான். மக்கள் பெற வேண்டிய பேறுகள் நான்கனுள் முதற்பேறு அறமேயன்றோ? அவ்வறத்தையே அரசன் குடிகளைப்பெறச் செய்கின்றான் எனின், அவ்வரசனை எத்தன்மையன் என்று கூறிப்புகழ்வது? இம்மட்டோ?

தயரதனை, 'தவமொக்கும் நலம் பயப்பில்' என்றார் கம்பர். அவரவர் வேண்டியவற்றை வேண்டியவாறே பெற, தவம் உதவி செய்யும். அவ்வாறே, மக்கள் வேண்டியவற்றை வேண்டியவாறே பெற மன்னன் துணைசெய்வதால், அவன் தவத்தை ஒத்தவனானான். ஆகவே, அரசன் இரண்டாவது பேறாகிய 'பொருளுக்கும்' காரணன் ஆகின்றான்.

மூன்றாவதாகத் தயரதன் 'சேயொக்கும் முன்னின்றொரு செல்கதி உய்க்கு நீரால்' என்றார் கவி. ஒருவன் இம்மைப் பற்றை விட்டு மறுமைக்குரிய நெறியிற் பழகப் புத்திரன் உதவுகின்றான். புத்திரன் பிறந்த பின்னரே அவன் மறுமைக்குரிய வழியை நாடுகின்றான். ஆகவே, தந்தையின் செல்கதிக்கு வழிகாட்டியா யுள்ளவன் மகனே. அவன் போன்று, தயரதன், மக்கள் அறம் பொருள் இன்பத்தில் ஆழ்ந்துவிடாது மறுமைக்குரிய நிலைமையும் அவர் செய்யவேண்டிய சாதனங்களையும் அமைத்து வைத்துள்ளான். இந்நிலையில், அவன் 'குடிகளின் சேய்க்குச் சமதையானவன்' என்று கூறுதல் அமைவுடைத்து. நம் கம்பர் காட்டும் அரசியல் தத்துவம் சால அழகியதே!

நான்காவதாக, தயரதன் 'நோயொக்கு மென்னின் மருந் தொக்கும்' என்கிறார். நோயை உண்டாக்குபவனும் அரசனே. அந்நோயை மருந்துபோல் உதவிப்போக்குபவனும் அரசனே. என்னே, கம்பர் காட்டும் அரசநிலை! அற்புதம்; அற்புதம்!!

(தொடரும்)

சிதம்பர சுவாமிகள் வரலாறு

(முகப்புப்படம் பார்க்க)

பூலோக சிவலோகமென்னும் மதுரைமா நகரின்கண் சங்கப் புலவர் வழியிற் றோன்றி அங்கயற்கண்ணம்மையார் திருவடி கட்கு அன்புபூண்டவராய்ச் சிதம்பர சுவாமிகள் தமிழ் இலக்கிய இலக்கணங்களிலும் சைவசமய நூல்களிலும் மிக வல்லவராய்த் தமிழ்நாட்டின்கண் தமது கல்வியறிவுத் தேர்ச்சியினால் பெரும் புகழ் பெற்று தம்மைக் கவிராஜர் எனக் கற்றோரும் மற்றோரும் வழங்கச் சிறந்து வாழ்ந்திருந்தனர்.

இஃதிவ்வாறாக அவிநாசியின்கண் வீற்றிருந்த வீர சைவ சமயாசாரியராகிய சிவப்பிரகாச சுவாமிகளது திருவருள் பெற்ற சாந்தலிங்க சுவாமிகளுக்கு அடித்தொண்டராகிய குமாரதேவர் தமது ஆசிரியர் கட்டளையின்படி பழமலைக்குச்சென்று இறைபணி இயற்றி மணிமுத்தா நதிக் கரையிலுள்ள அரசமர நிழலில் சிவ யோகஞ் செய்துகொண்டிருந்தார்.

ஒருநாள் குமாரதேவர் குருதரிசனம் செய்யும்பொருட்டு பழமலை விட்டு அவிநாசிக்குச் செல்ல, அதற்கருகில் ஒரு சிற்றா ரின்கண் அடியார்களுக்கு அடித்தொண்டு புரியும் நியதியை மேற் கொண்டு வாழ்ந்துவந்த ரெட்டியார் ஒருவர் இவரைக் கண்ணுற்று அவரடிக்கு ஆட்பட்டு அன்புடையராய் அவர்தம் அருளாணையின் பயனாய் நன்மக்கட்பேறும் பெற்றனர்.

ரெட்டியார் தம் செல்வ மக்கட்குக் கல்வி ஞானக்கண்கள் அளிக்கவல்ல ஒரு பெரியாரைத் தேடிக்கொண்டிருக்க, சிதம்பர சுவாமிகளது கல்வி அறிவு ஒழுக்கங்களைப்பற்றிக் கேள்விப் பட்டு அவர்பாற் சென்று அவரடி பணிந்து தங்குறை கூற, சிதம்பர

சுவாமிகள் ரெட்டியார்மீது கருணைகொண்டு அவர் வேண்டுகோளுக்கு இணங்கி அவரது மாளிகைக்கு எழுந்தருளி அவர்தம் அருமை மக்கட்கு அன்போடு கல்வி கற்பித்து வந்தனர்.

குமாரதேவர் வழக்கம்போல் ஒருகால் ரெட்டியார் இல்லத்துக்கேக அங்குக் கவிராஜரைக் கண்டு உரையாடி அவரது பக்குவ பருவத்தைக் கண்டு ஆட்கொண்டு தீக்கை செய்து அவருடன் அவிநாசிக்குச் சென்று தமது குருவாகிய சாந்தலிங்க சுவாமிகளைத் தரிசிக்க, அவர் கவிராஜரின் கல்வித் திறமையையும் சைவ சமய நூற்பொருட்டெளிவையுங் கண்டுணர்ந்து அவரிடம் தாமியற்றிய வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார், கோலை மறுத்தல், ஒழிவிலொடுக்கம் முதலிய நூல்களைத் தந்து அவைகளுக்கு உரை இடும்படி கட்டளையிட்டனர். கவிராஜர் அக் கட்டளையைச் சிரமேற் கொண்டு அந் நூல்களுக்கு உரையிட்டு, குமாரதேவரையும், சாந்தலிங்க சுவாமிகளையும் மகிழ்ச்செய்து அவர் தம்மால் சிதம்பர சுவாமிகள் என்னும் திருநாமமும் சூட்டப் பெற்றனர்.

பிறகு சிதம்பர சுவாமிகள் ஆசிரியர் கட்டளையின்படி மதுரைக்குச் சென்று அங்கயற் கண்ணம்மையை நோக்கி நாற்பத்தைந்து நாள் விரதங் கிடக்க, அம்மையார் தோன்றி, "அன்பனே நீ கோரியிருக்கும் பதிஞானமும் இறைபணியும் யுத்தபுரியிற் கைகூடு"மென்று அருளிச் செய்தனர். சிதம்பர சுவாமிகள் உடனே அப்பதி நோக்கி வடபால் நடந்து இடைவழியில் தமது ஆசிரியர்க்கு அம்மையாரின் திருவருளை விண்ணப்பிக்க வெண்ணி விருத்தாசலம் வர, குமாரதேவர் நிஷ்டையி லிருக்கக்கண்டு குறைகொண்ட உள்ளமோடு புத்தபுரி என்னும் திருப்போரூர் வந்து சேர்ந்தனர்.

அங்குச் சிதம்பர சுவாமிகள் கோயிலைக் காணாது திகைத்து நிற்க, முருகக்கடவுள் குமாரதேவர் வடிவத்தோடு தோன்றி அவர்தம் நெற்றியில் திருநீறு இட ஆங்குள்ள பனைமரக்காவின் இடையில் முருகக்கடவுள் சந்நிதானம் எல்லா வைபவங்களோடும் விளங்கக் காண, உடனே குமாரதேவராய் வந்த முருகக்கடவுள் மறைந்து அருளினர். சுவாமிகள் அக்காவில் முருகர் சிலை ஒன்றையுமே கண்டு அக் கடவுளின் திருவருளைத் துதித்தனர்.

பிறகு சிதம்பர சுவாமிகள் அத் திருப்போரூரின்கண்ணே இருந்துகொண்டு முருகருக்கு ஆலயங்கட்டி முடித்துத் திருப்போரூர் சந்நிதிமுறை என்னும் நூலையும் செய்தருளிப் பதிஞானமும் இறைபணியும் கைகூடப்பெற்றுப் பலநாள் அப்பணியின்கண்ணே விடாது உறைந்து அத் திருப்பதியிலேயே சமாதியடைந்து பேரின்பப் பெருவாழ்வை யெய்தினர்.

அறிக்கை

திருநெல்வேலித் தென்னிந்திய தமிழ்ச் சங்கத்

தனித்தமிழ்த் தேர்வுகள்

1926 முதல் ஆண்டுதோறும் தனித்தமிழ்த் தேர்வுகள் பல நடைபெற்று எண்ணிறந்த தமிழறிஞர்கள் பலவகைத் தேர்வுகளிலும் எழுதித் தேர்ச்சியிதழ் பெற்று ஆசிரியர்களாகவும் வேலை பார்த்து வருகின்ற செய்தி தமிழர் யாவரும் அறிந்ததே.

இச் சங்கத்தார் இவ்வாண்டுத் தனித்தமிழ்த் தேர்வுகளை நிகழும் மெய்கண்டான் யாண்டு எகO. ஆனித் திங்கள் யிரு, யிசு, யிஎ, புதன் வியாழன் வெள்ளிக் கிழமைகளில் (1933 ஜூன் 28, 29, 30) பல தலைநகர்களிலும் நடத்துவார்கள்.

மேற்படி தேர்வுகளில் தமிழ்த் தேர்வுக்கு ரூ. 1-ம், இளந் தமிழ்ப்புலவர் தேர்வுக்கு ரூ. 2-ம், தமிழ்ப்புலவர் பொதுவுக்கு ரூ. 3-ம், தமிழ்ப்புலவர் சிறப்புக்கு ரூ. 5-ம் புலவர் பொதுவுக்கும் சிறப்புக்கும் ஒரே காலத்தில் விண்ணப்பிக்கிறவர்கட்கு ரூ. 7-ம் கட்டணத் தொகையாகும். விண்ணப்பமும் கட்டணத் தொகையும் 1933 ஜூன்மீ 1உ-க்குள் சங்க அமைச்சரவர்களிடம் வந்து சேரவேண்டும்.

விண்ணப்ப பாரம் வேண்டுவோர் சங்க அமைச்சருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பு. சி. புன்னைவனநாதன்
அமைச்சர்,
தென்னிந்திய தமிழ்ச் சங்கம்.

திருநெல்வேலி
16—4—1933



வித்துவ சிகாமணி

சீகாழி. ப. அ. முத்துதாண்டவராய பிள்ளை

௱அக - ம் பக்கம் பார்க்க

ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு கக	மெய்கண்டான் யாண்டு-எாய சித்திரைத் திங்கள் 1933ஞூ ஏப்ரல்மூ—மேமூ	பரல் ச

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

திருநின்றியூர்—பண்—நட்டபாடை.

அச்சம்மிலர் பாவம்மிலர் கேடும்மிலரடியார்
நிச்சம்முறு நோயும்மிலர் தாமுந்நின்றியூரில்
நச்சம்மிட றுடையார்நறுங் கொன்றைநயந்தாளும்
பச்சம்முடை யடிகடிருப் பாதம்பணிவாரே.

பதவுரை :—

அடியார்—சிவபெருமான் திருவடிகளிலேயே அன்பு வைத்தொழுகும் அடியார்கள்

பாவமிலர்—மறத்தையும் (அறத்தையும்) கடந்து அவைகளுக்கு அப்பால் இறைவனது அருள் வழியிலே ஒழுகிறவர்கள்,

கேடும்இலர்—மறத்தினல் வரும் கேடும் (அறத்தினல் வரும் ஆக்கமும்) இல்லாதவர்,

நிச்சம் உறும்—பிறமக்கள் நாடோறும் உலகில் உழன்று வருந்துகின்ற

நோயும் இலர்—துன்பமும் (இன்பமும்) இல்லாதவர்

அச்சம் இலர்—உலகில் வரும் எத் துன்பங்களுக்கும் அச்சமில்லாதவர்கள்;

தாம்—(ஏனென்ருல்) அவ்வடியார்கள்,

நின்றியூரில்—திருநின்றியூரில் (திருக்கோயில் கொண்டருளி யிருக்கிற வரும்,)

நச்சுமிடறுடையார்—(கடலினின் றெழுந்த விடத்தை உண்டதனால்)விடம் பொருந்திய கண்டத்தை உடையவரும்,

நறும் கொன்றை நயந்து—மணம் பொருந்திய கொன்றைமாலையை விரும்பி,

(தரித்தவர் உம்.)—(தலைமேலே அணிந்தவரும்)

ஆளும் பச்சம் உடை அடிகள்—எல்லா உயிர்களையும் ஆண்டு அருள் செய்யும் அன்பு உடையவருமாகிய சிவபெருமானது,

திருப்பாதம்—அருளாகிய இரண்டு அடிகளையும்

பணிவார்—அன்புடன் எப்பொழுதும் வணங்கிக்கொண் டிருக்கிறார்கள்.

விளக்கவுரை :—

அடியார்—அடிமை என்னும் பண்புப்பெயர் அடியாகப் பிறந்த குறிப்பு வினையாலணையும் பெயர். சிவபெருமானுடைய திருவடிகளிலேயே பற்றுவைத்து அவனுக்கும் தங்களுக்குமுள்ள சிறப்பான ஆண்டான் அடிமைத் தொடர்பை அறிந்து தன்முனைப்பறிவு இன்றி அவனது அருளில் அடங்கி ஒழுகுகிறவர்கள் (திருமந்திரம் 2740 செய்யுள் பார்க்க.)

பாவம் இலர்—இனம் பற்றிப் புண்ணியமும் (அறமும்) இலர் என்று கொள்க. அறமும் மறமும் (பாவமும்) கட்டுநிலைக்கு உரியன. கட்டு விடுதி பெற்ற அடியார்கள் அறமற நிலையைக் கடந்தவர்கள். ஆதலின் பாவம் இலர் என்றார். "அறம்பாவமென்னு மருங்கயிற்றால் கட்டி" என்றார் மணிவாசகப் பெருமானார்.

கேடும் இலர்—(இனம்பற்றி ஆக்கமும் இலர்). அறமற நிலையைக் கடந்தவர்களுக்கு அறத்தினால் வரும் ஆக்கமும் மறத்தினால் வரும் கேடும் இல்லையாதலில் கேடும் இலர் என்றார். "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்" என்று அடியார்களைச் சேக்கிழார் பெரிய புராணத்திற் கூறினார்.

நோய்—பிறவித்துன்பம்; இனம்பற்றி இன்பமும் கொள்ளப்படும். நோயும் என்பதில் உம் இறந்தது தழீஇய எச்ச உம்மை.

தாம் உம்—தாம் அடியார்களைக் குறிக்கிறது. உம் அசைநிலை.

நின்றியூரில்—நின்றியூரில் என்ற சொல்லுக்குப் பின் தொக்கு நிற்கிற இருக்கிறவர் என்ற சொல் வருவித்துப் பொருள் உரைக்கப்பட்டது.

நச்சுமிடறு உடையார்—நஞ்சு என்பது நச்சு எனத் திரிந்தது வலித்தல் விகாரம்.

சிவபெருமான் ஆலகால விடத்தை உண்டபொழுது அது கண்டத்தில் நின்றமையால் நச்சுமிடறு என்றார். அவர் நஞ்சமுண்டு உயிர்களைத்

துன்பத்தினின்று காத்தமையின் தம்மைச் சேர்ந்த அடியார்களையும் அச்ச முதலானவை வாராமற் காப்பவர் என்பது குறிப்பிடப்பட்டது.

நறும் கொன்றை நயந்து(தரித்தவர்)—நயந்து என்ற சொல்லுக்குப் பின் அவாய் நிலையால் தொக்கி நின்ற தரித்தவர் என்ற சொல் வருவித்துப் பொருளுரைக்கப்பட்டது. நறுங்கொன்றை நயந்தார்நாம் என்றும் பாடமுண்டு. நாம் என்பதை அசைநிலையாகக் கொள்க.

பச்சமுடை அடிகள்—அன்பு. இது வடமொழிச் சொல். பட்சம் என்று எழுதுதலும் உண்டு. அடிகள் என்ற சொல் விளக்கத்துக்கு செந்தமிழ்ச்செல்வி சிலம்பு 6, 286—290 பக்கங்களும் சிலம்பு 7, 324—326 பக்கங்களும் பார்க்க.

திருப்பாதம் பணிவர்—திருப்பாதம் - திருவாகிய பாதம்; இருபெயரொட்டுப் பண்புத்தொகை, பாதம் பணிதல் என்பது அடியார்கள் தங்களுக்கும் இறைவனுக்கும் உள்ள ஆண்டான் அடிமைத் தொடர்பைச் சிறப்பாக உணர்ந்து அவனுடைய வலது திருவடியாகிய ஞானசத்திக்குள் தங்களுடைய அறிவும் அவனுடைய இடது திருவடியாகிய கிரியாசத்திக்குள் தங்களுடைய செயலும் அடங்கத் தன்முனைப்புக் கெட்டு நிற்றலாகும்.

பணிவார்—இயல்புபற்றி எதிர்காலத்தாற் கூறப்பட்டது. ஏ—அசைநிலை. எப்பொழுதும் பணிகிறார்கள் என்பது பொருள். இலர் என்ற நான்கு சொற்களும் இன்மை என்ற பண்புப் பெயர் அடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்றுக்கள்.

அடியார்—எழுவாய். இலர்—நான்கும் பயனிலைகள்.

தாம்—எழுவாய். பணிவார்-பயனிலை.

சிவபெருமா னருளாலல்லது ஒன்றையும் செய்யாது அவன் அருளில் அடங்கி உலகில் ஒழுகும் அடியார்களுக்கு ஏனையோர்களுக்கு உளவாகும் அறம்மறங்களும் அறமறங்களால் உண்டாகும் ஆக்கக் கேடுகளும் ஆக்கக் கேடுகளா லுண்டாகும் இன்பதுன்பங்களும் அவ்வின்ப துன்பங்களா லுண்டாகும் அச்சமும் இல்லை என்ற உண்மையை இச் செய்யுள் கூறுகிறது. இந்தக் கருத்து "நாமார்க்குங் குடியல்லோம்" என்ற திருநாவுக்கரசு அடிகள் பாடிய தேவாரப் பாட்டிற் கூறப்பட் டிருக்கின்றது. செய்யுளிற் கூறப்பட்ட பாவம் கேடு நோய் அச்சம் ஆகிய இவைகள் முறையே ஒன்றுக்கொன்று ஏதுவும் பயனுமாய் வருதல் காண்க. இவைகள் அனைத்தினுக்கும் காரணம் உயிர்ப்பற்று பொருட்பற்றுகள்.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

கூடுவிட்டுக் கூடு பாய்தல்

(மகிழ்நன் எழுதியது)

கூடுவிட்டுக் கூடு பாய்தல் என்ற சொற்றொடரைக் கேட்டிராதார் பலர் இரார். கூடு என்பது உடம்பு. 'கூடுவிட்டிங் காவி தான் போயினபின்' என்பதில் அஃது அப்பொருளில் வந்தது. இச் சொல் கூண்டு என நின்று அதே பொருளைப் பயக்கும். 'கூண்டோடு கைலாயம் போதல்' என்ற வழக்கால் அது விளக்கமுறும். பூடு; பூண்டு என்பனபோல் கூடு, கூண்டு என்பன ஒரு பொருட் சொற்கள்.

கூடு என்பது பெரும்பாலும் பறவைகளுடன் சேர்த்தாளப் படும் ஒரு சொல்லாகும். பறவைகளைத் தவிர்த்து வேறு உயிர் கட்குங் கூடுகள் உண்டு. நத்தை, சங்கு என்பன கூட்டோடு வாழு முயிர்களே. நத்தைக்கும் அதன் கூட்டிற்குமுள்ள பொருத்தம், குருவிக்கும் அதன் கூட்டிற்குமுள்ள இணக்கத்தை விட மிக நெருங்கியது. குருவி தன் கூட்டைவிட்டு உயிரோடிருத்தல் கூடும்; நத்தைக்கு அது முடியாது. கூடு என்ற வினையிலிருந்து கூட்டு என்ற பிறவினையும் பெயர்ச்சொல்லுந் தோன்றுகின்றன. பெயராக நிற்குங்கால், கூட்டு என்பது 'சேர்க்கப்பட்டது' என்று பொருள்படும். உயிர் வந்தேறும் பொருட்டுச் சேர்க்கப்பட்டது உடம்பாதலின், அதைக் கூடு என்பது தகுதியே. யாக்கை என்ற சொல்லும் அப்பொருளே பயப்பது நோக்கத் தக்கது. கூடு விட்டங் காவி போகுநாளில், செத்த சங்கை ஊதும் வழக்கந் தமிழ் நாடெங்கு முண்டு. சங்கிற் கூடிநின்ற உயிர் பிரிந்து கூடுமாத்திரம் தனித்திருப்பதற் கிணங்க, மக்களுயிர் பிரிந்து போக உடல் கிடக்கின்றதென்பதைக் காட்டுவதற்கு இஃதோர் அறிகுறிபோலும்! சங்கினுட் புகுந்து ஓசை உண்டாக்கி வெளியே செல்கின்ற காற்றைப்போல் உடலிற் புக்கிருந்த உயிர் சிறிதுகாலம் அதன் வழியாகத் தொழிலியற்றி நீங்குகின்றது.

> 'குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
> உடம்போ டுயிரிடை நட்பு.'

என்ற குறட் கருத்து சங்கோசையில் தொனிக்கின்றது. மேற் காட்டிய குறளில் குடம்பை என்பதற்குக் 'கூடு' என்ற பொருள்

ஒவ்வாதென்று பரிமேலழகியார் விலக்கினர். குடம்பைக்கு முட்டை என்று பொருள் கொண்டாலும், கூடு என்ற கருத்து ஒழிந்தபாடில்லை. எவ்வாறெனின் முட்டை என்பது கரு, வீடு என இரு பகுதியாய் நிற்பது. கரு முதிர்ந்து உயிர் வெளிப்படும் பொழுது வீடுடைந்து கிடக்கின்றது. நிற்க.

ஒருயிர் பல்லுடம்புகளில் அடுத்தடுத்துப் புகுந்து நுகர்ச்சி எய்தி வீடு அடையும்; அல்லது பிறவிச் சுழலிற்பட்டு உழன்று கொண்டேயிருக்கும் என்பது இந்நாட்டில் தோன்றிய எல்லாக் கொள்கையினராலும் ஏற்றுக்கொள்ளப் படுவதாகும். அடுத் தடுத்து ஒருயிர் உடம்பு பெறுவதைக் கூடுவிட்டுக் கூடு பாய்தல் என்பதமையும். உடம்பழியாதே வீடு பெற்றாரு முளர் என்பர். ஆனால், ஈண்டு இவற்றை ஆராய்வது நமது நோக்கமன்று.

'கூடுவிட்டுக் கூடுபாய்தல்' என்பது ஒருடம்பில் நின்ற உயிர் அதிலிருந்து முடிவாக நீங்காது வேறுடம்புகளுக்குச் சென்று மீள்வதைக் குறிக்கவே ஆளப்படுகின்றது. இக்கருத்து இந்தியா வில் மட்டுமன்றி வேறு நாடுகளிலுங் காணப்படுகின்றது. ஒருடல் மற்றோருடலாய் மாறுவதை ஆங்கிலேயர் (Metamorphosis) என்பர். பல்லுருவங்கொண்டு திரிகின்ற உயிர்களைப்பற்றிச் சொல்லுகின்ற கதைகள் எல்லா நாடுகளிலும் உண்டென்றே கொள்ளலாம்.

'மற்றொரு சரீரத்திலும் புகுதலாம்'

என்றார் தாயுமானார். இஃது எப்படி நிகழுமென்பதை ஆராயுந் திறமை நமக்கில்லை. இதையொட்டி ஒன்று மாத்திரங் கூறுதல் ஈண்டுச் சாலும். சில மக்கள் தமது தோற்றத்திலுஞ் செய்கை யிலும் நரி, கோநாய், நச்சரவம், பன்றி முதலிய விலங்குகளை ஒத்திருக்கின்றனர். சில விலங்குகளும் பறவைகளும் தாம் காட்டு கின்ற அன்பினாலும் அறிவினாலும் நன்மக்களை யொத்திருக்கின் றன. சிறு குழந்தைகளாக இருந்தபொழுதே கோநாய்களால் காட்டிற்கு எடுத்துக்கொண்டு போகப்பட்டு அவைகளோடு வளர்ந்த சில பிள்ளைகள், கோநாய்களைப்போலவே கைகளையுங் கால்களையும் ஊன்றி நடக்கவும் பச்சை இறைச்சியை உண்ணவும் கற்றுக்கொண்டனரென்று அறிகின்றோம். இவர்களை மறுபடியும் மக்கள் ஒழுக்கத்திற்குக் கொண்டு வருவது மிக அரிதாயிற்றாம்.

உயிர்கள் பல்வேறு உருவங்களும் தன்மைகளும் வாய்ந்து விளங் குவனவேனும் அவற்றிற்குள் ஒற்றுமை யுண்டென்பது தெளிவு.

ஒரு குருவியைப் பிடித்துக் கூண்டில் அடைத்துச் சில ஆண் டுகள் வளர்த்து வருவோமாயின் அடைபட்டுக் கிடக்கும் அந் நிலையே பழக்கத்தின் பயனால் அதற்கேற்ற நிலையாகி விடுகின்றது. தானே இரை தேடிக்கொள்ளாது மக்களிடமிருந்து உணவு பெறவே அது நாடுகின்றது. விண்ணிற் பறந்து நினைத்தவிடஞ் செல்லும் உரிமையையும் உவப்பையும் நாளாவட்டத்தில் அது இழந்து போகின்றது. இந்நிலையில் அதை நாம் வெளியே போக விட்டாலும் அது கூட்டிற்கே விரைந்து திரும்புவதை நாம் காண லாம். கூட்டிலடைபட்ட குருவி யொன்றை அதன் இனத்தைச் சேர்ந்த மற்றொரு பறவை கண்டு அருகே வந்து, "நண்பா, நீ கூட்டிலிருந்து வெளியே வந்துவிடு; நாமிருவரும் மகிழ்ச்சியோடு பறந்து திரிந்து விரும்பிய உணவை யுண்டு வாழலாம்" என்று கூற, கூட்டிற்குள்ளிருக்குங் குருவி, "போ, போ; நான் வரமாட் டேன். இங்கே எனக்குச் சற்றும் வருத்தமின்றி வேளைக்கு வேளை உணவு கிடைக்கிறது. பெரிய பறவைகள் ஒன்றும் வந்து என்னைத் தாக்குவதில்லை. இங்கிருக்கவே நான் விரும்புகின்றேன்," என்றிந்த வகையில் விடை யளித்ததாக, கவி இரவீந்திரநாத தாகூர் ஓரிடத்தில் நவில்கின்றார். பழக்கங் கொடிது. உடம்பாகிய கூட்டிலடைபட்ட மக்கள் உயிரும் மேற்குறித்த குருவியைப் போலவே, தனது பழைய அழகிய பெரிய நிலையை மறந்து கட்டுண்டு கிடக்க விழைகின்றது. பழக்கத்தின் பயனால் விடுதலை (முத்தி) பெறுவதை உயிர் அஞ்சுகின்றது.

நீண்டநாள் சிறையிலிருந்து வெளிவந்த ஒருவன், தானடைந்த விடுதலையின் அருமையை அறியக் கூடாதவனாய் அங்குமிங்குஞ் சிலநாள் திரிகின்றான். பண்டமாற்றம், பயிர்த்தொழில், சேவ கம் முதலிய துறைகளில் ஈடுபட்டுப் பிழைப்பியற்ற இயலாதவ னாய் இத்தகைய மகன் யாதாயினுமொரு குற்றஞ் செய்து தன் பழைய சிறை யிருப்பையே நாடிச் செல்லத் தூண்டப்படுவது முண்டு. வலிய ஒருவன் சிறை யிருப்பைத் தேடிக்கொள்வானோ என்று சிலர் ஐயுறலாம். விடுதலையடைந்த கைதிகளுடன் பழக்க முடையவர்களை வினவிடின் உண்மை விளங்கும். இஃதொப்பவே கட்டுண்டிருப்பதே இனிய நிலை என்று உயிர் மயங்கிக் கிடக்கின்

றது. இறைவன் வழி நிற்றலாகிய விடுதலை (முத்தி) நிலை, எண்ணிறந்த உயிர்களால் அஞ்சி விலக்கப்படுகின்றது. கூடுவிட்டு வீடு பாய்தல்வேண்டும்.

இதுகாறும் உடம்பைக் கூடென்று கொண்டோம். வேறு கூடுகளுமுண்டு. நன்னெறிக்கு முரண்பட்ட ஒரு துறையில் உயிர் சிக்குண்டு கிடத்தலும் கூட்டி லடைபடுவதை யொக்கும். பல்வகை நுகர்ச்சிகளால் தேர்ச்சிபெற்று முதிர்ந்து உயரச் செல்லவேண்டிய உயிர், அவா, வெகுளி, மயக்கம் ஆகியவற்றில் மூழ்கிக் கிடக்குமாயின், அது கட்டுப்பட்டதன்றோ? இரவும் பகலும் வேறு நோக்கமின்றிப் பணத்தின் பொருட்டே பணந்தேடும் ஒருவனின் நிலை எத்தன்மையது? இத்தகைய ஒருவன் எதில் தன் கருத்தைச் செலுத்தினாலும் "இதனால் யான் பெறக்கூடிய ஊதியமென்ன?" என்றே கேட்பான். அரிய ஓர் ஓவியத்தை அவன் பார்ப்பானாயின் அதன் சிறப்பைக் கண்டு மகிழாது, "இதை எவ்வளவிற்கு வாங்கி, எவ்வளவிற்கு விற்கலாம்?" என்று நினைப்பான். ஓவியத்தின் அருமையை அவன் விலையைக்கொண்டு மதிப்பிட முடியுமேயன்றி வேறு வகையில் உணரமுடியாது. எல்லாவற்றையும் இவன் செல்வமாகிய கூட்டிற்குள்ளிருந்துதான் பார்க்கமுடியும். மினுக்கான வாழ்க்கை சிலர்க்குக் கூடாகின்றது. ஊண் என்ற கூட்டிற் புகுவாரு முண்டு. செல்வம் நல்லதுதான். நல்லாடை யுடுத்து மகிழ்வது தவறன்று. இனிப உணவை விரும்புவது இழுக்காகாது; ஒவ்வொருவனுக்குஞ் சிறிது பெருமையுண்டு. வெறுக்கத்தக்கது யாதெனின், வாழ்க்கையின் ஒரு பகுதியில் உளத்தைச் செலுத்தி அதற் கடிமையாவதுதான். இது வலியச் சிறைபிற் புகுவதை யொக்கும். அடைபட்டுக் கிடக்கும் நிலைமையே அடிமைத்தனமாகும். மேற்கூறியவற்றில் உளத்தைப் புகுத்தி அதனின்றும் வெளிவாராது கிடப்பவர்கள் அடிமைகளென்பதில் ஐய முண்டுகொல்? உடம்பில் நின்ற உயிர், காலம், இடம் என்பவற்றால் பிணிக்கப்பட்டிருப்பது போதாதென்று தீராத ஆவல்களாகிய உட்கூடுகளில் அதைச் சிறை யிருக்கச் செய்தல் அந்தோ! இரங்கத்தக்கது.

வாழ்க்கையாகிய பரந்துயர்ந்த மாளிகையில் இனிதுறைய உரிமை பெற்ற மகன் பண வறையிற் சென்று தாளிட்டுக் கோடலும், பள்ளி யறையே துறக்கமென ஆண்டுக் கிடத்தலும், உண்ணுமிடமே உலகமென மதித்தங்கிருத்தலும், அனைத் தின்ப

மும் அந்தப்புரத்திலே பெறலாமென்று மயங்கித் திரிதலும், தன்னைத்தான் சிறைப்படுத்திக் கொள்வதன்றி வேறு யாது? வாழ்க்கையின் ஒரு பகுதியிற் சிக்கிக்கொள்வதால் நம்மை நாமே வறிஞராக்கிக் கொள்கின்றோம். கூடுவிட்டுக் கூடு பாய்ந்து, தொட்டும் தொடாமலும் பட்டும் படாமலும் வாழ்க்கை நடாத்தப் பயிலல் வேண்டும்.

இனி, மற்றொரு வகையான கூட்டைப் பார்ப்போம். மக்களிற் பெரும்பாலோர் தமக்கென வாழ்வோரல்லர். ஈன்றார், மனைவி, மக்கள் உறவினர் பொருட்டு அல்லும் பகலும் பாடுபடுவோரே மக்களிற் பெரும் பகுதியினராவர். ஆனால், இஃதுடன் நின்றுவிடுவது கூட்டிலடைபடுவதே யாகும். இக்கூடு முன் சொல்லப்பட்ட கூடுகளைக்காட்டிலும் விரிந்ததாகும். ஆயினும், கூடு கூடே. ஈன்றாரைப் போற்றாமலும், மனைவி மக்களைக் காப்பாற்றாமலும், சுற்றத்தைப் பேணாமலும் வாழும் வாழ்க்கை வாழ்க்கையன்று எனினும், 'பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரம் பொரு'ளுடன் தொடர்புடைய ஓர் உயிர் தந்தை தாய் தமர் தார மென்னும் வரம்பிற்குட்பட்டு, ஆண்டு மாத்திரம் இயகுவது அதன் தன்மைக் கொரு குறையாகும் என்பது விளம்பாது பெறப்படும். விசும்பில் எழுந்து பாயும் ஆற்றல்பெற்ற அலங்குளைப் புரவி யொன்றைப் பிடித்துப் பொதி சுமக்குந் தொழிலுக்குப் பயன் படுத்தல் அழகிதோ? பொதி சுமத்தல் இழிவன்று; குடும்பச் சுமைதாங்குதலும் இகழ்ச்சி யன்று. பொதி சுமப்பதால் விண்ணிற்பாயும் பரி, தன் வியத்தகும் ஆற்றலை இழந்திட நேருமாயின் என்னாம்? குடும்பக் கூட்டிலிருந்து வெளிப்படாவகை உயிர் அடங்கிடுமாயின் எழில் பெரிய அண்டங்கள் பலவற்றை ஊடுருவிச் சென்று இறைவனைப் பற்றும் அதன்பெற்றி அழியுமன்றோ?

சென்ற ஆண்டு காந்தியடிகள் பிறந்த நாள் கொண்டாட்டத்தன்று கவி இரவீந்திரநாத தாகூர், "சாதாரணமாக மக்கள் தமது உறவினராகிய ஒடுங்கிய விட்டத்துட் பிறந்து இறக்கும் நாளளவும் அதற்குள்ளேயே வாழ்க்கை நடாத்துகின்றார்கள். ஆனால், மேன்மக்கள் தங்களுடைய வாழ்க்கையால் இவ் வெல்லைகளைக் கடந்து எல்லோருடைய உள்ளத்திலும் இடம் பெறுகின்றனர்" என்று பேசினர்.

(தொடரும்)

ஊனருட் பயன்

[சிவகங்கை நா. பரிதிமலே]

(அருணுசலன்)

முன் கசுக - ம் பக்கத் தொடர்ச்சி.

தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிதுயிரை வருத்துங் கொலேஞர்களே!

"கொன்ருல் பாவம் தின்ருல் போச்சு"

என்னும் புன்மொழியைக் கேட் டின்புரு தொழிக. அன்றேல்,

"கொல்லிடி குத்தென்று கூறிய மாக்களே
வல்லிடிக் காரர் வலிகயிற் ருற்கட்டி
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடு மென்று நிறுத்துவர் தாமே"

என்னும் திருமந்திரத்துக்கு இலக்காவீ ரென்றுணர்க.

"கொன்ருன், கொலேயை யுடன்பட்டான், கொடாது
கொன்றதனைக் கொண்டான் கொழிக்குங்காற்—கொன்றதனே
அட்டான், இடவுண்டான், ஐயவரினும் ஆகுமெனக்
கட்டறிந்த பாவங்கருது" (சிறுபஞ்ச மூலம்) என்றும்,

"அலேப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்,
விலேப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்;
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலேப்பாலுங் குற்றமே யாம்" (நான்மணிக்கடிகை)

என்றும் அறுதியிட்டுக் கூறும் அறநூல்களேக் கற்றுத் தெளிவீராயின் இவ்வண்ணங் கூறுவீர்கொல்! இத்துணே யினிமையாக வளர்த்த நம்முயிர் இயமன்கைப் படிற் கருப்பஞ் சாறெனப் பேணிவளர்த்த நம்முடலேக் காக்கையும், கழுகும், மண்ணும், புழுவும், அழலுமன்ருே தின்று கொழுக்கும். நீவிர் மண்மேற் பிறந்தநாள் தொடங்கிப் பிறவுயிர்க் கிரங்காது ஊனேத் தின்றூனேப் பெருக்கி உவந்திருந்ததாற் பெற்ற பயனென்ன? அன்பர்களே! நம்முயிர் உடலினின்று எஞ்ஞான்றும் நீங்காதினிது வாழ்வோமெனுந் துணிவுடையோராயின், நமது கொள்கையை மேற்கொண்டொழுகுவீராக; அன்றேல், இன்னே யொழித்தருள்க.

குட்டித் தெய்வங்கட்குக் குட்டி வெட்டும் கொலைஞர்களாம் பூசாரிகளே! உங்கள் குல தெய்வங்களாம் காளி கருப்பண்ணன் மீது மீளாப் பழியைச் சுமத்தா தொழிக. குட்டி வெட்டும் பூசாரியாம் நமக்குத் தலையையும் கால்களையும் காணிக்கையாகச் செலுத்தி விடல் வேண்டும். பயன் கருதிப் பலியிட வரும் அன்பர்கட்கோ முண்டத்தைக் கொடுத்துவிடல் வேண்டும். குட்டித் தெய்வத்தை யடுத்திருக்கும் வண்ணார் நாவிதருக்குக் குருதியுங் குடலும் கொடுத்தல் வேண்டும். குட்டியின் மேற்றோலை விலை கொடுத்து வாங்குவதற்குத் தோல்வாய்க்கார ரொருவரும் வந்து காத்து நிற்பர். குட்டி வெட்டுதற்கு முன்பே அவ்வவர்மனையின் அடுப்பில் அவற்றை யடுதற்கு வேண்டும் சட்டிகளும் காய்ந்து கொண்டிருக்கும். இந் நிலைமையில் உங்கள் சுடலை வீரனுக்குக் கிடைப்பதென்னே? அவன் பெயரைச் சொல்லி யலைத்திடும் உயிரின் அடங்காப் பழியன்றோ? நீவிர்கெட்டொழிவது மன்றி நமது சிறு தெய்வங்கட்கும் பெரும்பழியைச் சுமத்துகின்றீர்கள். ஈதோ நுங் கூப்பாட்டினழகு! நன்று! நன்று!! இஃது, நீராடச் சென்று சேற்றிடை முழுகியதையன்றோ வொக்கும்? அது கிடக்க; நுங்குல தெய்வங்கட்குக் குட்டிகளை வெட்டிக் குட்டிக் கருப்பண்ணனைக் கூவியழைப்பதேனோ? அத்தெய்வங்களிடத்தில் அருள்பெற வேண்டியே யன்றோ? சிற்றுயிராம் கருங்கடாய் கருங் கோழிகளிடத்தும் இரங்குந் தன்மை யில்லாத இக்கொடிய பேய்த்தெய்வங்களோ நமக்கு அருள்செய்யா நிற்கும்? நுமது தெய்வங்கட்கு ஆடுகளும் கோழிகளுங் கூடக் கருநிறத்தனவாய்ப் பலி யிடவேண்டுமே யன்றி வேறு நிறங்களில் தனக்கு விருப்ப மில்லையெனப் பூசாரிகளின் வாயிலாகக் கூறுவதிலிருந்தே அத் தெய்வங்களின் உளப்பான்மையும் குன்றின் மேலிட்ட விளக் கெனப்புலனாகிறதன்றோ? நள்ளிருள் போன்ற எண்ணங்கொண்ட நுமது தெய்வங்களே அவ்விருளினின்றும் மீண்டு பேரொளியைக் காணப் பெறாது திகைத்து நிற்கும் திண்டாட்டநிலைமையில் நீவிரும் சென்று தொட்டியத்துச் சின்னையா தொடர்ந்த வினைகளைத் துடைப்பாயெனத் தொடைதட்டித் தோன்றி நிற்பீராயின் நும் மீதும் சீற்றங் கொள்ளாதொழியுமோ? நும்பேதை யறிவின் பிழைபாடென்னே! என்னே!! அதிலும் செவ்வாய்ப் பொங்கல் நெருங்கிவிட்டால் சிறு தெய்வங்களை வழிபடுவோர்க்குக் கொண்

டாட்டமும் சிற்றுயிர்களின்பாடு திண்டாட்டமுமாக மாறுதலடைகின்றது. அதுபோழ்து ஓராயிரம் ஆடுகளானாலும் ஒவ்வொன்றையும் ஒரே வெட்டில் இருகூறுய்த் துணித்துவிடல் வேண்டுமாம். நெஞ்சந் துளங்கா நினைவினையுடைய நெடு மரங்களாம் பூசாரிகளே! நும்மனம் கல்லோ இரும்போ காண்கிலேம். அம்மவோ! இக்கொடிய நிகழ்ச்சியினைக் கண்டன்றோ அருள் வடிவாம் இராமலிங்க அடிகள்,

"நலித்துறு சிறிய தெய்வமென், றையோ
நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதரஆடு பன்றிக் குட்டிகள்
பசுக்கடா முதலிய வுயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவுங் கண்டே
புந்தி நொந் துளநடுக் குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெங் கோயில்
கண்ட காலத்திலும் பயந்தேன்"

என்று பதைபதைத்துக் கதறுகின்றார்? இதைக் கேட்டேனும் நுமது பாழுமனம் துளங்காதோ? ஐய, வீணே கெட்டொழிய வேண்டாம்.

"சார்பிலோருக் குறுகொலை யெளிது" (முதுமொழிக் காஞ்சி)

என்பவாகலின் இனியேனும் நல்லினஞ் சேர்ந்து அவாது நன்மொழி கேட்டமைதியுற்று,

"இக்காய நீக்கி யினியொரு காயத்திற்
புக்குப் பிறவாமற் போம்வழி தேடுமின்" (திருமந்திரம்)

இனி, ஊன்தின்று உழல்வாரையும் ஊக்குவாம். இன்னோர் அறிந்தோர், அறியாதார், அறிந்து மறியாதார் என் மூத்திறப்படுவர். அறிந்தோராவர் புலான் மறுத்தலிற் பயனுளதெனப் பகுத்துணர்ந்தும் முன் வினைப்பயனால் ஊன்றின்னுங் குலத்திற் பிறந்தோமேயெனத் தமது ஊழ்வினையை நினைந்து வருந்துவர். இவரது செயல்,

"ஊனுண் டுயிர்கட் கருளுடையே மென்பானும்
தானுடன் பாடின்றி வினையாக்கு மென்பானும்
காமுறு வேள்வியிற் கொல்வானு மிம்மூவர்
தாமறிவர் தாங்கண்ட வாறு" (திரிகடுகம்)

எனக் கூறும் நல்லாதனாரின் நன்மொழியோடு நேர்படுவதாகும்.

நல்லுணர் வுடையீர்! உயர்குலத்தோரன்றி யிழிகுலத்தினர் பொல்லாப் புலாலைப் புசித்தல் சாலத் தகுமெனக் கூறும் தமிழ் நூல்களு முண்டோ? நீவிர் கருதுவதுபோல உயர்வு தாழ்வென வெவ்வேறு வகைப்பட்ட பயனிலவாஞ் சாதிப் பூசலைத் தழைப்பித்தவர் வந்தேறிகளோ; அன்றி பழந் தமிழ்க் குடிகளோ? ஒருவர்க்கு ஒழுக்கத்தால் உயர்வு தாழ்வு வந் தடுப்பதன்றிப் போலிச் சாதிப் பிரிவாற் கூறுவது முண்டோ? இக்கூற்றும் அறிஞர்க் கழகாமோ? அங்ஙனமாயின்,

"பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

எனுந் தமிழ்மறை யென்னுமோ? கூறுமின். தூய உணவை யுட்கொள்ளுதலினால் ஊழுங் குலமும் நமக்கியற்றுந் தீங்கென்னையோ? பாழும் நாவிற் கடிமைப்பட்டேமாகப் பல்லுயிர்க் கிரங்கிற்றிலேமெனப் பகர்தலை விடுத்துப் பிறிதொன்றன்மேற் குறை யேற்றுவித்தல் பூனை கண்மூடிப் பால் குடித்தலையன்றோ வொக்கும்?

"பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண வியமன்றன் றூதுவர்
செல்லாகப் பற்றிய தீவாய் நரகத்தின்
மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பாரே"

எனப் புலாலுண்போ ரனைவரும் புலையரினத்தைச் சார்ந்தவராமென ஒருபாற் கோடாமல் நடுநின்றுணர்த்தும் திருமூலனார் திருவாக்கைக் கண்டேனும் தெளிவடைந்து நல்வழிப் புகுவீராக. அதுகண்டு நாவெனுஞ் செவிலி நம்மீது நகைச்சுவை ததும்ப நின்று "இவட்குற்ற தறியேமாகலின், இஃதொழியுமாறு அகமா மணங்கிற்கு வெறியாட்டு விப்ப"லெனத் துணிவளாயின், அதுகண்டஞ்சி யவள் வயப்படாமல் அறிவாந்தோழியோ டறத்தொடு நிற்க. எங்ஙனமோவெனின், அறிவாந் தோழியை விளித்து "யாமுன் பொருநாள், செந்தமிழ்ச் செல்வியாம் கடற்கரையிடத்து வண்டல் செய்து விளையாடா நின்றேமாக, அதுபோழ்து "ஊணருட்பயன்" எனுமோர் தோன்றல் நம் வண்டல் மனைக்கு யாம் விருந்தென்று வந்து நின்ற ஞான்று, அதுகண்டு நீ தொழிலாம் பொழிலினிடத்துப் பூக்கொய்யச் சிறிது புடைபெயர்ந்தாய் அந்நிலைமைக்கண் தென்காற்று மிகுதலாற் "கூற்று" எனுங் கரை

மேலேறுங் கடல் மேல்வந்துற்றது; உற, யான்றேழியோ தோழியோவென்று நின்னை விளித்தேன். அதுகண்டிரங்கி அவனருளொடு வந்து தன் கையைத் தந்தான்; யானு மயக்கத்தாலே யதனை நின் கையென்று தொட்டேன். அவனும் பிறிதொன்றுஞ் சிந்தியாது என்னுயிர் கொண்டுதந்து, என்னைக் கரைக்க ணுய்த்துப் போயினன்; அன்று என் நாணினல் நினக்கதனைச் சொல்ல மாட்டிற்றிலேன். இன்று இவ்வாறுயினபின் கூறினேன்; இனி நினக்கடுப்பது செய்வா" யெனக் கூறுவிராயின், அவ்வறிவாந் தோழி நாவாஞ் செவிலிக்குக் கூற, அன்னாளும் வயிறெனும் நற்றுய்க்குவிளக்கி நும் முனைப்பையும் இனிது முடித்து வைப்பாளென்றோர்க.

அறியாதார் என்போற் கல்வியறிவில்லாரே யாவர். அவரிடத்து ஐய! ஊன் புசித்தலை யொழித்தருள்மின்; அதனுற் பல்கோடி யுயிர்கள் ஏதுவின்றி மாண்டொழிகின்றன. பாவத்திற் காளாகாதீர்களெனப் புகட்டுவான் புகின், போம் போம் நமக்குத் தெரிந்த திதுபோலும், கடவுள், ஆடு கோழி முதலிய விலங்கினங்களை எமது உணவின் பொருட்டன்றே படைத்துத் தந்திருக்கின்றனன்? அது கிடக்க, நீவிர் மரக்கறி யுணவையும் பால் முதலியவற்றையும் உண்ணுதொழிவீரோ? அஃதும் கொலை செய்தற் கொப்பாகாவோ? நீவிர் சாற்றை யுட்கொள்கின்றீர் யாம் சக்கையைத் தின்கின்றோம். இதனல் வருந் தீங்கென்னையோ வென அறிவுறுத்தச் சென்றோரையே எள்ளனஞ் செய்யாநிற்பர். இம் முழு மக்கட்கு உரையளவையான் விளக்கிக் காட்டப் புகல் செவிடன் காதிற்பட்ட சங்கொலியாக முடியுமாதலான் அவரது காட்சியளவானே விளக்குவாம். (தொடரும்)

நாடகத் தமிழ்

(திரு. K. சிவராமகிருஷ்ண நாவலர் அவர்கள்)

தமிழ்மொழியிற் செய்யுணூல் மூவகைப்படும். அவை யாவன: இயல், இசை, நாடகம் என்பனவாம். இவ்வகை நூற்களில் இயல் நூற்களே மிகுந்திருக்கின்றன. மற்றை நூற்கள் மிகவும் குறைந்திருக்கின்றன. பிறமொழிகளில் இசை நூற்களும்,

நாடக நூற்களும் எண்ணில்லாதன உள்ளன. இயலும் இசையு மின்றி நாடகம் இயங்காது. இயலிசை நூற்களின் வளர்ச்சிக் கேற்ப நாடக நூல் வளரும். ஆதலின், தமிழின் இசை நூற் குறைவும், நாடக நூற் குறைவிற்கு ஏதுவாம். நாடகமாவது, உலக நிகழ்ச்சியைக் காட்டி, அதனோடு தொடர்புடைய உண் மையை விளக்குதலாம். இவ்வியல்புடைய நூற்களாலேயே உலக மக்கள் ஒழுக்கமுடையராதல் கூடும். கற்றவர்க்கேயன்றி, கல்லார்க்கும் இன்பம் பயக்கும் இசையாலும், எளிய சொல்லா லும் ஒழுக்கத்தின் விழுப்பத்தை ஓவியம்போன் றெழுதிக் காட் டித் தெள்ளிதில் விளக்குவது நாடகமேயாம். பேரறிஞர் உலகி னுண்மைகளைக் கருத்தோடுஞ் சிந்திப்பர். அவ்வாறு சிந்திப்பதற் குரிய பொழுதும் அவர்கட்கு இயல்பிலே அமையும். அல்லாத வரோ உலக உண்மைகளை அவ்வாறு சிந்தியார். அதற்குரிய பொழுதும் அவர்கட்கு இயல்பிலே அமைவதில்லை. எதனு லெனின், அவர்கள் தம் தொழில் முயற்சியிலேயே பொழுதெலாங் கழிப்பர். அவரது உழைப்பா லிளைத்த மனத்திற்கு, அளவில்லா இன்பத்தை இசையாலும், எளிய சொல்லாலு மளித்து அரிய உண்மைகளை அறிவுறுத்தற்கு நாடகமே தகுதி உடையதாம். இய லும், இசையும் தம்மைக் கற்பார்க்குக் கேள்வி இன்பத்தைப் பயக் குமே யன்றிக் காட்சி இன்பத்தைப் பயப்பதில்லை. ஆயின், நாட கமோ கேள்வி இன்பம் காட்சி இன்பம் என்னும் இருவகை இன் பத்தையும் பயக்கின்றது. இதுபற்றியன்றோ வேற்றுமொழிக் கவிஞரெல்லாம் நாடக நூல் இயற்றுவதையே பெருமையாகக் கொண்டனர்? இவ்வியல்புடைய நாடக நூற்கள் மிகுந்திருந்த காலம் தலை இடை சங்கங்களின் காலமேயாம். அந் நூற்களுள் சிலவற்றின் பெயர்கள் மாத்திரம் அறியப்படுகின்றன. அவை யாவன: "பரதம்" "அகத்தியம்" "முறுவல்" "சயந்தம்" "குண நூல்" "செயிற்றியம்" "மதிவாணர் நாடகத் தமிழ்" முதலியன வாம். தமிழ் மொழியின் நாடகத் தோற்றத்தின் காரணம் மதத் தொடர்பாம். அம்மதத் தொடர்பாவது- விழாவின்கண் ஆடல், பாடல் எனு மிரண்டினையும் உடன்சேர நிகழ்த்துதலாம். சில காலம் கழிந்தபின் கதை நடையாம் மனப்பாடங்கள் தோன்றின, அதன்பின்பு பாவகையோடு உரைவகையும் சேர்ந்தது. பின்பு நாடகம் வேத்தியல், பொதுவியல் என்னும் இருவகையாய் அரசர்

களாலும், பிறராலும் போற்றப்பட்டது. கி-மு. மூன்றும் நூற்றுண்டாயினும், அன்றி அதனது சிறிது முற்பட்ட காலமாயினும், நாடகம் சிறந்திருக்கவேண்டும். ஏனெனில் சிறப்புடைய பல நாடக நூற்களும் ஆக்கப்பெற்ற காலம் அக்காலமேயாம். இங்ஙனம் மொழிவது நாடக இயலார்க்கும் ஒப்புடையதேயாம். முதலில் நாடகம் பேரறிஞர்களால் போற்றப்பட்டிருத்தலான் இழிவுடையதென்று ஒருவராலும் நீக்கப்படவில்லை என்பது விளங்கும். இவ்வாறு சிறப்புடைய நாடக நூல் வளர்வதின்றி வீழ்வுறக் காரணம்யாது? நல்லொழுக்கம் வகுத்த ஆரியரும், சைனரும் நாடகங் காண்பதால் காமமேயாவர்க்கும் விளையுமென நாடெங்கும் இகழ்ந்துரைத்தனர். அக்காலத்தில் ஆண்ட அரசரிடமும் அதனைக் கூறி நாடகத்தை அழித்து விட்டனர். இல்வாழ்க்கையையும் தீயொழுக்கமெனக் கூறும் சமணர் நாடகத்தை யாங்ஙனம் போற்றுவர்? இவ்விடையூறின் நிமித்தம் நாடகநூல் வீழ்வுறத் தொடங்கியது. அந்தோ! நாடக மழிந்தது! நாடக நூற்கள் ஓடி ஒளித்தன! நாடகக் காட்சி வீழ்ந் தொழிந்தது! இன்றும் நம்மவிற் பெரும்பாலர் நாடக மிழிவுடைய தென்றே நினைப்பவராவர். நாடகமெனின், இவர்கள் நகைக்கின்றனர். நடிகரை ஒழுக்கமில்லாதவ ரென்கின்றனர். இவை எல்லாம் ஆரியர், சமணர் என்னும் இரு புல்லறிவாளர் கூட்டங்களால் விளைந்தனவாம். முற்கால நாடக நூற்களுள் "சிலப்பதிகாரம்" என்னும் ஓர் நூலே இப்போதுளது. திருவனந்தபுரம் சுந்தரம் பிள்ளை (M.A.) அவர்களால் "மனோன்மணீயம்" என்னும் ஓர் சிறந்த நாடக நூல் சில வருடங்களின்முன் இயற்றப்பட்டது. வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் (B.A.) அவர்களால் "நாடக இயல்" என்னும் நாடக இலக்கண நூல் ஒன்றும் இயற்றப் பெற்றுளது. யானும் "அமுதவல்லி" என்னும் நாடக நூலை ஆக்கியுளேன். அஃது இன்னும் அச்சுறப் பெறவில்லை. "நாடகம் என்னுஞ் சொல் வடமொழிச் சொல்லாதலின் தமிழில் நாடகம் எனப்படுவதில்லை" யெனவுஞ் சிலர் கூறுவர். யான் "நாடகம்" என்னுஞ் சொல் தமிழ்ச் சொல்லென்றே கூறுகின்றேன். நாடகம் (நாடு + அகம்) நாட்டகத்தின் நிகழ்ச்சிகளை விளக்குவது. இப்புதிய பொருள் அறிஞர்க்கு வியப்பை ஊட்டுமாயினும், அன்னார் உண்மை யிஃதென்தே அறியக் கடவர். நாடக இலக்கண நூற்களும், நாடக இலக்கிய நூற்

களும் எண்ணில்லாதன தோன்றப் பெறுதல்வேண்டும். தமிழறிஞரும், தமிழ்க் கவிஞரும், நாடகக் கலை நூற்கள் புத்தம் புதியன நித்தமும் இயற்றுவாராக. நாடகமே நாடகமாக.

தமிழ் மொழியின் ஒலிகளும் எழுத்தும்

[ஈப்போ. திரு. தியாகராயன் அவர்கள்]

(௩௨௫-வது பக்கத் தொடர்ச்சி)

ஆங்கில உயிரெழுத்துக்களின் வரிசை அமைப்பு

Arrangement of Vowels in English

இக்காலத்தில் ஆங்கில உயிரெழுத்துக்கள் கிரமமின்றி சிதறிக் கிடப்பினும் கிறிஸ்து பிறப்பதற்கு 1200 வருஷங்களுக்கு முன் உயிரெழுத்துக்கள் ஒரே வரியிலும், ஏறக்குறைய தமிழ் முறையிலும் அமைக்கப்பட்டிருந்தன.

இதை அடியில் வருமாறு L. A. Waddell என்பவர் எடுத்துக் காட்டியுள்ளார்.

Cadmean Phoenician					Roman				
Vowels.	Labials.	Gutterals.	Dentals.	Nasals	Vowels.	Labials.	Gutterals.	Dentals.	Nasals.
A	B	G	D		A	B	C	D	
E	F	ZH	Th	LMNXS	E	F	GH		
I		K			I		K		LMN
O	P SL	Q.R. S.T.			O	P	Q.R. S.T.		
U		X			U (V)	W	XY	Z	

" This appears to indicate that originally the letters were arranged for learners in perpendicular rows, according to their phonetic class qualities, and that later on they were read transversely across the board which gave them the apparently capricious and irregular order in the modern alphabet."

(Vide-Aryan Origin of the Alphabet by L. A. Waddell, Chapter on the Order of the Alphabet-page 59.)

ஆய்தம்

இது தனியெழுத்து. ஆங்கில மொழியிற் கிடையாது. இது உயிர் மெய் இரண்டின் புணரொலி. அதாவது motion, barrier என்னும் இரண்டு இயக்கமும் இவ்வோசையி லுள. ஆகையால் இவ்வெழுத்து உயிரெழுத்திற்கும் மெய்யெழுத்திற்கும் இடையில் வைக்கப்பட்டது. இவ்வெழுத்தை நன்றாய் உச்சரிக்க இவ்வுண்மை விளங்கும்.

Consonants

மெய்

"Interruption of breath or voice by complete contact or compression, by approximation of the organs of the mouth, produces consonants, so-called because they have no sound of their own but must be accompanied by a vowel sound.

The Arabic grammarians call a consonant a barrier because in forming consonants the voice is stopped at certain fixed positions." *(Comparative philology by Papillon p. 30.)*

2 "Obstruction of the breath: i.e. to say, we breathe the sound from the lungs up through the throat unmodified, but obstruct it on its arrival in the mouth by bringing various parts of the mouth into proximity, so that the sound has to make its way by them in order to reach the open air." *(A guide to the English Language p. 43)*

3. In the Sumerian writing it will be seen......that the simplest vowel and syllabic word-signs under each letter - value in this alphabetic catalogue consist of single vowels and consonants, each followed by a vowel that is absolutely necessary to sound the consonant. And it is from these cosonantal signs, wherein the consonant is followed by a vowel, that the alphabetic consonant letters are found to be derived. This latter feature now explains for the first time the inherent suffixed vowel in every consonant in the Semitic Phœnician, Hebrew, Sanskrit and other allied Indo - Aryan alphabets, in that it was the feature of their parent script, the Sumerian. *(The Aryan Origin of the alphabet by L. A. Waddell p. 11.)*

The Factors deduced from the above quotations are :—

மேற்கூறிய மேற்கோள்களிலிருந்து

தெரிந்துகொள்ளுவன :—

1. The basis of all consonantal sounds is the primary voice i.e., AH (அ)

மெய்யெழுத்துக ளெல்லாவற்றிற்கும் அடிப்படை, முதலுயிற்றொலியாகிய அகரம்.

2. That this voice is arrested by the various organs in the mouth.

வாயிலுள்ள பல்வகைக் கருவிகளால் இம்முதலொலி தடுக்கப்படுகிறது.

3. That the sounds eventually pass through these barriers to the open air.

எனினும் இவ்வொலிகள் மேற்கூறிய தடங்கல்களைத் தாண்டி வெளிவருகின்றன.

4. That these consonants have no sound of their own unless accompanied by a vowel.

இவை உயிரொலிகளைத் தழுவாது தனித்தொலியா.
(உ - ம்.) of, (f) el (l) gi (g) ka (k).

தமிழ் மெய்கள்

உயிர்களை எடுத்தோதியபோது அகர வொலியே உயிற்றொலிகளுக்கெல்லாம் முதலொலியெனக் காட்டினேன். மெய்களுக்கும் அகரம் முதலொலியாவது முற்கூறிய மேற்கோள்களிலிருந்து நன்கு விளங்கும். எனவே இவ்வகையிலும், ''அகர முதலவெழுத்தெல்லாம்'' என்னு முண்மை நிறுவப்பட்டது.

மெய்களுக்குத் தன்னியக்கமும் தன்னொலியு மின்மையால் உயிரற்ற பொருளென மெய்யென்னும் பெயரால் அழைக்கப்பட்டது. மெய் உயிரன்றி நடவாதாகையால், ''மெய்யினியக்கம் அகரமொடு சிவணும்'' எனத் தொல்காப்பியனாரும் உரைத்தருளினார். தமிழ் மெய்யெழுத்துக்கள் உயிரைத் தழுவி நடத்தலை அம் மெய்களை மெதுவாக உச்சரிக்க நன்கு விளங்கும். எல்லா மெய்களுக்கும் இகரம் முதலில் ஒலிப்பதையும் வல்லெழுத்துக்களுக்கு மட்டும் இகரம் முதலிலும் உகரம் ஈற்றிலும் நின்றொலிப்பதையும் நன்கு காணலாம். ஆனால் இவ்வுயிரொலிகள் ஆங்கில மெய்களில் முழு ஓசையோடு ஒலிப்பதுபோலல்லாது மிகக் குறுகிய ஓசையுடன் நடவாநின்றன. தமிழ்மெய்களிவ்வாறு நடப்பதால் இவ்வெழுத்துக்களுக்கு மாத்திரை குன்றி அரை மாத்திரை யாயிற்று. எனவே குற்றிய லிகர உகரங்களின் மாத்திரைக் குறைவைப் புள்ளியால் உணர்த்தியதுபோல் இம் மெய்யெழுத்துக்களும் புள்ளி பெற்று இயங்குகின்றன. இக்காரணத்தாலேயே, ''மெய்யினியற்கைப் புள்ளியொடு நிலையல்'' எனத் தொல்காப்பியனார் விதித்தார் போலும்! (தொடரும்)

கம்பர் காட்டும் அரசியல் தத்துவம்

[திரு. மா. ராஜமாணிக்கம்]

(௱சஉ-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் வள்ளுவர் வாய்ச்சொல் ஒன்று நம் நினைவிற்கு வருகின்றது. அஃது,

'பிணிக்கு மருந்து பிறம னணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து'

என்பதே. 'சாதாரண நோய்க்கு மருந்து வேறு; இம்மாதரசி தன்னால் விளைந்த நோய்க்குத் தானே மருந்து மாகின்றாள்' என்னும் வள்ளுவர் வாய்ச்சொல்லையே சாறுகவடித்துக் கம்பர், 'நோயொக் குமென்னின் மருந்தொக்கும்' எனச் சுருங்கக் கூறி விளங்கவைத் துள்ளார். இக்கருத்தையும் கம்பர் கருத்தையும் ஒப்பிட்டால், தயரதன் குடிகளின் இன்பத்திற்கு ஆதாரமாய் விளங்கிய பரிசு நன்கு விளங்கும். எனவே, அரசனால் விளைந்த நோய்க்கு அவனே மருந்தாக அமைதல் அழகன்றோ? இதனினும் குடிகள் பெறத் தக்க பேறுதான் யாது? 'இன்பப்பேறு அரசன் நல்க, குடிகள் அதனை யடைந்து இன்புறல் எத்துணைச் சிறந்தது! அம்மம்ம! இத்தகைய 'இன்ப அரசு' இக்காலத்து இல்லையே! இஃது, யாம் செய்த முன்னை வினையோ?

ஆகவே, தயரதன் உலகத்து உயிர்களுக்கு 'அறம் பொருள் இன்பம், வீடு' என்ற நான்கு பேறுகளையும் அடைவிக்கின்றான். மேலும், நூல்களைக் கேள்வி மூலம் ஆராயுமிடத்து, இன்றியமை யாத அவ்வவர் அறிவேபோல் உடன் நின்று உதவுதல் வியப்பி னும் வியப்பே! இதனைக் கம்பர், 'நுணங்கு கேள்வி ஆயப்புகுங் கால் அறிவொக்கும்' எனத் தயரதனைப் பாராட்டும் பரிசு மகிழத் தக்கதே.

தாயாயும் தவமாயும் சேயாயும் அன்பர் தாமாயும் அவ்வவர் அறிவுமே யாயும் தயரதன் தன் குடிகளுக்கு மட்டுமே அமைந் திலன்; உலகமக்கள் அனைவர்க்கும் அவன் அத்தன்மையே என் பதைக் கம்பர் 'எவர்க்கும் அன்னான்' என வற்புறுத்திக் கூறு கின்றார். இத்தகைய சிறந்த புவியரசனை ஏழை இந்தியா எக் காலம் பெறுமோ!

குணத்தானும் நலத்தானும் உயர்ந்த தயாதன், வேந்தர்க்குரிய நாற்படையும் நல்லமைச்சும் வேண்டிலன். அவன் கை வேலே அவனுக் குற்ற துணை; அவன் அறிவே நல் அமைச்சு; அரசர்க்கு ஒற்றர் என்னும் உளவு அறியும் கூட்டம் ஒன்று உண்டு. அதனையும் கம்பர் காட்டும் கருணைக் காவலன் பெற்றானில்லை. உலகெங்கும் தயாதன் புகழே கூறுவாரன்றி இகழ்வோர் இலராயின், ஒற்றர் எற்றுக்கு? 'எம் வேந்தன் ஒற்றர் பெற்றிலன்; அமைச்சும் படையும் அவனுக்குத் தேவை யில்லை; கை வில்லே அவனது துணை; அறமே அவனைக் காக்கும் கவசம்; மனுவினும் மிக்க நீதியுடையான்' எனக் கம்பர் தாம் காட்டிய தயாதனைக் கோசிகன் கூறியதாகக் கூறி மகிழ்கின்றார்.

"துனியின்றி உயிர் செல்லச் சுடராழிப் படைவெய்யோன்
பனிவென்ற படியென்னப் பகைவென்று படிகாப்போன்
தனுவன்றித் துணையில்லான் தருமத்தின் கவசத்தான்
மனுவென்ற நீதியான் மகவின்றி வருந்துவான்"

—(க. ரா. குலமுறை கிளத்துப் படலம்)

அரசியலின் முற்றிய தத்துவத்தைக் கம்பர் கழறியுள்ள விதம் கற்பவர் மனத்தைக் கனியச் செய்யும். 'அரசனும் குடிகளும் தம்முள் வேறுபாடு இன்றி இரண்டறக் கலந்தனர்' என்கிறார் கம்பர். உடலும் உயிரும் சேர்ந்து மனிதனாவது போன்று, குடிகளும், அரசனும் ஒன்று சேர்ந்து 'அரசியல்' என்ற உருவத்தை அடைகின்றனர். அதனில் அரசன் உடல்; குடிகள் உடலில் தங்கப் பெற்ற உயிர். உயிர் இன்றேல் உடல் ஏது? அங்ஙனமே குடிகள் இன்றேல் கொற்றவன் ஏது? ஆதலின் அரசன் தன் உயிர் போன்ற குடிகளைக் காக்கக் கடமைப்பட்டவன். அவனும் குடிகளும் இரண்டறக் கலந்தனர் என்றால் அந் நாட்டில் இன்பமே இனிய நடம் புரியுமன்றோ? என்னே கம்பர் காட்டும் அரசியல் தத்துவ மகிமை!

"வயிரவான் பூணணி மடங்கல் மொய்ம்பினன்
உயிரெலாந் தன்னுயிர் ஒப்ப ஓம்பலால்,
செயிரிலா வுலகினிற் சென்று நின்றுவாழ்
உயிரெலா முறைவதோர் உடம்பு மாயினன்."

—(க. ரா. அரசியற் படலம்)

'உலகினில் நின்றுவாழ் உயிரெலாம் உறையும் ஓர் உடம்பாயினன்' என்பதே கம்பர் காட்டும் விழுமிய அரசியல் தத்துவம். செங்கோலனும் தண்ணளியனும் ஆன மன்னன் இருக்கத் தக்க மாண்புநிலை இஃதே யன்றோ? வேந்தன் உடலானது பற்றி, தன் அழிவிற்கு வழி தேடாது, உய்வதற்கு வழிதேடக் கடமைப்பட்டவனாகின்றான்; எனவே, அவன் குடிகளின் நன்மதிப்பைப் பெற வழி தேடுகின்றான். அவனன்றோ உண்மை அரசன்!

வேந்தன் உடலாயும் குடிகள் உயிராயும் அமைகின்ற வாய்மையை வசிட்டனும் இராமனுக்கு உரைக்கின்றான்.

"வைய மன்னுயி ராகவம் மன்னுயிர்
உய்யத் தாங்கு முடலன்ன மன்னனுக்
கைய மின்றி யறங்கட வாதருள்
மெய்பி னின்றபின் வேள்வியும் வேண்டுமோ?"

—(க. ரா. மந்தரை சூழ்ச்சிப் படலம்)

வறிஞன் தன் சிறு வயலில் ஒவ்வொரு பயிராய்ப் பார்த்து வளர்க்கும் பெற்றிபோல் தயரதன் வையத்து மாந்தரை ஒன்று சேர்த்துப் பாராமல் தனித் தனியே கண்காணித்து வருவதைக் கம்பர் கூறுவது கருதற் பாலது.

"வையக முழுவதும் வறிஞ னோம்பு மோர்
செய்யெனக் காத்தினி தரசு செய்கின்றான்."

என்ற கம்பர் கூற்று கனிந்த பொருள் பெற்ற தன்றோ? 'வறிஞன் தன் வயலில் உள்ள ஒரு பயிர் அழியினும் தனக்கு நட்டமாக எண்ணுவன். அஃதே போல், தயரதன் மக்களுள் ஒவ்வொருவரையும் ஊறு அடையா வண்ணம் காத்து வந்தான்' என்று கம்பர் தயரதனை வறிஞனுக்கு ஒப்பிட்டமை சாலச் சிறந்ததே! அரசன் தன்னை 'வறிஞன்' என்று எண்ணுதலே ஏற்புடைத்து.

தயரதன் தான் 'ஆள்பவன்' என்னும் பதத்தைக் கனவிலும் எண்ணிலன்; 'தாங்குபவன்' என்னும் பொருள் படும் பதமே அவன் அறிந்தது. அவன் அகாதியிலும் அப்பதமும் அப்பொருள் படும் 'ஓம்புதல்' 'காத்தல்' என்னும் பதங்களே இருந்தன என்று நினைத்தற் கிடனாகின்றது. அவன், பிள்ளையில்லாக் குறையை வசிட்டனுக்குக் கூறுகையில், 'தாங்கினர், ஓம்பினேன், நிலங்காத்தேன்' என்றே தன் கடமையை உணர்த்தும் சொற்

களைக் கூறுகின்றானே யன்றி, ஆணவச் சொல்லாய 'ஆண்டார், ஆண்டேன், நிலமாண்டேன்' என்று கூறினானில்லை.

"எங்குலத் தலைவர்க ளிரவி தன்னினும்
தங்குலம் விளங்குறத் தாணி தாங்கினார்
மங்குந ரில்லென வரம்பில் வையகம்
இங்குன தருளினா லினிதி(ன்) ஓம்பினேன்."

"அறுபதி னாயிர மாண்டு மாண்டுற
உறுபகை யொடுக்கியிவ் வுலகை ஓம்பினேன்
பிறிதொரு குறையிலை யெற்பின் வையகம்
மறுகுறும் என்பதோர் மறுக்க முண்டரோ'!

என்று தயாதன் கூறுவதில் அவன் கொண்ட அரசியல் தத்துவக்கொழுஞ்சாறு இற்றென இனிது விளங்கும். 'எனக்குப் புத்திரன் இல்லையே; என்பின் வையகம் அல்லல் உறுமே' எனக் கூறிக் கவல்கின்றமை, அவன் நாட்டினிடத்தும் மக்களிடத்தும் கொண்ட கரை கடந்த பற்று இற்றென அறிவிக்கின்றதன்றோ?

'முனிவ! நான் இந்நிலம் காத்தேன். எனக்குப் பிறகு இப் பூமியைக் காப்பதற்குரியாரை நீ அளிப்பாய்!' என்று தயாதன் கலைக்கோட்டு முனிவனை வேண்டியதாகக் கோசிகன் சனகனிடம் கூறுகின்றான். தன் நன்மைக்கே புத்திரனை வேண்டுவன் தந்தை; ஆனால், மூப்படைந்த தயரதன் இங்குத் தன் பொருட்டுப் பிள்ளையை வேண்டிலன்; தரணியைத் தாங்குவதற்கே வேண்டினன்.

"நீர்காத்த கடல்காத்த நிலங்காத்தே னென்னிற்பின்
பார்காத்தற் குரியாரைப் பணிநீயென் றடிபணிந்தான்."

—(க. ரா. குலமுறை கிளத்துப் படலம்)

இன்ன தன்மையனான அரசனையன்றோ குடிகள் விரும்புவர்! கம்பர் காட்டிய அரசனின் அரசியல் தத்துவம் அன்பையே அடிப்படையாகக் கொண்டது. அரசியல் தத்துவம் அன்பிலே பொருந்தியது; அறத்தை வளர்ப்பது. கம்பர் காட்டும் அரசியல் தத்துவம் என்று பெறுவமோ, அன்றே நாம் உய்ந்தவ ராவோம்.

—

தமிழ் அறிவியற் சொற்கள்

Arithmetic—எண்ணளவை

[திரு பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள்.]

(முன் ௱௩௩-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிவியற் சொல்லாக்கம் என்று எடுத்துக்கொண்ட அளவானே எண்ணளவைப் பகுதியை முதலில் எடுத்துக் கொள்ள வேண்டியது இயல்பாக விருக்க, அதனை யொழித்துச் சிக்கலான வடிவளவை(Geometry)யை முதற்கண் எடுத்துக்கொண்ட தென்னையோ வென்ற வினா எழுதல் கூடுமன்றே? அவ்வாறு கொண்டதற்குரிய மூன்று ஏதுக்களைக் கூறுதும்:—

(1) வழக்காற்றில் சரியாகவோ தப்பாகவோ வேண்டிய வளவிற்குச் சொற்கள் அமைக்கப்படாத ஒரு பகுதிக்குச் சொற்கள் அமைக்கப் புகுந்து அதற்கான தடைவிடைகளை எடுத்துக் கூற முயலுதல் எளிதாவதோடன்றி கற்றறிந்த பெரும்பாலோரும் ஒப்புக் கொள்ளக்கூடிய தொன்றுமாகும். இதனாலேயே முதற்கண் வடிவளவையைத் தேர்ந்து கொண்டது. என்னை? இதுகாறும் அப்பகுதிக்கு ஒருவரும் முறையாகத் தமிழ்ச் சொற்கள் ஆக்க முன் வந்திலராதலின்.

(2) ஒரு பகுதியில் தப்பாக ஆக்கப்பட்டு வழக்காற்றில் இருந்துவரும் சொற்களைத் தவறென எடுத்துக் காட்டி வழக்காற்றினை இழக்கச் செய்தல் எளிதான தொன்றன்று. மேலும், அவ்வரிய செயலைச் செய்து முடித்தாலன்றி ஏற்றதென்று ஆராய்ந்து ஆக்கப்படுஞ் சொற்களுக்கு ஆக்கந் தேடுதல் இயலாததாகும். கணக்களவையிலோ எண்ணற்ற பாடபுத்தகங்கள் ஆண்டுக்கணக்காக இருந்து வருகின்றன. அவற்றிற் காணப்படுஞ் சொற்களில் சரியானவை சில; தவறும் திருத்தமில்லாதனவுமான பல.

(3) கணக்கதிகாரம் என்ற பெரும் பிரிவிற்படும் எண்ணளவை (Arithmetic) குறியளவை Algebra) வடிவளவை (Geometry) போன்ற அறிவியற் பகுதிகளுக் கிடையிலுள்ள தொடர்புகளை ஆராய்ந்து விளக்கி, அவ்வதிகாரத்தின் பாற்படும் பகுதிகட்குத் தமிழ்ச் சொற்கள் படைக்கப் புகுங்கால் எவ்வாறு

ஒரு அறிவியல் முறையை முன்னமைத்து அதன்வழிச் சொற்களையாக்கி, அவ்வாறு ஆக்கப்படுஞ் சொற்கள் ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்றவாறு பொருளளிக்க வல்லவாய் இருத்தல் வேண்டும் என்பதும் குறிக்கொளற்பாற்றும். ஒரு பகுதிக்கு அமைக்கப்பட்டதோர் சொல் அதன் தொடர்புடைய மற்றொரு பகுதியில் நேர்மாறான பொருளைக் கொடுக்குமாயின் அது நகைப்புக் கிடனு மன்றே? எனவே அத்தகைய குறைபாடின்றி செம்மையாகச் சொற்களைப் படைத்தால்தான் அறிவியற் கொவ்வாத தவறான பழைய மாபுச் சொற்களைக் கழித்து அறிவியற்கொத்த ஆய்ந்தமைத்த சொற்களைப் புகுத்தல் கூடும்.

கணக்களவையிலுள்ள Multiplication என்பதும், வடிவளவையிலுள்ள Multiples, Submultiples என்பனவும் குறியளவையிலுள்ள Powers and roots என்பனவும் ஒன்றற்கொன்று நெருங்கிய தொடர்புடையன. எனவே அவற்றிற்குத் தமிழ்ச் சொற்கள் அமைக்கப் புகுங்கால் அச்சொற்களின் அடிப்பகுதிகள் யாவற்றிற்கும் பொதுவாயுள்ளனவாக இருத்தல் வேண்டும் என்பது கூறுதே யமையுமன்றோ?

இம்மூன்று ஏதுக்களானேயே வடிவளவையை முன்னர்த் தேர்ந்தெடுத்து அதற்குரிய தமிழ்ச் சொற்களை ஆய்ந்தமைத்து வெளியிட்டதாகும்.

இனி, கணக்களவைப் பகுதியை யெடுத்துக்கொண்டு அதற்கு இக்கால வழக்காற்றில் அமைக்கப்பட்டு வழங்கிவருஞ் சொற்களை ஆராய்ந்து, அறிவியற் கொத்தனவாயும் அளவை முறைக் கேற்றனவாயுமுள்ள சொற்களைக் குறித்து நிலைநிறுத்தி வழக்காற்றிற் பெருவாரியாய்க் கையாளப்பட்டு வரினும் அறிவியற் கொவ்வாதனவாய், முறையின்றி ஆக்கப்பட் டமைந்துள்ள சொற்களைக் குறித்து விலக்கி, அவைகளுக்கு முறையான மாபுச் சொற்களைப் புதியனவாக ஆக்கியமைத்துச் சீர்திருத்த முயல்வதே, இக்கட்டுரையின் நோக்கமாகும்.

Arithmetic என்ற ஆங்கிலச் சொல் எண் என்று பொருள் படும் Arithmas என்பதனடியாப் பிறந்ததாகும். எனவே ஒருவாறு ஆங்கிலத்தில் அது முறையாயமைந்த சொல்லாயினும் முடிந்த மாபுச் சொல்லாக அது அமையற் பாலதன்று. தமிழில்

எண்சுவடி, கணக்கதிகாரம், அங்ககணிதம் என்று அதனைக் கூறு கின்றனர். கணக்கதிகாரம் என்பது பொதுப் பெயராயிருந்து Mathematics என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேர் பொருளா யமையற்பால தொன்றாகும். அங்ககணிதம் என்பது வடமொழிச் சேர்க்கை. அங்கம் என்பது Part அல்லது Digit என்றும் கணிதம் என்பது Mathematics என்றும் பொருள்படும். கணக்கதிகாரம் என்ற சொல்லைவிட இது நன்கமைக்கப்பட்ட சொல்லாயினும்இது வும் முடிந்ததொரு சொல்லாய்க் கொள்ளக் கூடாததாம். அங்கம் என்ற சொல் நேராக எண் என்று பொருள் படுவதாயிருந்தா லொழிய அறிவியற் றுறையிலுள்ள பல பகுதியிலும் வேண்டிய வாறு எடுத்துக் கையாளத் தகுதியற்றதாகும். எண் என்பதே Number என்பதற்குச் சரியான தமிழ்ச் சொல்லாகும். Number என்பது எண் என்றும், Numeration என்பது எண்ணல், எண்ணி டல், எண்ணிடு என்றும் பொருள்பட்டு வழங்கற்குரியனவா யமை தலினாலேயே இச்சொல் தேர்ந்த முறையிலமைந்த தொன் றென் பது எளிதிற் போதரும். அங்கம் என்ற சொல்லை அவ்வாறு அங் கித்தல் அங்கமிடல் என்று கூட்டி யமைத்தல் முடியாததோடு அது எள்ளி நகையாடற் பாலதுமாகும். அதுபோலவே, Numerical Notation என்பதை எண்குறி, எண்ணற்குறி, எண்ணீட்டுக் குறி, எண்குறியீடு, எண்ணற்குறியீடு என்று பலவாறு தமிழிற் சொல்ல எளிதாயிருக்க, அங்கக்குறி யென்றோ அங்கக்குறியீடு என்றோ கூறுவதனாலெய்தும் இழிபொருள் யாவர்க்கும் எளிதிற் புலனாவ தொன்றாகும். எனவே "அங்ககணிதம்" என்ற ஓரே யிடத்தில் வழங்குந் தகுதியதாயமைந்தஅங்கம் என்ற வடசொல்லை யொழித்து எல்லாவிடத்தும் எற்றவாறு சேர்த்தும் கூட்டியும், திரித்தும் அமைக்கற் பால தாயிருக்கும் எண் என்ற சொல்லடி யையே கோடல்வேண்டும். எண்சுவடிஎன்பதைவிட எண்ணளவை என்று கொண்டால் அது Arithmetic என்பதற்குச் சரியான சொல்லாகும்.

(தொடரும்)

காழி. சிவ. கண்ணுசாமி B.A.

ஆசிரியர் இரஸ்கின் கற்பித்த ஓர் அறிவுரை. *

[திரு. வி. பி. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்]

நமது தமிழ் மொழியில் பாட்டுக்களடங்கிய நூல்கள் மிகுந்தும் உரை நடை (வசன) நூல்கள் மிகக்குறைந்து மிருக்கின்றன. பண்டைநாளில் சிறந்த உரைநடை யெழுதியவர்கள் நச்சினார்க்கினியர், பரிமேலழகர் முதலிய பேர்பெற்ற உரையாசிரியர்களே யாவர். அவர்களுக்கு நெடுங்காலத்துக்குப் பின் திருவாவடுதுறை ஆதீனத்துப்புலவர் பெருமானுன சிவஞானயோகிகள் பல சிறந்த உரைநடை நூல்களெழுதினர். இக்காலத்தில் ஆங்கிலேயமொழியை நம்மவர்கள் பயின்றதனுல் உரைநடை நூல்களின் பயனைச் சிறப்பாகத் தெரிந்து பல உரைநடை நூல்களெழுதி வருகின்றனர். ஆனல், பண்டைக்கால உரைநடை நூல்களோடு ஒருசிறிது ஒப்பிடத்தக்க இக்காலத்து உரைநடை நூல்கள் மிகச் சிலவேயாகும். ஆங்கிலத்திலோ இவ்வாறன்றி, முற்காலத்து நூல்களிலும் எவ்வகையிலும் மிகச்சிறந்த உரைநடை நூல்கள் இக்காலத்தில் அளவில்லாது பெருகி வருகின்றன. ஆகவே, சில காலத்துக்கு முன் அடிஸன் (Addison) மெக்காலே (Macaulay) என்பார் சிலருடைய பேர்களை எடுத்துச்சொல்லி உரைநடை நூலாசிரியர்களுட் சிறந்தவர்களின் அட்டவணையை எளிதாக முடித்து விடுவதுபோல, இப்போதைய ஆங்கில உரைநடை நூலாசிரியர்களுட் சிறந்தவர்கள் இன்னின்னுரென்று கணக்கெடுப்ப தருமை. இப்படிச் சிறந்த உரைநடை நூற்புலவர் மிகுந்த இக்காலத்தில் அவருள் தலைமையானவருள் முதன்மையாள ரெனப் பேர் பெற்றவர் ஜான் இரஸ்கின் John Ruskin என்னுந் துரைமகனுர் ஆவர். அவர் இயற்றியிருக்கிற நூல்கள் ஆங்கிலத்திற் சிறந்த புலமை நிரம்பியவர்களே அரிதாக வுணருந்தன்மை யுடையனவைகளாகவும் மிகச்சிறந்த பொருளழகு வாய்ந்தனவாகவு மிருக்கின்றன. அவருடைய நூல்களுள் அணு அறநூல் (The Ethics of the Dust) என்பது ஒன்று. இஃது அவருடைய மற்ற நூல்கள் போலன்றி யாவரும்

* இஃது ஆசிரியர் இரஸ்கின் எழுதிய "எதிக்ஸ் ஆஃப் திடஸ்ட்" என்பதிலிருந்து இக்கட்டுரை யாசிரியரால் எடுத்து "விவேக சிந்தாமணி" யில் எழுதப் பெற்றதாகும்.

எளிதாகஅறிந்து கொள்ளும்படி வினுவிடையாக எழுதப்பட்டது. இதில் அவர் ஒரு பெண்கல்விச் சாலை (Girl's School) யிலே தமக்கும் அக்கல்விச்சாலைப் பெண்களுக்கும் நிகழ்ந்த உரையாடலை (சம்பாஷணையை)ப் புத்தகவடிவில் எழுதுவதற் கின்றியமையாத சிற்சில வேறுபாடுகளுடன் எழுதியிருக்கின்றார். அதில் பின்வருவது முதன்மையானதென்று நூலாசிரியரே கூறியிருக்கின்றார். அதில் அவர் குறித்தவர்களெல்லாம் "நாம் எல்லோரும் பாவிகள், நாம் எப்பொழுதுங் கெட்ட நெஞ்சம் உடையோம்" என்று கொண்டிருக்கும் கொள்கை தப்பென்று மெய்ப்பித்து அக்கொள்கையை விட்டு விடுவதனாலுண்டாகின்ற பழக்க அறிவிற்கைகூடிய நன்மைகள் இப்படிப்பட்டவைகளென விளக்குகின்றார்.

சொற்பொழிவாளர்:—(ஆசிரியர் இரஸ்கின்) உன்னுடைய மனம் களங்கமற்றதாகவும் உண்மையுள்ளதாகவும் இருந்ததென்று சொல்ல அஞ்சுகின்றாய் அல்லவா?

லூஸில்லா:—(Lucilla) (ஒரு பெண்) ஆம் ஐயா.

சொற்பொழிவாளர்:—நீ அப்படிச் சொல்வதற்குக் காரணம் உன் நெஞ்சு கெட்டது என்றும், அது இடைவிடாமல் கெட்டதாகவே இருக்கிறதென்றும் உனக்குக் கற்பிக்கப்பட்டிருப்பதுதான். மக்கள் தங்கள் நெஞ்சம்கெட்டதென்றுஅடிக்கடி சொல்லிக் கொள்ளுகின்றார்கள். ஆயினும், அவர்கள் சொல்வதை அவர்களே நம்பவில்லையென்று எனக்கு எப்படியோ ஒருவகையாகத் தோன்றுகின்றது. உண்மையாகவே, உன்னெஞ்சு கெட்டதென்று நீ நம்புகிறாயா?

லூஸில்லா:— ஐயா, நான் நம்பவில்லை. ஆனாலும் நம்ப வேண்டுமென்பது என் வேண்டுகோள்.

சொற்பொழிவாளர்:—நீ முழுதுங் கெட்ட நெஞ்சுடையவளென்றே நம்புகிறாயா?

லூஸில்லா:—(கெட்ட நெஞ்சு என்பதற்குப் 'பதிலாக' முழுதுங் கெட்ட நெஞ்சு என்று சொன்னதைக் கேட்டுச் சிறிது கலக்கமுற்றும் தன் பழமையான சமயப்பற்றைக் கைவிடாமல் மறுமொழி கூறியதாவது) ஆம், ஐயா.

சொற்பொழிவாளர்:—(உரையாடலில் உன்னிப்பின்றிப் பராமுகமாயிருந்த வேறொரு பெண்ணைப்பார்த்து) பிளாரி, (Florrie) நீ அலுத்து விட்டாய். அலுத்தபின் நீ யிங்கிருக்க எனக்கு

விருப்பமில்லை. நாம் உரையாடும்போது நீ பூனைக்குட்டி யோடு விளையாடக் கூடாதென்பது உனக்குத் தெரியுமே.

பிளாரி:—நான் அலுக்கவில்லை. அதனோடு விளையாடவுமில்லை. அதனைத் தூங்கச் செய்கின்றேன். அது விரைவில் என் மடியில் தூங்கிவிடும்.

சொற்பொழிவாளர்:—நில். நான் வரிசையான மயிர்க்கூட்டம் போலிருக்கிற சில மூலப்பொருள் (Minerals) களை உங்களுக்குக் காட்டுகிறேனென்று சொல்லியிருந்தே னல்லவா? அஃது இப்போது இந்தப் பூனையைப் பார்க்கவே நினைவுக்கு வருகின்றது. இந்தப் பூனை வால் மயிரிலொன்று கொடு.

பிளாரி:—(தனக்கு அருமையான பூனையின் மயிரைக் கேட்டதை மனம்பொறுதவளாய் களங்கமற்ற முகக் குறியுடன்சொன்னதாவது) பூனையின் மயிரா வேண்டும்!

சொற்பொழிவாளர்:—ஆம், ஒரு செம்மயிர் வேண்டும், லூஸில்லா, அந்தப் பூனை பிளாரியின் கைக்கீழ் படுத்திருக்கிறபோது அதன் வால் நுனியிலிருந்து ஒரு மயிரைப் பறித்துக்கொடு.

லூஸில்லா:—ஐயா! அஃது அதற்கு வருத்தஞ் செய்யுமே.

சொற்பொழிவாளர்:—அதைப்பற்றி நீ கருதவேண்டாம். அந்தப் பூனையைப் பிளாரி பிடித்துக் கொண்டிருக்கும்போது அஃது உன்னைப் புறண்ட மாட்டாது.

லூஸில்லா:—அஃது என்னைப்புறண்டாவிட்டாலும் பிளாரியைப் புறண்டி அவளுக்குத் துன்பமுண்டு பண்ணுமே? தங்களுக்குச் செம்மயிர்தானே தேவை? என் தலைமயிர் உதவாதோ?

சொற்பொழிவாளர்:—மெய்யாகவே பூனைமயிரைப் பறிப்பதைப் பார்க்கிலும் உன் தலைமயிரைப் பிடுங்க உனக்கு விருப்பந்தானு?

லூஸில்லா:—என் தலைமயிர் உதவுமானல் ஐயமில்லாமல் விருப்பந்தான்.

சொற்பொழிவாளர்:— நீ அப்படிச் சொல்வது ஒழுங்கன்று.

லூஸில்லா:—ஒழுங்கற்றதா?

சொற்பொழிவாளர்:—ஆம், நீ முன் சொல்லியபடி உன் மனங் கெட்டதாயிருந்தால் உன் மயிர் ஒன்றை இழப்பதைப் பார்க்கிலும் பூனைமயிர் முழுதும் வாங்கி விடுவாயன்றோ?

ஹஸில்லா:—ஓ! நான் அந்தக் கருத்தில் கெட்ட நெஞ்சென்று சொல்லவில்லையே.

சொற்பொழிவாளர்:—உன் நெஞ்சிலிருக்கிற உண்மையைச் சொல் கிறேன் கேள்: அந்தப் பூனை வாலின்கண் ஒரு ஏனத்தைக் கட்டி அதனை ஓடச்செய்து அதன்பின்னே ஓடி வேட்டை யாட நீ விரும்புகிறாய?

ஹஸில்லா:—ஐயா, அப்படி நான் ஒருபோதுஞ் செய்யேன்.

சொற்பொழிவாளர்:—நீ சொல்வது உண்மையன்று. அஃது உண் மையாயிருத்தல் முடியாது.

ஹஸில்லா:—உண்மை யன்று !

சொற்பொழிவாளர்:—உறுதியாக உண்மையன்று. நீ முன்சொன்ன படி உண்மையற்ற நெஞ்சிலிருந்து எப்படி உண்மை வெளிப் படக்கூடும் ?

ஹஸில்லா:—ஐயா, நான் அவ்வாறெண்ணிப் பார்த்து என் னெஞ்சு பொய்நெஞ்சென்று சொல்லவில்லையே.

சொற்பொழிவாளர்:—உன்னெஞ்சு கெட்டதாகவும் உண்மை யற்றதாகவும் இருப்பதைப்பற்றி நீ கவலைப்படுகின்றாயா?

ஹஸில்லா:—ஆம். மெய்யாகவே கவலைப் படுகின்றேன்.

சொற்பொழிவாளர்:—எங்கே கவலைப் படுகின்றாய் ?

ஹஸில்லா:—எங்கேயா?

சொற்பொழிவாளர்:—ஆம்; எங்கே கவலைப்படுகின்றா யென்று கேட்டேன். காலிலே கவலைப்படுகின்றாயா?

ஹஸில்லா:—(சிரித்துக்கொண்டு) இல்லை.

சொற்பொழிவாளர்:—ஆனல், கையில் கவலைப்படுகின்றாயா ?

ஹஸில்லா:—இல்லையையா. நெஞ்சிற் கவலையுறுகின்றேன்.

சொற்பொழிவாளர்:—உன்னெஞ்சு ஒழுங்கற்றதா யிருப்பதற்காக உன்னெஞ்சு கவலைப்படுகின்றது. அப்படியானல் உனக்கு இரண்டு நெஞ்சுகள் இருக்கவேண்டும். அவற்றுள், ஒன்று குறும்பு மிக்கதாயிருக்கின்றது, அதற்காக மற்றொன்று வருத்தப்படுகின்றது. அல்லது உன்னெஞ்சு ஒன்ருயிருந்தால் ஒருபக்கத்துக்காக மற்றொருபக்கம் கவலை யடைகின்றது.

லூஸில்லா.—தாங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை. தங்கள் கேள்விகளை வேறுயாரிடத்திலாவது கேளுங்கள்.

சொற்பொழிவாளர்:—மறுமொழி கூறத்தக்க வேறு பெண்களிருந்தால் அவர்களிடத்திலேயே நான் கேட்டிருப்பேனே. உனக்காக உன் உணர்ச்சி (Feelings) களை விளக்கிச் சொல்லட்டுமா?

லூஸில்லா:—ஆ! அது மிகவும் நல்லது, அன்புகூர்ந்து தாங்கள் அப்படியே செய்யுங்கள்.

சொற்பொழிவாளர்:—"நான் உன் உணர்ச்சி (Feelings) களை விளக்குவதாகச் சொன்னேன்; உன் நம்பிக்கை(Beliefs)களை விளக்குவதாகச் சொல்லவில்லை யென்பதை நீ நினைவில் வைத்துக்கொள். "நமக்கிருக்கிற நன்மை உள்ளீடில்லாத வெளிப்பகட்டான நன்மையே; அது பிணம் அடங்கிய கல்லறை போல வெளியே தூய்மையாகத் தோன்றி, உள்ளே தூய்மையற்று அழுக்கு நிறைந்திருக்கின்றது; அருமறையானதும் நமக்குப் புலப்படாததுமான குற்றமு மிருக்கின்றது. அதனைக் கடவுளே அறியவல்லவர்." என்று நீயும் உன் போலக் கற்பிக்கப்பட்டவர்களும் நினைக்கின்றீர்கள். (இதைக் கேட்டபெண்களெல்லாஞ் சரியென்றுதலையசைக்க விரிவுரையாளர் திரும்பவும் பேசுவாராயினர்.)

சொற்பொழிவாளர்:—இப்போது சொல்லியபடி உயிர்மட்டும் அன்று. உயிர்க்கு (Soul) அழகின்மையும் அழுக்குண்மையும் உள்ள உட்பக்கமும், அழகும் தூய்மையும் உள்ள வெளிப்பக்கமுமிருப்பது போல உடலுக்கும் அத்தன்மையான இரு தன்மையும் இருக்கின்றன; அழகிய முகத்துக்குங் கூந்தலுக்

கும் உள்ளேயுள்ள மண்டையோடு அழகற்ற தென்று சொல்லவும் வேண்டுமோ?"

"நலமாக விருக்கும்போதும் உடம்பின் உள்ளேயுள்ள உறுப்புக்களைப் பார்ப்பது இனிமையாயிராததினால், அவ்வுறுப்புக்கள் நோய்ப்பட்டிருக்கும்போது எவர்தாம் அவைகளைப் பார்க்க விரும்புவார்கள்? அவைகள் நோயுற்றால் நலப்படுத்த முயல்வது இயற்கை. அவ்வாறு முயன்று வேண்டும் பரிகாரஞ் செய்தபின் அவைகளைப்பற்றி நினைத்துக் கொண்டிராமல் மறக்கக் கூடுமானால் எவர்தாம் மறக்க விரும்புவார்கள்? நினைக்க நினைக்க மனத்துன்பமேயன்றிக் கிடைக்கும் பயன்யாது? ஆயினும், நோய் வந்தால் அதை மறைக்கவாவது நம்பாதிருக்கவாவது வேண்டுமென்று நான் சொல்லவில்லை. வந்த நோய்க்கு வேண்டும் பரிகாரம் செய்து விட்டுப், பின்பு, அதைப்பற்றி நினைத்துப் பாராட்டாதிருப்பது நலம்.

"இப்போது உடல்நோய் சம்பந்தமாகக் கூறிய நன்மதியே உயிர்நோய்க்கும் உரியது ஆகும். உன்னுள்ளே தவறு இருந்தால் அஃது இன்னதென்று தெளிவாகத் தீர்மானிக்க வேண்டும். பின்பு, அறிந்தமட்டில் அதைச் சீர்திருத்தக்கூடிய சூழ்ச்சி ஏதாவதிருந்தால் அச்சூழ்ச்சியைப் பயன்படுத்த வேண்டும். உன்னைப் பற்றி நீ ஆழ்ந்து ஆராயும்போது நீ 'பாவி' என்று ஒருகாலும் கூறிக்கொள்ளாதே. அது மிக எளிதாகவும் இகழ்ச்சியாகவும் முற்றும் பயனற்றதாகவு மிருக்கின்றது. உனக்கு அதில் படிப்படியாக விருப்பமிருந்து அதைப்பற்றிப் பெருமை பாராட்டுபவளும் ஆகலாம். ஆகையால் (பாவி என்று பொதுவாகச் சொல்வதை விட்டு) உன்னைப்பொய் சொல்பவள், அச்சமுடைய நெஞ்சினள், சோம்பேறி என்று சொல்லும் அத்திய இயல்புகள் உன்னிடத்தில் உண்மையாகக் காணப்பட்டால், அவ்வாறு நீ சொல்லிக் கொள். எந்தத் திய இயல்பு உன்னிடத்தில் திட்டமாக இருப்பதாகக் கண்டுபிடித்து அதற்காக உன்மேல் முறையாகக் குற்றஞ் சுமத்திக் கொண்டாயோ, அத்திய இயல்பு உன்னை விட்டகலும்படி தக்கமுயற்சியை யுறுதியாகச்செய். இவ்வாறு ஒரு குற்றத்தை வரையறை செய்து அதை நீக்க நீ முழுமனதோடு சுருசுருப்பாக முயல்வாயானால், இன்னதென்று திட்டமாகத்தெரியாதஏதோஒரு

குற்றமிருப்பதாக நினைத்துப் 'பாவி பாவி' என்று வருந்திப் புலம்புதலினின்றும் நீங்கி விடுவாய். குற்றங்களை வேரோடு பிடுங்கிக் களைந்துவிடுவது எளிது. நல்லொழுக்க மிகுதியால் அவைகளை அடக்கி விடுவது அவ்வளவு எளிதன்று. உன் குற்றங்களைப்பற்றி நினையாதே. பிறர் குற்றங்களைக் கனவிலும் எண்ணாதே. நீ சந்திக்கும் ஒவ்வொருவரிடத்தும் எத்தகைய சிறந்த குணமிருக்கிறதென்று தெரிந்து அக்குணத்தை நன்குமதித்து அதைப்பற்றி எண்ணிப்பார்த்து மகிழ்ந்து அதை நீயும் உடையவளாக முயல்வாயாக. அவ்வாறு செய்து வந்தால் நாளாவட்டத்தில் உன் குற்றங்கள் பழுத்த இலைகள் இயல்பாகவே உதிர்தல்போல, உதிர்ந் தொழிந்துவிடும். நீ உன் சென்ற வாழ்நாட்களைப் பின்னேக்காகப் பார்க்குங்கால், அவைகள் பனைமரம்போலக் குற்றங்களாகிய காடுமுாடுடையனவாயிருந்தாலும், அவைகள் இப்போது நல்லொழுக்கத்தில் விருத்தியாகி நற்குண நற்செய்கைகளாகிய பயனுடையனவா யிருந்தால், அவ்வாழ்நாட்கள் காடுமுரடா யிருந்ததைப்பற்றி நீ கவலைப்பட வேண்டியதில்லை. உன்னிடத்தில் மகிழ்வடையக்கூடிய சிறப்புக்களில்லாவிட்டாலும், அவைகள் மற்றவர்களிடத்தில் இருப்பதைக் கண்டு களிப்படைவாயாக."

என்று இவ்வாறு இரஸ்கின் Ruskin ஆசிரியர், தங்களை யெப்போதும் "பாவிகள், கெட்ட நெஞ்சுடையவர்கள்" என்று சொல்லிக் கொள்பவர்கள் தாங்கள் அவ்வாறிருப்பதாக தங்கள் குருக்கண்மார் கற்பித்ததை நம்புகின்றார்களேயன்றி, உள்ளபடி உணரவில்லை யென்பதைத் திறமைமிக்க உரையாடல் முகமாக விளக்கிக்காட்டி, மக்கள் தங்களிடத்தில் இல்லாத குற்றங்கள் இருப்பதாக நினைத்து உண்மையாக இருக்கிற குற்றங்கள் இன்னின்னவையென்று கண்டு, அவைகளை நீக்கமுயலாது, அறிவீனமாகச் சோம்பியிருப்பது கூடாதென்று வற்புறுத்திக்கூறி, எவரும் தங்களிடத்துள்ள தீயகுணங்கள் யாவற்றையும் வேரறக்களைந்து நற்குணங்களெல்லாந் தழைத்தோங்கி வளரச் செய்து நற்பயன் பெறுவதற்கு ஏற்றவழிகள் இவையென்று மேற்கூறிய பழக்க அறிவிற் கைகூடிய நல்லறிவு கற்பித்திருக்கின்றார்.

ஆங்கிலேய பேரறிஞருட் சிறந்த ஒருவர் தமது நீதி நூலிற் சிறந்ததாகத்தாமே சிறப்பாகக்கூறியிருக்கிற இப்பகுதியை எவரும் நுனித்தறிந்துகொள்ளவேண்டுமென்பதுசொல்லாமலேவிளங்கும்.

* கிள்ளை விடு தூது

கிள்ளாய் ! கிள்ளாய் !! சிரபுரக் கிள்ளாய் !!!
களஞ்சூ ழாரங் கவினுற விளங்குப
வளக்கூர் வாயுடைச் சிரபுரக் கிள்ளாய் !!!
நீயுநின் பெடையும்
உறைபுலந் தவிர்ந்தே யிரைகொளு நசையாற்
பிறபுல நாடிப் படர்குவி ராயின்
றுறைகெழு மூதூர் தோன்றுபு தோன்றுபு
பறையொலித் தென்ன பாங்குடை மொழியால்,
காவிரி பாயக் களிவண் டார்க்கும்
பூவிரி மயூரப் பொழினக ரணித்தாய்க்
காவியு மலர்ந்து கஞ்சமும் விரியுந்
தாவில்சீர் சான்ற தருமையம் பதியில்
பவக்கட னீந்தப் பாருள மாந்தர்
தவப்புணை யெனத்தொழு தவலருஞ் செம்மைச்
சீர்கயி லாயச் சார்பரம் பரைதனிற்
பேர்பெறு முத்திப் பெருந்தலக் கமலை
குருஞான சம்பந்தர் குவலய முய்ய
வருஞான வாரிதிக் குறுஞால வூற்றெனத்
திகழுறு சைவத் திருமட மொன்றைப்
புகழுற வமைத்துப் போதா வவ்வழி
ஒருமூன்று தலையிட்ட விருபான் முறையினன்
பொருவறு புண்ணியன் புலமிகு கண்ணியன்
சுத்தாத் விதசைவ சித்தாந்த ஞான
வித்தாக வொளிரும் வித்தகச் செல்வன்
பிணிமுக வூர்தியன் பெயர்பெறு சுப்பிர
மணியனுந் தேசிக மறைஞான பானு,
சிமுக வாண்டுச் சீர்வை காசி

---

* இஃது, திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமபுர வாதீனம் மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள், ஸ்ரீமுக ஆண்டு வைகாசித் திங்கள் முதல்நாள் (14-5-33) காழி மாநகரில் திருவுலாப் போந்த காணரிய காட்சியைக் கண்டு களித்த வித்துவான் காழி. சிவ. கண்ணுசாமி B. A. பாடியது.

ஏழுறு தலைநாட் சேழுறு மாலை,
ஊழியு மறியா தூரம்பெற நிவந்த
காழிநன் னகரக் கழியகன் மறுகில்
தந்திகள் முன்னசை தந்திட, சின்னப்
பந்திகள் பொலிய, பண்ணிய மார்ப்ப,
நலங்கெழு சொல்லின் நால்வர் புனைந்த
புலன்கெழு தமிழ்மறை புடைபுடை யொலிப்ப,
பாரவர் போற்றும் பாவல ரேத்த,
ஊரவர் யாவரு முயர்கரங் கூப்பி,
" அண்ணல் வருக! ஐயா வருக!
பொன்னார் மேனிப் புனிதா வருக!
அரனார் திருவுரு வழகா வருக!
திறனார் சைவத் தெளிவே வரு" கெனக்
கண்கள் துளிப்பக் கைமெய் சிலிர்க்கப்
பண்கொளப் பாடிப் பார்மிசை யாடத்
திருநெடு வீதித் திருவோ லக்கம்
வருதிருக் காட்சி கண்டன மெனுமே.

காழித் திருமுலைப்பால் விழா

"வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க" வித்தகச் செல்வராய்த் திருவுரு வெடுத்த பாலருவாயரான திருஞான சம்பந்தப் பெருமானார்க்குச் சீகாழித் திருக் கழுமல வள நகரத்தில் 1835-ம் ஆண்டுவரை நித்திய நைமித்திய பூசனைகளும் பங்குனிப் பெருவிழாவும் சிறப்புடன் நடைபெற்று வந்திருந்தன. அவ்வாண்டிற்குப் பின்னர், பெருவிழா நீங்கலாக ஏனையவை காலந் தவறாது நடைபெற்று வருகின்றன. ஆயினும் சித்திரைத் திங்கடோறும் பிரமபுர முடையாரான பிரமபு ரீசருக்கு நடைபெறும் பெருவிழாவில் புகலி வேந்தாது அற்புத வரலாறு குறித்த சில விழாக்கள் இன்றுவரை கொண்டாடப்பட்டு வருகின்றன. உள்ளங் குழைந்தழுத ஒப்பிலாச் சிவநேயக் குழவிக்கு வள்ளந்தனிற் பாலமுதுடன் திருஞானந்தனைக் குழைத்து உமாதேவியார் உவந்தளித்த திருமுலைப்பால், பிரமசரிய நிலைகாக்கும் மாணிக்கட்கு உப

நயன காலத்தில் தலைக்குக் குல்லா யணிவிக்கும் வழக்கத்தைக் குறிக்கும் முத்துக் குல்லா யளித்தல், அனல்வாதம் புனல்வாதம் என்ற வாதங்களிற் றோல்வியுற்று சண்பையர்கோன் திருமுக நோக்க வெட்கியும், வளவர் கோமான் சிற்றத்திற் கஞ்சியும் இரிந்தோடிக் கழுவேறிய அமணர் கழுவேற்றம் என்ற இவ்வரலாற்று நிகழ்ச்சிகள் முறையே இரண்டாம் நாள், ஐந்தாம் நாள், எட்டாம் நாள் விழாக்களாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு இவ் விழாக்கள், காழிக் கட்டளை ஸ்ரீமத் சட்டை நாதத் தம்பிரான் அவர்களது உலைவிலா நன்முயற்சியால் பெருஞ் சிறப்புடன் நடைபெற்றன.

பெருவிழா முடிவில் தருமையாதீனத் தலைமை ஆசாரியர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் காழியம் பதிக் கெழுந்தருளித் திருத்தேர் விழாவைச் சிறப்புடன் நடத்தி வைத்தனர். அன்னூர் தங்கியிருந்த கட்டளைத் திருமடத்தில் சொக்கலிங்க பூசனையும், மகேசுர பூசனையும், புலமைப் பெருஞ் சொற்களும், குருபோதமும் அடிக்கடி நடந்து வந்தன சித்திரைத் திங்கள் 28-ம் நாள் தருமையாதீன வித்வசிகாமணி உயர்திரு. ப. அ. முத்துத் தண்டவராயபிள்ளை அவர்களும், வித்வான் காழி சிவ. கண்ணுசாமி பிள்ளை B. A. அவர்களும், வித்வான் M. சண்முகதேசிகர் அவர்களும் சைவப்பெருங்குரவரைக் கண்டு தரிசித்து ஆநந்த மடைந்தார்கள். அக்காலை இப்பொழுது அச்சிடப்பெற்று வரும் "முத்தி நிச்சயச் சிற்றுரை" என்ற நூலைக்குறித்தும், திருக் கயிலாய பரம்பரைச் சூரியனார் கோயில் திருமடத்தலைவர் ஸ்ரீலஸ்ரீ சிவாக்கிர யோகிகளால் வடமொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள "சைவ பரிபாஷை" என்ற அளவை நூலைப் பற்றியும் ஆசாரிய சுவாமிகள் எடுத்துபதேசித்தார்கள். தேர்ந்த புதிய முறையில் பிற்கூறப்பட்ட அந்நூல் மகா சந்நிதானத்தின் பேருதவியால்அச்சாகி வெளிவரின் சைவ நன்மக்கட்குப் பெரும் பயனளிக்கும். ஆசாரியர் தங்கியிருந்த ஒவ்வொரு நாளும் வித்வசிகாமணி முத்துத் தாண்டவராய பிள்ளையவர்கள் சிறந்த பாமாலை பலவியற்றிப் பூசனை செய்து வந்தார்கள். சித்திரைத் திங்கள் 31-ம் நாள் மாலை காழி வித்வான் அருணாசல தேசிகர் அவர்கள் "முப்பொருள்" என்றதோரரிய சொற்பொழிவை மகா சந்நிதானத்தின் முன்னிலையில் குழுமியிருந்த கற்றறிந்த புலமையாளர் நடுவே

நிகழ்த்தினர். மறுநாளாகிய வைகாசி முதல்நாள் மாலை திருமிகு. சட்டை நாதத் தம்பிரான் அவர்களின் பெருமுயற்சியால் மகாசந்நிதானத்திற்குப் பெருஞ்சிறப்புடன் காழிமாநகரில் பட்டினப் பிரவேசம் நடத்திவைக்கப்பெற்றது. பட்டினப் பிரவேசத்தின்போது வித்வசிகாமனி முத்துத் தாண்டவராயப் பிள்ளையவர்களும் வித்வான் காழி. சிவ கண்ணுசாமி பிள்ளையவர்களும் மகா சந்நிதானத்தினுல் மலர்மாலை யிடப்பெற்றனர். பட்டினப் பிரவேசக் காட்சியை வியந்து மறுநாள் காழி சிவ. கண்ணுசாமி பிள்ளை அவர்களும் வித்வான் சண்முக தேசிகர் அவர்களும் கவிகளியற்றிச் சமர்ப்பித்து மகா சந்நிதானத்தினுல் மனமுவந்து பரிசளிக்கப் பெற்றனர். பின்னர், வைகாசி 3-ம் நாள் பரமாசாரியர் திருமுல்லைவாயிலுக்கு எழுந்தருளினர். ஆண்டும், ஆசாரியர் வைகாசித் திங்கள் 15-ம்நாள் நனிபெருஞ் சிறப்புடன் பட்டினப்பிரவேசம் வந்தனர். ஆசாரியரின் புலமைப் பெருமையும் கொடைத்திறனும் சமயப்பற்றும் எல்லோராலும் கொண்டாடப்பட்டு வருகின்றன.

அருஞ்செய்யுட் பொருட் பகுதி

திருவாரூர் நான்மணிமலை

27-வது செய்யுள்.

[சென்னை கோ. இராமலிங்கத் தம்பிரான் அவர்கள்]

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பிறையொழுக வொழுகுபுனற் கங்கை யாற்றின்
பேரணையிற் றொடுத்துவிட்ட பெரும்பாம் பென்னக்
கறையொழுகும் படவரவம் படரும் வேணிக்
கண்ணுதலார் கமலையிற்பைங் கமலை போல்வீர்
நறையொழுகு மலர்ப்பொழில்குத் தகையாத் தந்தீர்
நானிரண்டு மாவடுவு நாடிக் காணே
னிறையொழுகு மிளநீரு நிற்கக் காணே
னீர்செய்த காரியமென் னிகழ்த்துவேனே.

(பதவுரை.) பிறை ஒழுக - பிறையானது உயர்ந்து செல்ல, ஒழுகு புனல் கங்கையாற்றின் - ஒழுகுகின்ற நீர்வாய்ந்த கங்கையாகிய ஆற்றின் (வெள்ளம் அடைக்கும்படி), பேர் அணையின் - பெரிய கரைபோல, தொடுத்துவிட்ட - கட்டிவிட்ட வைக்கோற் புரியைப்போல, கறை ஒழுகும் - நஞ்சொழுகும், படம் அரவம் படரும் - படத்தையுடைய பாம்புகள் செல்லும், வேணிக் கண்ணுதலார் - சடையையுடைய நெற்றிக்கண்ணை யுடைய தியாகேசரது, கமலையில் - திருவாரூரில், பைங்கமலை போல்வீர் - பசிய தாமரையிற் றங்கும் திருமகளைப் போல்வீர்! நறை ஒழுகும் - தேன் ஒழுகுகின்ற, மலர்ப்பொழில் - மலர்களையுடைய சோலை (கூந்தல்) முழுதும், குத்தகையாத் தந்தீர் - (எமக்குக்) குத்தகையாகக் கொடுத்தீர்; (அங்ஙனம் நீர் கொடுத்தும்) நான் இரண்டு மா வடுவும் நாடிக் காணேன் - யான் இரண்டு மாம் பிஞ்சு (கண்)களையாவது தேடிப்பார்த்துந் தோன்றக் காணேன்; (அஃதன்றி) நிறை ஒழுகும் - நிறைந்து அமுது ஒழுகும், இளநீரும் நிற்கக் காணேன் - இளநீரும் (தனமும்) நிலைபெறக் கண்டேனில்லை; (ஆகையால்) நீர் செய்த காரியம் - நீர் செய்த செய்கை, என் நிகழ்த்துவேன் - யாதென்று எடுத்துச் சொல்லுவேன் (நும் செய்கை யிருந்தவாறு நன்று.) (எ - று)

(வி - ரை) குத்தகையாகத் தருதல் - ஒருவர் தமக்குரிய பொருளை மற்றொருவருக்கு அனுபவப் பொருளாக ஒப்புவித்தல். மாவடு - மாம்பிஞ்சு; கண்கள். இளநீர் - இளநீர்; தனங்கள்.

இது புறங்காட்டல் என்னுந் துறை. அஃதாவது, பள்ளியிடத்துத்தலைவி புறங்காட்டக் கண்டு தலைமகன் கூறலாம். (புறம் - முதுகு) இனி, இதனை நாணிக்கண்புதைத்தல் என்னுந் துறையாகவும் கூறுப. வருமாறு:—

கமலைபோல்வீர்! மலர்ப்பொழில் குத்தகையாத் தந்தீர். நிறை ஒழுகும் இளநீரும் (தனமும்) நிற்க, (நிற்க - நின்று விளங்க.) காண். ஏ - (அசைநிலைகள்). நான் - யான், இரண்டு மாவடுவும் - இரண்டு மாபிஞ்சுகளும் (தனங்களும்) காணேன் - கண்டேனில்லை.

வித்வ சிகாமணி
ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை
அவர்கள்

(முகப்புப் படம் பார்க்க)

நீர்வளம் நிலவளம் மிகுந்த நடுநாட்டின்கண் (முத்துக் கிருஷ்ணபுரி என்னும்) பரங்கிப்பேட்டையில் Forto Novo நாங்கூர் வேள்குலத்தில் வேதாந்த சித்தாந்த சமரச மரபில், குருலிங்க சங்கம வழிபாட்டிற் சிறந்து சுத்தசைவ வீரசைவ அபேதசந்ததியில் சிவபிரானிடத்தும் திருமாலிடத்தும் உள்ளன்பு செலுத்தும் சதாசாரமுள்ள அப்பாசாமிப் பிள்ளை அவர்களுக்கும், திருவழுந்தூர் வேளிர் குலத்தில் முத்துக்கிருஷ்ணபுரியில் தோன்றிய அன்னம்மையாருக்கும், விபவ வருஷம் ஐப்பசி மாதம் விசாக நக்ஷத்திரத்தில் (28-10-1868) இவர் பிறந்து, இவர்கள் குலாசாரப்படி இருக்கு வேதத்து ஆசுவலாயனீய சூத்திரவழி மானவகோத்திரத்தாருக்கு ஆசாரியர் ஆதற்குரிய அந்தணரால் ஜாதகர்ம முதலிய வைதிகச் சடங்குகளும், காமிகாகமப்படி வீரசைவ சுத்தசைவ விகித சமயச் சடங்குகளும் செய்யப்பெற்று, சிரௌத ஸ்மார்த்த அனுஷ்டானங்களுக்கும் வைதிகச் சைவானுஷ்டானங்களுக்கும் யோக்கியராகி, இளம்பருவத்தில் தக்க ஆசிரியர்களிடத்து வடமொழி, தென் மொழி, ஆந்திரம், ஆங்கிலம் முதலிய பாஷைகளைக் கற்றுணர்ந்து, அக்கல்விக்கேற்ப அறிவு, ஒழுக்கம், அன்பு, ஆர்வம் அடக்கம் முதலிய குணங்கள் வளர வளர்ந்து, சீரிய பெரியோரையடுத்துப் பதினன்கு வித்தைகளின் நுட்பப்பொருளை மிக்க ஆதரத்தொடு கேட்டுணர்ந்து, உலகியல் நெறியிலும் அரசியல் துறையிலும் தேர்ச்சியுற்ற பல பெரியோர்களை ஆசரித்து அவர்கள் வழியின் அமைந்து, இல்லறத்தின் ஒழுகி, அவ்வறத்தை இனிதின் நடத்தி, 1893-ம் வருடத்தில் தரங்கம்பாடி லூதரன் கல்லூரியில் தமிழாசிரியராக நியமிக்கப்பெற்று, அதன்பின்னர் 1916-ம்வருடம் முதல் சீகாழி லூதரன் உயர்தரப் பாடசாலையில் தமிழ்ப் பண்டிதர் வேலைபார்த்து வருகிறார். இவ்வேலையை இவர் கருத்தோடு பார்த்து வருவதால், அவ்வக் காலங்களில் தலைமை உபாத்தியாயர் பலரும், பரிசோதகர் பலரும் இவர் திறமையையும் மாணவருக்குப்

பாடஞ்சொல்லு மாற்றலேயும் பாராட்டிப் பல நற்சாட்சிப் பத்திரம் அளித்திருக்கின்றனர்.

வித்தியாசாலே மாணவருக்குப் பாடங் கூறுவதனேடு, பல ஐரோப்பியருக்கும் இவர் முனிஷியாக இருந்து அவர்களுக்குச் செந்தமிழைக் கற்பித்து அவர்களேக்கொண்டு ஜெர்மன் முதலிய பாஷைகளில் திருவாசகம், சிவஞானபோதம், சிவஞ்ஞான சித்தியார் சுபக்ஷம், பரபக்ஷம், தொல்காப்பியப் பொருளதிகாரம், பெரிய புராணம், திருவிளேயாடற் புராணம், காரைக்காலம்மையார் நூல்கள், ஆண்டாள் திருப்பாவை, தாயுமானவர் பாடல் ஆகிய இவை முழுவதையும், தேவாரம், திவ்விய பிரபந்தம், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலே, பட்டினத்தார் பாடல் முதலியவற்றுள் சில முக்கிய பகுதிகளேயும் மொழி பெயர்த்து வெளியிடும்படி செய்திருக்கின்றனர். சில ஐரோப்பியர் இவர்பால் வேதாந்த நூல்களேயும், பௌத்த சமணதரிசனங்களேயும் செவ்விதின் ஆராய்ச்சி செய்து தங்கள் மத சித்தாந்தங்களேத் தமிழில் வெளியிட்டிருக்கிருர்கள். பாவரிசையர் தமிழ் இங்கிலீஷ் அகராதி இவர் உதவியால் வெளிவந்தது. முகமதிய மதத்துச் சீருப்புராணவுரைகடிலகமும் இவர் சகாயத்தால் வெளிவந்தது. இங்ஙனம் இவர்பால் இதுகாறும் தமிழ் கற்றறிந்த ஐரோப்பியர் இருபதின்மர். இவர்கள் யாவரும் தமிழ் மொழியின் சிறப்பையும் பழந்தமிழாது வன்மையையும் புகழ்ந்து பல அரியபெரிய ஆராய்ச்சி நூல்கள் எழுதி வெளியிட்டு வருகின்றனர். அன்றியும் முப்பதின்மர் வரை தமிழ் நாட்டவர், பிராமணர் முகமதியர் உள்ளிட்ட எக்குலத்தினரும் இவர்பால் கருவி நூல்களேயும், சமய நூல்களேயும் மிக்க பிரியத்தோடு கற்றுக்கேட்டு, திராவிடம், சமஸ்கிருதம், ஆந்திரம் முதலிய மொழிகளில் வித்துவான்களாகவும், வித்துவான் தேர்ச்சி பெற்றவர்களாகவும் விளங்கிக் கைத்தொழில் வியாபாரம், உத்தியோகம் முதலிய விருத்திகளில் மேன்மையடைந்து வருகின்றனர். இம்மாணவர் உதவியைக்கொண்டும், பல நண்பர் உதவியைக் கொண்டும் இவர் சில ஆலயங்களேயும், பாடசாலேகளேயும், பிறையாற்றில் அறுபத்துமூவர் மடாலயத்தையும், சங்கங்களேயும் நிறுவி இருக்கின்றனர். இம்மாணவரும் இவருடைய தம்பிமார்களும் பலருக்குக்

கற்பிப்பதனோடு அரிய பெரிய நூல்களையும் இயற்றிக் கல்வியினும், செல்வத்தினும், புகழினும் சிறந்து விளங்கி வருகின்றனர். இவருடைய பிள்ளைகள் நால்வரும் பெண்கள் மூவரும், மாணிக்க வல்லி யென்னும் மனைவியாரும் யாவரிடத்தும் பேரன்புடன் ஒழுகித் திகழ்கின்றனர். பிள்ளைகள் கல்விவல்லவர்களாய், உயிர் நூற்புலமை, வேளாண்மை, மருத்துவம், மின்சாரம் முதலிய துறைகளில் முறையே தேர்ச்சியுற்றுத் துரைத்தன உத்தியோகத்தில் நற்பெயரடைந்து வருகின்றனர்.

பொதுவாக இவர் பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்களை உணர்ந்ததோடு மாத்திரம் அமைவு பெறாது, இத்தேசத்தின் பழைய வரலாற்றை அறிதற்கேற்ற தொன்மை ஆராய்ச்சிகளிலும் வல்லவராய், இத்தேசத்தைப்பற்றிப் பல மொழிகளில் பல பெரியோர் எழுதிவைத்திருக்கும் அரியபெரிய நூல்களையும், பழங்கற் காலத்துப் பொருளையும், கற்குவை, கைவண்டி, சமாதிக்கல், சுமைதாங்கி, கல்வளைவு, தாழி முதலியவற்றையும், பூர்வ நாணயங்களையும் சிலாசாஸனங்களையும், பழைய காலத்தில் நடந்துவந்த கைத்தொழில் வியாபார முறைகளையும் படித்துப் பிரசித்தியடைந்து பலவிடங்களுக்குச் சென்று, பல பெரியோர் சபையில் இனிதிற் செய்யும் பிரசங்க மூலமாக அவற்றி னியல்புகளைப் புலப்படுத்தி வருகின்றனர். பல பத்திரிகைகளுக்கு நிருபரேசாகி விவேகபானுவில் சோழர்களைப் பற்றியும், சிலாசாஸனங்களைப் பற்றியும், செந்தமிழ்ச் செல்வியில் காழித்தேவாரச் சிறப்பைப் பற்றியும், கண்ணுடைய வள்ளலார் முதலியோரைப் பற்றியும், கலைமகளில் தாயுமானவர், அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் முதலியோரைப் பற்றியும், அருட்பிரகாசத்தில் ஷடாந்த சமரசம் முதலியவற்றைப் பற்றியும் எழுதி வருகின்றனர். மதுரைத்தமிழ்ச் சங்க ஆரம்பகாலத்தில் எடுகேடல் என்னும் பொருள்பற்றி அச்சங்கக் கூட்டத்தில் உரைநிகழ்த்தியபோது ஸ்ரீமான் பாண்டித்துரை தேவர் அவர்கள் இவரை அச்சங்கத்து வித்துவான்களுள் ஒருவராக நியமித்தனர். திருப்பறியலூர்ப் புராணத்தை இவர் அச்சிட்டு வெளியிட்டகாலத்தில், திருவாவடுதுறை யாதீனத்து ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் கலைநிரம்பிய அறிஞர் என மெச்சியிருக்கின்றார். சூரியனார் கோவில் ஆதீனத்து ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார தேசிக சுவாமிகள் திருவெண்காடு முதலிய

24

க்ஷேத்திரங்களுக்கு விஜயம் செய்து பிறையாற்று வழியாகத் திரும்புகையில், இவர் அங்குத் தமது மாணவருக்குச் சிவநெறிப் பிரகாசத்தை உரையோடு பாடஞ்சொல்லி வருவதைக் கேட்டு நேரில் வரவழைத்து, ஆண்டில் இளையோர், சிறந்த அறிவில் முதியோரெனப் புகழ்ந்து பேசியிருக்கின்றார்கள். இங்ஙனமே வித்துவான்களும், பிரமுகர்களும் உரையினும் செய்யுளினும், புகழ்ந்து பேசியிருப்பன பல. கும்பகோணத்து ஸ்ரீலஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் சிகாழிக்கு விஜயம் செய்த காலத்து, பல கனவான்கள் கூடிய கூட்டத்தில் இவரைப் பரிசோதித்து, இவரது வேதாந்தத் தெளிவை மெச்சித் திவ்விய பிரசாதம் அனுக்ரஹித்திருக்கிறார்கள். விநாயக பெருமானையும், அவரது புராணத்தை விரித்துரைத்த பிருகு முனிவரையும் உபாசனா மூர்த்திகளாகக்கொண்ட இவர், இளம்பிராயத்திற்றானே தோத்திர ரூபமாகவும், சாத்திர ரூபமாகவும், புராணரூபமாகவும், வசனரூபமாகவும் பலநூல்களை இயற்றி அவ்விளம்பிராயம்முதலே அச்சிட்டு வருகின்றனர். அந்நூல்களுள் சில:—சிந்தாமணி விநாயகர் மாலை (1887) சாதாக்கியத் திருமுறை, (1893), ஒருபா ஒருபஃது, பிள்ளையாரூசல், ஐயனரிதனர்மாலை, சாமியார்ஸ்துதி, (1891) திருமகண்மாலை, முருகன் வருகைப்பத்து (1899) தில்லையாடி ஸ்தல புராணம் (1900) வாருணமான்மியம், பிறைசைப் பொய்யா விநாயகர் இருபா இருபஃது, வெள்ளை வாரணப்பிள்ளையார் திருவிரட்டைமணிமாலை (1901) மதுமூத்திரரோக அபியுக்த சிகிச்சை முதலிய வைத்திய நூல்கள், சோதிடநூல்கள் (1905) கார்மண்டல சதகவுரை (1930) மதுபான விலக்கு, சேதுபதி நாணயம், இண்டோடேனிஷ் நாணயம், காழிக்கல்வெட்டு என்பனவாம். தரங்கம்பாடியில் இவர் செய்துவந்த பொதுஜன நன்மையையும் இவர் எழுதிய அவ்வூர்ச் சரிதையையும் கருதி, அந்நகர வாசிகள் பலருங் குழுமி 6-7-1916-ல் பொன்னிதழ் உபசாரப் பத்திரமும் பொற்பதக்கமும் பரிசிலாக வழங்கியிருக்கிறார்கள்.

சிகாழிப் பிரபல கனவான்களாகிய ஸ்ரீமான் கி. சிதம்பரநாத முதலியார் அவர்கள் ஆதரவில் அன்னாரது இளவலாகிய ஸ்ரீமான் ச. சதாசிவ முதலியார் அவர்கள் பிரசுரம் செய்த பண்டார சாத்திரம், சம்பந்தர்பிள்ளைத்தமிழ், ஆபத்தோத்தாரணமாலை, பைரவாஷ்டோத்தர சதநாமம் முதலியவற்றிற்கும், அவர்கள் எழுதிவைத்

திருக்கும் அழகிய திருச்சிற்றம்பல தேசிகாது, அறிவானந்த சமுத்திரம் முதலிய பலநூல்களுக்கும் உடன்துணையா யிருந்து வருகின்றனர்.

இவ்வாறு பிள்ளையவர்கள் கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கங்களிற் சிறந்து விளங்குவதைக் கண்டுங் கேட்டும் திருவருள் புரியும் படியான திருக்கைலாய பரம்பரைத் தருமபுரவாதீனத்து ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் பரோபகாரம் கருதித் திருமுல்லைவாயிற் புராணம் முதலிய அரிய பெரிய நூல்கள் நாற்பதையும் இவரைக் கொண்டு சிறப்புப் பாயிரத்தோடும் முகவுரையோடும், திரவ்யோபகாரம் செய்து பிரசுரித்து வருகிறார்கள். மேலும் அநேக கிரந்தங்களை இவர் மூலமாக உபகரிக்க எண்ணி, இவருக்குப் பல ஆசீர்வாதம் கூறி, சீகாழியில் பிரசோற்பத்தி வருஷம், பங்குனி மாதம் திருவாதிரைத் திருநக்ஷத்திரத்தில் திருஞான சம்பந்த சுவாமிகள் திருமுலைப்பால் உத்ஸவத்தன்று மஹா சந்நிதானம் அவர்கள் இவருக்கு வித்வசிகாமணி என்கின்ற பட்டமும், அதற்கு அறிகுறியாக விலையுயர்ந்த சாதராவும் வழங்கினார்கள். இப்பெருமை வாய்ந்த பிள்ளையவர்கள் திடகாத்திரத்தோடு பலநாள் வாழ்ந்து தமிழ் உலகிற்குத் தம்மால் இயன்ற பேருதவி செய்து வருவார்களென்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

கண்ணகி குறித்த கற்புடைமகளிர்.

தமிழ் மொழியிலுள்ள பழங்காப்பியம் ஐந்தனுள் ஒன்றாகிய சிலப்பதிகாரத்திலே வஞ்சின மாலையில் கற்புடை மகளிர் எழுவரெனக் கண்ணகியாரின் வாக்காற் குறிப்பிடப்பட்டுள்ளது. அவருள் கரிகால் வளவனது பெண் ஆதிமந்தியார் ஒருவர் ஒழிந்த மற்றையோரது பெயர் இன்ன வென விளங்கவில்லை. ஆதலால் அவர்கட்குக் குறிப்பாகப் பெயரிடுகிறேன். அவை :—சான்றழைத்தாள், பாவைகாத்தாள், கல்லாய்க் கிடந்தாள், மாற்றாளஞ்சி, மதிமுகங் குரங்கானாள், தாய் சொற்காத்தாள் என்பனவாம். அவ்வெழுவருள் ஆதிமந்தியாரது வரலாறு அவர் பாடிய பாடலாலும் குறுந்தொகையிலும், அகநானூற்றிலும் உள்ள பாடல்க

ளாலும் அறியக் கூடியதாக இருக்கின்றது. மற்றவை அவ்வாறு அறியக் கூடியனவாக இல்லை. அவ்வெழுவாது வரலாறு திருவெண்காடர் புராணத்தும் இவ்வாறே சுருங்கக் கூறப்பட்டுள்ளது. அவ் வரலாற்றை விளங்கக் கூறுமுன் அவை யாரால் எதற்காகச் சொல்லப்பட்டன என்பதைக் கூறுகின்றேன்.

சோழநாட்டிலே காவிரிப்பூம் பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு சோழன் கரிகாற் பெருவளத்தான் அரசு செலுத்தி வரும் காலத்தில், அவ்வூரிலே உள்ளே வணிகருள் பெருங்குடியர் குலத்துதித்த கோவலன் கண்ணகியை மணந்து இனிதாக இல்லறம் நடத்தி வந்தான். அவ்வாறு வருபவன் மாதவி என்னும் நாடகக் கணிகையின் மீது காதலுற்று அவட்கு வேண்டிய பொருள் கொடுத்து அவளுடன் மருவி யிருப்பானாயினன். அவ்வாறிருக்கும் நாளில் அவ்வூரில் இந்திர விழா நடைபெற்றது. அதன் முடிவில் யாவரும் கடலாடச் சென்றார்கள். அவர்களுடனே கோவலனும் மாதவியும் சென்று காவிரிப் புகார் முகத்தே புன்னை நிழலிலே மணல் பரந்த நிலத்தே அமர்ந்தனர். பின் கோவலன் மாதவியின் வீணையைக் கையில் வாங்கிச் சில அகப்பொருட் சுவையுள்ள பாடல்களைப் பாட அப்பாடல்களைக் கேட்டு அவன் வேறு யாரிடத்திலோ அன்புடையவனாக இருக்கிறான் என்று எண்ணி வீணையை வாங்கி மாதவியும் வேறு குறிப்புடையாள் போலப் பாடினாள். அப்பாடலைக் கேட்டதும் கோவலன் அவள் மீது வெறுப்புற்று மனையை யடைந்து மனைவியிடத்து 'யான் பொருளையிழந்து வறுமையுற்றேன்' எனவும் அதுகேட்ட அவள் இவன் மாதவிக்குக் கொடுக்கப் பொருளின்மையால் இவ்வாறு கூறினான் என்று எண்ணி "என்னிடத்து இரண்டு சிலம்புள, அவற்றைத் தருகின்றேன். கொண்டருள்க" என்றனள். அதுகேட்ட அவன் "யான் இதனை வாணிகப் பொருளாகக்கொண்டு மதுரைக்கு வாணிகஞ் செய்யப் போகின்றேன்; நீயும் உடன் வரவேண்டும்" என அவளும் ஒருமித்தனள். பின்னர் இருவரும் அன்றிரவே புறப்பட்டுச் சில நாளில் மதுரையை அடைந்து ஓர் ஆயர்பாடியிற் றங்கினர். அவ்வாறு மதுரையை யடைந்த மறுநாட் கோவலன் கண்ணகியை ஆயர்பாடியில் ஐயை என்பாளிடத்து விட்டுவிட்டு ஓர் சிலம்பு கைக்கொண்டு அதைவிற்க மதுரையைநோக்கிச் சென்று வழியில்

எதிர்ப்பட்ட ஓர் பொற்கொல்லர் தலைவனிடம் அதைக் காட்டினுன். அவனும் அதுவே தனது திருட்டை மறைத்தற்கு ஏற்ற வழி என்று எண்ணி நெடுஞ் செழியனிடஞ் சென்று நம் அரண்மனைச் சிலம்பைத் திருடிய திருடன் வாயிலின் புறத்தே உளன் என, அவ்வரசன் அவனைக் கொன்று அச்சிலம்பைக் கொணர்க என்று கூறினன். ஏவலாளர் அவ்வாறே செய்து சிலம்பைக் கொணர்ந்து அரசனிடந் தந்தனர்.

அஃதுணர்ந்த கண்ணகி நெடுஞ்செழியனது அவைக் களத்தை யடைந்து என் கணவனைக் கொன்றது தக்கதோ என, அவன், 'கள்வரைக் கொல்லுதல் காவலர்க்குரித்தே' என்றனன். அது கேட்ட கண்ணகி "என் கணவன் கள்வனலன். என் சிலம்பினுள் மாணிக்கப் பரல் இடப்பெற்றிருக்கின்றது." என்றனள். அரசன் "நம் தேவியின் சிலம்பினுள் முத்து இடப்பெற்றிருக்கின்றது" என்று அக்கண்ணகியின் சிலம்பை வருவித்து அவளிடம் தந்தனன். அவள் அதை வாங்கி உடைத்தலும் அதனுள்ளிருந்து மாணிக்கப் பரல் தெறித்தது. அதைக் கண்ட நெடுஞ்செழியன், "யானே அரசன்? யானே அறமகன்? ஓர் இழிஞனாகிய பொற்கொல்லனது சொல்லைக் கேட்டுக் குற்றமில்லியைக் கொன்றேனே" என்று புலம்பி அரியணையினின்று கீழ்வீழ்ந்து உயிர் துறந்தான்.

அப்பொழுது கண்ணகி ஆங்கிருந்த பாண்டி மாதேவியைப் பார்த்து, "வேந்தன் தேவியே! வன்னிமரமும் மடைப்பள்ளியும் சான்ருக முன்னிறுத்துக் காட்டிய மொய்குழலாளும் பொன்னிக் கரையின் மணற்பாவை நின் கணவனுமென்று சொன்னவருடன் போகாமல், அப்பாவையை நீர்வந்து கரைக்காதபடி அக்கரையிலேயே காத்து நின்றவளும், தன் கணவனைக் காவிரி கொண்டு போக அவனைத் தேடிச் சென்று கடலிடம் முறையிட்டுக் கடல் கணவனைத் தரப்பெற்று வந்த கரிகாற் சோழன் மகளும், தன்னை விட்டுப் பிரிந்துபோன கணவன் வரும்வரையும் கடற்கரையிலே வரும் கலன்களைப் பார்த்துக்கொண்டு கல்லாய்க்கிடந்து கணவன் வந்ததும் கல்லுருவு நீத்தவளும், மாற்ருள் குழந்தை கிணற்றில் விழத் தன் குழந்தையையும் கிணற்றில் வீழ்த்து எடுத்தவளும், கணவன் தன்னை விட்டுப் பிரிந்திருந்த காலத்துத் தன் மதி

முகத்தை வேறொருவன் உற்றுப்பார்த்தது கண்டு அதனைக் குரங்கு முகமாகச் செய்து கொண்டிருந்து கணவன் வந்ததும் அதனை மாற்றிக் கொண்டவளும், விளையாட்டில் தன் தாய் தனது தோழியைப் பார்த்து யாளொரு பெண்ணையும் நீ யொரு பிள்ளையையும் பெற்றால் அவ்விருவரும் கணவனும் மனைவியும் ஆவர் என்று சொன்ன சொல்லைத் தாயின் தோழி கூற அச் சொற்படியே அவற்கு மனைவியானவளும் போல்வார் பிறந்த ஊரிலே யான் பிறந்தேன், உண்மையில் யானும் ஒரு பத்தினியாக இருப்பனேல் மதுரையை அரசோடு அழிப்பேன்'' என்றாள். இவ்வாறு தனது கற்புறுதியைக் கூறும்போது இவ்வெழுவாது வரலாற்றையும் பாண்டிமா தேவி கேட்பக் கண்ணகி கூறினாள்.

இனி யவருள் ஒவ்வொருவரது வரலாற்றையுந் தனித்தனியே கூறுகிறேன். (தொடரும்)

திருப்பாதிரிப் புலியூர்

ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்

அறுபதாமாண்டு விழா.

9—6—33.

நந்தமிழ் மொழியும் சமயமும் ஆற்றிய நற்றவப் பயனால், தோன்றாத் துணைவன் தனது அருள்நலங் கனிந்து ஒழுகியபடி, பரந்து ஆழ்ந்து எழுந்த புலவரும் வீரசைவக்குல விளக்குமாய, திருக்கோவலூர் ஆதினம், திருப்பாதிரிப் புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்து ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளை நம்நாடு பெற்றது. பெற்ற பொழுதினும் பெரிது வக்கும் பெருநாளும் இன்றுற்றது. இப்பெருநாள் ஞானசம்பந்த வள்ளலாரின் மூலத்திருநாளும், ஞானதான வள்ளலாம் நம் அடிகளாரின் அறுபதாமாண்டு நிறைவு விழாவுமாகும்.

ஞானசம்பந்தர் இல்லையே என்று உலகு கவலுறுங்காலத்து, அறுபது ஆண்டு நிறைவெய்தப்பெற்ற நம் அடிகளாரின் நினைவும், அறுபதாமாண்டு நிறைவுவிழாக் கொண்டாட்டமும், நம் சைவநன் மக்கள் அனைவர் அகத்தும் களிதுளும்பச் செய்யுமன்றோ?

சீமுகவாண்டு வைகாசி மூலநாள் (9—6—33) அன்று காலையில் தென் ஞட்டுச் சைவப் பெருமக்கள் அனைவரும் திருப் பாதிரிப் புலியூர் மடத்தினில் குழுமியிருந்தனர். அன்று புலர்வ தன்முன் அடிகள் நீராடி, சிவசின்னங்களுடன் அலங்கரிக்கப் பெற்ற இருக்கை யொன்றில் இருந்தனர். பின்னர் அடிக ளார்க்குப் புத்தாடை புனைவித்துப் பூமாலை யணிவித்து அனைவரும் அடிகளாரின் சிவ வடிவப் பொலிவினைக் கண்டு களித்து, "பொன் மேனி வாழ்ந்திடுக" "சொன்மாரி வாழ்ந்திடுக" "இன்னிசையும் வாழ்ந் திடுக" "இறைபணியும் வாழ்ந்திடுக" என்று வாயாரப் பாடி, தலையாரக் கும்பிட்டு வணங்கி அடிகளாரின் ஆசிபெற்றனர்.

சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தினரும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினரும், மற்றும் பலரும் அடிகட்கு வாழ்த்துப்பா வாசித் தளித்தனர்.

அன்று மாலையிலும், மறுநாள் மாலையிலும், பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்கள் தலைமையில் M. பால சுப்பிர மணிய முதலியார் B. A., B. L., அவர்களும், கா. சுப்பிரமணிய பிள்ளை M. A., M. L., அவர்களும், சச்சிதானந்தம் பிள்ளை B.A., L.T., அவர்களும், வித்துவான் மறை திருநாவுக்கரசு அவர்களும், உமாமகேஸ்வரம் பிள்ளை B. A., B. L., அவர்களும் இன்னும் தென்ஞட்டுச் சைவப் பெரியார் பலரும் அடிகளாரின் நிறையும் பொறையும், அன்பும் அருளும், புலமையும் எளிமையும், தொண் டும் தொன்மையும், வன்மையும், தெய்வத் தன்மையும், தண்மை யும் ஆகிய பண்புகளைப் பன்னிப் பன்னிப் பேசிப் பல்லாண்டு பாடினர்.

முடிவாக அடிகள் ஆங்கு குழுமியிருந்த விழுமிய அவைக் கும், விழாவினை நடாத்திபவர்கட்கும், நன்றி கூறினர்கள். பின்றை இப் பெருந்திருநாளின் நினைவுக் குறியாக, தமிழுக்கும் சைவத்துக் கும் பெரிதும் உழைக்கும் அறிஞர் உமாமகேஸ்வரம் பிள்ளை B. A., B.L., அவர்கட்கு "செந்தமிழ்ப் புலவர்" என்ற பட்ட மளித்தனர். இவ்வரிய பட்டத்தையும், இதற்குரிய பிள்ளையவர் களின் பெற்றியையும் பலரும் ஒப்பிப்பேச அறுபதாமாண்டு விழா நிறைவெய்தியது.

மதிப்புரை.

ரிக்வேதம்:—மேனாட்டார் நம் வேதங்களை, இங்கிலீஷ் ஜெர்மன், இலத்தின் முதலிய மொழிகளில் மொழிபெயர்த்து வைத்துப் படித்து வரும்போது நம் நாட்டினரில் ஒரு சிலரை யொழித்த ஏனைப் பெரும் பிரிவினர்க்கு வேதங்கள் இன்னும் மறைபொருளாகவே இருந்துவருகின்றன. அவ்வாறு மறையாக இருப்பதனாலேயே எல்லாப் பொருளும் அவற்றிலுள, இல்லாத தொன்றில்லை என்று ஒரு சாராரும், ஒரு பிரிவினர் ஏனைய பிரிவினரை இகழ்ந்து ஓதுக்கும் வசைகளே அவற்றின்கணுள வேறொன்றுமில்லை யென மற்றொரு சாராரும் நேர்மாறாகக் கூறி வருகின்றனர். இம்மலைவு தீரும் வண்ணம், வேதங்களில் தலையானதாய்க் கருதப்படும் இருக்கு வேதத்தை மாதந்தோறும் ஒரு அத்தியாயமாகத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட உயர்திரு சிவத்தியாநாநந்த மஹர்ஷி முன்வந்துள்ளார். இவர் முயற்சி நன்முயற்சியாகுக. தமிழகத்தார் அவர்க்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளார்கள். மொழிபெயர்ப்பு கலிவிருத்தச் செய்யுள் ரூபமாக இருப்பது மிகவும் போற்றத் தக்கதாவதோடன்றி ஆசிரியரின் வடமொழி தென்மொழிப் புலமையையும் நன்கு தெரிவிப்பதாகும். தனிப்பிரதி ரூபா. ஒன்று. எட்டுப் பகுதிகட்கு ரூ. 4—0—0. வேண்டுவோர் இராயப்பேட்டை வேதப்பிரவசன மந்திரத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பாண்டிமண்டல சதகம் :—சோழமண்டல சதகம்; தொண்டைமண்டல சதகம், கொங்குமண்டல சதகம் என்று ஒவ்வொரு மண்டலத்திற்கும் சதகங்கள் அச்சேறியுள்ளன. பாண்டிமண்டல சதகம் மட்டும் இல்லையே யென்ற ஒரு குறையில்லாமல் அச்சதகம் வைத்திசுவரன் கோயில் காராள சற்குணசபை திரு. அ. பொ. இராமையாபிள்ளை அவர்கள் முயற்சியால் இப்பொழுது வெளிவந்துள்ளது. இஃது மதுரை ஐயம் பெருமாள் ஆசிரியரால் இயற்றப்பட்டதாகும். பல பிரதிகளைப் பரிசோதித்து இச்சதகம் இப்பொழுது வித்வசிகாமணி ப. அ. முத்துத்தாண்டவராயப் பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. இதன் விலை அணா மூன்று. மொத்தமாக வாங்குவோர்க்குத் தக்க கழிவு தரப்படும். வேண்டுவோர் நமது கழகத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.



பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையார்

1820–1910.

௨௧௨-ம் பக்கம் பார்க்க.

ஓம்
திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு கக	மெய்கண்டான் யாண்டு-எாய் வைகாசித் திங்கள் 1933ஆ மேயு—ஜூன்மு	பரல் ரு

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

திருநெல்வாயிலரத்துறை

பண்—பியந்தைக் காந்தாரம்

எந்தை யீசனெம் பெருமா னேறமர்
கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற்
சென்று கைகூடுவ தன்றால்
கந்த மாமல ருந்திக் கடும்புனல்
நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயில் அரத்துறை
யடிகள்தம் அருளே.

பதவுரை :—

கந்தம் மாமலர் உந்தி—மணமுள்ள பெரிய பூக்களைத் தள்ளிக்கொண்டு

மல்கு கடும்புனல் நிவாகரைமேல்—நிறைந்து விரைவாய் ஓடுகின்ற நீரை உடைய ஆற்றினது கரைமேல் இருக்கிறதும்

அந்தண்சோலை—அழகும் குளிர்ச்சியுமுடைய சோலைகளாற் சூழப்பெற்றது மாகிய

நெல்வாயில் அரத்துறை அடிகள் அருள்—திருநெல்வாயி லரத்துறை என்ற தலத்தில் திருக்கோயில்கொண் டருளியிருக்கும் சிவபெருமானது திருஅருளானது

எந்தை ஈசன்—எமது தந்தை என்றும்

எம்பெருமான் ஏறு அமர் கடவுள் என்று ஏத்தி—எங்களை ஆளும் ஆண்டவன் என்றும் எங்களைக் காக்கும் தலைவன் என்றும் ஏற்று ஊர்தியில் ஏறிவரும் அறக்கடவுள் என்றும் புறம்பே துதித்து வாழ்த்தி

சிந்தை செய்பவர்க்கு அல்லால்—அகத்தே உள்ளத்தில் (தங்களுக்கும் அவனுக்குமுள்ள தொடர்பினையும் அவன் தங்களுக்கு இடைவிடாது செய்துவரும் பேருதவியையும்) நினைந்து உள்ளம் குழைந்து உருகுகின்றவர்களுக்கு அல்லாமல்

சென்று கைகூடுவது அன்று—அவர்களைச் சேர்ந்து அவர்களிடம் மெய்யுணர்வு (தெள்ளறிவு) ஆக விளங்கிப் பயன்தராது.

விளக்க உரை:—

கடும்புனல் நிவாமல்கு கரை—இதனை மல்கு கடும்புனல் நிவாகரை என உரைநடை செய்க.

மல்கு கடும்புனல்—என்பது மல்குபுனல் கடும்புனல் என விரியும்.
மல்கு புனல்—இருகரைகளும் நிறைந்து வரும்புனல்.
கடும்புனல்—விரைவாய் ஓடும் புனல்.

அரத்துறை அடிகள் அருள்—அடிகள் என்ற சொற்பொருள் விளக்கத்துக்கு செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 9, பரல் 6, பக்கம் 286 பார்க்க.

அருள்—உயிர்கள் மேல் வைக்கும் பேரிரக்கம்; உயிர்களைத் தன்போல பேரின்பமடையச் செய்தல்வேண்டும் என்கிற தன்னினின்றும் வேறல்லாத சிவபெருமானுடைய பேரிரக்கம்; மன்னுயிர்கள் தன்னிலைமை சாரத் தரும் சக்தி; "பின்னமிலா னெங்கள் பிரான்" என்னும் திருவருட்பயன் செய்யுட் கருத்தை நோக்குக.

அடிகள் என்ற சொல்லுக்குப் பின்வரும் தம் அசை. அருளே எனபதிலுள்ள ஏ- அசை.

எந்தை ஈசன் எம்பெருமான் ஏறு அமர்கடவுள் என்று ஏத்தி—எந்தை என்பது இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள புத்திர மார்கக நிலையையும் ஈசன் என்பது ஆண்டான் அடிமை நிலையையும் ஏறமர் கடவுள் என்பது சக மார்க்க நிலையையும் எம்பெருமான் என்பது சன்மார்க்க நிலையையும் குறிக்கின்றன என்று நாம் கூறலாம்.

சிந்தை செய்பவர்க்கு அல்லால்—அல்லால் என்று எதிர்மறையாற் கூறியது சிவபெருமானை ஏத்திச் சிந்தை செய்கிறவர்களே அவனது அருளைப் பெறுவர் என்ற உண்மையை வலியுறுத்தற் பொருட்டு.

சென்று கைகூடுதல் அன்று—சென்று என்ற வினையெச்சம் விளங்கி என்னும் பொருள்பட நின்றது. யாங்கணும் ஒழிவற நிறைந்திருக்கும் அருள் இடம் பெயர்ந்து செல்லவேண்டியதில்லை யாகலான் "என்

மனமே யொன்றிப் புக்கனன் போந்த சுவடில்லையே," என்று திருநாவுக்கரசு அடிகள் கோயில் திருவிருத்தம் 3-வது பாட்டிற் கூறியருளினமை காண்க.

கூடுதல்—சிந்தித்தல்; பயன்தருதல். அருள் சென்று கைகூடுதல் என்பது அருள் ஒளி சிந்தையில் விளங்கி மலம் நீங்கித் தெள்ளறிவு உண்டாதல்.

ஆல்—அசை.

ஏத்திச் சிந்தை செய்பவர்க் கல்லால் அருள் சென்று கைகூடுவதன்று எனமுடிக்க. வாயால் துதித்து வாழ்த்தலும் மனதாற் சிந்தித்தலும் இப்பாட்டிற் கூறப்பட்டன. இனம்பற்றி மலர்கள் கைகளிற்கொண் டருச்சித்தலும் கொள்ளலாம். திருஞான சம்பந்த அடிகள் தாம் பக்கத்திலிருக்கிற ஊராகிய மாறன்பாடியிலிருந்து திருநெல்வாயிலரத்துறைக்கு எழுந்தருளும்பொழுது தமக்கு சிவபெருமான் திருநெல்வாயிலரத்துறைவாசிகள் மூலமாய் முத்துச்சிவிகை முத்துக்குடை முத்துச்சின்னம் கொடுத்தருளினமையை நினைந்து இத் தேவாரப்பாட்டை முதலாகவுடைய தேவாரப் பதிகம் பாடியருளினர். இவை தமக்கு சிவபெருமானது திருவருளினாற் கிடைக்கப் பெற்றமையினால் அவர் அத்திருவருளினை நினைந்து பாடி அருளினர்.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

பதிற்றுப் பத்து விளக்கம்

(பண்டிதர், அ. நடராஜபிள்ளை)

(௧௫௪-ம் பக்கத் தொடர்ச்சி)

(5) நிரைய வெள்ளம்

(௧௫) பாட்டு

யாண்டு தலைப்பெயர வேண்டுபுலத் திறுத்து
முனையெரி பரப்பிய துன்னருஞ் சீற்ற மொடு
மழைதவழ்பு தலைஇய மதினமர முருக்கி
நிரைகளி றொழுகிய நிரைய வெள்ளம்
பரந்தாடு கழங்கழி மன்மருங் கறுப்பக்
கொடிவிடு குரூஉப்புகை பிசிரக் கால்பொர
வழல்கவர் மருங்கி னுருவறக் கெடுத்துத்
தொல்கவி னழிந்த கண்ணகன் வைப்பின்
வெண்பூ வேளையொடு பைஞ்சுரை கலித்துப்
பீரிவர்பு பரந்த நீரறு நிறைமுதற்

சிவந்த காந்தண் முதல்சிதை மூதிற்
புலவுவில் லுழவிற் புல்லாள் வழங்கும்
புல்லிலை வைப்பிற் புலஞ்சிதை யரம்பி
னறியா மையான் மறந்துதுப் பெதிர்ந்தநின்
பகைவர் நாடுங் கண்டுவந் திசினே
கடலவுங் கல்லவும் யாற்றவும் பிறவும்
வளம்பல நிகழ்தரு நனந்தலை நன்னாட்டு
விழவறு பறியா முழவிமிழ் மூதூர்க்
கொடிநிழற் பட்ட பொன்னுடை நியமத்துச்
சீர்பெறு கலிமகி ழியம்பு முரசின்
வயவர் வேந்தே பரிசிலர் வெறுக்கை
தாரணிந் தெழிலிய தொடிசிதை மருப்பிற்
போர்வல் யானைச் சேர லாத
நீவா ழியரிவ் வுலகத் தோர்க்கென
வுண்டுரை மாறிய மழலை நாவின்
மென்சொற் கலப்பையர் திருந்துதொடை வாழ்த்த
வெய்துற வறியாது நந்திய வாழ்க்கைச்
செய்தன் மேவ லமர்ந்த சுற்றமோ
டொன்றுமொழிந் தடங்கிய கொள்கை யென்றும்
பதிபிழைப் பறியாது துய்த்த லெய்தி
நிரைய மொரீஇய வேட்கைப் புரையோர்
மேயின ருறையும் பலர்புகழ் பண்பி
னீபுறந் தருதலி னோயிகந் தொரீஇய
யாணர்நன் னாடுங் கண்டுமதி மருண்டனென்
மண்ணுடை ஞாலத்து மன்னுயிர்க் கெஞ்சா
தீத்துக்கை தண்டாக் கைகடுந் துப்பிற்
புரைவயிற் புரைவயிற் பெரிய நல்கி
யேம மாகிய சீர்கெழு விழவி
னெடியோ னன்ன நல்லிசை
யொடியா மைந்தநின் பண்புபல நயந்தே.

கொண்டு கூட்டு

[16 கடலவுங் கல்லவும் யாற்றவும் பிறவும்
வளம்பல நிகழ்தரு நனந்தலை நன்னாட்டு

விழவறு பறியா முழவிமிழ் மூதூர்க்
கொடிநிழற் பட்ட பொன்னுடை நியமத்துச்
சீர்பெறு கலிமகி ழியம்பு முரசின்
வயவர் வேந்தே! பரிசிலர் வெறுக்கை!
தாரணிந் தெழிலிய தொடிசிதை மருப்பிற்
போர்வல் யானைச் சேர லாத! 23]
[35 மண்ணுடை ஞாலத்து மன்னுயிர்க் கெஞ்சா
தீத்துக்கை தண்டாக் கைகடுந் துப்பிற்
புரைவயிற் புரைவயிற் பெரிய நல்கி
யேம மாகிய சீர்கெழு விழவி
னெடியோ னன்ன நல்லிசை
யொடியா மைந்த! நின் பண்புபல நயந்தே 40]
[1 யாண்டு தலைப்பெயர வேண்டுபுலத் திறுத்து
முனையெரி பரப்பிய துன்னருஞ் சீற்றமொடு
மழைதவழ்பு தலைஇய மதின்மா முருக்கி
நிரைகளி றொழுகிய நிரைய வெள்ளம்
பரந்தாடு கழங்கழி மன்மருங் கறுப்பக்
கொடிவிடு குரூஉப்புகை பிசிரக் கால்பொர
வழல்கவர் மருங்கி னுருவறக் கெடுத்துத்
தொல்கவி னழிந்த கண்ணகன் வைப்பின்
வெண்பூ வேளையொடு பைஞ்சுரைப் (b) பீ (ரும்
(a) கலித் (c) திவர்பு பரந்த நீரறு நிறைமுதற்
சிவந்த காந்தண் முதல்சிதை மூதிற்
புலவுவில் லுழவிற் புல்லாள் வழங்கும்
புல்லிலை வைப்பிற் புலஞ்சிதை யரம்பி
னறியா மையான் மறந்துதுப் பெதிர்ந்தநின்
பகைவர் நாடுங் கண்டுவந் திசினே 15]
[24 (b) இவ்வுல கத்தோர்க்கு (a) நீவா ழியர் (c) என
வுண்டுரை மாறிய மழலை நாவின்
மென்சொற் கலப்பையர் திருந்துதொடை வாழ்த்த
வெய்துற வறியாது நந்திய வாழ்க்கை 27]
[29 ஒன்றுமொழிந் தடங்கிய கொள்கை 29] [31 நிரைய
மொரீஇய வேட்கைப் புரையோர் 31] [28 செய்தன்

மேவ லமர்ந்த சுற்றமோ 28] [29 டென்றும்
பதிபிழைப் பறியாது துய்த்த லெய்தி30]
[32 மேயின ருறையும் பலர்புகழ் பண்பி
னீபுறந் தருதலி னோயிகந் தொரீஇய
௪0. யாணர்நன் னாடுங் கண்டுமதி மருண்டனென். 34]

பதவுரை

கடலவும் - கடலிலே தோன்றுவனவும், கல்லவும் - மலைகளிலே தோன்றுவனவும், யாற்றவும் - யாறுகளிலே தோன்றுவனவும், பிறவும் - ஏனைக் காடுகளிலே தோன்றுவனவுமாகிய, வளம் பல - பலவிதமான வளங்கள், நிகழ்தரு - பொருந்தியுள்ள, நனம் தலை - பரந்த இடத்தையுடைய, நல்நாட்டு - நல்ல நாட்டிலேயுள்ள, விழவு - திருவிழாக்கள், அறுபு-நீங்கியிருத்தலை, அறியா - காணாத, முழவு - குடமுழாவாத்தியங்கள், இமிழ் - முழங்கும்படியான, மூதூர் - பழையவூர்களிலே, கொடி நிழல் - திருவிழாக்களுக்காக எடுத்துக் கட்டப்பட்ட கொடிகளின் நிழல்கள், பட்ட - படுதலோடு கூடிய, பொன் உடை - அழகிய, நியமத்து - கோயில்களில், சீர்பெறு - வெற்றியாகிய புகழினைப் பெற்றமையினாலே, கலி மகிழ் - மிகுந்த மகிழ்ச்சியோடு, இயம்பும் - ஒலிக்கின்ற, முரசின் - முரச வாத்தியத்தையுடைய, வயவர் - வீரர்களுக்கு, வேந்தே - அரசனே, பரிசிலர் - பரிசில் பெற வரும் புலவர்களுக்கு வேண்டிய, வெறுக்கை - செல்வமாகி யிருப்பவனே, தார் அணிந்து - மாலைகளை மேற்கொண்டு, எழிலிய - அழகிய, தொடி - கிம்புரிகள், சிதை - சிதறப்பெற்ற, மருப்பின் - கொம்புகளையுடைய, போர் - போர் புரிதலில், வல் - திறமைமிக்க, யானை - யானைப் படைகளையுடைய, சேரலாத - சேரமன்னனே, மண் உடை - மண்ணுலாகிய, ஞாலத்து - இவ்வுலகில், மன் உயிர்க்கு - நிலைபெற்றுத் தங்கிய மக்கட்கு, எஞ்சாது - குறைவின்றி, ஈத்து - கொடுத்து, கைதண்டா - மாறுதலில்லாத, கை - கைகளுக்கேற்பட்ட, கடும் துப்பின் - மிகுந்த அனுபவத்தினாலே, புரைவயின் புரைவயின் - மேன்மை மிக்க பொது நிலையங்களுக்கெல்லாம், பெரிய - மிகுந்த பொருள்களை, நல்கி - கொடுத்து, ஏமம் ஆகிய - இவ்வுலகிற்குப் பாதுகாவலாகிய, சீர்கெழு - சிறப்புப் பொருந்திய, விழவின் - திருவிழாவாற் கொண்டாடப்படுகின்ற, நெடியோன் அன்ன - திருமாலையொத்த, நல் இசை - நல்ல புகழானது, ஒடியா - ஒழி

யாத, மைந்த - வலிமை மிக்கவனே, நின் பண்பு பல - உன்னுடைய பலவிதமான நற்குணங்களை, நயந்து - காண விரும்பி, யாண்டு தலைப் பெயர - வருடங்கள் பல கழிந்து செல்லும்படி, வேண்டு புலத்து - விரும்பிய பகைவர் நாட்டில், இறுத்து - சென்று தங்கி, முனை - போர்முனையிலே, எரிபரப்பிய - அனல் போன்ற துன்பத்தைப் பரவச்செய்த, துன் அரும் - நெருங்குதற்கு முடியாத, சீற்றமொடு - சினத்துடனே, மழை - மேகங்கள், தவழ்பு - தவழ்ந்து, தலைஇப - பொருந்திய, மதில் மரம் - கோட்டை மதிலிலுள்ள கொடிமரங்களை, முருக்கி - அழித்து, நிரைகளிறு - ஆண்யானைக் கூட்டங்கள், ஒழுகிய - கலந்து செல்லும்படியான, நிரைய வெள்ளம் - பகைவர்க்கு நரகலோகக் காவலரைப் போன்று காணப்படும் படை வெள்ளமானது, பரந்து - பரவி நின்று, ஆடு - பெண்கள் விளையாடும்படியான, கழங்கு - கழற்சிக்காயாட்டத்தை, அழி - கெடுத்துப் போர்செய்ய வந்த, மன் மருங்கு - பகையரசனது நாட்டை, அறுப்ப - அழிக்க வேண்டி, கொடி - (மாளிகைகளிற் கட்டியுள்ள) துகிற் கொடிகள், விடு - வெளிப்படும், குரூஉப் புகை - கரிய நிறமிக்க புகையுடனே, பிசிர - துளிதுளியாய்ச் சிதறிப்போகும்படி, கால்பொர - காற்று வீச, அழல் - நெருப்பாலே, கவர் மருங்கின் - கண்களையும், நெஞ்சினையும் கவரும்படியான இடங்களினுடைய, உரு - வடிவங்களை, அற - மிகுதியும், கெடுத்து - பாழாக்க, (அதனாலே), தொல்கவின் - பழமையான இயற்கையழகுகள், அழிந்த - கெட்டுப்போதலையுடைய, கண் அகன் - விசாலமான, வைப்பின் - ஊர்களையும், வெண்பூ - வெண்மையான பூக்களையுடைய, வேளையொடு - தைவேளைச் செடிகளுடனே, பைஞ்சுரை - பசிய சுரைக் கொடிகளும், பீரும் - பீர்க்கங்கொடிகளும், கலித்து - செழித்து, இவர்பு - படர்ந்தேறி, பரந்த - பரவி முளைத்த, நீர் அறு - நீர் இல்லாது, நிறை - நிற்கின்ற, முதல் - அடிப்பாகத்தையுடைய, சிவந்த - செம்மையான, காந்தள் முதல் - காந்தட் செடியினை, சிதை - சிதைக்கும்படியான, மூது இல் - பழமையான வீட்டினையுடைய, புலவு - புலால் நாற்றமிக்க, வில் - விற்களாலே, உழவின் - உழைப்பினைச் செய்து பிழைக்கும், புல்ஆள் - அற்பர்களாகிய வழிப்பறிக் கள்வர்கள், வழங்கும் - குடியிருந்து திரியும்படியான, புல் இலை - பனையோலைகளாலே வேயப்பட்ட, வைப்பின் - குடிபோய்ப் பாழான

லூர்களையுமுடைய, புலம் சிதை - திசைமாறிக் கெட்ட, அரம்பின் - அரண்களோடு கூடிய, அறியாமையால் - நினது வலிப்பெருமையைத் தெரிந்து கொள்ளாத காரணத்தால், மறந்து - நின்னை அலட்சியமாய் நினைத்து, துப்பு எதிர்ந்த - உன்னுடைய படை வலியோடு மாறுபட்ட, நின்பகைவர் - உன் பகைவரது, நாடும் - நாட்டையும், கண்டு - பார்த்து, வந்திசின் - வந்தேன், ஏ - இசை நிறை, இவ்வுலகத்தோர்க்கு - இந்த உலக மக்களின் வாழ்வு சிறக்க வேண்டியதற்காக, நீ வாழியர் - நீ வாழ்வாயாக, என - என்று, உண்டு - கள்ளினைக் குடித்தலினாலே, உரைமாறிய - மொழிகள் சிதறப்பெற்ற, மழலை - குதலையோடு கூடிய, நாவின் - நாக்கினையும், மென்சொல் - நலிந்த சொற்களையுமுடைய, கலப்பையர் இசைக் கருவிகளிடப்பட்ட பையினையுடைய யாழ்ப்பாணர், திருந்துதொடை - செவ்விய நரம்புத் தொடையோடு கூடிய யாழொலியுடனே, வாழ்த்த - வாழ்த்துப் பாடல்களைப் பாட, வெய்துறவு - துன்பத்தினை, அறியாது - நெஞ்சாலும் நினைத்தறியா வண்ணம், நந்திய - சிறந்த, வாழ்க்கை - இல்லற வாழ்க்கையினையும், ஒன்று மொழிந்து - தலைவராயினார் ஒரு கருத்தினைக் கூற, அடங்கிய - அதனைக் கேட்டு அவ்வழியே அடங்கி நடக்கின்ற, கொள்கை - போக்கினையும், நிரையம் - நரகவாழ்க்கையினை, ஒரீஇய - விட்டு நீங்குதற்கு வேண்டிய, வேட்கை - விருப்பத்தினையுமுடைய, புரையோர் - சான்றோர்கள், செய்தன - தாம் செய்த காரியங்களை, மேவல் அமர்ந்த - மறுக்காது மேற்கொள்ளுதலையுடைய, சுற்றமொடு - கிளைஞர்களுடனே, என்றும் - எக்காலத்திலும், பதி பிழைப்பு - இராஜத்துரோகத்தினை, அறியாது - கனவிலுங் காணாது, துய்த்தல் எய்தி - இம்மைப் பயன்களை அனுபவித்து, மேயினர் - தங்கினராகி, உறையும் - வாழும்படியான, பலர்புகழ் - பல புலவர்களாலும் புகழ்ந்து கூறப்படும், பண்பின் - குணங்களோடு, நீ புறம் தருதலின் - நினது ஆட்சி காரணமாக, நோய் இகந்து ஒரீஇய - வியாதிகள் விலகியொழிந்த, யாணர் - புது வருவாயினையுடைய, நல்நாடு - நல்ல நாட்டினையும், கண்டு - பார்த்து, மதிமருண்டனென் - மனமயக்க முறும்படியான ஆச்சரியத்தையடைந்தேன். (தொடரும்)

ஆசிரியரும் மாணுக்கரும்

(திரு. பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்)

முன்னுரை.

அரிய மனிதப் பிறப்பை யடைந்திருப்பவர்கள் தாந்தாம் பிறந்த தேசத்தானும், பேசும் மொழியானும், பிறவற்றுனும், வேறு வேறு கூட்டத்தவராகப் பகுக்கப் படுகின்றனர். அக் கூட்டத்தவருள்ளும், தம்தம் அறிவு தொழில் முதலியவைகளாற் சிறப்பு மேம்பாடுற்று, அவ்வச் சிறப்பிற்கும், அவை நிகழும் அவசரத்திற்கும் தக்கவாறு, பல்வேறு சிறப்புப் பெயர்களால் வழங்கப் படுபவர் உண்டு. பல கலையும் கற்றுணர்ந்தவர்களாய்த் தாம் அறிந்தவைகளைப் பிறரும் அறிந்து பயனெய்துமாறு அருள் சுரந்தூட்டுபவர்கள், "ஆசிரியர்" என்னும் சிறப்புப் பெயர்க்கு உரியராகின்றனர். அவர்கள் தாம் அறிந்தவைகளை நூல் இயற்றுதலாலும், உரை எழுதுதலாலும், நேரிற்போதித்தலாலும், பிறர்க்கு உரிமைப் படுத்தி முறையே 'நூலாசிரியர்' 'உரையாசிரியர்' 'போதகாசிரியர்' என்னும் பெயர்க்கு உரியராகின்றனர். "நூல் உரை போதகாசிரியர் மூவரும்" என்பது இலக்கணக் கொத்து. இவர்களன்றி, உலகில் தீவினை தலையெடுக்குங் காலங்களிற் ரோன்றி, அதனை யழித்து, தருமத்தை நிலைநிறுத்துவோர்களும், சமயஸ்தாபனஞ்செய்து ஆன்மஞானம் அல்லது பதிஞானத்தைப் பரவச் செய்வோர்களும், தனித்தனி ஆன்மாக்களின் பரிபாக காலத்தில் வெளிப்பட்டுத் தீக்ஷையானும் உபதேசத்தானும் ஆன்ம சுத்தியையும் ஆன்ம லாபத்தையும் அருளுவோர்களும், கடவுட் டன்மை வாய்ந்த 'ஆசிரிய' ராகின்றனர்.

ஆசிரியர்.

யான், இவண், ஆசிரிய ரெனக் கருதியது போத காசிரியரையே. நெடுங்கணக்கு முதல், பெருங்கலைகள் வரை எப்பாடத்தையும் ஒவ்வொருவர்க்கேனும், ஒவ்வொரு தொகுதியா யுள்ளவர்க்கேனும் போதிப்பவ ரனைவரும், போதகாசிரியர்களே. இவர்கள் உபாத்தியாயர் என்னும் பெயரால் வழங்கப்பட்டு வருகின்றனர். 'ஓதுவித்தற்கண் உதவியா யுள்ளவர்' என்னும் பொருள்படும். 'உப-அத்தியயனர்' என்னுந் தொடர், சொல்லும்

பொருளும் சிறிது திரிந்து, 'உபாத்தியாயர், உவாத்தியார்' என வழங்குகிறது. பாரத கண்டத் தவராகிய நம் முன்னோர்கள், கல்வியே மக்களுக்குக் கண்ணெனக் கருதிப் போற்றி வந்துளார்கள். குழந்தைகட்கு மிக்க இளம் பிராயத்தில் வித்தியாரம்பஞ் செய்வித்தலை, இன்றியமையாத ஓர் சடங்காகவும் நம்மவர் கொண்டிருக் கின்றனரன்றோ! 'இளமையிற் கல்,' 'வித்தை விரும்பு' 'எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்' என்பன போல்வன நம்நாட்டு மூதுரைகளாகும். இத்தமிழ் நாட்டில் மிகப் பழங்காலந் தொட்டே சிறுபள்ளிக்கூடங்களும், பெரிய கலாசாலைகளும், கல்விச் சங்கங்களும் இருந்திருக்கின்றன. அக்காலத்தில், உபாத்தியாயர், 'கணக்காயர்' என்னும் பெயரால் வழங்கப்பட்டனர். 'கற்றதூஉ மின்றிக் கணக்காயர் பாடத்தால்' என்பது நாலடியார். சங்கப் புலவர்களுள் பலரானும் அறியப்படும் பெருமை வாய்ந்த 'நக்கீரனூர்'க்குத் தந்தையானவர் மதுரையிலிருந்த ஓர் உபாத்தியாயரான காரணத்தால், 'மதுரைக் கணக்காயனூர்' என வழங்கப்பட்டார். மணிமேகலைக் காப்பியத்தால் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், காவிரிப்பூம் பட்டினத்தில் வித்தியா மண்டபம் முதலியன இருந்தமை புலனாகின்றது. பாண்டி நாட்டில் ஆயிரக் கணக்கான வருடங்கள் சங்கமிருந்து தமிழை வளர்த்தது உலகப் பிரசித்தம். கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் தமது இராமாயணத்தில் கோசல நாட்டை வருணிக்கு மிடத்து,

"பந்தினை யிளையவர் பயிலிடம் மயிலூர்
கந்தனை யனையவர் கலைதெரி கழகம்"

என்று கூறியது, அந்நாட்டிற்கும் பொருந்துவதாயினும், தமிழகத்தின் ஞாபகத்தால் அங்ஙனம் கூறினாரெனக் கொள்ளலும் தவறாகாது. இதனால் தக்க பருவம் வரப்பெற்ற வாலிபர்கள் சிறந்த கலைகளைப் பயின்றுவந்த கலாசாலைகள், இப்பரத பூமியில் அக்காலத்தி லிருந்தமை புலனாகின்றது. பல சொல்லியென்? அயோத்தியானது, 'கல்வியாகிய ஒரே முளை முளைத்தெழுந்து, கேள்விகளாகிய கவடுகளைப் போக்கி, தவமாகிய சாகந் தழைத்து அன்பாகிய அரும்பு அரும்பி, தருமமாகிய மலர் மலர்ந்து, போகமாகிய பழம் பழுத்தது போலும்' என்பரேல், அக்காலத்துக் கல்வியானது எவ்வளவு மகோன்னத நிலையில் இருந்திருத்தல் வேண்டும்?

பழைய தமிழ் நூல்களில் முகவுரையாக உபாத்தியாய ரியல்பும், அவர் பாடம் போதிக்கும் முறைமையும், மாணுக்க ரியல்பும், அவர் பாடங்கேட்கு முறைமையும் விளக்கமுற எழுதப்பட்டு வந்திருக்கின்றன. இந்நான் கிலக்கணமும் சேர்ந்த முகவுரையானது பொதுப்பாயிரம் எனப்படும். நன்னூலாசிரியர், நூலின் இலக்கணத்தையும் பொதுப்பாயிரத்திற் சேர்த்திருக்கிறுர். அவரும், அவர்க்கு முன்னுகப் பின்னுக வுள்ளவர்களும் கூறியிருக்கும் "ஆசிரியர் மாணுக்கரியல்" புகளைப் படிக்குங்கால், எல்லையில்லாத வியப்பும் உவப்பும் நமக்கு உண்டாகும். நன்னூலாசிரியர், 'நற்குடிப் பிறப்பும், சீவகாருண்யமும், கடவுள் வழிபாடும், பலநூல்களையும் கற்றுத் தேர்ந்த அறிவின் றெளிவும், போதனுசக்தியும், உலகியலறிவும் முதலாகிய உயர்குணங்களை உடைய ஞதலோடு பொறைமுதலிய வற்றுல் புவியினையும், உயர்ச்சி முதலியவற்றுல் மலையினையும், நடுவுநிலை முதலியவற்றுல் நிறைகோலையும், முகமலர்ச்சி முதலியவற்றுல் மலரினையும் ஒத்து விளங்குபவனே ஆசிரியனுவான்' என்று கூறுகின்றுர்.

புறத்திணை யியலில் 'எட்டுவகை நுதலிய அவையத்தானும்' என்பதற்கு நச்சினுர்க் கினியர் காட்டியுள்ள ஓர் செய்யுளானது, ஐயனுரிதனுர் கூறிய அவையமாந்த ரிலக்கணத்தோடும், ஆத்திரேயன்பேராசிரியன் கூறிய ஆசிரிய விலக்கணத்தோடும், கருத்தொருமை யுற்று, அழகுபெற உருவகஞ் செய்யப்பட்டு, விளங்குகிறது. "குடிப் பிறப்பாகிய உடையை யுடுத்து, நூலுணர்வாகிய மலரைச் சூடி, நல்லொழுக்கமாகிய அணியைப் பூண்டு, சத்தியமாகிய உணவை யுண்டு, தூய்மையாகிய ஆதனத்தமர்ந்து, நடுவுநிலையாகிய நகரிற்றங்கி, அழுக்காறின்மை, அவாவின்மை யென்கிற இரு பெருநிதியத்தையும் மேன்மேலும் ஈட்டுகின்ற தோலா நாவினையுடைய மேலோரின் பேரவைக்கண் ஒருநாள் சேர்ந்திருத்தல் கிட்டுமாயின், யான் மகிழ்வுடன் பெறுவேனுக, புலவு நாறுவதாய் நிலையற்றதாயுள்ள யாக்கையுடன் பொருந்தி உலகின்கட் சுழலாநின்ற பிறவியினை." என்பதே அவ்விலக்கணம்.

இவற்றுா னெல்லாம் ஆசிரிய ரென்போர், பண்டமாற்றுச் செய்யும் வாணிகரையும், தாம் பெறும் சம்பளத்திற் கேற்ப வேலை செய்யும் கூலித் தொழிலாளர் அல்லது உத்தியோகஸ்தரையும்

போன்றவரல்ல ரென்பதும் புனித சிந்தையும் புனிதவொழுக்கமு முடையவராய்த் தம்மைச் சார்ந்தாரை யெல்லாம் புனிதராக்கி வாழ்விக்கும் பேரருளாளர் என்பதும் விளக்க மாகின்றன.

இனி, ஆசிரியராவார் பன்னூலுங் கற்றறிந்தவ ராதலோடு உலகத்தோடு பொருந்த நடத்தலிலும் வல்லவராதல் வேண்டும். தாம் கற்றுணர்ந்த அரும் பொருள்களைப் பிறர் எளிதினுணருமாறு போதிக்குந் திறனுடையாராதல் வேண்டும்; இன்றேல், அவர், கொம்பினிடத்து நன்றாகப் பூத்திருந்தும் மணம் வீசுத லில்லாத புஷ்பத்தினை யொப்பரெனச் செந்நாப் போதார் கூறுகின்றார். ஆசிரியன் பாடங் கற்பிக்குங்கால் தான் கற்பிக்கப் போகும் விஷயங்களை மனத்தி லமைத்துக் கொண்டு, விரையாமலும் வெகுளாமலும் பிரியத்துடனும் முகமலர்ச்சியுடனும் கற்பித்தல் வேண்டும். தம்முடைய தெளிவும் இனிமையும் பொருந்திய குற்றமற்ற சொற்களினால் மாணாக்கர்களை வசிகரித்து, அவர்களுக்கு மேலும்மேலும் கேட்கவேண்டு மென்னும் ஆர்வத்தையும் மனவெழுச்சியையும் உண்டு பண்ணுதல் ஆசிரியர்க் கின்றியமையாத இலக்கணங்களில் ஒன்று. தமது பேசுந் திறமை யொன்றையே நோக்காது கேட்பாரது நிலைமை யறிந்து சொல்லித் தாம் சொல்லுகின்றவைகளை யேற்றுக் கொள்ளுகின்றார்களா வெனக் கவனித்தலும், ஏற்றுக் கொள்ளவில்லை யெனத் தெரிந்தால் அதன் காரணத்தை யறிந்து அவர்கள் ஏற்கும் விதத்தால் மீட்டுஞ் சொல்லலும், மாணாக்கர்கள் ஐயுற்று வினவியவைகளுக்கு இனிதின் விடைகூறி ஐயத்தைப் போக்குதலும், ஆசிரியர் கடமையாகும். மாணாக்கர்கள் ஐயுற்று வினவியவைகளுக்கு உத்தரம் கூறாமலும், அவர்கள் அவ்வப் பொழுது நேரும் ஐயப்பாட்டினைத் தாராளமாகத் தெரிவித்துக் கொள்ளுதற்கு இடங் கொடாமலும், தமது கோரமான தோற்றத்தாலும் வன்சொல்லாலும் அச்சுறுத்தி அவர்கட்கு ஏலாத தண்டங்களை யெல்லாம் விதித்து அன்னார்பால் அன்பின்றியே யொழுகுபவர்கள், மாணாக்கர்களின் அறிவு வளர்ச்சிக்குப் பிரதிபந்தமாக வந்த பிசாசங்களே யன்றி, ஆசிரியர்களாகமாட்டார்கள். மக்களுக் கியற்கையறிவானது, முற்பிறப்பை யொட்டியிருத்தலின், இப்பிறப்பின் வயதளவிற் கேற்ப அறிவிருத்தல் வேண்டு மெனும் நியம மில்லை. அம் முறைப்படி மாணாக்கர்கள் ஆசிரியரினும் அறிவு மிக்குடையாராய் ஒரோவழித் தனது சாதுரிய

அறிவை வெளிப்படுத்தலுங் கூடும்; அங்ஙனமாயின் ஆசிரியராயி ஞர் அவரது அறிவிற்கு வியந்து மகிழ்ந்து இன்புறுதலே தக்க தாகும்.

ஆசிரியரானவர், குறிப்பிட்ட யாதாமொரு பாடத்தைப் போதிப்பவராக மாத்திரமன்றி மாணுக்கர்களுக்கு உயர்நலமுள்ள பொது வுணர்ச்சியை உண்டுபண்ணி அவரது பொதுநல வாழ்க் கைக்குக்காரணராயிருத்தல் வேண்டும். சுருங்கச்சொல்லின் மாணுக் கர்பால் அன்பும் அநுதாபமு முடையராய் அவரது இகவாழ்வு பரவாழ்வுகளில் தம்மைச் சம்பந்தப்படுத்திக் கொள்வோரே உண்மையான ஆசிரியராவர்.

உபாத்தியாயர்கள் நல்லொழுக்க நெறியினின்றும் விலகாமல் முதலில் தம்மைக் காத்துக்கொள்ள வேண்டும். என்னை? அவர், தமது போதனையால் மாத்திரமன்று; தமது நடத்தைகளினுலும் தம்மைச் சூழ்ந்துள்ள மாணுக்கர்களேயும் பிறரையும் நல்வழிப் படுத்தவேண்டும். "மாந்தர்க் கினத்தியல்பதாகு மறிவு" ஆதலின் பலகாலும் ஆசிரியனை அடுத்து இருந்து அவனது போதனையை யேற்றுவரும் மாணுக்கர்களுக்கு ஆசிரியனது குணமும் செயலும் பற்ருமற் போகா. 'சிரேஷ்டனுனவன் எதனை ஆசரிக்கின்ருனே அதனை இதரர்களும் ஆசரிக்கின்ருர்கள்; அவன் எதனைப் பிரமா ணமாகக் கொள்ளுகின்ருனே அதனை உலகமும் கொள்ளுகின்றது' எனக் கண்ணபிரான் கூறியபடி, சூழ்ந்துள்ளவர்கள், அவனைப் பின்பற்றி நடக்க முயலுகின்ருர்கள். ஆக, ஒரு ஆசிரியன் தவறி நடப்பானுயின், அவன் தான் கெடுவதன்றி உலகத்தையும் கெடுப் பவனுகின்ருன்.

முற்காலத்து ஆசிரியர்கள் அன்பே உருவெடுத்தாற் போன் றவர்களாய், குன்ரு வொழுக்கமும் இந்திரிய நிக்கிரகமு முடைய ராயிருந்த காரணத்தா லன்ருே, பெற்ருேர்கள் தம் குழந்தைகளை நம்பிக்கையுடனும் விசுவாசத்துடனும் குருக்களிடம் ஒப்புவித்த னர்; குழந்தைகளும் ஆசிரியனே தஞ்சமாகக் குருகுல வாசஞ் செய்து வந்தார்கள். குருக்களும் குழந்தைகட்கு உடற்பிணி உண் டாகாமல் பாதுகாத்தும், உயிர்ப்பிணி யாகிய அஞ்ஞானத்தைக் கெடுத்தும் சுகவாழ்வளித்து, அவர்கட்குத் தாய்தந்தை யாகவும் மருத்துவனுகவும் தெய்வமே யாகவும் விளங்கினுர்கள். தசரதரான வர், தம் குழந்தைகளான இராம லக்ஷ்மணரைக் கௌசிகரிடம்

ஒப்புவிக்கும் பொழுது "நல்-தந்தை நீ தனித் தாயும் நீ இவர்க்கு' எந்தை தந்தனன் இயைந்த செய்க" எனக் கூறி விடுத்தனர். மற்றும் கௌசிகர், இராமலக்ஷ்மணர்களின் பூரணமான யோக்கியதைக்கு அநுகுணமாகவிருந்தோர் அவர்கட்குக் குருவாகிய வசிட்டனே என்பதனை,

"நிறையோடு மாசிறைஞ்சுஞ் செறிகழற்காற் றசரதனும்
பொறையோடுந் தொடர் மனத்தான் புதல்வரெனும் பெயரே
உறையோடு நெடுவேலாய்! உபநயன விதிமுடித்து [காண்
மறையோடு வித்திவரை வளர்த்தானும் வசிட்டன் காண்."

என்று ஜனகனிடத்திற் கூறியிருக்கும் அருமைப் பாட்டைப் படிக்கும்பொழுது நம் உள்ளம் களி ததும்புகின்றது.

மாணாக்கர்

இனி, முற்கூறிய சொலற்கருஞ் சிறப்பினையுடைய நல்லாசிரியனை யடுத்து, வழிபாடு முதலியன குறைவறப் புரிந்து, பாடங் கேட்போரே மாணாக்கராவர். நல்லாசிரியனை யடுத்துக் கேட்டிலராயின், அவரது கல்வி, கேட்டலினால் ஆம் அத்துணை உறுதியுடைத்தாகமாட்டாது. "குருவிலார்க்கு வித்தையில்லை" யென்பது பொய்யாகாது. "உடையார் முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்" உயர்ந்தோரே யென்பது, பொய்யாமொழியாகலின், ஆசிரியர்க்கு எவ்வளவும் கீழ்ப்படிந்து ஊழியஞ் செய்தாலும், அவையெல்லாம் மாணாக்கரது உயர்ச்சிக்குக் காரணமே தவிர வேறில்லை. சோம்பல், மறதி, மாறுபாடு, வஞ்சம், மானம், சினம் முதலிய தீக்குணங்களுடையோரும், தீத்தொழில் புரிவோரும், மாணாக்கராகமாட்டார்கள். மாணாக்கர்கள், கல்வியில் நிறைந்த விருப்பமும் ஊக்கமு முடையராதல் வேண்டும்.

மழைத்துளியானது முத்துச் சிப்பியின் வாயில் விழுந்தால் முத்தாகப் பரிணமிக்கின்றது. தாமரையிலையில் விழுந்தால் விழுந்த அளவினதாக இருக்கின்றது. பழுக்கக் காய்ச்சிய இரும்பில் விழுந்தால் சுவறிவிடுகின்றது. அங்ஙனமே ஆசிரியன் கற்பிக்கும் நூற் பொருள், உத்தம மாணாக்கரைச் சார்ந்தால் விசேஷ நலத்துடன் வெளிப்படுகின்றது; மத்திமரைச் சார்ந்தால் அவ்வளவில் நிற்கின்றது; அதமரைச் சார்ந்தால் பயனின்றி அழிந்து விடுகின்றது.

நீரைப் பிரித்துப் பாலைப் பருகும் அன்னம்போன்று, ஆசிரியன் கற்பித்தவற்றில் நலமுள்ள பொருள்களைப் பகுத்து மனத்திலமைத்துக் கொள்வோரும், உணவு கிடைத்த விடத்து வயிறாமேய்ந்து பின் சிறிதுசிறிதாக வாயிற் கொணர்ந்து சீரணிப்பிக்கும் பசுவைப்போன்று, மிகுதியான பொருள்களைக் கேட்டுக்கொண்டு, பின் அவற்றைச் சிறிதுசிறிதாகத் தம் கவனத்திற்குக் கொண்டு வருவோரும், உத்தமர்களாவார்கள்.

பாடங் கேட்கு முறையைப்பற்றி நன்னூலாசிரியர் கூறுவது,

"கோடன் மரபே கூறுங் காலைப்,
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்,
குணத்தொடு பழகி அவன் குறிப்பிற் சார்ந்து,
'இரு' என இருந்து 'சொல்' எனச் சொல்லி,
பருகுவன் அன்ன ஆர்வத்த னாகி,
சித்திரப் பாவையின் அத்தகவு அடங்கி,
செவிவா யாக நெஞ்சுகளன் ஆக,
கேட்டவை கேட்டவை விடாதுஉளத் தமைத்து,
'போ' எனப் போதல் என்மனார் புலவர்."

என்பது.

மாணக்கர்கள், கேட்ட பாடங்களைச் சிந்தித்துப் போற்றலும், நூல் வழக்கு உலக வழக்குகளை ஆராய்ந்தறிதலும், தம் போன்ற மாணக்கர்களுடன் பயிலுதலும், அவசியமாகும். கற்றார்பால் தாம் கற்றவைகளை எற்குமாறு சொல்லி, தம்மின் மிகுதியாகக் கற்றவரிடத்திருந்து அம் மிகுதியான பொருள்களைக் கொள்ளுதல் வேண்டும். ஆசிரியன்பால் அன்பும் அச்சமும் உடையராய், அகலாமலும், மிக நெருங்காமலும், நிழல்போற் றொடர்ந்து மரியாதையுடன் ஒழுகுதல்வேண்டும். மற்றும், ஆசிரியர்க்கு 'உற்றுழி உதவியும், உறு பொருள் கொடுத்தும், பிற்றை நிலை முனியாதும்' கற்றல் சிறந்தது. நூற்பொருளேயாயினும் வழிபாட்டு முறையானன்றி, வஞ்சனையாற் கொள்ளக் கருதுதல் அதிபாதகமாகும். தம்பாலுள்ள பிழைகளைத் தீர்த்தற் பொருட்டும், தமக்கு நல்லறிவு கொளுத்தற் பொருட்டும் ஆசிரியன் ஒரோவழி இடித்துக் கூறுதலும், தண்டித்தலும் கூடும். அப்பொழுது அவை தம் நன்மையினிமித்தமெனக் கருதித் திருந்தலுறுவோரே விவேகமுள்ள பிள்ளைகளாவார். ஆசிரியன் கற்பிக்கும் அரும்

பொருளையும் எளிதின் உணர்ந்து கொள்வதனாலேயே அவனது அன்பைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். "நெஞ்சுற அருங் கலைகள் கற்பவர்கள் தம்மளவில் நேயமிகலாதவர்கள் யார்?"

மாணவர்களுக்குக் குருபக்தியானது, எல்லாவற்றினுஞ் சிறந்தது. 'எழுத்தறிவித்தவன் இறைவனாவான்' அன்றோ? ஒரு குழந்தை இயல்பாகவே தன் தாயையும், பின் தாயுணர்த்தத் தந்தையையும், தந்தையுணர்த்தக் குருவையும், குருவுணர்த்தத் தெய்வத்தையும் அறியும் முறைபற்றி 'மாதா பிதா குரு தெய்வம்' என வழங்குவராயினர். இதனால் குருவானவர், தெய்வத்திற் கடுத்தபடியிலுள்ளாரெனத் தெரிகிறது. அன்றி "மாதா, பிதா, குரு" என்ற மூவரும் தெய்வமாவர் என இத் தொடர்க்குப் பொருள் சொல்லினும் பொருந்தும். அரசனும், உபாத்தியாயனும் தாயும், தந்தையும், தமயனும் குரவர்களாவார்களென்றும், இவர்களைத் தெய்வமாகக் கருதித் தொழவேண்டுமென்றும், நம் நூல்கள் விதிக்கின்றன. நம் நாட்டுச் சிறுவர்கள் சுவடியை யெடுத்துப் படிக்கத் தொடங்கும்பொழுதும், படித்து நிறுத்தும் பொழுதும், 'குருவாழ்க; குருவே துணை' என்று கூறிவந்த வழக்கம், நமது குரு பக்தியை எவ்வளவு தெளிவாகக் காட்டுகிறது! குரு நிந்தை செய்வோரினும் அதி பாதகர் யாருமில்லை.

"ஒரெழுத் தொரு பொருள் உரைக்கக் கூடிய
சிரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோர்
ஊரிடைச் சுணங்கனாய்ப் பிறந்து அங்(கு) ஒருகம்
பாரிடைக் கிருமியாய்ப் படிவர் மண்ணிலே."

என்று தவராஜயோகிகளான திருமூலர் கூறுகின்றார். ஆசிரியன் ஒவ்வொன்றையுந் தனக்குக் கற்பிக்காவிடினும் ஆசிரியன்பாற் செலுத்தும் அன்பு மிகுதியானே எல்லாக் கலையுணர்வும் எளிதின் வந்துவிடும். ஏகலைவன் துரோண விக்ரஹத்தை அன்புடன் வழிபட்டன்றோ ஒப்புயர்வற்ற வில்லாளியானான்? உதங்கன் முதலியோரது குரு பக்தி மகாபாரதத்தால் எவ்வளவு கொண்டாடப்படுகிறது! குருவாக்கிய பரிபாலனமே மாணாக்கர்களுக்கு உண்மையான அறமாகும். தாடகையின் கொடுமைகளை எடுத்துக்கூறி அவளைக் கொல்லுமாறு கௌசிகர் பணித்தவளவில், முன்பு அவளைப் பெண் என நினைந்து ஒதுங்கியிருந்த பெருந்தகையாகிய இராமன் அவர்க்கு எதிர்கூறுமாறு கம்பர் கூறுவது,

"ஐயன் அங்கது கேட்(டு) அறன் அல்லவும்
எய்தினுல் அது செய்கவென் றேவினுல்
மெய்ய! நின்னுரை வேதம் எனக்கொடு
செய்கை யன்றே அறஞ்செய்யு மாறென்றான்."

என்பது காண்க.

மாணுக்கர்கள், ஆசிரியன் திருமுன் வாய்மையுடனும் ஆசாரத்துடனும் ஒழுகுதல் வேண்டும். தாம் கல்வி பயிலும் நிலையின் நீங்கி எவ்வளவு உயர்ந்த பதவியை யெய்திய காலத்தும், தம் ஆசிரியரை நினைந்து உருகுதலும், அவர்கள் எதிர்ப்படின் அளவிலன்புடன் உபசரித்தலும் தம் நல்வாழ்விற்குக் காரணங்களாகும். வனவாசங் கழித்துவந்த பாண்டவனுன அர்ச்சுனன், விராடனகர்ப்புறத்து நிரைமீட்கப் போர்க்கோலம் தாங்கி வந்தபொழுது துரியோதனன் படையில் நின்ற தனது ஆசிரியர்கட்கு முதலில் அஸ்திரவாயிலாகத் தன் வழிபாட்டினைத் தெரிவித்துக் கொண்டதும், துரோணர் தன்னுடன் போர்புரிய வந்தடுத்த பொழுது,—

"யாதுமொன் றறியா என்னை இவனலா(து) இலையென்றிந்த
மேதினி மதிக்குமாறு வில்முதற் படைகள் யாவும்
தீதறத் தந்த உண்மைத் தெய்வம்நீ என்றால் பஞ்ச
பாதகந் தன்னி லொன்(று)உன் பதயுகம் பிழைப்ப(து) ஐயா"

என அன்புமயமான சொற்களைச் சொல்லிப் போர் செய்ய மறுத்ததும், ஒப்புயர்வற்ற வில்லாளியும் சிவபக்த சிரோமணியுமான அவ்வருச்சுனனது குருபக்தியின் மேன்மையை விளக்குகின்றன.

கல்கத்தா யூனிவர்ஸிடியின் பட்டமளிப்புத் திருநாளொன்றில், வங்காள கவர்னராயிருந்த லார்டு கார்மிக்கேல், மாணுக்கர்களுக்குக் குருநிந்தையால் வருந் தீங்கையும் குருபக்தியின் மேன்மையையும் நமது மனுதரும சாஸ்திரத்திலிருந்து எடுத்துக்காட்டி வற்புறுத்தியதும், நமது இராஜப் பிரதிநிதியாயிருந்து இங்கிலாந்து சென்ற லார்டு ஹார்டிஞ்சு பம்பாய் யூனிவர்ஸிடியார் தமக்கு "எல். எல். டி. பட்டம்" சூட்டிய பொழுது, மாணுக்கர்கள் தன்னடக்கமும் (Self-restraint) தன்னல மறுப்பும் (Self-sacrifice) உடையராய் விளங்கவேண்டுமென்று பரிந்து பேசியதும், நம் தேயத்து மாணுக்கர் ஒவ்வொரு

வர் மனத்திலும் வேரூன்றி யிருத்தல் வேண்டும். இப்பொழுது மாணுக்கர்களா யிருப்போர்களே இனிப் பெரியோர்களாதலின், இத்தேசத்தின் உன்னத வாழ்விற்குக் காரணமாக இருப்பவர்கள் இவர்களே.

போது

ஆசிரியரும் மாணுக்கர்களும் ஒருவர்க்கொருவர் அன்புடைய ராய், பரோபகார சிந்தை(Altruistic)யுடையராய் இருப்பரேல், இவ்வுலகம் எவ்வளவு மேனிலையடைந்துவிடும்! "ஒவ்வொரு சிறந்த முயற்சியும் தம்பொருட்டாக இல்லாமல் பிறர்பொருட் டாகவே முயலும் பெருமையுடையோர் இருத்தலினுற்றான் இவ் வுலகம் நிலைபெற்று வருகின்றது" எனப் புறநானூற்றில் ஒரு பெரி யவர் கூறுவதைச் சிந்தித்தொழுக. (விவேகோதயம்)

கதைக்குக் கால் உண்டோ?

(திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள்)

"கதைக்குக் கால் இல்லை" என்று உலகவழக்கில் ஒரு வழக்கு இருந்தாலும், நாம் ஊன்றி ஆராயுங்கால் கதைக்குக் கால் உண்டு என்று நாம் அறிவோம். உலகில் உள்ள பல நாடுகளையும் அந்நாடுகளில் வசிக்கும் பல வகுப்பார்களையும் ஆராய்ந்து பார்த் தால் அவரவர்களுக்குள் வழங்கிவரும் கதைகளைத் திரட்டிப்பார்க்கு மிடத்து அக்கதைகள் எல்லாவற்றிற்கும் ஒரே போக்குள்ள தோற்றுவாய்கள் காணப் பெறுவதை நாம் அறியக்கூடும். கதை களுடைய போக்கு, அமைப்பு, முடிவு, நீதி இவைகளைக் குறித்து நாம் இப்போது சொல்லவில்லை. அப்பாகங்களைக் குறித்த ஆராய்ச்சி வேறு. அவ்வாராய்ச்சியினுல் பல அரிய பெரிய உண்மைகளை அறிய முடியும். ஆனுல் நாம் இப்போது எடுத்துக் கொண்டது கதைகளின் தோற்றுவாய் மட்டுமே. கதைகளுக்குத் தோற்று வாய் உண்டா? இருந்தால் அஃது எத்தன்மையது? அஃது பல தேசங்களிலும் எக் குணங்கள் வாய்ந்திருக்கிறது? அதன் பயன் என்ன? என்பனவே இக்கட்டுரைக்கு எடுத்துக் கொண்ட பகுப்புகள்.

எந்நாட்டை எடுத்துக் கொண்டாலும், கதைகளை எடுத்துச் சொல்வதற்கு ஓர் ஆரம்பக்கதை அல்லது பிரவேசக் கதை அல்

லது பாயிரக் கதை என்று ஒன்று இருக்கும். நூல்களுக்கு எவ்வாறு பாயிரம் அவசியம் என்று இலக்கணம் கூறுமோ அவ்வாறே கதைகளுக்குப் பாயிரக் கதை ஒன்று எந்நாட்டிலும் வழங்கிவரும். அப்பாயிரக் கதையானது மற்றப் பெருங்கதைகளை எடுத்துக் கூறுமுகத்தாலும் பல கதைகளை அடக்கித் தொகுத்திடுமுகத்தாலும் கூறத் தொடங்கும்.

நம் இந்து நாட்டில் வெகு காலம் தொடங்கி வழங்கி வந்து பின்னால் நூலாகத் தொகுக்கப் பெற்ற கதைத்தொகுதிகள் பஞ்சதந்திரம் அல்லது ஹிதோபதேசக் கதைகள். இக் கதைகளை இந்தியர்கள் மட்டுமேயன்றி ஏனைய ஜாதியர்களான பாரசிகர், அரபியர்கள், ஆங்கிலேயர் முதலானோர் கொண்டாடி வருகின்றனர். பல கதைகளைச் சேர்த்து ஐந்து தந்திரங்களாகத் திரட்டி அவைகளை புகுத்துவதற்கு ஒரு பாயிரக்கதையும் ஏற்படுத்தி யிருக்கின்றனர். இதன்பாயிரக் கதையை நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டும்: பாடலீபுரத்தில் ஓர் அரசனுக்கு நான்கு புத்திரர்கள் இருந்தார்கள். அவர்கள் எழுத்து வாசனையின்றி மூடர்களாக விளங்கி வந்தார்கள். அரசன் அவர்களுடைய குணத்தைக் கண்டு மிகவும் துக்கித்து ஒருநாள் தன் சபையில் வந்திருந்த அறிவாளிகளை நோக்கித் தன்மக்களுடைய மூடத்தனத்தை எடுத்துச் சொல்லித் தன் மக்களுக்கு யாராவது ஒரு பெரியார் படிப்புக் கற்பிக்க முடியுமோ என்று வினயமாய்க் கேட்டுக் கொண்டான். அப்போது அச்சபையில் இருந்த சோமசர்மா என்ற ஒரு பண்டிதர் எழுந்து தான் அவர்களுக்கு ஆறுமாத காலத்தில் படிப்பைக் கொடுத்து அறிவாளிகளாகச் செய்ய முடியும் என்று சொன்னார். அரசன் மிகவும் மகிழ்ந்து சோமசர்மாவிடம் தன் நான்கு மக்களையும் ஒப்புவித்தான். அந் நான்கு மக்களின் மனோநிலைமையைச் செவ்வையாய் அறிந்த சோமசர்மா அவர்களைத் தன்னருகில் உட்கார வைத்து "ஒரு எலியும், புறாக்களும் சிநேகிதமாய் இருந்ததினால் சகல ஆபத்துக்களையும் தப்பி நன்றாக வாழ்ந்தன" என்று சொன்னார். அதைக் கேட்ட அரச குமாரர்கள் ஒரு எலியும் புறாக்களும் எவ்விதம் சிநேகிக்க முடியும் என்று ஆச்சரியப்பட்டு அஃது எவ்வாறு என்று ஆவலுடன் கேட்டார்கள். பிறகு சோமசர்மா எலி, புறா இவைகளின் கதையை முறையே கூறினார். பிராணிகளைப் பொருத்தின கதைகளானமையாலும் அப்பிராணி

களுடைய குணங்களைத் தினந்தோறும் பார்த்து அறிந்தவர்கள் ஆனமையாலும் அக்கதைகளின் மூலமாக வெகு சுலபத்தில் பல நீதிகளை அரச குமாரர்கள் அறிந்து கொண்டார்கள். இவ்விதமே பல கதைகளின் மூலமாக, சிநேகத்தினால் வரும் இலாபம், சிநேகிதர் களைப் பிரித்துத் தான் பெறும் வெற்றி, காலம் அறிந்து எதிரியை வசப்படுத்துதல், புத்தி இல்லாததினால் கிடைத்ததைப் போக்கடித் தல், முன்யோசனை யில்லாமல் காரியம் செய்து துன்பம் அடை தல் என்ற 5 நீதிகளை சோமசர்மா போதித்து சிறுவர்களை நல்ல புத்திமான்களாகச் செய்தார்.

இந்தப் பாயிரக் கதையினாலே பல நீதிகளைத் தொகுத்துச் சொன்ன முறையும், மறந்து போகாதபடி கதைகளைக் கோக்கும் முறையும், எளிதில் மூடர்களும் அறிந்து கொள்ளக்கூடியவாறு கதைசெல்லும் போக்கும், கதைகளினால் கேட்பவர்கள் அடையும் பயனும் ஆகிய இவ்வரிய குணங்களைக் காண்கிறோம்.

இதைப் போலவே வடமொழியில் வழங்கும் மற்றொரு தொகுதிக்கு இதோபதேசம் என்று பெயர். அதே கதைகளை வேறு தொடர்ச்சியாகவும், முறைகளாகவும் சிறிது பிரதி பேதத் துடனும் இந்நூலைத் தொகுத்திருக்கக் காண்கிறோம். இவைகளைப் போலவே வடமொழியில் கதாசரிதசாகரம், பிரகத்கதை முதலிய நூல்கள் இருக்கின்றன.

விக்கிரமாதித்தன் கதைகளை எடுத்துச்சொல்லும் 32 பதுமைக் கதைகள் வடமொழியிலும் பல பாஷைகளிலும் பல வேறுபாடுக ளுடன் வழங்கி வருகின்றன. போஜராஜன் ஆண்டுவந்த காலத் தில் ஒரு குடியானவன் பரணையின்மீது உட்கார்ந்து கிளி ஓட்டு கையில் அந்தவழிப்போகும் ஜனங்களைக் கூப்பிட்டுத் தானியத்தை எடுத்துக்கொண்டு போகும்படி சொல்வான். ஆனால் பரணைவிட்டு இறங்கினவுடன் அவர்களைப் பிடித்து "ஏன் என் தானியத்தைத் திருடினாய்" என்று அடிப்பான். இந்த விதமாக இருகுணங்களை ஒரு வனே கொண்டிருந்த செய்தியைக் கேட்ட போஜராஜன் அவன் இருந்த இடத்தைப் பரிசோதிக்க அதனடியில் 32 படி கொண்ட சிம்மாசனம் இருக்கக் கண்டான். அதை எடுத்துக்கொண்டு போய்த் தன் அரண்மனையில் வைத்துக்கொண்டு ஒரு நல்ல முகூர்த் தத்தில் அதில் ஏறமுயன்றான். முதல்படி ஏறினதும் அதில் வைத் திருந்த ஒருபதுமை கல கல என்று சிரித்து "விக்கிரமாதித்தன்

ஏறின சிங்காசனத்தில் நீ ஏறத்தகுமோ" என்று சொல்லி அவ்வரசனுடைய சரித்திரத்தில் ஒரு பாகத்தைச் சொல்லிற்று. மறுநாள் இரண்டாம்படி ஏறவே இரண்டாம் படிப் பதுமை அதேவிதம் சிரித்து இரண்டாம் பாகத்தைச் சொல்லிற்று. இவ்விதம் 32 பதுமைகளும் அவ்வரசனுடைய 32 பாகக்கதைகளையும் கூறி முடித்தன என்பதுஇந்த நூலினுடைய பாயிரக்கதை.

இவ்விதமே 25 வேதாளக் கதைகளும் சொல்லப்பட்டன. முன்னொரு காலத்தில் விக்கிரமாதித்தன் என்ற அரசன் 56 தேசங்களையும் தன்னுள் அடக்கி ஆண்டு வந்தான். அப்போது ஒருநாள் காட்டில் தபசு செய்யும் எண்ணத்துடன் தன் சகோதரன் பர்த்ருஹரி என்பவனிடம் அரசை ஒப்புவித்துவிட்டுக் காட்டிற்குச் சென்முன். பர்த்ருஹரி அரசாளும் காலத்தில் ஒரு பிராமணன் வரப்பிரசாதப் பழத்தைக் கொடுக்க அதைத் தன் மனைவிக்குத் தந்தான். அவள் தன் காமுகனுக்குத் தந்தாள். அதை அவன் தன் வேசிக்குத் தந்தான். அதை அவள் அரசனுக்குத் தர அரசன் அதைப் பெற்றுக் கொண்டு தன் அரசியின் கெட்ட குணத்தைக் கண்டு உலகத்தை வெறுத்துக் காட்டிற்குச் சென்முன். நகரத்தில் காவல் இல்லாதது கண்டு இந்திரன் ஒரு வேதாளத்தை அனுப்பினன். இதைக்கேட்ட விக்ரமன் ஊருக்குத் திரும்பினன். வழியில் வேதாளம் அவனை மறித்துத் தடைசெய்ய யுத்தம் நடந்தது. கடைசியில் வேதாளம் 25 கதைகள் சொல்லி அவற்றின் பொருள் கேட்டது. 24 கதைகளுக்குப் பொருள் சொல்லி 25-வது கதைக்குப் பொருள் சொல்லாமல் திகைத்தான். அதற்கு முறையில்லாக்கதை என்று பெயர். இவ்விதம் 25 கதைகளும் கேட்டதின் பலனாக விக்கிரமாதித்தன் தன் நகரடைந்து வேதாளத்தை வாகனமாகக் கொண்டு பெரும்புகழுடன் அரசாட்சி செய்துவந்தான். இந்தப் பாயிரக் கதையாலும் எவ்விதம் கதைகள் சேர்க்கப்படுகின்றன, அவைகளின் இறுதிப் பயன் என்ன என்பவைகள் நன்கு புலப்படும்.

இவ்விதம் நமது இந்து தேசத்தில் வெறும் கதைகளுக்குப் பாயிரக் கதைகள் இருப்பது போலவே சமய சம்பந்தமான இதிகாசங்கள், புராணங்கள் இவைகளுக்கும் உண்டு. இராமாயணக் கதையைக் குசலவர்கள் வால்மீகி ஆசிரமத்தில் சொல்வதும், பாரதக் கதையை வைசம்பாயனர் ஜனமேஜயராஜனுக்குச் சொல்

வதும் காணலாம். வேதாந்த தத்துவங்களையும் ஆரண்யங்களில் ரிஷிகள் தம் சிஷ்யர்களுக்கு இவ்விதமாகவே சொல்லிக்கொண்டு வந்தனர். இந்த சம்பிரதாயத்தை ஒட்டியே தற்காலத்தில் ஒரு ஸ்தல புராணமோ, ஜாதிபுராணமோ எழுதநேர்ந்தால் அதை ஒரு முனிவர் மற்ற முனி சிடர்களுக்குச் சொல்லியதாகவே எழுதுவார்கள். இவ்விதம் எழுதுவது உண்மையன்று என்று மனிதர் அறிந்தும் புலவர்கள் பழைய சம்பிரதாயத்தை ஒட்டி எழுதியே விடுவார்கள். இந்த முறை நம் தமிழில் மொழி பெயர்க்கும் ஒவ்வொரு நூலுக்கும், மொழி பெயர்க்காது மொழி பெயர்த்ததாக பாவனை காட்டும் ஒவ்வொரு நூலுக்கும், ஏற்பட்டுள்ளது. தெய்வாதீனமாக தற்காலத்தில் எழுதப்படும் நவீனகங்களுக்கு இவ்வசட்டுப் பொய்ப்பாயிரங்கள் ஏற்படாதது நற்காலமே.

இனித் தமிழிலும்கூட இவ்வகைப் பாயிரங்கள் இருக்கக் காணலாம். வட மொழியிலிருந்து வந்த சார்பு நூல்களில் அவ் வட மொழியில் கண்ட கதைகளே இருக்கக் காண்கிறோம். சுத்தத் தமிழ் நூல்களிலும் பாயிரக் கதைகள் உண்டோ எனில் அங்கும் அவைகளைக் காணலாம். ஆனால் பாயிரம் சிறிது மாறு பட்டுள்ளது. தூய தமிழ் நூலாகிய பெரிய புராணம், வட மொழிக் கலப்பு அதிகமாக ஏற்பட்ட சோழர் ஆதிக்கக் காலத்தில் ஏற்பட்டதால், அதற்கு வடமொழி இலக்கணத்தைத் தழுவிய ஒரு சிறு பாயிரக் கதை ஏற்பட்டுள்ளது. கைலாயத்தில் உபமன்னிய முனிவர் ஏனைய முனிவர்களுடன் எழுந்தருளியிருக்கையில் ஒரு பெருஞ் சோதி தோன்றி வந்து கொண்டிருந்தது. முனிவர்கள் அச்சோதியைக் கண்டு வியந்து அஃது என்ன என்று வியப்புடன் கேட்டார்கள். அப்போது உபமன்னிய முனிவர் அச் சோதி சுந்தரமூர்த்திகள் கைலாயத்திற்குத் திரும்பிவரும் காட்சி எனக் கூறிப் பின் சுந்தரமூர்த்திகள் சரிதத்தை ஏனைய முனிவர்களுக்குச் சொன்னார் என்பது பாயிரக் கதை. கைலாயக்கதை இவ்விதம் ஏற்பட்டிருக்க நிலவுலகில் தமிழ் நாட்டில் ஏற்பட்டதாக நாம் காணும் பாயிரம் மிகவும் ஆராயத்தக்கதாகும். 800 ஆண்டுகளுக்கு முந்தித் தமிழ் நாட்டில் சோழர்கள் வெகு பராக்கிரமத்துடன் ஆண்டுவந்தார்கள். அப்போது சைவமதம் தழைத்து வந்தது. ஆனால் சமணமும் ஒருவாறு ஓங்கி வந்தது. அரசனும் சிந்தாமணி

முதலிய சமண காவியங்களை ஆராய்ந்து வந்தான். அக்காலத்தில் விளங்கிய அமைச்சரான சேக்கிழார் சமண நூல்களைக் கண்டித்து சைவப் பெருந்தகையாரது சரிதங்களை ஆராய்தல் இம்மைக்கும் மறுமைக்கும் பலன் தரும் என்று அரசனுக்குக் கூறி அதற்காக அரசனது ஆணையின் பேரில் பெரிய புராணம் என்ற திருத்தொண்டர் புராணத்தைப் பாடியருளினர். அரசனும் பொது மக்களும் அதை எற்றுக்கொண்டார்கள். இவ்விதம் பெரிய புராணம் எற்பட்டது. சேக்கிழார் தம் பெரிய புராணத்திற்குச் சுந்தாருடைய திருத்தொண்டத் தொகையையும், நம்பியாண்டார் நம்பிகளுடைய திருத்தொண்டர் திருவந்தாதியையும் ஆதாவாகக் கொண்டனர்.

நன்ருக ஆராயுமிடத்துப் பெரிய புராணம் என்பது ஒரு பெரியார் சரிதையை ஒட்டிப் பல பெரியார்கள் சரிதங்களைக்கொண்டது ஆகும். திருத்தொண்டர் என்ற பதத்திற்கு சுந்தரர் என்றும் அறுபத்துமூவர் தொண்டர்கள் என்றும் பொருள்படுத்தலாம். உண்மையில் எனைய அறுபத்துமூவர் தொண்டர்களின் சரிதங்களுக்கு ஒரு பாயிர சரிதமாக சுந்தரமூர்த்திகளுடைய சரிதம் அமைந்துள்ளது நோக்கத்தகும். சேக்கிழார் சுவாமிகள் சுந்தாருடைய சரிதத்தை ஒழுங்காகச் சொல்லிவந்து தேவாசிரிய மண்டபத்தில் அடியார்களை வணங்கு முறையால் "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கு மடியேன்" என்று ஆரம்பித்த திருத்தொண்டத் தொகை பாடியருளியதை முன்னிட்டு அத்தொண்டர்கள் சரிதங்களை அப்பதிகத்தில் கண்ட வரிசைப்படி கூறத்தொடங்குவார் ஆனர். ஆகவே, எனைய சரிதங்களுக்குச் சுந்தரர் சரிதம் பாயிரம் ஆயிற்று. மற்ற பாயிரக் கதைகள் போன்றே இச்சரிதையிலும் தொடக்கம், போக்குமுறை, முடிவு, பயன் முதலியவை காணலாம். அடியார்களை வணங்கி அவர் சரிதங்களை நெஞ்சினுள் இருத்தினதினல் அதன் பயனுன வீடு எய்தும் நிலை எற்பட்டதும் அறியக் கூடும். ஆகவே தனித்தமிழ் நூல்களில் பாயிரக் கதை ஒழுங்கு இருத்தலை நாம் காணலாம்.

இனிச் சங்கத்தார் காலத்தில் இவ்வாறு பாயிரக் கதைகள் இருந்தனவோ என்ருல் அக்காலத்திலும் இருந்தன என்பதற்குச் சங்கநூற் கதைகளே சான்றுகளாகும். பற்பல காலங்களில் எழுதப்பெற்ற சங்கச் செய்யுட்களைத் திரட்டிப் பிற்காலத்துப் புல

வர்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க் கணக்கு என்ற மூன்று பெரும் பகுதிகளாகத் திரட்டிவைத்த கதையே அந் நூல்களுக்குப் போதிய பாயிரக்கதையாகும். இனித் தனியே, நாலடியார், திருக்குறள் முதலியவைகளுக்குப் பாயிரக்கதைகள் இருப்பதும் காண்க. மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய காவியங்களுக்கும் பதிகம் என்னும் பாயிரச் செய்யுளால் அதன் முக வுரைக் கதைகளை அறிவோம். ஆகவே தமிழிலும் பாயிரக் கதைகள் இருந்தன என்று நாம் நன்றாய் நிரூபிக்க முடியும்.

(தொடரும்)

கண்ணகி குறித்த கற்புடை மகளிர்

[வித்வான். மு. அருணசல தேசிகர் அவர்கள்]

சான்றழைத்தாள்

(வன்னியையும் மடைப்பள்ளியையும் சான்றாக அழைத்தவள்.)

(௧௧௰-ம் பக்கத் தொடர்ச்சி)

சோழவளநாட்டிலே காவிரிப்பூம்பட்டினத்தில் அறமும் ஒழுக்கமும் அமைந்த ஒரு குடியிலே ஒரு பெண்குழந்தை பிறந்து வளர்ந்து தக்க பருவமடைந்தது. அதுகண்ட தாய்தந்தையர் ஒரு நல்ல மணளனைத்தேடி அவற்குக்கொடுக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு அவர்களிருக்கையில் ஒருநாள் அப்பெண் ஒரு பூஞ் சோலையுட் சென்று மலர் கொய்துகொண்டு நின்றாள். அப்பொழுது ஓர் ஆண்மகன் தற்செயலாய் அச்சோலையிலே வந்தனன். அவன் அச்சோலையின் அழகினைப் பார்த்து மகிழ்ந்து செல்கையில் அங்கு நின்றுகொண்டிருந்த அம்மங்கையைக் கண்டான்.

கண்டதும், இத்துணைச் சிறந்த அழகுடையாள் யாவள்? வானாட்டினளோ! மலைநாட்டினளோ! நீர்நாட்டினளோ! என ஐயம் கொண்டான். அவ்வாறு ஐயங்கொண்டும் அவளை விட்டு நீங்க மனமில்லாமையால் மேலும்மேலும் உற்றுநோக்கினான். பின், நன்று நன்று. இவளது கண்கள் இமைக்கின்றன. கால்கள் தரையிலே படுகின்றன. இவள் அணிந்த மலர்மாலை வாடியிருக்

கின்றன. அவற்றில் வண்டுகள் மொய்க்கின்றன. மேனியும் வியர்வையுடையதாக இருக்கின்றது. ஆதலால் இவள் இம்மண்ணுலக மங்கையேயாகும் எனத் தெளிந்தான். மேலும் இவளது கண்களில் இரண்டு விதமான பார்வை உள. அவற்றுள் ஒன்று நமக்குப் பெருந்துன்பத்தை உண்டுபண்ணுகின்றது. மற்றொன்று அந்நோயைச் சிறிதே தணிக்கின்றது. இப்படிக் கண்ணினால் களவாடுதல் காமத்தில் சிறியதோர் செய்கையன்றே. அது மிகப் பெரிதாகுமே! மேலும், இவள் யான் நோக்கும்பொழுது நிலத்தைப் பார்க்கிறாள். யான் பார்க்காதபொழுது தானாக என்னை சிறக்கணித்து நோக்கி மெல்ல நகுகின்றாள். ஆகையால் மனமே இவளை இரந்து பின்னின்றால் நமக்கு இவள் இன்பம் தருவள்; தாராது போவளேல் இல்லை யென்று சொன்னவர்க்கன்றி இரந்து நின்றவர்க்கு அதனாற் பழிப்பு உண்டோ? இல்லையல்லவா? ஆதலால் இவளை இரந்து பின்னிற்றல் தகும் என்று எண்ணினான்.

பின்பு அவள் நிற்கு மிடத்தைச் சேர்ந்து அவளது கூந்தலில் மொய்க்கின்ற வண்டுகளைப் பார்த்து, வண்டுகளே! நீவிர் மிகவும் அறிவற்றவர்களாக இருக்கின்றீர்கள்; யான் ஒரு நன்மதி கூறுகின்றேன், கேளுங்கள். இப் பெண்ணின் இடையோ மிகச் சிறியது. கொங்கைகளோ மிகப் பெரியன. உண்மையில் அவைகளே இவளது இடையை முறிக்கப் போகின்றன. அவ்வாறவை யொடிப்பினும் காகதாலியம் என்னும் நியாயப்படி நீர் இவளது தலையில் மொய்ப்பதால் பழி உங்களையே சேரும். சொன்னேன், சொன்னேன். இவளை விட்டுப் போகுங்கள், போகுங்கள் என்று வண்டை ஓட்டுவான் போல அவளது மெய்யைத் தொட்டனன். நங்கையே நீ இங்கே தனியேநிற்பது ஏன் என்றனன். அவற்றிற்கு எல்லாம் அவள் ஒரு சொல்லும் சொல்லாமையால், அவளை மகிழ்விக்கவேண்டி, பொற்றொடியே, தாமரை நீரிலே தாளொன்றில் நிற்பது உன் முகத்தழகைப் பெறும் பொருட்டு அன்றோ? அது கிடக்க. முழுமதி இவ்வுலகைச் சுற்றிச்சுற்றி வருவது எதற்குஎன்று அறிவாயோ? அஃது உன்முகத்தோடு தன்னை ஒப்பிடத் தன்னிடத்துள்ள கறையைப் போக்கிக்கொள்ள ஓர் மருந்தைத் தேடும் பொருட்டன்றோ? மேலும் ஓர் புதுமைகண்டாயோ? உன் இடைக்கு நான் சமமாவேன் என்று உடுக்கை ஓர்கால் சொல்லியது. அதைக் கேட்டலும் சிலர் அதைக் கையிலெடுத்து அதை ஒத்துப்

பார்த்து ஒவ்வாமையால் நீ இப்படிச் சொன்னது தகுமா? இனி யிப்படிச் சொல்லாதே சொல்லாதே என்று அதன் வாயில் அடிப் பாராயினர். அவ்வடியைப் பெற்றுக் கொண்டு அவ்வுடுக்கைகள் தெருத் தெருவாய் நின்று அலறுவதைக் கண்டு, ஐயோ இவளது இடையை ஒத்திருப்பேன் என்று சொல்லிய தற்கே இவ்வுடுக்கை கள் இவ்விதம் துன்புறுமானால் இவளோடு எதிர்த்துப் போர் செய்யும் நாம் இவர்கண்ணிற் படுவோமானால் என்னபாடு படமாட் டோம் என் றெண்ணி யல்லவா மன்மதன் கண்ணிற்குத் தெரியா மல் ஒளித்துத் திரிவானானான்? இஃதறியாயோ? என்றான்.

அவற்றிற்கும் அவள் ஒன்றும் சொல்லாமையைக் கண்டு, சுடர்த்தொடியே! நமக்கு அம்மடைப்பள்ளி யருகிலுள்ள வன்னி மரத்தடியே ஏற்றதாகும், வருவாய் என்று கொண்டு சென்றான்.

ஆயிடைச் சேறலும் அவள் நாணமுற்று அம்மரத்தின் ஓர் புறத்தே மறைந்து நின்று, 'மரமே என்நாணத்தைக் காப்பாய்' என்று சொல்லிக் கண்களைக் கைகளால் மூடிக் கொண்டாள்.

அதைக்கண்டதும் அவன் தெரியிழையே! இம்மாரவேள் கலகத்திலே கண்ணாகிய வாளைப் புதைப்பது தக்கதோ திறப்பாய் என்று பன்முறைகூறினான். அவ்விதம் பன்முறை கூறியும் திற வாமை கண்டு இவளது முகம் கண் வாய் கை கால் ஆகிய உறுப் பெல்லாம் நல்லதாமரை மலர் போல அமைந்து உள்ளம் மட்டும் கல்லா யமைந்ததோ இதற்கு நான் என்செய்வேன் என்று எண்ணி நின்றான்.

அவளும் நம்மைப் பின்பற்றி வந்தவரை இவ்வெட்கமே நீக்குகின்றது; நாம் எப்படியும் வெட்கத்தை விட்டு இவரைக் கூடு வதே தகுதி; என்று எண்ணினாள். உடனே அவளை யறியாமலே அவளிடத்து ஓர் நகைப்புண்டாயது. அதைக் காண்டலும் அவன் இந்நகை நம்மை யாளக்கருதியே உண்டானதாகும் என்று அம்மடைப் பள்ளியருகிலுள்ள வன்னி மரத்தடியில் அவளைக் கூடினான்.

பின்னர் அவளைப் புகழ்ந்து உன்னை யான்மறவேன்; என்னூர் மிகஅருகிலுள்ளது. யான் மணந்தமைக்கு இந்த மடைப்பள்ளியும் வன்னிமரமுமே சான்றாகும். நீ கவலற்க. இனி நாம் இங்கே நீட்டித்து நிற்பின் உனது தோழியர் முதலானோர் வந்து இதை அறிவர். ஆகலின் உன் வீடு செல்வாய். யான் விரைவில் வந்து

மணந்து கொள்கின்றேன் என்று தன்னுடைய பெயர் ஊர்முதலிய அடையாளங்கள் யாவும் கூறி அவ்விடத்திருந்து பிரிந்தான்.

பின்னர் அவள் அவன் வருவன் வருவன் என எதிர்பார்த்த வண்ணம் இருந்தாள். நாட்களோ பலவாயின. இவ்வாறு இருக்கையில்தாய் தந்தையர் இஃதறியாராதலால் அவளுக்கு ஓர் கணவனைத் தேடி நிச்சயிக்கத்தொடங்கினர். அஃதுணர்ந்த இவள் அறத்தொடு நின்று மகளிர்க்கு நாணத்தைவிடக் கற்புமேலானது, நாணத்தை விட்டாலும் விடலாம், கற்பை விடலாகாது என்று எண்ணி, ஆயினும் நாணத்தைவிட நேர்ந்தமைபற்றிச் சிறிது வருந்தித் தோழியின் மூலமாய்த் தான் ஒருவனல் மணஞ்செய்யப் பட்டமையைத் தாய்தந்தையர்க்கு உணர்த்தினுள். அவர்கள் அஃதுணர்ந்து அவளை அவனிடைச் செல்லும்படி யனுப்பினர். அவளும் அவனிடத்தைப் போய்ச் சேர்ந்து தொழுது நின்ருள்.

அவ்வாறு நின்றவளைப் பார்த்து 'நீ யார். ஏன் இங்குவந்தாய்' என்று அவன் கேட்டனன். அவள் 'ஏன் என்னை அவ்வாறு கேட்கின்றீர்? என்னை அறியீரோ? யான் உம்மால் விரும்பப் பட்டவள் அல்லளோ?' என்றனள்.

அவன் 'யான் உன்னையறியேன். யான் உன்னை விரும்பியதாகவும் எனக்குத் தெரியவில்லை. நீ ஏதோ வஞ்சகம் பேசி என்னை மயக்கப் பார்க்கிருய். இவற்றிற் கெல்லாம் யான் அஞ்சேன். என்முன்நில்லாதே! போ.' என்ருன்.

அதுகேட்ட அவள் 'ஐயோ பாபம். நீர் ஏன் இவ்வாறு பேசுகின்றீர்? நீர் அம் மடைப்பள்ளியும் வன்னிமரமும் சான்ருக என்பா லன்பு கொள்ளவில்லையா? என்னுடன் பேசவில்லையா?' என்ருள்.

அதுகேட்ட அவன், "ஆ ஆ நன்று; நன்று நீ நல்ல சான்று கூறினுய்; அவையே நீ சொல்வன பொய் என்பதைக் காட்டுகின்றவே; அம்மடைப்பள்ளியும் வன்னிமரமும் இங்கு வந்து சொல்லுமாயின் நீ சொல்லிய யாவும் உண்மையே. உனது கரிகளை வரவழைப்பாய்" எனறு கூறி இறுமாந்திருந்தனன்.

இவற்றைக் கேட்ட அப்பொற்றொடி மனங்கலங்கி வானேக்கி 'ஏ தெய்வத வன்னியே, மடைப்பள்ளியே, யான் கற்புடைய மங்கையானல் இங்கே வருக. இவர் என்னை விரும்பியது உண்மையானல் இங்கே வருக' என்று இருமுறை யழைத்தாள்.

இவ்வாறு இவள் அழைத்தவுடனே அவ்வன்னி மாமும் மடைப்பள்ளியும் அக்கூட்டத்தார்க்கெதிரே தோன்றின. யாவரும் அவற்றைக் கண்டனர். உடனே அவர்கள், 'இவன் கூறியவெல்லாம் பொய்யே, இவ்வாயிழை யுரைத்தவெல்லாம் உண்மையே. இனி இவை வாய்திறந்து பேசவேண்டுவது இல்லை' என்ருர்கள்.

அவனும் அவர்களைப் பார்த்து, 'பெரியோர்களே, யான் இவற்றைப் பார்த்த பொழுதே எனக்கு இவளைக் கண்டு பேசிக் களித்தது நினைவிற்கு வந்தது. இவள் கூறிய யாவும் உண்மையே; யானும் இவளை மனையாளாக ஏற்றுக்கொள்கின்றேன்' என்று அவர்களனைவரும் காண அவளைக் கைப்பற்றினுன். மேலும் அவளைப் பார்த்து 'யான் உன்பாற் கூறியவற்றிற்கெல்லாம் நீ மனம் நோகற்க. அவையெல்லாம் இச்செயல் நினைவின்மையாற் கூறியவை' என்று அவளையும் மகிழ்வித்தனன்.

அதைக் கண்டு யாவரும் மகிழ்ந்தனர். இங்ஙனம் கற்பின் வல்லமையால் வன்னி மாமும் மடைப்பள்ளியும் சான்ருய் வரும் படிச் செய்த நங்கையாள் திருவடி வாழ்க.

ஊனுருட் பயன்

[சிவகங்கை நா. பரிதிமலை]

(அருணுசலன்)

(கடுள௨ம் பக்கத் தொடர்ச்சி)

ஊன் உண்ணும் உத்தமர்களே!

உண்ணப்படும் உணவில் ஒரு சிறிய ஈ கிடந்தாலும் அருவருப்போடு உண்டவை யனைத்தையும் உமிழ்ந்துவிடுவது நீவிர் கண்ட வழக்கமன்ருே! அதற்கேது வென்னையோவெனச் சிறிது உற்றுநோக்குமின்கள். உயிர் நீங்கிய பிணமாகலினன்ருே? இதனது உட்கருத்தை யறிவீராயின் ஊன் புசித்தற்குத் துணி வுண்டாமோ? ஊனென்பது பிறிதோருயிரின் புண்ணன்ருே? புலால் விற்கப்படும் கடைத்தெருவைச் சற்றணுகுவீராயின், அவ்விடத்து

நிகழும் அருவருக்கத்தக்க செயல்களையும் அழுகிய தீ நாற்றங் கமழுதலையும் கண்ணிற்பட்ட விடங்களெல்லாம் செங்குருதியை யுங் காண்பீரன்றோ? சிற்றுருவாம் ஈ யொன்று இறந்து பட்டாலும் உண்பதற் கொருப்படாத நுமது மனம் ஐயறிவும் நிரம்பப் பெற்ற ஆடு கோழிகளாம் பிணங்களை யரிந்தரிந்துண்ண நினைப்பது அறிவீனமாகுமன்றோ? அன்றியும், பிற்காலத்தாரால் தாழ்த்தப்பட்ட மக்களென இழிவு படுத்துக் கூறும் பள்ளர் பறையர் முதலிய வகுப்பினரைக் கண்டாலும் ஆத்தின்னிப் புலையரென இழிவுபடுத்துக் கூறுகின்றீர்கள்? அக்குழுவினரை நகர்ப்புறத்தே வைகுமாறு உயர்ந்தோரால் ஒதுக்கி வைக்கப்பட்டது அவரது இழிதகைமையானன்றோ? புலையர் என்னுஞ் சொல்லும் புலாலுண்ணுந் தொழிலான் வந்தடுத்த காரணப் பெயரேயாகும். அத்தகையவர் உண்ணும் ஆவினுக்கும் உயர்குலத்தவரெனக் கருதும் நீவிருண்ணும் ஆடு கோழி மீன் முதலியவற்றிற்கும் வடிவத்திற் சிறிது பெரிதாகக் காணப்படும் தன்மையதொன்றன்றிப், புண் பொதிந்த பிணமாய பொல்லாப் புலால் என்பதில் ஏதேனும் வேறுபாடுளதாமோ? இத்தனையும் நன்காராய்ந்து நடுநின்று கூறுமின்கள். உண்மையை யுள்ளபடி கூறுவீராயின், நும்மிருதிறத்தார்க்கும் எட்டுணையும் வேறுபாடின்றென்பதே போதரும். போதர, போலிச் சாதிப்பேய்வயப்பட்டு உயர்குலத்தினர் எனக் கருதிக்கொள்ளும் நும்மையும் அறிவுடையோர் இழித்துக் கூறுநிற்பர். அதுகேட்டு அவரொடும் பொருதுதற்குப் பொங்கி யெழுதல் எற்றுக்கோ? சீரிய ஒழுக்கத்தினராய்த் திகழ்வீராயின், பிறரும் எள்ளி நகையாடற் கிடந்தருங்கொல்! நீவிர் உயர்ந்த ஒழுக்கத்தினரா யிருந்தாலன்றோ அஃதிலாத புன்மக்களைப் புறத்தே யொதுக்கலாம்? இது கருதியேனும் இன்றே புண்ணும் புலாலை நண்ணுதொழிக. மரக்கறியுணவிற் றீங்கில்லையோ வெனின், மாமுதலி யவை ஓரறிவினையுடையதாமாகலின் விலங்கினங்கட்குளதாம் இன்ப துன்ப நுகர்ச்சி அவற்றினிடத்து நனியுங் காணப்படா. மரங்கொடிகளை யடியோடறுத்து விடாமலே பல பொருள்களையும் பெறுதற்கியலும். முழுதும் வெட்டிவிட்டாலும் தழைக்கும் தன்மையுமுடைத்து. மரக்கறியுணவையுட் கொள்ளுதலால் உடல் நலமும் பெறுகிறோம். ஆகவே மரக்கறியுணவில் மிகத் தீங்கில்லை யென்றே தெளிக.

அறிந்தும் அறியாதவர் என்போர் நூல் பல கற்றும் பன்னு டையின் பண்பை யொத்தவரே யாவர். இவரிடத்தும் புலான் மறுத்தலைக் கைக்கொள்மின் எனப் பகர்ந்தால், தாம் கற்ற கல்வி யின் மேம்பாட்டை இவ்விடத்தே பயன்பெறச் செய்வர். ஊனுண்பதனல் வீடுபே றடைதற்கு முட்டுப்பா டேதேனு முள தாங்கொல்! ஊனையூட்டியன்றே கண்ணப்பர் இறைவனடியைச் சார்ந்தார்?

"ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பாகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே"

என்று அப்பாடிகளும் ஆதரித்துக் கூறிப் போந்தனராகலின், அதனையே மேற்கொள்வேமென விடை பகர்வதோ டமையாது பிறரையும் படுகுழியில் வீழ்த்துவர்.

திருக்கண்ணப்பரை அன்பின் வடிவமென அடியார்புக ழையே அணியாகப் பூண்ட அருண்மொழித் தேவரே விதந்து கூறுவரெனின், அடிகளது அன்பின் மாட்சியை எம்போலிய ரான் இசைப்பதற்கும் ஒல்லுமோ? கானவர்பெருமான் நீர் வேட்கையாற் பொன்முகரியாற்றை முன்னிக் காளத்திமலை யைக் கண்ணுற்றூர். கண்டதும், காளத்தியப்பரை வழிபடும் பொருட்டு நாணன் வழிகாட்ட நண்ணிச் செல்வார், 'என்மீ தேற்றப்பெற்ற பெரும் பொறையொன்று குறைகின்றது போலும்! இனியடுப்பதியாதோ வறிகிலே'னென்று கூறிக் கொண்டே குடுமித்தேவரை நண்ணியதும் ஒன்றும் தோன்று மல் ஓவியமெனச் சற்றசைவற்று நின்று அன்பின் பெருக்கத்தால் அம்மையப்பனை நோக்கி,

"வெம்மறக் குலத்துவந்த வேட்டுவச் சாதியார்போற்
கைம்மலைக் காடிவேங்கை யரிதிரி கானகந்தன்னில்
உம்முடன் றுணையாயுள்ளா ரொருவரு மின்றிக்கெட்டேன்
இம்மலை தனியேநீரிங் கிருப்பதே யென்றுநைந்தார்."

"தேனெடு தினையின்பிண்டி தீம்பழங் காய்கிழங்கு
மானொடு முயலெய்கேழல் வல்லுடும் பழுங்கிவற்றின்
ஊனுண வென்றிவ்வெல்லா முதவுவல் யானேநல்ல
கானவர் துணையுண் டெம்மூர்க் காண்டிவா."

என்றழைக்கின்றனர்!

உற்று நோக்குமின்க ளன்பர்களே! உலகெலாம் ஒருங்கே படைத்துக் காக்கும் உமையொருபாகனே, ஐயனே! யானை கரடி புலி முதலிய கொடிய விலங்கினங்கள் திரிதரும் இருள் செறிந்த இவ்வரிய கானிடைச் சிறிதும் அச்சமின்றி வெஞ்சினத்த வேடுவர் போலத் தனித்திருப்பதென்னை! இத்துணை காலமாக யானும் உம்மையறியாது கெட்டொழிந்தேன். இன்னும் நீவிர் இங்குத் துணையின்றித் தனித்திருக்கவும் பொறேனாக, எம்மூர்க்கு வருவீ ராயின், உமக்கு வேண்டியமட்டும் உணவுப் பொருள்களையும் உவப்பொடு மளிப்பல். நும்மையழைக்கும் யானும் எளியனல்லன். உடுப்பூர்க் கிறைமகனே. ஆக, ஆண்டெனக்கு அரிய துணையு முண்டு எனப் பரிந்தழைப்ப வாராதது கண்டு, இவர் நீண்டகால மாக உண்பிப்பாரில்லாமையால் ஒய்வுற்றிருக்கின்றனர் போலும் என்றெண்ணி,

"குன்றிடை யெனக்கு வாய்ந்த குலமணி விளக்கே யெந்தாய்
உன்றழற் பசிதணிப்ப உறுசுவை யிறைச்சி கொண்டே."

"உழுந்துருள் பொழுதின்மீள்வே னொருகண மேனுந்தாழேன்
வழங்குறு கொடுவிலங்கு வருமென அஞ்சேல்ஐய
எழுந்துமேல் வந்ததாயின் என்னையொய் யெனக்கூவு."

என்று எல்லாம்வல்ல இறைவனை அஞ்சேலெனத் தேற்றிப் பின் றயங்கிய மனத்தராய்த் தாவிச் சென்று காடன் கொணர்ந்த பன்றி யிறைச்சியிற் சுவையுள்ள பாகங்களைத் திரட்டிக் கொணர்ந்து அரிதிற் பெற்ற மகவுக் கூட்டும் நற்றாயென அன்புகலந் தூட்ட; அவ்வன்பின் பெருக்கைச் சிவகோசரியாருக்கு வெளிப்படுத்தத் திருவுள்ளங் கொண்ட திருக்கருத்தையும் முடிப்பான் வேண்டிக் கண்ணையும் இடந்தப்பக் கண்ட எம்மிறையே,

"அவன் மன நமக்குக் கோயில் அவனுரை பலவுமோத்தாம்
அவன் முயல் தொழில்களெல்லாம் அறத்தொழி லையமில்லை"

என, இறும்பூ தெய்துவ னெனிற் கண்ணப்பாது அன்பின் வழி பாடெங்கே? காமக்கிழத்தியரிடத்து அல்லும் பகலும் புல்லித் தழுவும் அன்பின் மாட்சியெங்கே! கூறுமின்கள்! கண்ணப்ப ரைப் போல யாமும் அன்பு வழிபாட்டில் ஒப்புமை யுடையோ மெனக் கழறும் உண்மையறியாதோரின் உளப்பான்மையை என்னென்பேன்! இக்கருத்து பிறவிக் குருடன் தனதிற்கிழத்தி யின் எழிலைக் கண்டு இன்புறுவதைப் போன்றதேயாகும்.

அப்பரடிகள்

"சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவா ரவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லாராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழு நோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம்வணங்குங் கடவுளாரே"

என்று கூறிய தென்னையோ வெனிற், பெரும்பொருள் படைத்தா னொருவன் மேலும் மேலும் பொருளீட்டலே பெரு முயற்சியாகக் கொண்டு பொருட்பேய் பிடிக்கப் பெற்றானாய், இன்பக் கடலுள் ஆழ்ந்து கரையேற மாட்டாது காலன் வருங் கால் பெரும்பொருளே யின்பமெனக் கருதி யுழன்ற தானும் அரி திற் றேடிய பொருளொடும் அழிவுற்று மீளா நரகிற் காளாவனா கலின், அன்னானுக்கு இரங்கியும்; ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேயாயினும், தொழுநோய் வந்துற்றக்கால் அந் நோயின் நலிவால் எம்பெருமானையே இடைவிடாது நினைந்து நைந்துருகுவ ராதலின், அவ்வடித் தொண்டின் மாட்சி தோன்ற அன்னாரைப் பாராட்டி யுங் கூறினாரென்க. கொடுங்கொலைக் கஞ்சாது ஊன்றின் றுழல் வோர் மறுமைக்கண் ஒழியாத் தொழுநோயால் வருந்துவ ரென்பதை,

"அக்கேபோ லங்கை யொழிய விரலழுகித்
துக்கத் தொழுநோ யெழுபவே—அக்கால்
அலவனைக் காதலித்துக் கான்முறித்துத் தின்ற
பழுவினை வந்தடைந்தக் கால்"

எனவரும் நாலடியொடும் ஒப்புநோக்கத் தக்கதே.

(தொடரும்)

தமிழ் அறிவியற் சொற்கள்.

எண்ணளவை—(Arithmetic)

[திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள்]

(௧௭௰-ம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணளவையில் முதன்முதலாக வேண்டப்படுவது எண்களுக்கு ஒரு பெயர் வைப்பு முறையேயாகும். தமிழில் இதர மொழிகளைவிட மிகவுஞ் சிறந்த நேர்மையான முறையோடு இப்பெயர் வைப்பு ஏற்பட்டிருப்பது நோக்கத்தக்கது. 1 ஒன்று, 2 இரண்டு . . . 9 ஒன்பது; 10 பத்து, 11 பதினொன்று . . .

. . . 19 பத்தொன்பது, 20 இருபது . . . 30 முப்பது . . . 80 எண்பது, 90 தொண்ணூறு, 100 நூறு; 200 இருநூறு, 300 முந்நூறு . . . 800 எண்ணூறு, 899 எண்ணூற்றுத் தொண்ணூற்றென்பது, 900 தொள்ளாயிரம், 999 தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றென்பது, 1000 ஆயிரம்; 1999 ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றென்பது, 2000 இரண்டாயிரம், 3000 மூவாயிரம் . . . . . 9,99,999 தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றென்பதாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றென்பது; என்ற இம்முறை வைப்பை உற்று நோக்கினால் தமிழெண்களிற் பெரும்பகுதி உகர வீற்றுடனும் ஒரு சிறு பகுதிமட்டும் மகர வீற்றுடனும் பெயர் பெற்று வழங்குவது எளிதிற் புலனாகும். பிரணவ மந்திரமாகிய ஓம் என்பது உ அ ம என்ற எழுத்துக்களின் சேர்க்கை யென்பதும், உ என்பது உயிர்களையும், அ என்பது இறைவனையும், ம என்பது மலத்தையுங் குறித்து நிற்பன வென்றும் ஈண்டுக் கூறவேண்டியதில்லை. எனினும் தமிழ் எண்களுக்குப் பெயரிடும்போது கூடப் பண்டைத் தமிழர் தங்கள் பிரணவ மந்திரத்தினின்றும் ஒரு சிறிதும் விலக மனங் கொள்ளாமல் உ, ம என்ற இரண்டு எழுத்துக்களை ஈறுகக்கொண்டுள்ள பெயர்களையே சூட்டினார்கள் என்பது மட்டுங் குறிக்கொளற்பாலதாம். அதனாலேயே அவர்களது எண் முறை 999,999 என்றதுடன் முடிவுபெற்றதென்க.

1,00,000 என்பது ஆங்கிலத்தில் மில்லியன் எனப்படும். அது இக்காலை நந்நாட்டில் பத்து லக்ஷம் என வழங்குகிறது.

ஆயினும் நூறாயிரம் என்று பொருள் படும் லக்ஷம் என்பது தமிழ்ச் சொல்லன்று. 10,000,000 என்பது ஆங்கிலத்தில் பத்து மில்லியன்கள் என்றும் நந்நாட்டில் கோடி என்றும் வழங்கும். ஆயினும் கோடி என்பதுந் தமிழன்று. அன்றியும் அது உகர ஈற்றிலாவது மகர ஈற்றிலாவது முடியாமையும் உன்னிக்கற்பாலது. சங்கம், மகா சங்கம் சமுத்திரம், மகா சமுத்திரம், பதுமம், மகா பதுமம் என்பன போன்ற பல வட மொழிக் குறியீடுகள் வழக்காற்றிலுள்ளன. அக்குறியீடுகளில் ஒரு முறையிருப்பதாகத் தோன்றவில்லை; ஒவ்வொன்றின் தொகை பலவாக மாறுபட்டுப் பல நூல்களிற் காணக்கிடப்பதுங் கண்கூடு. ஆயிரம் என்ற தொகை கடந்த பின் ஒவ் வொரு நூற்றுப் பெருக்கத்திற்கும் ஒவ்வொரு புதுப்பெயர் வடமொழியிற் கொடுக்கப்பட்டு வந்துளது என்பது ஆராய்ச்சியிற் பெறக் கிடக்கின்றது.

100 ஆயிரம் ஒரு லக்ஷம்
100 லக்ஷம் ஒரு கோடி
100 கோடி ஒரு சங்கம்
100 சங்கம் ஒரு மகா சங்கம்

ஆனல் கோடிக்கு மேற்பட்ட எண்களின் தொகை பலதிறப்பட்டு வழங்கப்பட்டு வருதல் முன்னரே குறிக்கப்பட்டது. இவ் வேறுபாட்டை ஆய்ந்து சீர்ப்படுத்தி ஒரு முறையாக அமைப்பினும் அப்பெயர்களையும் அவற்றிற்குரிய தொகைகளையும் மிக அரிதில் நெட்டுருப்பண்ணியோ அல்லது அகராதியைக்கொண்டோ தான் தெரிந்து பயன்படுத்த வேண்டும்.

ஆங்கில எண்களில் இம்முறை வைப்பு ஒருவாறு எளிதாக அமைந்திருக்கிறதென்றே கூறலாம்.

மில்லியன் என்பது ஒன்றுபோட்டு 6 சுன்னங்கள்
பில்லியன் என்பது ஒன்றுபோட்டு 12 சுன்னங்கள்
டிரில்லியன் என்பது ஒன்றுபோட்டு 16 சுன்னங்கள்

என்று இவ்வாறு 56 சுன்னங்கள் கொண்டதொரு எண்ணுக்குக் கூட எளிதிலுணரு முறையில் பெயரிடப்பட்டிருக்கிறது. ஆனல் மில்லியன் என்று தொடங்கிய பெயரிலுள்ள மில் என்னும் பதத்திற்கு ஆயிரம் என்றே பொருள் இருப்பது நோக்கற் பாலதாம்.

அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் சுருக்க முறையாக எண்களுக்குப் பெயரிடத் தொடங்கியுள்ளனர். மூன்று ஸ்தானங்களில் முடிவதே ஒரு மில் என்றுகொண்டு அவர்கள் பின்பற்றி வருகின்றனர். அது ஒரு வகையிற் சரியானதென்றே தோற்றுகிறது.

தமிழர்கள் 999,999 என்ற எண்ணுக்கு மேற்பட்ட எண்களுக்குத் தனிப் பெயரிட்டு வந்திருந்தனரா என்பது இன்னும் ஆராயத் தகுந்ததொன்றாகவே யிருக்கின்றது. அவர்களுடைய வளம்பொருந்திய வாழ்க்கையும், தேர்ந்த கல்வியறிவும் சிறந்த கோணூலாராய்ச்சி யறிவும் அவ்வாறு அவர்கள் தனிப் பெயர் இட்டிருக்கக் கூடும் என்பதை எளிதிற் குறிக்கின்றன. எனினும் இதுகாறும் வெளிவந்துள்ள பண்டைத் தமிழ் நூல்களில் அத்தகைய ஒரு பெயரும் காணப்படாமை கவலை விளைப்ப தொன்றாகும். இருந்தாலும் "மேலாயிரம்" என்ற ஒரு இலக்கியக் குறிப்பிலிருந்து பின் வரும் முறையை இப்பொழுது கைக்கொள்ளலாம் என்று தோன்றுகிறது:—

ஓர் ஆயிரம் என்பது ஒன்று போட்டு மூன்று சுன்னங்கள்.

இரண்டாவதோராயிரம் என்பது ஒன்றுபோட்டு (இரு மடங்கு மூன்று அதாவது) ஆறு சுன்னங்கள்—அதாவது ஒரு மில்லியன்.

மூன்றாவதாயிரம் என்பது ஒன்றுபோட்டு (மும்மடங்கு மூன்று அல்லது) ஒன்பது சுன்னங்கள் அதாவது ஆயிரம் மில்லியன்கள்.

நான்காவதோராயிரம் என்பது ஒன்றுபோட்டு (நான்மடங்கு மூன்று அல்லது) பன்னிரண்டு சுன்னங்கள்; அதாவது ஒரு பில்லியன்.

பத்தாவதோராயிரம் என்பது ஒன்றுபோட்டு (பதின்மடங்கு மூன்று அல்லது) முப்பது சுன்னங்கள், அதாவது ஒரு குவின்டில்லியன்.

நூறாவதோராயிரம் என்பது ஒன்று போட்டு (நூறு மடங்கு மூன்று அல்லது) முந்நூறு சுன்னங்கள்; அதாவது ஒரு குவின்குஜின் டில்லியன்.

இருநூறாவதோராயிரம் என்பது ஒன்றுபோட்டு (இருநூறு மடங்கு மூன்று அல்லது) அறுநூறு சுன்னங்கள்; அதாவது ஒரு ஸென்டில்லியன்.

என்னூறுவதோராயிரம் என்பது ஒன்றுபோட்டு (என்னூறு மடங்கு மூன்று அல்லது) இரண்டாயிரத்து நானூறு சுன்னங்கள்; அதாவது ஒரு குவாட்ரி ஸெண்டில்லியன்.

இஃது எத்துணை யெளிதாக அமைந்துள்ளது என்பதை யெடுத்துக்கூற வேண்டியதில்லை. எவ்வளவு பெரிய எண்ணாயினும் எளிதில் படித்துக்கூறலாம். எடுத்துக்காட்டு :—

4,387,921,083 என்பது மூன்றாவது நான்காயிரத்து இரண்டாவது முந்நூற்றெண்பத் தேழாயிரத்து, முதலாவது தொள்ளாயிரத் திருபத்தோராயிரத்து எண்பத்து மூன்று.

24,765,387,687,640,072,263. என்பது ஆறாவது இருபத்து நான்காயிரத்து, ஐந்தாவது எழுநூற் றறுபத்தைந்தாயிரத்து, நான்காவது முந்நூற்றெண் பத்தேழாயிரத்து, மூன்றாவது அறுநூற்றெண்பத் தேழாயிரத்து, இரண்டாவது அறுநூற்று நாற்பதாயிரத்து, முதலாவது எழுபத்திரண்டாயிரத்து இருநூற்றறுபத்து மூன்று.

73,000,000,000,020,000,000,003,000,000,000,720,000. பன்னிரண்டாவது எழுபத்து மூன்றாயிரத்து, எட்டாவது இருபதாயிரத்து ஐந்தாவது மூவாயிரத்து, முதலாவது எழுநூற் றிருபதாயிரம். தமிழிலக்கணப்படி ஆயிரம் ஆயிரம் என்று ஒவ்வொரு தரமும் திருப்பிக்கூறாமல் கடைசி ஆயிரத்தை மட்டுங் குறித்தால் போதும். அதன்படி மேற்காட்டிய எண், பன்னிரண்டாவது எழுபத்து மூன்று, எட்டாவது இருபது, ஐந்தாவது மூன்று, எழுநூற்றிருபதாயிரம். இதன் சுருக்க அழகும் தெளிவும் எளிமையும் உற்று நோக்கற்பாலது.

—காழி சிவ- கண்ணுசாமி B.A.

தமிழ்க் காவியங்கள்.

[திரு. K. C. தாணு அவர்கள்]

அமிழ்தினுமினிய நந்தமிழ் மொழியில் அமைந்துள்ள காவியங்களை முக்கூறிடலாம். (1) ஐம்பெருங் காப்பியங்கள் (2) ஐஞ்சிறு காப்பியங்கள் (சிறு பஞ்சகாவியங்கள்) (3) ஏனைய காவியங்கள். சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பன ஐம்பெருங் காப்பியங்கள் எனப்படும். சிறுபஞ்ச காவியங்களாவன சூளாமணி, நீலகேசி, உதயணன்

கதை, யசோதர காவியம், நாககுமார காவியம் ஆகியவை. பண்டைத்தமிழுலகை அணிபெறச் செய்த காவியங்கள் இவைகளேயாம் என்க. பிற்றை ஞான்று எழுந்த சேக்கிழார் பெரிய புராணம், பரஞ்சோதியாரருளிய திருவிளையாடற் புராணம், கம்பராமாயணம், கந்தபுராணம், வில்லிபாரதம், நைடதம் ஆகிய ஏனைய நூற்களும் தற்போது ஒப்பற்ற காவியங்களாய் ஒளிர்கின்றன.

இவ்வுலகிடை இயங்கும் ஒவ்வொரு மொழிக்கும் அவ்வம் மொழிகளில் அமைந்துள்ள இலக்கிய நூற்களே பெருமையளிக்கின்றன. நந் தாய்நாடு தற்போது பொருள் நலிவால் நிலை குலைந்து தோன்றினும் நம் தாய் மொழி தன் எழிலில் இணையளவும் நலிவுற்றதாய் யாராலும் கூறவியலாது. ஒருகாலத்தில் உலகில் உன்னத நிலையில் இருந்ததும் தற்போது சிறப்புற்று மிளிர்வதுமான ஆங்கிலம், ஆரியம், இந்தி முதலிய பிறமொழிகளைவிட நந்தமிழ்மொழி, பன்மடங்கு சிறப்புற்று விளங்கும் வண்ணம் கம்பர், வள்ளுவர், இளங்கோ, சாத்தனார் ஆகிய தமிழ் வல்லுநராம் கான்முளைகளை ஈன்று, அன்னோர் அருளிய காவியக் கலன்களைக் கவின்பெற அணிந்து மலர்ந்த நோக்கொடும் மிளிர்ந்து தோற்றும் நந்தமிழன்னையின் பெற்றியை நோக்குழி யாமும் தமிழராய்ப் பிறக்கும் பேறு பெற்றோம்! என எம்முள்ளம் இறுமாப்படைகின்றது. "நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரமென்றோர் மணியாரம் படைத்த தமிழ் நாடு", "யாம் கண்ட புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவரைப்போல் இளங்கோவைப் போற் பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை" என வரூஉம் சுப்பிரமணிய பாரதியாரின் சுந்தரக் கவிகளை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் மயிர்க் கூச்செழுகின்றது.

கவிநலம் வாய்ந்த வர்ணனைகளே காவியங்கட்கு உரித்தாகும் என்க. கற்போர் உள்ளம் கசிந்துருக அன்னோரை உவகை, இன்பம், வீரம், ஆகிய புனலிடைப் புகுத்துப் புகுத்து எப்பொருளையும் தெள்ளிதில் உள்ளத்திற் பதியச் செய்யும் பண்பு தேனினுமினிய நந்தீந்தமிழ்க் காவியங்களிடை அமைந்து மிளிர்கின்றது. உலகிடைக் காணும் இயற்கைத் தோற்றங்கள் யாவும் கற்றோர் உள்ளத்தைக் கொள்ளை கொள்வனவாகும். அவ்வின்பக் காட்சியைக் கற்றோர் உள்ளத்திற் கற்பொறி போன்று கற்குங் கணத்திலேயே காவியங்கள் காட்டாநிற்கும்.

மென்மையாலும், இனிமையாலும் தொடுக்கப்பெற்ற தமிழ்ப் பா மாலைகளிடை கடல் முழக்க மெழுகின்றது! இளந்தென்றல் வீசுகின்றது! வானளாவி நிற்கும் வரைக் குலங்கள் காண்கின்றன! யாழும், அமிழ்தும், குழலுங் குழைத்தன்ன மழலை ஒலி எழுகின்றது! தேனருவி பாய்கின்றது! மாந்தர் விரும்பும் பற்பல இன்பப் பொக்கிஷமாகவே நந்தமிழ்க் காவியங்கள் பொலிகின்றன.

இவற்றைக் கற்கும் ஒருவனின் உள்ளக் கடலிடை இன்ப அலை எழுகின்றது. மாந்தர் உய்தற்குரிய விழுமிய கொள்கைகள் அன்னோன் உள்ளத் தெழுகின்றன. இயற்கையன்னை அவன் முன் காட்சி அளிக்கின்றாள்!

சங்ககாலத்தெழுந்த காவியங்களாய் நந்தமிழ் மொழியிற் றற்போதுள்ளன 'இளங்கோ வடிகள்' அருளிய 'சிலப்பதிகாரமும், 'சீத்தலைச் சாத்தனார்' அருளிய 'மணிமேகலையு'மே யாமென்க. பண்டை நாளில் வழக்கிலிருந்த ஆசிரியப்பா நடையில் அழகுற அமைந்த காவியங்கள் இவையாகும். கற்றோரும், மற்றோரும் அறிந்து சுவைக்கும் வண்ணம் நந்தமிழ்மொழி பண்டைய நாளிலேயே, இயல், இசை, நாடகம்என முக்கூறிடப்பெற்ற தென்க. சிலப்பதிகாரம் என்னுந் தமிழ்ப் பெருங் காவியம் முத்தமிழ் நயமும் அமைந்து மிளிரும் ஓர் நூலாகும். இஃது புத்தமதக் கொள்கைகளைத் தெள்ளிதில் விளக்குவதோடு ஓர் துன்பியல் நாடகமாகவும் (Tragedy) முடிக்கப் பெற்றுளது. காவிரிப்பூம்பதியின் பெருமை, செல்வச் செறிவு, பற்பல மாந்தர்களின் பிரிவுகள், கடைவீதி முதலியவற்றின் வருணனைகள் ஆகியவற்றைப் பரக்கக் காணலாம். இந்திர விழா 29-ம் நாளிற் கோவலனும் மாதவியும்,யாழ் கைக்கொடு கடற்கரைக்கண் வைத்துப்பாடும் கானல்வரிப் பாக்களும், ஆயர் மகளிர் மாயவனை முன்னிலையுறுத்திப் பாடும் பாட்டுக்களும், கூத்தும், கோவலர்க்குற்ற கொடுந்துயர் பொறாது கற்பின் செல்வி கண்ணகி உற்ற துன்பமும், கொண்ட கோலமும் பாண்டி மன்னனிடம் வழக்குரைக்கும் பான்மையும் கற்போர்க்கு மிக்க சோகத்தையும், வீரத்தையும் ஒருங்கே ஊட்டுவதாமென்க.

(தொடரும்)

அருஞ்செய்யுட் பொருட் பகுதி

திருவெங்கைக் கலம்பகம்

22-வது செய்யுள்.

[சென்னை கோ. இராமலிங்கத் தம்பிரான் அவர்கள்]

நேரிசை வெண்பா

வெறி விலக்கல். இது தோழிகூற்று.

வேலைக் கடுவயின்ற வெங்கையர னிவட்குச்
சாலத் திருமறுகிற் றந்துபோ - மாலிப்
பெருமையாற் போக்கும் பிணியோ வவர்த்தாழ்ந்
தருமையாற் போக்கு மது.

இதன் பொருள்: வேலை கடு அயின்ற - திருப்பாற்கடலிற் றோன்றிய விடத்தை உண்ட, வெங்கை அரனர் - திருவெங்கையில் எழுந்தருளிய சிவபெருமானர், இவட்கு - இப்பெண்ணிற்கு, திருமறுகில் - அழகிய (நமது) வீதியில், சால தந்துபோம் - மிகக் கொடுத்துப்போகின்ற, மால் - காம மயக்கமானது, இ பெரு மையால் - இந்த பெரிய ஆட்டினல், போக்கும் பிணியோ - ஒழிக்கின்ற நோயோ, (அன்று), அவர் தாழ்ந்து - அவ்வெங்கைநாதரை வணங்கி, அருமையால் - அருமையோடு, போக்கும் அது - ஒழித்துக் கொள்கின்ற அப்பிணியாகும்.

விளக்கவுரை: மை - ஆடு. ஆட்டை வெட்டி வெறியாடுதலினல் ஒரு பயனுமில்லை; பழமலைநாதரை வணங்கி இவருக்குண்டான காம நோயை யொழித்துக் கொள்ளும்படி செய்தலே பயனுயாகும் என்பதாம். இதில், மால், இப் பெருமையால்(பெருமை பாராட்டுதலால்) போக்கும் பிணியோ அவரைத்தாழ்ந்து (தாழ்மையடைந்து) போக்கிக்கொள்ளுகின்ற அப் பிணியாகும் எனப் போக்குரை காண்க.

திருவருணைக் கலம்பகம்

93-வது செய்யுள்.

கலி விருத்தம். வெறி விலக்கு.

வாங்குவில் லேர்நுதல் வயங்கு மாதரீர்
ஈங்கிவ ளொருவர்கை யேட்டை வாங்கினல்
ஆங்கடு வணிந்தவ ரருணை நாட்டிலே
நீங்கண்மை யழிப்பது நீதி யல்லவே.

இதன் பொருள்: வாங்குவில் ஏர் - வளைந்த வில்லை யொத்த, நுதல் வயங்கும் - நெற்றி விளங்கும், மாதரீர் - செவிலித்தாய் முதலியவர்களே! ஆம் கடு அணிந்தவர் - பாற்கடலிற் றோன்றிய விடத்தையுண்டு கண்டத்தில் அணிந்த சிவபெருமானது, அருணை நாட்டில் - திருவருணை நாட்டிலே, ஈங்கு இவள் - இவ்விடத்து இத்தலைவி, ஒருவர் கை - ஒருவர் பக்கலில் ஏட்டை வாங்கினல் - ஆசை கொண்டால், நீங்கள், மை - ஆட்டை, அழிப்பது - வெட்டுவது, நீதி அல்ல - நீது அன்று; (எ - று.)

விளக்கவுரை: இது தோழி கூற்று, ஏர் - உவமை யுருபு, அழகு எனினுமாம். இதில், ஒருவர் கையிலுள்ள எட்டை - (ஓலை யேட்டை) வாங்கினல் அதிற்றீட்டியமையை அழிப்பது நீதி யல்லவே; அழித்தால் எங்ஙனம் வாசித்தல் முடியும் எனப் போக்குரை காண்க. எட்டை - ஆசை ஓலையேட்டை; மை ஆடு, ஓலைச்சுவடிக்கிடும் மை.

பிளாரன்ஸ்
நைட்டிங்கேல் அம்மையார்

(முகப்புப் படம் பார்க்க)

பிளாரன்ஸ் நைட்டிங்கேல் என்னும் அருள்மிகு அம்மையார் 1820-ம் ஆண்டில் இத்தாலிய நாட்டிலுள்ள பிளாரன்ஸ் என்னும் ஊரிற் பிறந்தவர். இவர் தாய்தந்தையர் இங்கிலாந்து தேயத்திற் பிறந்த ஆங்கில மக்களாவர். இவர்கள் அறிவிலும் அன்பிலும்

சிறந்தவர்களாவர். பல ஊர்களுக்குஞ் சென்று இவர்கள் இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ்வர். இவர்கள் தம் ஊரவர்கட்கு வேண்டும் உதவிகளைச் செய்யப் போகுங் காலங்களில் தம் பிள்ளைகளையும் உடன் அழைத்துப் போவது வழக்கம். அதனால் அப்பிள்ளைகளும் இரக்க நெஞ்சினராய்ப் பிறர்க்கு உதவி செய்வதில் விருப்பமுடையவர்களாய் வளர்ந்து வரலாயினர்.

பிளாரன்ஸ் நைட்டிங்கேல் சிறு குழந்தையிலேயே கடவுட் பற்று மிக்குடையவராய் விளங்கினர். இவர் இன்சொல்லும் இனிய முகமும் உடையவர். இவர் பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலியன், இலத்தீன், கிரீக் முதலிய மொழிகளையும், கணக்கையும் நன்கு பயின்றனர்; அறிவு நூல்களை அவாவிக் கற்றனர்; தையற் தொழிலிலும் வல்லவர். 'விளையும் பயிர் முளையிலே' தெரியும் என்ற பழமொழிக் கெடுத்துக் காட்டாக இவர்தம் இளமை வாழ்க்கை இவரது பிற்காலப் பெருவாழ்வினை விளக்கவல்லதாய்த் திகழ்ந்தது. இவர் வேடிக்கை விநோதங்களிற் கருத்துடையவரல்லர்.

இவருக்குப் பதினெட்டாண்டு நிரம்பியதும் இலண்டன்மாநகரத்திலுள்ள மருத்துவக் கழகத்திற் சேர்ந்து வேலை கற்றுப் பின், பிரான்சு, இத்தாலி, ஜெர்மனி முதலிய இடங்கட்குச் சென்று மருத்துவக் கழகங்களைப் பார்வையிட்டு, முடிவில் கேய்சர்ஸ்வர்த் என்னு மிடத்திலுள்ள மருத்துச் சாலையில் தமது மருத்துப் பயிற்சியைத் துவங்கத் தீர்மானித்தார். பின் பாரிஸ் நகரத்திலுள்ள மருத்துக் கழகத்தில் அறுத்துத் தீர்க்குங் கருவி முறைகளைப் பயின்றனர். அதன்பின் இலண்டனில் செல்வப் பெருமாட்டிகளுக்கென ஏற்படுத்தப்பட்ட மருத்துக் கழகத்துக்குத் தலைவியாக அமர்த்தப்பட்டார்.

1854-ம் ஆண்டில் இங்கிலாந்து பிரான்சு துருக்கி நாடுகளின் மூவேந்தரும் ஒரு பக்கமாகவும், ருஷியநாட்டின் வேந்தர் மற்றொரு பக்கமாகவும் நின்று பெரும் போர் புரிந்தனர். அம்மூவேந்தர் தம்பெரும் படையை ருஷியப்படை தாக்கி நூற்றுக்கணக்கான ஆட்களை வெட்டிச் சாய்த்தனர். அந்நேரத்தில் பெருமழை பெய்ததால் குளிரின் கொடுமையோ சொல்லுந் தரத்ததன்று. அம்மூவேந்தர்தம் படைஞர்களிற் பெரும்பகுதியினர் தலைபோயுங் கைகால் முறிந்துங் கிடந்து உதவியின்றித் தத்தளித்தனர். அங்கே

உதவிக்கிருந்த மருத்துவர் தொகை மிகச் சிறிதாயிருந்தது. அத னல் கிரிமியாப் போர்க்களத்தில் கடுங்காயம்பட்ட போர்வீரர்கள் பட்டினியும் பசியுமாய் உதவியின்றித் துன்புறுஞ் செய்தி புதினத் தாள்களில் காணப்பட்டது. சிட்னி எர்பர்ட் என்னும் போர் அமைச்சர் பிளாரன்ஸ் அம்மையாருக்குக் கடிதம் எழுத, அவர் மருத்துவப் பெண்மணிகளைத் திரட்டி அவர்களோடு கப்பலேறிக் காயம்பட்டவர்கள் வைக்கப்பெற்றிருந்த ஸ்குட்டாரி மருத்துச் சாலைக்கு வந்து சேர்ந்தனர். காயம்பட்ட போர்வீரர்கட்கு அம்மை யார் என்ன என்ன வகைகளிலெல்லாம் உதவிசெய்யக் கூடுமோ அவ்வவ் வகைகளிலெல்லாம் இன்முகத்தோடும் உள்ளக் கிளர்ச்சியோடும் உதவிசெய்தனர். அம்மையார் அங்குள்ள கொடுங் குளிரால் நோயுற்று உடல் நலிந்த காலத்தும் தாம் அத னைப் பொருட்படுத்தாமல் போர்வீரர்கட்குச் செய்யும் உதவியி லேயே கருத்துச் செலுத்திவந்தனர். அம்மையார் சிறிதும் சலிப் பின்றி இன்முகத்தோடு செய்த உதவி ஐரோப்பா நாடெங்கும் பரவி அவர்க்கு அழியாப் புகழைத் தந்தது. ஒருநாள் இருபது மணி நேரம் தொடர்பாக நின்று காயம்பட்ட படைஞர்கட்கு உதவிசெய் திருக்கின்றனர். என்றால் அவர் தம் புகழ் அங்ஙனம் பரவுதற்கு ஐயமேதேனும் உண்டாமோ?

இவர் தம் சொந்த நாடுகளிலும் இந்தியாவிலும் திருந்திய முறையில் தமது கருத்துக்களுக்கிணங்க மருத்துக் கழகங்களைப் பெரும்பாடுபட்டு ஏற்படுத்தினர். இவரது அரும்பெரும் உழைப் பினைப் பாராட்டி இங்கிலாந்திலுள்ள குடிமக்கள் 50,000 பவுன் திரட்டி அம்மையார்க்குப் பரிசாக அளித்தனர். அதனைத் தமக் கென வரைந்து வையாமல் மருத்துக் கழகங்கட்கும், கல்லூரிகட் கும் பயன்படுத்தினர்.

அருள் ஒழுக்கத்திற் றலைசிறந்த நைட்டிங்கேல் அம்மையார் உலகிற்கொரு பெண்மணியென விளங்கி, 1910-ம் ஆண்டில் தமது புகழுடம்பை உலகில் நிறுத்திப் புலாலுடம்பினை ஒழித்தனர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

காழிக் கண்ணுடைய வள்ளலார்

அருளிச்செய்த

மாயாப் பிரலாபம் *

காப்பு

மாதங்க வானனனே மாயையா மாதங்கே
போதன் றனையிழந்து போய்ப்புலம்ப—லோதுங்காற்
கூர்த்தபொருட் குற்றமொழிக் குற்றமிவை வாராமற்
காத்தருள்கை யுன்றன் கடன். ௧

சிறப்புப் பாயிரம்

அகவல்

ஈரே ழுலகி லெண்ணீங் குயிர்க்கும்
பேரா வறிவாய்ப் பிரிவற நிறைந்து
காயா திகளாய்த் தனுவொடு கலந்து
மாயா ளென்னும் பேருடை மடந்தை
மழைக்கா லிருளை வெளியென மயக்கித்
தழைத்தபல் லுயிர்க்கிரு டாளுய் நிற்பவள்
அன்னை யிருண்மலி யாணவ மாகவும்
முன்னவ டிரோத மொய்குழ லாகவும்
நல்லுயி ரிச்சா ஞானங் கிரியை

---

* சிறந்த இந்த சைவசித்தாந்த நூலின் கையெழுத்துச் சுத்தப் பிரதி சீகாழியில் புகழ்படைத்த வணிகராயும் நிலக்கிழவராயு மிருந்த திரு. மாரிமுத்தாப்பிள்ளை அவர்களால் எழுதிவைக்கப் பட்டிருந்த தொன்றாகும். பிள்ளை யவர்கள் இன்றைக்கு 54 ஆண்டுகள் முன்வரை காழிக் கண்ணுடைய வள்ளலார் திருமடத்தையும் அதன் அறநிலையங்களையும் செம்மையாகவும் திருந்திய முறையிலும் பரிபாலித்து வந்தவர்; காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை அவர்கள் தாயாரின் மாதாமகர். பிள்ளை யவர்களது கையெழுத்துப் பிரதியைப் பார்த்து இது வித்வசிகாமணி. ப. அ. முத்துத் தாண்டவராய பிள்ளை அவர்களால் படியெடுக்கப்பட்டு இச் "செல்வி"யின் வாயிலாக முதன்முதல் வெளியிடப்படுகிறது.

தொல்லிரு வினைகளைத் தோழிய ராகவும்
சுத்த மாயையைக் கைத்தா யாகவும்
புத்திரர் பொறிபுலன் கரண மாகவும்
போதன் றன்னைப் புருட னாகவும்
திதற வுடைய மோகினித் தெரிவை
ஈங்குவ ளொருவன் றன்னு லின்புறு
பாங்குடைப் போதனைப் பறிகொடுத் தழிந்து
போதன் போதையைப் பொருந்துதல் கண்டு
போதமின் மாயாள் புலம்ப றன்னைச்
சாயா வுண்மைத் தபோதனர் கேட்க
மாயாப்ர லாப மெனவகுத் துரைத்தோன்
கெடிலப் புனல்சூ ழதிகைக் கதிபன்
ஆழிமேன் மிதந்த காழிமு தூரன்
திசைமிகு கீர்த்திக் குகமடத் தலைவன்
கருநெறி கழிக்குந் திருநெறித் தேசிகன்
அத்தனைக் காட்டி யமுதுவாழ் வித்த
வித்தகன் றனக்கு வேலைக் காரன்
சிற்குணன் றன்னைச் சேர்ந்தவர்க் கருளும்
நற்கண் ணுடைத்திரு ஞானசம் பந்தன்
திருமலி யின்பச் சிவனடித் தொண்டர்தம்
பெருமைய ரடிபுனை பெற்றி யோனே.

அவையடக்கம்

சொல்லுரிமைத் தூய்மையிலா நானுந் துணிபொருடான்
வல்லவர்கள் போனூல் வகுத்திடுத—வல்லலற
விப்பாரிற் றேன்று மிரவியெதிர் மின்மினிநின்
றெப்பாக மின்னுவ போலும். ௧

குருவணக்கம்

காயா திகள்கழியக் காதலித்த மாதவர்க்கு
மாயாப்ர லாப மெனவகுத்துத்—தூயபுகழ்ச்
சண்பையில்வாழ் சம்பந்தன்றாள் வணங்கிச் சாற்றுவே
னெண்பதுவெண் பாவாக யான். ௨

நூல்

சீராட்டி யென்பேர்முன் செப்பாத போதனெனைப்
பாராட்டி யென்பேர் பகர்ந்ததற்பி—னோரானான்

றுஞ்சினு லன்றேவிச் சொல்லுரைப்பா னென்றுள்ள
மஞ்சினா னின்றே னற. ௩
அங்கே யுடம்புக் குடம்பாகி யன்றளவு
மெங்கேயென் ருலிங்கே யென்றெங்கும்—பங்கறவே
நின்றவெனை யன்றியொரு நேரிழையொன் றுண்டாகி
னன்றுநமக் கிதோர் நகை. ௪
சாராத சிற்பாவை தன்வாழ்வே மெய்யென்று
வாராது வந்தவனோர் வார்த்தைசொலப்—பாராது
போவதே யென்வாழ்வு தானடங்கப் பொய்வாழ்வே
யாவதே சாந்தம் பரம். ௫
வாழாத வாழ்வும் பெருவாழ்வும் வாழ்வேனைப்
பாழாக ஞானப்பெண் பண்ணுவதென்—கேள்வாநா
னுன்னைவெறுக் கும்படியே யுற்றதல்லோ வுன்போத
மென்னை வெறுப்பதனு லென். ௬
சற்றேநீ வாழ்ந்தபடி சார்போதா வென்னுடைய
சுற்றமொழித் தென்னைத் துறந்ததற்பின்—பெற்றபய
னூண்டா னிறப்பா யுலகத்தோர் தூடணப்பூண்
பூண்டாயென் பெற்றாய் புகல். ௭
சந்தமிலி யென்றன்னைத் தானறிவா னுந்தன்னை
யந்தமிலா நானிங் கறியேனு—மிந்தக்
குலாவெவளோ கூறினுள் போதாநீ கூறல்
விலாவொடியக் கண்டாய் மிக. ௮
புக்கபடி கேளீரென் போத னிருதலையு
மொக்கநடை செய்தே யொழுகினான்—சக்களத்தி
முற்றுந் தனதாக்கி யென்வார்த்தை முன்மொழியச்
சற்றும் பொறுத்திலளே தான். ௯
புல்லியெனைத் தானடங்க நானுகும் போதனுட
னெல்லையிலா நட்பின் றிழந்தேனே—சொல்லாற்
றுறப்பிலியென் றென்னைத் தூற்றலுறு வானோர்
பிறப்பிலி வந்ததற்குப் பின். ௰
எட்டனையுந் தன்னெதிர்மா வில்லாவென் கற்பொழித்து
வெட்டவெளிக் கேதள்ளி விட்டானே—கெட்டே
னிறவாவென் கற்பை யிழித்தொருவன் வாக்காற்
பிறவாத சொற்பிறந்த பின். ௧௧

மேனிடெல் லாமொழிந்து வேருகி யின்றெருவன்
காலிடு பட்டுக் கலங்கினேன்—மாலறவே
விட்டானே போதனெனை மெய்யறிவை கண்மாய
மிட்டாளோ கேட்டே னிது. கஉ

நல்லாங்கு செய்தேனை ஞானப்பெண் ணென்றெருத்தி
பொல்லாங்கு சொல்லப் புகுந்தாளே—யெல்லாமுங்
கேள்விக்கே கேட்டாய் கெடுப்பாரைப் போலுன்னை
வாழ்வித்தே னித்தனைநான் மற்று. கங

செய்யானே யின்றிவனுஞ் செப்புவே னெப்படிதான்
பொய்யாவே ருனே புரிந்தக்கா—லையாகோ
ஞான வரிவையுட னட்பெனக்கு மக்களுக்குஞ்
சூனியமே செய்தான் றுணிந்து. கச

போதிக்கி லன்றி யுணராத போதாவுன்
னேதிக்குப் பாத்திரமாய் நின்றேனே—யேதென்று
சொல்லுகே னுன்சடமா நீசுத்தா சுத்தனும்
வெல்லுமா றேதுனை நான்மேல். கரு

எட்டா நிலத்திலே நின்றுலு மென்போதா
விட்டேனே வுன்னையவன் மேலுறினு—மொட்டேனு
னுன்னுயோ நின்றநிலை யுன்னுதொறும் யான்வருவே
னென்னுணை யென்னுவ தென். கசு

ஊரொழித்தா னல்ல வுறவொழித்தா னுைம்
வேரொழித்தா னென்மேல் விருப்பொழித்தான்—பேரொழித்தா
னின்றநிலை தானெழிய நின்றெழித்தா னீதெல்லா
மொன்றுமிலான் கற்பனைதா னே. கஎ

முன்னுக்கி நில்லாதே முத்திகெட மற்றவனைப்
பின்னுக்கி நின்றுற் பிழையேனே—வென்னளவி
னீந்தவொண்ணு நேசமுநீ நீந்திப்போய் நீபெற்ற
வேந்திழையால் வாழாத யான். கஅ

சொல்லாத சொல்லொருவன் சொல்லுதலு மக்கணமே
செல்லா விடத்திலிவன் சென்றுனே—யெல்லாமு
நானென்று னப்பொழுதே நான்கெட்டே னுன்கெட்ட
னுனென்றுன் கெட்டான் றனை. கசூ

ஓட்டமற நிற்றலற வொன்றுமற வென்னையவன்
றேட்டமற வைத்தொருவன் செய்ததற்பின்—கூட்டமற

மெய்ஞ்ஞானப் பெண்ணவனை மேலிட்டாள் கீழிட்டே
னெஞ்ஞான்று காண்பேனி யான். உ0

நீபோன லென்பெறுவாய் நிற்றியே னிந்நித்தச்
சீபோவென் றுன்னருகு சேராள்காண்—பேயேபோற்
செல்லுவளுன் செய்கையறிற் சேராமற் சேரினுனைக்
கொல்லுவள்காண் ஞானக் கொடி. உக

போக்கொழிந்தென் பெற்றதவ டன்னுனீ போதாவென்
வாக்குமன மாக்கிய மக்களையு—நீக்கியெனைத்
தள்ளி யுருவழிந்து தானழிந்தாயோ கேட்டே
னுள்ளதொழிந் துண்டோ வுனக்கு. உஉ

நானிலா வானவமா நற்றுயே யுற்றதிரோ
தானமா மென் னுயிராந் தவ்வையே—போனன்விட்
டேழையே னின்னிலையே நின்றே னிருவினையாந்
தோழிகாள் சொல்லீர் துணிந்து. உ௩

பேசுதொறும் பேசுதொறு மென்றெனக்குப் பித்தாகி
யாசறவென் மேல்வைத்த வாராத—நேசமெலாம்
விட்டோரஞ் செய்தவளால் வேறு யெனைமறந்த
நிட்டூரா வாழ்ந்துபோ நீ. உ௪

எண்ணிறி லாதபெரு வாழ்வுடையே னின்றிவளாற்
கண்ணீறு பட்டுக் கலங்கினேன்—பண்ணுதலைக்
கல்லாத நிட்டூரி கண்கொடியாள் பாரத்திடநா
னெல்லாம்பொய் யாவதென் னின்று. உ௫

கூசாமன் மெய்யுடையார் போலொருகோ லஞ்சமைந்த
வாசானய் வந்த வரும்பாவி—பேசாதென்
மாயைக் குலமாய்க்க மாச்சரியங் கொண்டுவந்த
தாயத்தா னேவறியேன் றுன். உ௬

தாயிருக்க நானிருக்கத் தப்பிடமே தெவ்விடத்து
நீயிருக்க நானகன்று நிற்பேனே—நேயமதற்
கானு வறிவான வான்மாவே நீதிரப்
போனலன் றேபிழைப்பாய் போய். உ௭

இன்றை யிவடன்னுற் குணவரையா யென்போத
னென்றளவுண் டன்றளவு மின்றளவாத்—தொன்றுதொட்டு
வந்தவெனை வேம்பாகத் தான்மதித்தான் மற்றவன்றன்
சத்த மிருந்தவா தான். உ௮

இன்றையிவ ளின்றையிவன் ஞானப்பெண் ணென்றென்னை
யென்றுமலர் தூற்ற வியல்போதா—னன்றே
பொருந்தினவ ளூனேயுன் பொய்வாழ்வால் வாழா
திருந்தவளே காணுன்பெண் ணே. உகூ

பொய்யாவே ஞனேதான் போதையே மெய்யாவாள்
செய்யாச் செயலிவனே செய்யுமவ—னேயோநீ
மெய்யரிவை யுன்வாழ்வை மெய்யென்று கொள்ளாத
பையனுனைப் பின்பாரான் பார். ௩௰

ஆராத போத னறுதிநமக் காமென்று
பேராசை மேன்மேற் பெருக்காதே—தீர
விளையாள்கே ளுன்னையவ னேறவின்னி லேற்றி
விளையாட்டுக் காண்பான்காண் மேல். ௩க

ஆர்பா னிலையுடையை யான்மாவே யுன்னைநான்
சார்போத னென்றவட்குச் சாற்றேனே—சீர்போகச்
செய்தாளாய் வாழுமருட் சேயிழையை நீமுடிவி
லெய்தா வகையாக யான். ௩உ

என்னைமறந் தானுமுன்னை யென்னுயிரா மன்னைவிடா
ளன்னைவிடி லங்கோா னப்பொழுதே—யுன்னை
யிருவரும்விட் டாலன்றோ நீயவள்பா லெய்தி
யொருவடிவ மாவா யுரை. ௩௩

சார்ந்தவிட மெவ்விடத்துந் தன்கருமப் போதனுடன்
சேர்ந்தவர்தா மென்பெறுவர் செப்புங்காற்—கூர்ந்து
செறிவாரை வாழ்வியபான் போலவவன் செய்கை
யறியாளோ கெட்டே னவள். ௩௪

பொய்யாம வாறைந்து புத்திரரைப் பெற்றேனை
மெய்யாக வென்போதன் விட்டானே—யையோவென்
பற்றுன சேய்களைப்பின் றுன்மறந்தும் பார்க்கிலனே
சிறபாவை தன்னுடனே சேர்ந்து. ௩ரு

என்றேறப் பார்த்திட்டா னென்னையவ னவ்வளவி
லன்றே நிலைகுலைந்தே னஞ்சினே—னின்றெனது
பிள்ளைகளை வேருகப் பேசினு னேசமற
வுள்ளபடி யென்றே யுணர்ந்து. ௩சா

(தொடரும்)



சித்தாந்த ஆசிரியர்,

தூத்துக்குடி. ந. சிவகுருநாதபிள்ளை

௨௱௯-ம் பக்கம் பார்க்க.

ஓம்
திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு கக } மெய்கண்டான் யாண்டு-எாய் ஆனித் திங்கள் 1933ஆம் ஜூன்மூ—ஜூலைமூ { பரல் சு

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

காலபாசத் திருக்குறுந்தொகை

சாற்றி னேன்சடை நீண்முடிச் சங்கரன்
சீற்றங் காமன்கண் வைத்தவன் சேவடி
ஆற்ற வுங்களிப் பட்ட மனத்தராய்ப்
போற்றி யென்றுரைப் பார்புடை போகலே.

பதவுரை :—

காமன்கண் சீற்றம் வைத்தவன்—தன்னை மலர் அம்புகளினு லெய்த பொழுது தனது சினத்தை வேளினிடம் (மன்மதனிடம்) வைத்து அவனுடலை எரித்தவனும்,

முடிநீள் சடை சங்கரன் சேவடி—தலையில் நீண்ட சடையை உடையவனும் ஆகிய சிவபெருமானுடைய செவ்விய திருவடிகளில்,

ஆற்றவும் களிப்பட்ட மனத்தராய்—மெய் அன்பினுல் கசிந்து உருகி மிகவும் இன்பமடையும் மனதை உடையராய் வணங்கி,

போற்றி என்றுரைப்பார் புடை—"எங்களைக் காப்பாற்று" என்று கூறும் அடியார்கள்பால்,

போகல்—செல்லற்க,

சாற்றினேன்—(இந்த அறிவுரையை நீங்கள் உய்யும் பொருட்டு) நான் உங்களுக்குச் சொன்னேன்.

அடியாரிடம் நீங்கள் சென்றால் சிவபெருமான் சீற்றத்துக்கு முன் வேள் ஆனதுபோல் நீங்களும் ஆளாவீர்கள் என்பது குறிப்பெச்சம்.

விளக்க உரை :—

சேவடி—செம்மை + அடி—செவ்விதான திருவடிகள். போற்றி—வியங்கோள் வினைமுற்று. இ—வியங்கோள் விகுதி. போகல்—காப்பாற்றுக. அல்—எதிர்மறை விகுதி; போகற்க. ஏ—ஈற்றசை.

இறையேன் சொன்மற வேனமன் றூதுவீர்
பிறையும் பாம்பு முடைப்பெரு மான்றமர்
நறவ நாறிய நன்னறுஞ் சாந்திலும்
நிறைய நீறணி வாரெதிர் செல்லலே.

பதவுரை :—

யமன் தூதவீர்—யமன் தூதர்களே.

நறவம் நாறிய நல்நறும் சாந்திலும் நிறைய நீறு அணிவார்—மணம் கமழ்கின்ற குற்றமற்ற இனிய சந்தனத்தை அணிதலைப் பார்க்கிலும் மிக்க பிரியத்துடன் திருநீற்றைத் தங்கள் உடல் முழுவதும் அணிகின்றவர்களாகிய,

பிறையும் பாம்பும் உடைப்பெருமான் தமர் எதிர்—மூன்றாம் பிறைத் திங்களையும் பாம்பையும் சடையிலே அணிந்திருக்கின்ற தலைவன் ஆகிய சிவபெருமானது அடியார்கள் எதிரே,

செல்லல்—செல்லற்க,

என்சொல் இறை மறவேல்—இவ்வாறு நான் அறிவுரையாகச் சொல்லுகின்ற சொற்களைச் சிறிதும் மறவாது (கடைப்பிடித்து ஒழுகுங்கள்.) மறப்பீர்களானால் சிவபெருமானது சீற்றத்துக்கு உள்ளாவீர்கள் என்பது குறிப்பெச்சம்.

விளக்க உரை :—

தூதவீர்—தூதவர் என்ற சொல் விளிப்பெயராக வரும்பொழுது ஈற்றயல் அகரம் ஈகாரம் ஆயிற்று.

நறும் சாந்திலும் நிறைய நீறணிவார்—நிறைய நீறு அணிவார் முழுநீறு பூசிய முனிவர்; திருநீறு சிவபெருமானது திருவருளைக் குறித்தலால் மலத்தைக் கெடுக்கிற திருவருளையே எப்பொழுதும் நினைந்துகொண்டிருக்கிற அடியார்கள் அதனைத் தங்கள் உடம்பிலே அடையாளமாகப் பூசுகின்றார்கள். 'வெந்த சாம்பல் விரையெனப் பூசியே' என்று திருஞான சம்பந்த அடிகள் திருப் பாசுரத் தேவாரப் பதிகம் 3-வது பாட்டிற் கூறியிருத்தல் காண்க.

எதிர்செல்லல்—எதிர் செல்லற்க, அதாவது அவர்களிருக்குமிடத்தை விட்டு விலகிப் போங்கள். செல்லல் வியங்கோள் வினைமுற்று. அல்—வியங்கோள் விகுதி; செல்லற்க. ஏ—ஈற்றசை.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

பரணிப் பெயர்க்காரணம்

(பண்டித திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்)

தமிழ்ச் செய்யுட்கள் தனிநிலை, தொகைநிலை. தொடர்நிலை என முத்திறப்படும். அவற்றுள் தொடர்நிலை, சொற்றொடர் நிலை, பொருட்டொடர்நிலை என இருவகைப்படும். பொருட் டொடர் நிலைச் செய்யுள் நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகிப் பல்லியல்பானும் விரிந்து நடப்பதும், அவ்வாறின்றிக் குறைபாடுடையதும் என இரண்டாம். அவற்றுள் முன்னதனைப் பெருங்காப்பியமென்பர். பின்னதையும் அதுபோன்ற சொற் றொடர்நிலைச் செய்யுளையும் சில தனிச் செய்யுட்களையும் பிரபந்தம் என வழங்குவர். தமிழ்ப் பிரபந்தங்களைத் தொண்ணூற்றாறாக வகுத் திருக்கின்றனர். அவற்றுள் பரணி என்பதொன்று. அது பொருட் டொடர் நிலையாகும். போரின்கண் ஆயிரம் யானையைவென்ற வீரன்மேல் அது பாடப்படுவது என்ப.

"ஆனையாயிரம் அமரிடைவென்ற
மானவனுக்கு வகுப்பது பரணி"

(இலக்கண விளக்கப் பாட்டியல்)

பரணியின் இலக்கணம்,

"கடவுள் வாழ்த்துக் கடைதிறப் புரைத்தல்
கடும்பாலை கூறல் கொடுங்காளி கோட்டங்
கடிகண முரைத்தல் காளிக் கிதிசொல
லடுபேய்க் கவள்சொல லதனுற் றலைவன்
வன்புக ழுரைத்த லெண்புறத் திணையுற
வீட்ட லடுகளம் வேட்ட லிவைமே
லளவடி முதலா வடியிரண் டாக
வுளமகிழ் பரணி யுரைக்கப் படுமே."

(இலக்கண விளக்கப்பாட்டியல்)

என்பதனால் உணர்க.

இனி, பரணியெனப் பிரபந்தப் பெயர் போந்த காரணம் பலரால் பலவாறு கூறப்படும். அவையெல்லாம், ஈண்டுரைப்பின் விரியும். காலஞ்சென்ற வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ., அவர்கள் தாம் அச்சிட்ட கலிங்கத்துப் பரணி முகவுரையில் பரணி யென்னும் பெயர்க்காரணம் விசாரிப்பான்புக்குப் —பலரு

டைய கொள்கைகளையும் எடுத்துக்காட்டி இறுதியில் தம் கொள்கையைப் பின்வருமாறு கூறுகின்றனர் :—

ஈண்டைக் கூறிய யாவரும் பரணி யென்னும் சொல்லைத் தாம் நாடோறும் வழக்கமாய்ப் பார்க்கும் அகராதிகளிலெடுத்துப் பார்த்து, அதன்கண் அச் சொல்லிற்குக் கூறப்பட்ட ஒவ்வொரு பொருளையும் இவ்வாறெடுத்தமைத்துப் பெரிது மிடர்ப்பட்டுச் சமர்ப்பித்துத் தமக்குட்டாமே மனப்பால் குடித்து மகிழுறுவாராயினர். இதுநிற்க, இனித் தொல்காப்பியம் பொருளதிகாரத்துச் செய்யுளியலிற் கொச்சகவொருபோகின் இலக்கணங் கூறுஞ் சூத்திரவுரையில் தேவபாணி முதலாயின தனக்கினமாகிய வண்ணகத்திற் கோதிய தாவின்றித் தாழிசை பெறுமெனவும் பாணியுளெல்லா மிரண்டடியானே தாழம்பட்ட வோசை விராஅய்வருதலும் முடுகிவருதலு முளவெனவும்,

"உளையாழி யோரேழு மொரு செலுவு ளடங்குதலான்
விளையாட நீர்பெரு மின்னுருவம் பராவுதுமே.

என்றாற் போலப் பாணிச் செய்யுளுட் பயின்று வரும் பல தாழிசை தொடர் பொருளவாகலின் அவற்றைப் பலவடுக்கி வரினும் தாழிசையாமென்க வெனவும், மற்றுப் பாணியுட் புறத்திணை பலவும் விராஅய் வருதலின் அது தேவ பாணியாமென்றதென்னையெனின், அவையெல்லாங் காடு கெழு செல்விக்குப் பானிநாட் கூழும் துணங்கையுங் கொடுத்து வழிபடுவதோர் வழக்குப்பற்றி அதனுட் பாட்டுடைத் தலைவனைப் பெய்து சொல்லப் படுவனவாதலான் அவையெல்லா வாற்றானுந் தேவ பாணியேயா மென்பதெனவுங் கூறுநிற்றலின் ஈண்டு யாம் ஆராயப் புகுந்த பரணி யென்பது பாணி யென்றே யிருத்தல் வேண்டுமெனல் பெறுதும். அன்றியும் முற்காலத்து ஓலைச்சுவடிகளின் வரிவடிவின்கண் ரகார மனைத்துஞ் சிலவுயிர் மெய்ந்நெடிலகாரத்தோடியலும் காலென வெழுதப்பட்டிருத்தலும் ஒருவாறு எமது கூற்றை வலியுறுத்துகின்றமை காண்க."

பிறரையெல்லாம் மனப்பால் குடிப்பவர் என்று கூறி விட்டுச் சாஸ்திரியார் நிறுவியிருக்கும் கொள்கையை ஈண்டாராய்வோம். அவர் எடுத்துக் காட்டிய தொல்காப்பிய வுரையினை நுண்ணிதின் ஆராய்வார்க்குத் "தேவபாணி" என்பது தவிர, மற்றுப் பாணி

யென்றுள்ளன வெல்லாம் பரணியென்றே யிருத்தல் வேண்டும் என்பது புலப்படும். ஓலைச் சுவடிகளின் வரிவடிவில் ரகாரத்திற்கும் நெட்டெழுத்தின் காலுக்கும் வேற்றுமை காணப்படாமையின் பிறர் இங்ஙனம் வழுவினர் எனக் கருதிய சாஸ்திரியார் தாமே அதில் வழுவி யிருக்கின்றமை வியப்பாகும்! 'பாணி நாட் கூழும் துணங்கையுங் கொடுத்து வழிபடுவது" என்பதற்கு யாதும் பொருளில்லாமையை அவர் நோக்கிற்றிலர். பரணிப் பாட்டெல்லாம் தேவபாணியாம் என்பதே நச்சினார்க்கினியர் கருத்து. அதற்குக் காரணமும் அவர் கூறி யுள்ளார். இவ்வாற்றால் பரணி வேறு, பாணிவேறு என்பது தெளிக. 'பரணியாவது காடுகெழு செல்விக்குப் பரணி நாட் கூழும் துணங்கையும் கொடுத்து வழிபடுவதோர் வழக்குப் பற்றியது' என அவர் எழுதியது பரணியென்னும் பிரபந்தப் பெயரின் காரணத்தைப் புலப்படுத்துகின்றது. கொற்றவை யென்பாள் வெற்றித் தெய்வமாகலின் வென்றி வேண்டி அவளை வழிபடுவார் வெற்றிக்குரிய பரணி நாளில் கூழிட்டுத் துணங்கையாடி வழிபடுதல் மரபாகும். வென்றபின் களக்கூழட்டுப் பேய்கட்கு இடுவதுண்டு. பேய் கொற்றவையின் கணங்களாகலின், அக்கூழும் இதன்கட் கூறப்படுதலின், பரணியெனப் பெயர் வந்ததென்க. கலிங்கத்துப் பரணி, களம்பாடிய பகுதியில் 'களப்பரணிக் கூழ்பொங்கி' எனவும், 'பண்டு மிகுமோ பரணிக்கூழ்' எனவும், 'வருகூழ்ப் பரணிக் களங்கண்டு வந்தபேயை முன்னூட்டி, யொருகூழ்ப்பரணி நாமிருக்கு மூர்க்கட் பேய்க்கு வாரீரே' எனவும் வருதல் காண்க. நாட்பெயரால் பலியின்பெயர் வழங்குதல் 'திருவாதிரைக்களி' முதலிய பெயர் வழக்குகளாலும் உணர்க. இவ்வாற்றால் பரணிக் கூழ் பற்றியே பிரபந்தத்திற்குப் பரணியெனப் பெயர் போந்த தென்பது துணிபு.

பதிற்றுப்பத்து விளக்கம்

(பண்டித, திரு. அ. நடராஜ பிள்ளையவர்கள்)

(ஊ-ம் பக்கத் தொடர்ச்சி)

(5) நிரைய வேள்ளம்

விருத்தியுரை

கடலிலே தோன்றுவன - முத்து, பவழம், சங்கு, உப்பு மீன், அக்குப்பாசி முதலியன; மலைகளிலே தோன்றுவன - தினை, தேன், மிளகு, வால்மிளகு, அகில், சந்தனம், குங்குமம், கோட்டம், யானைத்தந்தம் முதலியன. யாறுகளாலே தோன்றுவன - குடிநீர், கரும்பு, சிறுபயறு, செந்நெல், செவ்விளநீர், வாழைப்பழம் முதலியன. காடுகளிலே தோன்றுவன - அரக்கு, கருந்தினை, வரகு, சாமை, தேன், புழுகு, மயிற்பீலி முதலியன. பகைவர் நாடும் - உம்மை எதிரது தழீய எச்சவும்மை. யாணர் நன்னாடும் - உம்மை இறந்தது தழுவியது. செய்தன் - செய்தன என்பதன் கடைக் குறை விகாரம். புரைவயின் புரைவயின் - அடுக்குத் தொடர்; பன்மைப் பொருளது. அறுபு - தொழிற் பெயர். புல் - புறக் காழினையுடைய பனை. "வேந்தே! வெறுக்கை! சேரலாத! மைந்த! நின்பண்பு பல நயந்து, நின்பகைவர் நாடுங் கண்டு வந்திசினே; யாணர் நன்னாடுங் கண்டு மதி மருண்டனென்," எனக் கூட்டுக. "கெடியோனென்ன மைந்த!" எனச் சேர்க்க, "பெயர, இறுத்து, பாப்பிய சிற்றம்," எனச் சேர்க்க, "நிரைய வெள்ளம் அனுப்ப, பிசிர, பொர, கெடுத்து, அழிந்தவைப்பு" என இயைக்க. வைப் பினையும், மூதில்லினையும் புல்லிலைவைப்பினையும் அரம்பினையு முடைய பகைவர் நாடெனச் சேர்க்க. "கலப்பையர் வாழ்த்த, நீ புறந்தருதலின், ஓரீஇய நன்னாடு," எனக் கூட்டுக. "வாழ்க்கை யினையும், கொள்கையினையும், வேட்கையினையுமுடைய புரையோர் சுற்றமோடு, அறியாது, எய்தி, உறையும் நன்னாடு," எனவுஞ் சேர்க்க. இப்பாட்டில், சேரலாதன் படை பகைவர்க்கு நாக லோகக் காவலர் போல்வார் என்ற கருத்துடன் நிரைய வெள்ளம் என்று சிறப்பித்தபடியால், இதற்கு நிரைய வெள்ளம் என்ற பெயர் கொடுக்கப்பட்டது. இதன்கண் சேரலாதனது நாட்டியல் பும், அரசியல்பும், போர்ச்சிறப்பும் விளக்கப்பட்டன.

புதிய நடை

சேரநாடு முத்து பவழம் சங்கு உப்பு மீன் அக்குப்பாசி முதலிய கடல் வளங்களையும், தினை தேன் மிளகு வால்மிளகு அகில் சந்தனம் குங்குமம் கோட்டம் யானைக்கோடு முதலிய மலை வளங்களையும், கரும்பு சிறுபயறு செந்நெல் செவ்விளநீர் நறுநீர் வாழைப்பழம் முதலிய யாற்று வளங்களையும், கருந்தினை, வரகு சாமை தேன் புழுகு அரக்கு மயிற்பீலி முதலிய காட்டு வளங்களை யுங்கொண்டு கவினுற்று விளங்கியது. அங்குள்ள அகன்ற பழமையான நகரங்கள் பல குடமுழா வொலிகளாலும், திரு விழாக்களாலுஞ் சிறப்புற்று, அந் நாட்டை அழகு படுத்தின. அந் நகரங்களில் நடத்தப்பட்ட திருவிழாக்களின் தொடக்கத்தில் எடுத்துக் கட்டப்பட்ட கொடிச்சீலைகளின் நிழலிலே பொருந்திய கோயில்களில் வீரர்கள் பலர் தாம் பெற்ற வெற்றிப்புகழான மிகுந்த மகிழ்ச்சியோடு முரச வாத்தியங்களை முழக்கிக் கொண் டிருந்தனர்.

இங்ஙனம் மேன்மை மிக்க நாட்டிற்கும், நகரங்கட்கும், வீரர் கட்குந் தலைவனாகிய வேந்தனே! பரிசில் பெறவரும் பாவலர்க்கு வேண்டிய பழமையான செல்வமே! பொன்னரி மாலைகள் பூண்டு, அழகிய கிம்புரிகள் சிதறப் பெற்ற, சிறந்த கொம்புகளோடு கூடிய, போர் செய்தலில் வல்ல யானைப் படைகளையுடைய நல்ல சேர லாதனே! நீ, மண்ணுலாகிய இவ்வுலகில் வாழும் மக்கள் பலர்க் கும் இடைவிடாது பொருள்களை வாரி வாரி இறைத்தாய். அத னால், நின் கைகட்குக் கொடுத்தலில் மிகுந்த தேர்ச்சி யுண்டாகி யது. உண்டாகவே, நீ மேன்மை மிக்க பல பொதுநிலையங்கட்கு மிகுந்த பொருள்களைக் கொடுக்கலானாய். அதனால், நீ இவ்வுலகிற் குக் காவலாகியவனும், மக்களாற் சிறந்த விழவிற் போற்றப்படு கின்றவனுமாகிய திருமாலை யொத்த திருப்புகழ் நீங்காத் திறமை மிக்கவனானாய்.

யான், நினது பலவிதமான பண்புகளை நேரிற் பார்த்தறிய வேண்டி, உன்னுடைய வலிமையினை அறிந்து கொள்ளாத கார ணத்தால், உன்னைப் பொருட் படுத்தாது, உனது படைவலி யோடு மாறுபட்ட பகைவரது நாட்டினை முதலிற் போய்ப் பார்த் தேன். அந்நாட்டில், களிற்று நிரைகள் கலந்து செல்லும்படி

யான நினது படை வெள்ளமானது பகைவர்க்கு நாகலோகக் காவலரைப் போன்று சென்றது ; ஆண்டுகள் பல அகன்று செல்லும்வண்ணம் அங்குத் தங்கியது ; எவரும் அருகில் நெருங்கவொண்ணுச் சினத்துடன், போர் முனையில் அனல்போன்ற துன்பத்தைப் பரவச் செய்தது ; முகில்கள் தவழ்ந்து பொருந்தும் கோட்டை மதில்களின் மேலுள்ள கொடி மரங்களை அழித்தது ; பெண்கள் கலந்தாடும் கழற்சிக்காய் ஆட்டங் கெடும்படி படையெடுத்த பகை யரசனது நாட்டை எரியூட்டி யழித்தது. துகிற் கொடிகள் எரியினின்றும் புறப்படும் கரிய நிறமிக்க புகைத் தொகுதிகளுடனே துளி துளியாய்ச் சிதறிச் செல்லும்படி காற்று மிகுந்து வீசியது. காற்றுல் வானளாவிய நெருப்பானது, கண்களையும், நெஞ்சையுங் கவரும்படியான அழகு மிக்க பல விடங்களைப் பாழாக்கியது. அதனல், இடமகன்ற பேரூர்கள் பல பழமையான இயற்கை யழகுகள் கெடப் பெற்றுப் பாழாயின. பனை யோலைகளால் வேயப்பட்ட வீடுகளைக்கொண்ட சிற்றூர்கள் பல குடிபோய்ப் பாழாய்க் கிடந்தன. அவ் வீடுகளின் மேற்கூரைகளில் சிவந்த காந்தட் செடிகள் பரவி முளைத்து, நீர் கிட்டாமையினுலே அடிப்பாகங்கள் வாடப் பெற்று நின்றன. அவ்வீட்டின் பக்கலிலே முளைத்த பசிய சுரைக் கொடிகளும், பீர்க்கங் கொடிகளும் வெண்மையான பூக்கள் மிக்க தைவேளைச் செடிகளோடு ஆக்கத்துடன் கிளைத்து, வீட்டின்மேல் படர்ந்தேறி, வாடப்பெற்ற காந்தட் செடிகளை சிதைத்தன. புலால் நாற்ற மிக்க விற்களால் உழைத்துப் பிழைக்கும் ஆறலைக் கள்வர்கள் அங்கு அலைந்து திரிவாராயினர். அங்குள்ள அரண்களெல்லாம் திசைமாறிக் கெட்டுக் கிடந்தன.

நினது ஆட்சி காரணமாக நோய்கள் விலகி யொழிந்து புது வருவாய்கள் மிகும்படியான உன்னுடைய நல்ல நாட்டை இரண்டாவதாகச் சென்று கண்டனன். அங்கு யாழ்ப்பாணர் செவ்விய நரம்புத் தொடையோடு கூடிய யாழொலியுடனே, "நீ, இவ் வுலக மக்களின் வாழ்வு சிறக்கவேண்டி, நீண்டகாலம் வாழ்ந்திருப்பாயாக!" என்று உன்னை வாழ்த்திப் பாடிக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய வாயானது கள்ளினையுண்டு மொழிகள் சிதறப் பெற்ற குதலை நாக்கினையும், நலிந்த சொற்களையும் கொண்டிருந்தது.

இசைக்கருவிகள் இடப்பட்ட பைகள் அவர்களுடைய தோள்களில் தொங்கிக்கொண்டிருந்தன. மேலும், அங்கு, சான்றோர்கள் பலர் அந்நாட்டரசியலை விரும்பியவர்களாய் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் துன்பத்தினை நெஞ்சாலும் நினைத்தறியாத சிறந்த இல்லற வாழ்க்கையினைக் கைக்கொண்டிருந்தார்கள். நாட்டுக்குத் தலைவராயினார் ஒன்றினைக் கூறியவளவில், அதனைக் கேட்டு, அவ்வழியே அடங்கி நடக்கின்ற போக்கு அவர்களிடத்தில் மிகுந்து காணப்பட்டது. இன்னும், அவர்கள் நகர வாழ்க்கையினை விட்டு நீங்குதற்கு வேண்டிய விருப்பத்தினையும் மேற்கொண்டிருந்தார்கள். தாஞ் செய்த செயல்களை மறுக்காது ஒப்புக்கொண்டொழுகும் ஒழுக்கத்தினையுடைய சுற்றத்தார்கள் பலர் அவர்கட்கு வாய்த்திருந்தனர். அவர்கள் எக்காலத்தும் இராஜத்துரோகத்தினை எண்ணி யறியாதவர்களாய், அமைதியாக இம்மைப் பயன்களை நுகர்ந்துகொண்டிருந்தார்கள். புலவர்கள் புகழும் பண்புகள் பல அந்நாட்டில் மிகுந்து காணப்பட்டன. இவற்றால், எனக்கு மனமயக்க முறும்படியான மட்டிலா வியப்புண்டாகியது. ——— (தொடரும்)

கதைக்குக் கால் உண்டோ?

[திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள்]

(முன் உகசு-ம் பக்கத் தொடர்ச்சி)

நமது நாட்டில் வடமொழியிலும், தென்மொழியிலும் கண்டதுபோல பிறநாடுகளிலும், பிறமொழிகளிலும் பாயிரக் கதைகளைக் காணலாம். ஆசியாவில் சிறந்து விளங்கும் மொழிகள், அரபி, பாரசீகம் ஆகிய இரண்டுமே எனலாம். இவ்விரு மொழிகளிலும் கதைகள் பல வழங்கி வருகின்றன. அக்கதைகள் இக்காலத்தில் உலகமெங்கும் பிரசித்திபெற்றும் விளங்குகின்றன. அக்கதைகளுக்கும் பாயிரக்கதைகள் உண்டு. உதாரணமாக அவைகளில் முக்கியமாய் வியாபித்திருக்கும் கதைகள் அரபிக்கதைகள் என்பன. இவை அரபி நாட்டில் வழங்கும் பல கதைகளைத் தொகுத்து எற்படுத்திய ஒரு சிறந்த தொகுதியாகும். இந்நூலின் பெயரே ஆயிரம் இரவுகளில் சொன்ன அரபிக்கதைகள் என்றால் இவை எத்திறத் தொகுதிகள் என்று செவ்வனே அறியலாம். இதன் பாயிரக்கதை இவ்வளவு கதைகளையும் ஒருங்கே சேர்த்து ஒரு நூலாகக் கட்டுப்படுத்துகின்றது. அது வருமாறு.—

பாரசிகத்தில் பிரக்கியாதிபெற்ற ஒரு அரசனுக்கு இரண்டு புத்திரர்கள் இருந்தார்கள். அரசன் இறந்தபிறகு பெரியவன் பட்டத்திற்கு வந்தான். சிறியவன் வெகு புத்திசாலியாகவும் அன்புபூண்டவனுமாக இருந்தகினால் அவனுக்கும் தன் இராச்சியத்தில் ஒரு பாகம் பிரித்துத் தார்த்தாரி பிரதேசத்துக்கு அவனை அதிபதி ஆக்கினன். சிறியவனும் பல வருஷங்கள் நீதியுடன் அரசாளும் காலத்தில், ஒருநாள் பெரியவன் தன் சிறிய சகோதானைப் பார்க்கவேண்டுமென்னும் ஆசையினால் தன் மந்திரியைத் தூது அனுப்பினன். தூதன் வரவே மிகவும் மகிழ்ச்சியுற்றுத்தம்பி தன் தமயனைப்பார்க்கப் புறப்பட்டான். முதல்நாள் தன் பரிவாரத்துடன் ஒரு கூடாரத்தில் அமர்ந்திருக்க இரவில் தூக்கம் வாராமல் இருக்கையில் தன் மனைவியைக் கண்டுவிட்டு வரலாம் என்று தனியாக அரண்மனைக்குப் புறப்பட்டுச் சென்றான். அங்கே தன் படுக்கையில் தன் பிரிய மனைவி ஒரு நீச வேலையாளுடன் படுத்திருப்பதைக் கண்டு பெருங்கோபம் மூண்டு தன் வாளால் இருவரையும் வெட்டி அகழியில் எறிந்துவிட்டு யாருக்கும் தெரியாமல் தன் கூடாரத்திற்குத் திரும்பிவிட்டான். ஆனல் அதுமுதல் தன் மனைவி செய்த விசுவாசகாதகத்தை மனதில் எண்ணி எண்ணி ஏக்கமுற்று மிகுந்த வியாகூலத்துடனே இருந்து வந்தான். தமயனூர் நகரம் சேர்ந்தும் வியாகூலம் நீங்கவில்லை. தமயனும் தன் தம்பியை வரவேற்றுப் பலவிதமாகவும் உபசரித்தான். தம்பியின் மனோநிலையை அறிந்த தமயன் பல இசையரங்குகள் கூட்டியும் பயனில்லை. அப்படியிருக்கையில் ஒருநாள் தமயன் வேட்டையாடப் புறப்பட்டான். தம்பியோ தனக்கு உடம்பு சௌக்கியமில்லை என்று சாக்குசொல்லி வீட்டில் இருந்துவிட்டான். தமயன் வேட்டைக்குச் சென்றபிறகு தம்பி அரண்மனையில் தனியே இருக்கையில் இரவில் தூக்கம் இன்றி ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது ஒரு கதவு திறக்கப்பட்டு வெளியே தன் தமயன் மனைவி சென்றாள். சென்றவள் ஒரு அடிமையுடன் உல்லாசமாகப் பேசினாள். இதைக் கண்டவுடன் தம்பிக்கு உலகத்தில் பெண்கள் குணமே இழி குணம் என்று கண்டு தன் சோகத்தை அதுமுதல் நிறுத்திக்கொண்டான். வேட்டையிலிருந்து தமயன் நகருக்கு வந்தவுடன் தன் தம்பியின் நடவடிக்கை மாறியிருப்பதைக் கண்டு அவனை அழைத்து மாறுதலின்

இரகசியம் என்னவென வினவினன். தம்பியும் முதலிலிருந்து நடந்தது முழுதும் கூறினன். உடனே தமயனும் தன் மனைவியின் குணத்தைக் கண்டுபிடிக்கும்படி மறுபடியும் வேட்டைக்குச் செல்வதாகத் தெரிவித்து அரண்மனையைவிட்டு வெளியேகி அன்று இரவில் இரகசியமாக அரண்மனைக்கு வரவே அன்றும் இராணி தன் அடிமையுடன் கூடினதைக் கண்டு உடனே கோபங்கொண்டு அரசன் இருவரையும் வெட்டிவிட்டான். அது முதல் பெண்கள் மீது அரசன் கொண்ட கோபத்திற்கு அளவில்லை. சிலநாளில் தம்பியைத் தார்த்தாரி தேசத்திற்கு அனுப்பிவிட்டுத் தமயன் தினந்தோறும் ஒரு பெண்ணை மணம் செய்வதும் மறுநாள் காலையில் அவளை வெட்டிவிடுவதுமாக இருந்தான். இவ்விதமாக பல பெண்கள் உயிர் துறந்தார்கள். அவ்வரசன் மந்திரிக்கு ஒரு அழகிய மகள் உண்டு அவள் வெகு புத்திசாலி. பெண் மக்கள் அநியாயமாகக் கொல்லப்படுவதைக்கண்டு மிகவும் மனம் நொந்து தன் தகப்பனை நோக்கித் தான் அரசனை மணக்கவேண்டும் என்று கேட்டாள். மந்திரி உயிர் விடுவதற்காக ஏன் மணக்கவேண்டும் என்று தடுத்தான். ஆனால் ஒரே பிடிவாதமாகத் தான் மணந்தே தீரவேண்டும் என்று சொல்லவே ஒப்புக்கொண்டு மணம் நடந்தது. அன்று இரவு தன் தங்கையைத் தனக்குத் துணையாக வைத்துக்கொண்டு விடியலுக்கு முன் தன்னை எழுப்பி ஒரு கதை சொல்லும்படி கேட்க வேண்டுமென்று சொல்லியிருந்தாள். அவ்வாறே மறுநாள் விடியல் முன் தங்கை மணப்பெண்ணை நோக்கி அன்று இறப்பதன் முன் ஒரு கதை சொல்லும்படி கேட்டாள். அரசியும் அரசன் கேட்கும்படி ஒரு அதி அற்புதக் கதை சொன்னாள். கதை பாதியில் இருக்கும் பொழுது விடிந்து விட்டது. அரசன் கதையைப் பூர்த்தியாய்க் கேட்கவேண்டும் என்று எண்ணி அன்று அவளை வெட்டாமல் நிறுத்திவிட்டான். மறுநாள் அதேமாதிரி கதையைத் தொடங்கி மற்றொரு ருசிகரமான பாகத்தில் நிறுத்திவிட்டாள். அன்றும் தண்டனை நின்றுவிட்டது. இவ்வாறு ஆயிரம் நாள்கள் வெகு ருசிகரமான கதைகள் சொல்லி ஆயிரம் நாள்கள் கழிக்கவும் அரசன் மிகுந்த மகிழ்ச்சியுற்று அன்றுமுதல மணப் பெண்களைக் கொல்வதை விட்டுவிட்டான். இவ்விதம் சொன்ன கதைகள் தான் அரபிக் கதைகள் ஆகும்.

இந்தப் பாயிரக் கதையினுல் ஒரு புத்திசாலியான பெண் மரண தண்டனையையும் தவிர்க்க முடியும் என்றும் பெண்களின் மீது அரசன்கொண்ட விபரீதமானதும் கொடூரமானதுமான நிந்தனையை நீக்கமுடியும் என்றும் அறியக்கூடும். ஒருவனுடைய சோகத்தை மாற்றுவது மாத்திரமே யன்றி அபிப்பிராயங்கள் முழுமையையும் மாற்றிப் புதிய குணத்தையும் ஒழுக்கத்தையும் கதைகள் கொடுக்கும் தன்மை வாய்ந்தன என்றும் அறியக்கூடும்.

திருத்தொண்டர் புராணத்தில் ஒரு புராணத்துள் பல புராணங்கள் உதித்ததுபோல அரபிக் கதைகளுக்குள் ஒரு கதைக்குள் பல கிளைக்கதைகளும் அவைகளுக்குள் வேறு கிளைக்கதைகளும் பிறக்கின்றன. அவைகளின் போக்கும் இதே குணங்களைக் கொண்டிருக்கின்றன.

ஒரு பூதம் தன் மகனைக் கொன்றதற்காக ஒரு வியாபாரியைத் தண்டிக்க எண்ணுகையில் அவ்வழிவந்த மூன்று கிழவர்கள் தங்கள் நாய்களைக் குறித்துச் சொன்ன கதைகளைக் கேட்டு அப்பூதம் அவ்வியாபாரியை விட்டுவிட்டது. மூன்று பெண்கள் மூன்று பக்கிரிகளைத் தண்டிக்க எண்ணுகையில் அவர்கள் தங்கள் தங்கள் கதைகளைச் சொல்லி மன்னிப்புப் பெறுகின்றனர். கலிபா அரசன் கொலையுண்ட ஒரு பெண்ணின் தேகத்தைக் கண்டு அக்கொலை செய்த புருஷனைத் தணடிக்க எண்ணுகையில் சொல்லிய கதையைகேட்டு மன்னித்தது. இவை முதலான பல உபகதைகள் அரபிக் கதைகளில் உண்டு. இவைகளை எல்லாம் கவனித்தால் கதைகளினுல் மனது எவ்வளவு திருப்தி அடைகிறது; எவ்வாறு அத் திருப்தியால் கொலைத் தண்டனையும் நீங்குகிறது; அரசர்களே யன்றி பூதங்களும் கதைகளினுல் ஆறுதல் அடைகிருர்கள் என்ற செய்திகளை அறியலாம்.

மேலும் பாரசிக பாஷையில் உள்ள ஒரு சிறந்த, கதைத்திரட்டு நான்கு பரதேசிகள் கதை அல்லது 'பாக்ஹோ பஹார், என்பது. இக்கதைத்திரட்டும் அநேக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. டெல்லிக்குச் சமீபத்தில் இருந்த ஒரு பெரியவர் நோய்வாய்ப்பட்டு இருக்கையில் இக்கதைகளைக் கேட்டுக் கதைகள் முடிவடைந்தவுடன் முற்றிலும் சுகம் பெற்றதாக அதன் முகவுரையில் சொல்லப்பட்டிருக்கிறது. இத்தகைய

பெருமை வாய்ந்த இக்கதைகளுக்கு ஒரு சிறந்த முகவுரைக் கதை உண்டு. அது வருமாறு.—

ரூம் நகரத்தில் அஜாத்பக்ஸ் என்ற ஒரு நீதி மன்னன் இருந்தான். அவன் செங்கோல் செலுத்திவந்த நாளில் ஜனங்கள் அச்சமின்றி சுகமாக வாழ்ந்து வந்தார்கள். ஆனால் அரசனுக்கு ஒரு பெரும் குறையுண்டு. தன் வம்சத்தை நிலை நிறுத்த ஒரு ஆண் குழந்தை இல்லை என்பதுதான் அது. இப்படி இருக்கையில் அரசனுக்கு நாற்பதுவயது ஆயிற்று. ஒருநாள் காலைத்துதி செய்த பிறகு கண்ணாடியில் தன் முகத்தைப் பார்க்கையில் தன் தாடியில் ஒரு நரைத்தமயிர் இருக்கக் கண்டான். அதைக் கண்டதும் மிகுந்த துக்கம்கொண்டு, "வயது முதிர்ந்ததே, குழந்தை இல்லையே, இனி அரசாண்டு என்ன பயன்? ஊராருக்கா பூமியை விட்டுப் போவது?" என்று எண்ணி மந்திரி கையில் அரசாட்சியை ஒப்பித்துவிட்டுப் பூந்தோட்டத்தில் ஓர் மூலையில் உட்கார்ந்து கண்ணீர் உகுத்துக் கொண்டு ஈசனைத் துதித்த வண்ணம் காலம் தள்ளினான். அரசன் நாட்டை கவனிப்பதில்லை என்று கண்ட அந் அயலார் நாட்டின்மீது படையெடுக்கவும் கள்ளர் களவு செய்யவும் தலைப்பட்டனர். இதைக் கண்டு மந்திரிமார்கள் அரசனுக்குத் தெரிவிக்க, அன்றுமுதல் அரசன் பகலில் தன் வேலையைக் கவனித்து வந்தான். ஆனால் இரவில் துக்கம் நிறைந்தவனாய் ஜெபம் செய்து கொண்டேயிருப்பான். ஒருநாள் இரவில் தூக்கமின்றி ஊரின் வெளியே செல்கையில் ஒரு மயானத்தில் வெளிச்சம் தோன்றிற்று. அதைக்கண்டு அதன் வழியே செல்கையில் அங்கே நான்கு சந்நியாசிகள் தீ எரிய அதைச் சுற்றி உட்கார்ந்திருந்தார்கள். சிறிதுநேரத்திற்குள் அவர்கள் ஒவ்வொருவரும் தம் சரிதங்களைச் சொல்லிவந்தார்கள். அன்று முதல் அரசன் ஒவ்வொரு இரவும் சென்று அவர்கள் சரிதங்கள் முழுதும் கேட்கவே சரிதம் பூர்த்தியானதும் தன் மனைவிக்கு ஒரு அழகிய ஆண் குழந்தை பிறந்தது எனச் செய்தி கிடைத்தது. அரசனுடைய மனோபீஷ்டமும் நிறைவேறிற்று. இவ்விதம் நால்வர் சொன்ன கதைகள்தான் அந் நூலில் உள்ளன.

இம் முகவுரைக் கதையினால் கதைகள் ஏற்படுவதற்கு காரணமும், அக் கதைகளைக் கேட்டதனால் அரசன் விசாரம் தீர்ந்ததும், குழந்தையில்லா அரசனுக்குக் குழந்தை பிறந்ததும், முதலான

பலன்களை நாம் அறிகிறோம். இதனாலே கதைகளின் விசேஷ குணங்களைப்பற்றி நம் இந்துக்கள் மாத்திரமேயன்றி முகமதியர்களும் பல அற்புதக் கொள்கைகளைக் கொண்டிருக்கிறார்கள் எனத் தெரியவருகிறது.

ஆசியாவில் மாத்திரமோ, ஐரோப்பாவிலும் பற்பல மொழிகளிலும் கதைத் திரட்டுகளும் அவற்றையொட்டிப் பாயிரக்கதைகளும் உண்டு. இத்தாலி தேசத்தில் 14-ம் நூற்றாண்டில் இருந்த புகழ்பெற்ற கவிஞன் பொக்காக்கியோ என்பவர் எழுதிய டெக்கமரான் (Decameran) என்ற கதைத் திரட்டுகள் அக் காலத்திற்குத் தகுந்த பாயிரத்தைக்கொண்டிருக்கிறது. இக்கவிஞருடைய சொல், பொருள், நடை மிகச் சிறந்தன. பல கதைகள் சிற்றின்பப் பொருள்கொண்டனவானாலும் ஏனைய ஐரோப்பியப் பெரும் புலவர்கள் எடுத்தாளும் வண்ணம் அழகிய பொருள்களைக் கொண்டனவாகும். அதன் பாயிரக் கதை வருமாறு:—

கி. பி. 1348-ல் பிளாரன்ஸ் நகரத்தில் ஒரு கொடிய விஷசுரம் ஏற்பட்டது. ஊரார் எல்லாரும் அந்தத் தொத்து வியாதியைக் கண்டு பயந்து ஊரைவிட்டு ஓடினார்கள். அப்போது 3 சீமான்களும் 7 சீமாட்டிகளும் நகரைவிட்டு வெளியில்போய் அருகில் ஓர் ஊரில் ஓர் உத்தியான வனத்தில் சிறந்த ஒரு பவனத்தில் தங்கி இருந்தார்கள். அப்போது பொழுது போக்குவதற்காகவும், விஷசுர பாதையையும் அதினால் ஜனங்கள் அடைந்த துக்கத்தையும் மறக்கும்பொருட்டும், காலத்தை இன்பத்தில் கழிப்பதற்காகவும், எண்ணி ஒவ்வொருவரும் ஒவ்வொருநாள் அழகிய கதைகளைச் சொல்லவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார்கள். அவ்விதமே 10 பேர்களும் 10 நாள்கள் சொன்ன கதைகள்தான் இந்நூலில் கண்டது. இதில் 100 கதைகள் உண்டு. எல்லாம் பண்டை நாட்களைப்பற்றியும் கவிஞரின் புலமையைத்தெரிப்பனவுமான கதைகள் ஆகும். இடக்கரானவைகளும் அநேகம் உண்டு. ஆனால் கவியின் சாதுர்யத்தினால் அவ் விடக்கர்கள் தெரிவதில்லை. துக்கம் பிறர் உறுவதை மறப்பதும், சிற்றின்பப் பெறுவதும், மனோல்லாசம் அடைவதும், இக் கதைகளின் நோக்கமாகும்.

ஆனால், இங்கிலாந்து நாட்டிலே சாசர் (Chaucer) என்ற ஒரு கவி 14-ம் நூற்றாண்டிலே இருந்தார். கேன்டர்பரி கதைகள் (Canterbury Tales) என்ற கதைத் திரட்டு அவர் இயற்றிய

தாகும். அக் கதைகளின் கருத்தோ முற்கூறியவற்றைப்போலன்றி வேறுபட்டதாகும். கான்டர்பரி என்ற ஊர் இலண்டனுக்கு அருகிலுள்ள ஒரு திவ்விய க்ஷேத்திரம் அதில் ஒரு பண்டைக் காலத்துக்கோயில் உள்ளது அங்கே முன் காலத்தில் பெரிய பக்தர்கள் இருந்திருக்கிறார்கள். ஆகவே, புண்ணிய புருஷர்கள் வசித்த ஸ்தலமானதாகையால் அதற்கு அடியார்கள் யாத்திரை செய்வதுண்டு. சாசர் காலத்தில் இவ்வித யாத்திரைகள் பல நடைபெற்றன. இந்தக் கதைத் திரட்டில் அவ்விதமான ஒரு யாத்திரையைக் கவி வருணிக்கிறார். அந்த ஸ்தலத்தை தரிசனம் செய்வதற்காக பல அடியார்கள் செல்லுகிறார்கள். அக் கூட்டத்தில் வியாபாரிகள், போர்வீரர்கள், அர்ச்சகர்கள், பூஜாரிகள், பெண்கள் முதலான பல தொழிலாளர்களும் செல்கிறார்கள். அவர்கள் எல்லாரும் போகையிலே பொழுது போக்குவதற்காக ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதையைச் சொல்லுகிறார்கள். அக் கதைகளை எல்லாம் திரட்டிச் சேர்த்தது தான் இந்நூல். இந்நூலில் மக்களுடைய குணாதிசயங்கள் மிகவும் நன்றாக குறிக்கப்பெற்றிருக்கின்றன. அவரவர்கள் சொல்லும் கதை, சொல்நடை இவைகளிலிருந்தே அவரவர்களுடைய குணங்களைக் கண்டு கொள்ளமுடியும். இக் கவி உலகத்தை நன்றாக அறிந்தவர் என்று இக்கதைகளைப் படித்தமாத்திரத்தில் அறியலாம். இக் கதைத் திரட்டின் பயன் புண்ணிய யாத்திரைச் சிறப்பாகும்.

இனி, ஆங்கிலத்தில் சமீபகாலத்திலும் பல கதைத் திரட்டுகளைக் கவிகள் வெளியிட்டதைக் காணலாம். டெனிசன் என்ற கவி ஆர்தர் (Arthur) கதைகளாகிய வட்டமேஜைக் கதைகளைப் பாடியிருக்கின்றார். ஆங்கில நாட்டில் வெகு காலமாக வழங்கி வந்த ஆர்தர் அரசனின் வீரக்கதைகளைத் திரட்டி ஒழுங்குபடுத்தி எழுதியிருக்கின்றார். இவைகள் பெரும்பாலும் காதல் அல்லது அகப்பொருள் வாய்ந்ததாகும். கவியின்பம் அதிகம் உண்டு. லாங்பெல்லோ. ஆர்னல்டு, மாரிஸ் முதலான கவிகள் ஐரோப்பிய வடநாட்டுக் கதைகளைத் திரட்டி வெளியிட்டிருக்கிறார்கள். இவை பெரும்பாலும் போர்ச்செயல்களைக் கொண்டிருக்கும் பண்டைத் தெய்வங்களின் கூற்றுகள் பொருந்தியவையும் ஆம். அவைகளிலே மாரிஸ் எழுதின 'வையகத் துறக்கம்' (Earthly-

Paradise) என்ற நூல் பல கதைகளைத் திரட்டியதாகும். அதில் ஒரு பாயிரக்கதை உண்டு இது முக்கியமாய்க் கவி இன்பத்தையே தரக்கூடியது.

எனவே, ஏனைய நாடுகளிலும் கதைத் திரட்டுகளுக்கு பாயிரங்கள் ஏற்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். மேலே கூறிய பற்பல முகவுரைக் கதைகளையும் ஆராய்ந்து பார்த்தால் அவைகள் எல்லாம் ஒரே அடிப்படையான கருத்தைக் கொண்டிருப்பது அறியலாம். சம்பந்தம் இல்லாத பல கதைகளை ஒன்று சேர்ப்பது ஒரு கருத்து. அக் கதைகளை ஒரே போக்கில் எழுத உத்தேசிப்பது மற்றொன்று. அக் கதைகளை ஒருவித முடிவுக்குக் கொண்டு செலுத்துவது மூன்றுவது நோக்கம். அக் கதைகளைக் கேட்பதினுல் ஒருவித பயன் பெறுவது நான்காவது கருத்து ஆகும். நான்காவதாகச் சொன்ன கருத்துதான் பல நாடுகளில் பலகாலங்களில் பலவிதமாக மாறிவரும். அது கால, தேச, வர்த்தமானங்களை ஒத்து இருக்கும். நமது நாட்டில் அறிவைத் தந்து, அன்பு ஊட்டி, மோட்சத்தைக் கொடுக்கும். அரபியர்கள் நாட்டில் வியாதியைத் தீர்த்து, மக்கட்பேறு அளித்து, மரண தண்டனையை நீக்கும்வண்ணம் ஒருவனுடைய கோபத்தைத் தணிக்கும். ஐரோப்பிய நாட்டில் பொழுது போக்கி, உல்லாசம் தந்து, கவி இன்பம் ஊட்டும்; சில சமயங்களில் யாத்திரைக்கு அனுகூலமாகவும் இருக்கும். ஆகவே இக் கதைத் திரட்டுகளைக் கொண்டு நாட்டு வழக்கங்களையும் மனிதர் மனப்பான்மைகளையும் செவ்வனே அறிந்துகொள்ளலாம் அல்லவா?

புத்தேள்

[திரு. M. S. பூரணலிங்கம்பிள்ளையவர்கள் B.A., L.T.]

இச்சொல்லின் மூலம் விளங்கவில்லை. புத்து, புதிது, புது— இவை புதுமையென்னும் பொருள்கொண்டனவென்பது தெளிவு. புத்துருக்குநெய்—புதிதாக உருக்கப்பட்ட நெய்; இத்தொடர்மொழி தேங்காய்ப்பாலினின் றெடுபடும் நெய்க்குப் பெயராக மலையாளநாட்டில் வழங்கிவருகின்றது. ஆவினெய் அனந்தசயன வாசர் அவாவுதலில்லை. புத்தேள் என்ற சொல்லும் புதியது வென்றபொருள் தாங்கிவருவதாகக் காணப்படும். புத்து—புது

இவ்வுலகிற்கு வேருன புதியவுலகம் புத்தேளுலகமெனலாம். என்று மொளிசிறந் திலங்குமுலகம் வானுலகமென்பர். இதனைவிரும்புவர் ஈண்டுள மாந்தர். இருள்சேர்ந்த வின்னவுலகினை விரும்பாரெவரும். வானுலகம், வியனுலகம், வானகம்—இதனைப் புத்தேணுடு என்பர் புலவர். அவ்வுலகிலுள்ளார் புத்தேளிரெனப்படுகின்றனர். விசும் புளாரென்பது தேவர். அவர் கோமான் தேவேந்திரன். மேலுல கம் கீழுலகம் உண்டென்பது தொன்றுதொட்டு வருங் கொள்கை யாதலின் அதனை நம்நாயனுரும் தங்குறளிற் பொன்போற் பொதிந் துளர். 'யானெனதென் னுஞ் செருக்கறுப்பான் வானோர்க் குயர்ந்த வுலகம்புகு' மென்றனர் பொய்யாமொழியார். மேலுலகமில்லை யென்பாருமிருந்தன ரென்பது தோன்ற 'மே லுலக மில் லெனினு மீதலேநன்று' என்று வற்புறுத்தியுளர். மெய்புணர்வார்க்கு வையகத்தினும் வானகம் நணிய துடைத்தென்றனர் பொன்றுப் புகழுடையார். இதுநிற்க.

இயல்வது கரவாமல் அற்ருரழிபசி தீர்த்தும் உற்றிடத் துத வியும் ஒப்புரவாற்றலைச் சிறப்பித்துக் கூறுமிடத்துச் செந்நாப் போதார்,

'புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
ஒப்புரவி னல்ல பிற'

என்றனர். உலகெங்கும் பெரும்புகழ் பரப்புவோர் வானுலகில் ஞானிகளினும் பெருஞ்சிறப்புப் பெறுவரென்பது,

'நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்ருது புத்தே ளுலகு'

எனுங் குறளின் கருத்தாகும். கள்ளங் கவடுடைய கூடா வொழுக்கத்தைக் கண்டிக்கு முறைமையில் வருங் குறளிஃதாகும்;

'கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை, கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு'

கள்ளர் உயிரிழப்பர். கள்ளார் விண்ணுல கெய்துவர் என் பது உறுதிமொழி. மாந்தர் மானமிழந்து நிலையினின் றிழிந்து பீடுருது இகழ்வார்பின் செலுஞ் சீரிலா நடை வெறுக்கத் தக்கது. அந்நடையாற் புகழுமில்லை, வானக வாழ்வுமில்லை.

'புகழின்ருல் புத்தேணுட் டுய்யாதால் என்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை.'

எங்ஙனம் ரோனது தானின்ற நிலத்தியல்பின தாகுமோ,

'நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்
மனத்தியல்ப தாகு மறிவு'

அங்ஙனமே ஒன்றுபட்ட காதலருந் தாங் கூடின மகளி ரியல்பின ராதலால் அதுபற்றி அவரொடு பிணக்கம் நிகழின் அப் பிணக்குப் பின்னர் பேரின்ப மளிக்கும். அதனினுஞ் சிறந்தது ஊடலு வகை. தலைவி கூற்று இதுவாகும்.

'புலத்தலிற் புத்தேணா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து'

அறனொடு மன்பொடும் பொருந்திய வாழ்க்கைத் துணைவி தாங் கொண்ட கணவனைத் தமக்குத் தலைவனாகப்பெற்று, அவன் ஆணை வழி நிற்பளேல் அன்னாள் தேவர்களின் நன்மதிப் பெய்துவள்.

'பெற்றாற்பெறின் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு'

பெண்ணின்றி உலகியக்க முறாதாதலின் பெண்ணே பெருமை யுடையளென்றும், நாமகள், செய்யாள், பூமகள் எனும் பெயர்க ளால் உயிர்க்குறுதியாம் கல்வி, செம்மை, பூமி இவற்றைப் பாவித் திருப்பதுமன்றி மகடூஉ முன்னிலையாகப் புலவர்கள் பாடுவதால் ஆண் மக்களினும் பெண் மக்கள் சிறப்புடைய ரென்றும், மேற் குறித்த குறளுக்கு

'தாய் தந்தையர் பெண்டிர்பெறின் புத்தே ளுலகில் பெருஞ் சிறப்புப் பெறுவர்' என்று பொருள் கூறுவாரு முளர்.

பீடுபெற விழைவோர் இவ்வுலக வாழ்வில் முயலுதற் குரி யன; (1) ஒப்புரவு, தக்குழியீதல், உற்றுழி உதவல். (2) இசை நட்டல்—ஈத லிசைபட வாழ்தல், தோன்றிற் புகழொடு தோன்றுக, பொன்றுப் புகழொடு வாழ்க. (3) கள் ளாமை—மனத்தாலுஞ் செய்கையாலும் பிறர்பொருள் வெளவன்மின். (4) மானமுடைமை—மானங் கெடவரின் வாழாமை முன்னினிதே. (5) கற்புடைமை—கற்பு, கல்வி, ஒரு பொருட் கிளவிகள். கல்—பகுதி, 'கற்பக் கழிமடமஃகும்' 'காணுக் குருடாச் செய்வது மம்பர், இருள் தீர்ந்த கண்ணாச் செய்வது கற்பு' (நான்மணிக்கடிகை). மனைக்குரியவளாகிய மனைவி கல்வி வாய்ந்த கொழுநனின் தகைசான்ற சொற்காத்துச்

சோர்விலளா யிருத்தல்பற்றி மனைக்காசி யென்று பாராட்டப் படு கின்றாள். 'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை' என்றனர் ஔவை மூதாட்டியாரும். கணவ னாணைவழிநிற்றலே கற்பாம். (6) புலவி—சிறிது பிணக்குறுதல். இல்லற நடாத்துங் காத லனுங் காதலியும் ஊடுதலால் உணவிற் குப்பமைவதை யொப்பர். ஊடியபின் சிற்றின்பஞ் சிறக்குங் கூடி முயங்கப்பெறின். 'ஊடுதல் காமத்திற் கின்பம்,' 'உப்பமைந்தற்றாற் புலவி' என்றனர் வாயுறை வாழ்த்துடையார். இவ் அறு குணமுஞ் செய்கையும் பொருந்திய ஆடவரும் பெண்டிரும் வீடுலகும் விழையும் விழுமியோ ராவர்.

செவ்வாயில் கால்வாய்கள்

(வான நூலாராய்ச்சி)

[திரு. T. V. நீலகண்டம்பிள்ளை யவர்கள் B.A., B.L.]

நான்கு கோடியே எண்பது லக்ஷம் மைல் என்றால் நம் மனதிற்கே எட்டாததோர் தொலை! ஆயின் இதுவே நம் பூவுலகிற்கும் நமக்கணித்தாயமரும் செவ்வாய் * என்ற வானுல கிற்கும் இடையே இருக்கும் சேய்மையின் அளவு.

ஒவ்வோ ராண்டும் நவம்பர் மாதம் 17-ம் நாளன்றுதான் இச் செவ்வா யுலகு நம் பூவுலகுக்கு † மிகவும் அணித்தாய்க் காணப்படுவதாய் நூல்கள் கூறும்.

அன்றும் இவ்வளவு தொலையாம்! கைந்நொடிப் பொழுதினை ஒரு மைலாய்க் ‡ கணக்கிடின் நான்கு கோடியே எண்பது லக்ஷ மாகிய இப் பெரிய தொகையை எண்ணித் தொலைக்க ஒன்றரை யாண்டும் போதாவாம். பின்னும் எண்ணாயிர மைல் குறுக்கள வுடைய நம் பூவுலகு போன்ற அண்டங்கள் ஆறாயிரத்தினை அணி யாய் அடுக்கினும் நம்மால் எட்டக்கூடியதன்று இச் செவ்வா யுலகு!

முக்கால் மைலுக்கப்பால் இருக்கும் தேங்காய் ஒன்று எத் துணைப் பருமனாய் நம் கண்ணுக்குத் தோன்றுமோ அத்துணை யாகவும் தோற்றாது இச் செவ்வாயுல கெனின், அவ் வுலகின் அமைப்பையும் அவணுறை சிறப்பையும் செவ்வனே யறிதல் கூடுமோ என்று நாம் அயிர்த்தலும் இயற்கையே.

---

* Mars. † Earth. ‡ mile.

* தொலை நோக்காடிகள் இருக்கின்றனவே ! எனினும் என்ன ? சேய்மைக் கிலக்காம் குன்றிய தோற்றத்தைச் சற்றே தெளியச் செய்புமே அல்லால் அச் சேய்மை தன்னை முற்றிலும் தவிர்க்க வல்லவையாமோ இப்பல்வகைக் கருவியும் ?

வேண்டிய வசதிகள் அமைந்த காலையும் 8-அங்குல பார்வை வாயிலை † யுடைய பல்வகைத் திறனுறு தொலை நோக்காடியால் பார்க்குங்கால் இச் செவ்வாயுலகின் மேற் புறப் பரப்பில் ஒடுக்கமும் நீட்டமும் ஒருங்கே வாய்ந்ததும் சிலந்தி வலையை ஒப்பவுமாகிய நேரிய கோடுகள் மிகப் பல கண்டன. இத் தோற்றத்தைக் கண்டே லௌவல் ‡ என்ற வான நூற்புலவரும் செவ்வாயுலகில் தோன்றிடும் கோடுகள் அனைத்தும் நீர் வளம் பரப்பும் வாய்க்கால் எனவும் அவை நேரிய கோடுகளாகவே தோன்றலின், அவை இயற்கையா யமைந்தனவல்ல என்றும் செயற்கையாலே ஆயின என்றும், அஃதுண்மையே யாமெனின் செவ்வாயுலகிலும் நம்மைப் போன்ற ஆறறிவுயிர்கள் இருப்பர் என்பதற்கு இதுவே சான்றெனக் கூறினர்.

வாய்க்கால் இருப்பின் பயிர்த்தொழில் உண் டென்றும் பயிர்த் தொழில் உண்டெனின் அத் தொழிலைச் செய்யும் திறனுடை மக்களும் இருப்பர் என்றே துணிந்தனர் இவ் லௌவல்ப் பெரியார்.

ஆயின், இச் செவ்வாயுலகின் மேற்புறத்துள்ள இழுக்கும் ஆற்றலின் § குன்றிய தன்மையும், பரிதியின் சேய்மையும், ஆகிய அயிர்த்தற்கிடனிலா இவ் வோரிரு சான்றினை யுணரின் இச் செவ்வாயண்டம் மேற்பரப்பு யாண்டும் நீருறை குளிர்ச்சி $ யின் மிக்கதாம் குளிர்ச்சியே உளதாக, ஆங்கு கடலும் ஏரியும் நீருடையவே யெனின் அவை உறைந்த நீரால் நிறைந்தனவன்றோ ? அத்தகையுலகும் வாழ்வதற் கேற்றதோ ? முற்றிலும் கொடிய மூடுபனியால் மூடியிருக்கும் இச் செவ்வாயுலகு ஓடுநீர் தன்னை உடையதுமாமோ ?

அவ்வணதாயின் தொலை நோக்காடியில் தோன்றிய " கால்வாய்கள் " உண்மையில் எவ்வித இயல்புதான் கொண்டன ?

---

* Telescopes. † Aperture. ‡ Lowell. § Force of gravitation.

$ Freezing point of water.

கால்வாய் போலத் தோன்றிய கோடுகள் * காட்சிமயக்கமே யல்லால் உண்மையில் கால்வாயல்ல என்பது போதரும்.

செவ்வாயுலகின் மிகுந்த சேய்மையே இக் காட்சிமயக்கம் தோன்றற்குக் காரணம். மிகுந்த தொலையில் அமைந்த வளைவுகள் நேர்மையாகத் தோன்றுவதியல்பு. மேலும் நாம்நம் கட்புல னுதவியால் காணுறுமவற்றில் மிகவும் சிறியது நேர் கோடாகும். ஆகவே நாம் காணுறும் நனிசிறு பொருளும் நேர் கோடாகவே தோன்றுவ தியல்பு !

இருப்புப்பாதைக் கருகாய் ஓடும் தந்திக்கம்பியைத் தாங்கும் தூணினை நாம் முக்கால் மைல் வரைக் காணுறல் கூடும். ஆயின் அதற்குமேல் அதை நாம் காணுறல் அரிது.

மேலும், வட்டவடிவுடைக் கரியதோர் புள்ளியை அதன் குறுக்களவிற்கு ஆறுயிர மடங்காகிய சேய்மையிலும் காணுதல் கூடும். ஆயினும் அதின் உண்மை வலியையும், இயற்கையையும் அமைப்பினையும், உய்த்தறிதல் வேண்டின் அதன் குறுக்களவிற்கு ஆயிரத்து எழுநூறு மடங்கின் மிகாத சேய்மையில் நாம் இருக்கவேண்டுவது இன்றியமையாதது. இவ்வீர் † எல்லைக் குள்ளும் இருப்பவர் காணுறும் தோற்றம் வேறுபாடுடையதே. செவ்வாய்த் தோற்றமும் இவ்வகையானதே.

26 அங்குல பார்வைவாயிலையுடைய தொலை நோக்காடி யால் ஆராய்ந்துபார்த்த ஷியபரேல்லி ‡ என்ற வான நூற் புலவர்க்கும் பன்னீரங்குல வாயிற் கருவியால் பார்வையிட்ட லேளவலைப்போலவே “கால்வாய்” “ஏரி” கள் ஏராளமாய்த் தோன்றின. ஆயின் 36 அங்குலம் முதல் 40 அங்குலம் வரை யான வாயிலுடைய தொலை நோக்காடியைக் கையாடிய பேர்நார்டு, § அன்றேணியடி $ என்ற புலவரின் பார்வை முன்னர் இக் “கால்வாய்கள்” யாவும் பறந்தே போய்விட அவை யிருந்த விடத்து எண்ணிறந்ததும் பல் வகைத்துமான வளைவுறு வோடும் பிறவும் தோன்றின. கடைசியாக வில்சன் ‖ மலைமுனை மீது அமைத்துத்திகழும் விண் மீன்சாலையில் ** அமைவுற விளங்

---

* Optical illusion. †Limits. ‡Schiaparelli. §Bernard. $Antoniadi. ‖Mount. Wilson ** Observatory.

கும் அறுபது அங்குல குறுக்களவுடைய உருக்காட்டு பளிங்கி * யின் உதவியால் எடுத்த † பரிதிப்படங்கள் தா நற்சான்று உதவவே, முன்னர்க்கூறிய "கால்வாய்" களை ஆக்கியதால் ஆய அரும்பெருங்களைப்பால் வருத்தமுற்ற "செவ்வாய் மனிதர்கள்" ‡ யாவரும் நம்புராணத் தொகுதியில் ஏராளமாய்க் காணப் படுவதும் எண்ணுதற்காக்க அறிதாம் வலியை உடையதுமாகிய குறளிகள் கூளிகள் தம்மோடு கூடிக் குலாவுவான் சென்றனர் போலும்!

தமிழ் மொழியின் ஒலிகளும் எழுத்தும்

[எப்போ. திரு. தியாகராயன் அவர்கள்]

(கசுகூ-வது பக்கத் தொடர்ச்சி)

இனம்

Classification of Consonants.

மெய்யெழுத்துக்கள் இருவகையில் இனமாயின.

1. வழியால் :—i-e. Voice channel.

"The passage by which breath or voice issues from the larynx to the open air is called the channel. It consists most often of the pharynx and the mouth, but its upper part may be the nasal passage or it may be divided so that the whole delta is employed." (Websters Dic. Elements of Spoken English: Rule 35.)

வாயிலுள்ள கருவிகளால் தடுக்கப்பட்ட ஓசைகள் மெய் யொலிகளெனவும், அத் தடங்கல்களைத் தாண்டி அவை வெளியிடு வன வென்றும் முன் கூறினேன்.

வல்லினம்

இவ்வாறு வெளியிடும் வழிக்கேற்க, வாயின்வழி வெளியிடும் மெய்யெழுத்தோசைகள் வலிமையுடையன வாகையால் வல்லின மெனவும்,

---

* Reflector Telescope. † Photographs. ‡ Martian men.

மெல்லினம்

மூக்கின் வழி வெளியிடும் மெய்யெழுத்தோசைகளை மெல்லினமெனவும்,

இடையினம்

இரு வழியாலும் வெளியிடும் மெய்யெழுத்துக்களை இடையினமெனவும் நம்மொழியின் மெய்யெழுத்துக்கள் பகுக்கப்பட்டன.

இவ்வின வெழுத்துக்கள் தம் தம் இனப்பெயருக்கேற்க வல்லோசையுடனும், மெல்லோசையுடனும், இவை யிரண்டிற்கும் இடையோசையுடனும் நிகழ்வது உண்மையே. எனவே இப்பெயர்கள் காரணப் பெயர்களாயின.

2. பிறப்பால் இனம்

"தானம், முயற்சி, அளவு, பொருள், வடிவு, ஆன ஒன்று ஆதியோர்புடை யொப்பினமே" (பவணந்தி. எழு: சூ. 71.)

கஙவும் சஞவும், டணவும், தநவும், றனவும், ஒவ்வோரிடத்தில் பிறப்பதால் இனமாயின.

குளக்கரை அல்லது குளங்கரை யென்பதாலும்,

மச்சிகள்	மஞ்சிகள்
மட்குடம்	மண்குடம்
பாழ்த்து	பாழ்ந்து
கற்கடித்து	கல்கடித்து

இவைகள் பொருளாலும் இனமாயின. மற்ற இன வெழுத்துக்களுக்கும் இவ்வாறே உதாரணங்கள் கண்டு கொள்க.

இவ்வெழுத்துக்களை உச்சரித்துப் பார்க்க அவை முயற்சியாலும், அளவாலும் ஒன்றுபட்டு இனமாவது நன்கு விளங்கும்.

வடிவைப்பற்றி "தமிழ் எழுத்தின் வடிவு" என்னும் தலைப்பட்டு இனிவரும் கட்டுரையில் காட்டப்படும்.

இப்பெயர்களைப் பிரித்ததுபோலவே, உயிர் மெய்யுடன் கூடிய மானிடர்களின் உயிரை நாம் உணர்ந்து வேற்றுமைப்படுத்த முடியாதாகையால், மெய்யின் (உடம்பின்) வேற்றுமையையும், இடவேற்றுமையையும் அளவின் வேற்றுமையையும் குறித்து:—இந்தியர்

சீனரென இடப்பெய ரிட்டும், ஆரியர், மங்கோலியர், திராவிடரென வடிவுப்பெயரிட்டும், Petagonians (பெட்டகோனியன்ஸ்) Pigmies (பிக்மீஸ்) என அளவுப் பெயரிட்டும் மக்களை வகுப்பது கவனிக்கத்தக்கது.

"Generally, only letters pronounced at the same part of the mouth are Etymologically inter-changeable, dentals with dentals, labials with labials"

(Comparative Philology, by Papillon, page 50)

இவ்வியற்கை விதியையே நம்முன்னோர் தழுவிக் குளக்கரை, குளங்கரை; மச்சிகள், மஞ்சிகள்; மட்குடம், மண்குடம்; என்று சொற்களில் ககர ஒற்றை ஙகர ஒற்றினும், சகர ஒற்றை ஞகர ஒற்றினும், டகர ஒற்றை ணகர ஒற்றினும் மாற்றி உரைக்கவும் எழுதவும் இடம் கொடுத்தனர்.

தனியொலியும் புணரொலியும்

"A combinative change is one in which a sound changes because of the influence of other sounds which surround it or are near it" (Guide to the English Language Page 26).

இவ்விதிக்கேற்க 'பஞ்சு', 'பந்து' 'பண்டம்' என்பன போன்ற சொற்களிலுள்ள சு, து, ட, வாகிய வல்லெழுத்துக்கள் தம் பிறப் பொலியுடன் நிகழாமல், அயல் மெல்லெழுத்தி னோசையைத் தழுவித் தாமும் மெல்லோசையுடன் நிகழ்ந்தன.

மேற்கூறிய தன்மையை :—"மெல்லெழுத்துக்களை மகளிராகவும் வல்லெழுத்துக்களை ஆடவாகவும் கொண்டு, இல்லறவாழ்க்கையுற்ற ஆடவர் இளகிய சித்தையராதல்போல, மெல்லெழுத்துக்களை அடுத்துவரும் வல்லெழுத்துக்களும் இளகிய மென்மைத் தன்மை மேவினவென்று உவமை கூறுதலும் எற்புடைத்தாம்" என்று வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார்தம் "தமிழ் மொழியின் வரலாறு" என்னும் நூலில் கூறியுள்ளார்.

அன்றியும், "It is easier to pronounce Tennis and Tennis together, media and media, aspirate and aspirate" (Comparative Philology Papillon page 49) என்

னும் மொழி நூல் விதியையும் தழுவி இவ்வின வெழுத்துக்கள் இயங்குவது தமிழ் மொழியின் சிறப்பை விளக்கும்.

Phonetic rules for Tamil

Consonants.

(பவண. எழு. சூ.)

78. கஙவுஞ், சஞவும், டணவு முதல் இடைநுனிநா வண்ண முற முறைவருமே. பொருள்:—அடிநா அடியண்ணத்தையும், இடை நா இடை யண்ணத்தையும் நுனி நா நுனி அண்ணத்தை யும் உற முறையே க ங வும், சஞவும், டணவும் வரும். இதை உச்சரித்துப் பார்க்கவும்.

79. அண்பல் அடி; நா முடியுறத் தந வரும். பொருள்:— மேற் பற்களின் அடியை நாவின் நுனியுற தநக்கள் வரும்.

80. மீ கீழிதழுறப் பம் மப் பிறக்கும். பொருள்:—மேல் உதடும் கீழ் உதடும் பொருந்த முறையே பவ்வும் மவ்வும் வரும்.

81. அடி நா, அடியணமுற யத்தோன்றும். பொருள் வெளிப்படை.

82. அண்ண நுனிநா வருட ரழவரும். இவ்வெழுத்துக்கள் இவ்வாறே பிறப்பினும், காற்றின் வெளியீடு, ரவில் மூக்கின் வழி மிகையாகவும் ழவில் வாயின்வழி மிகையாகவும் தோன்று கிறது. அன்றியும் ரகரத்தின் உழப்பே, ழ வெனத் தோன்று கிறது.

83. அண் பல் முதலும் அண்ணமும் முறையின்— நாவிளிம்பு வீங்கி யொற்றவும் வருடவும்—லகார ளகாரமாயிரண் டும் பிறக்கும்.

பொருள்:—மேல்பல்லி (முற்பல்லி) ன் அடியை நா வளைந்து ஒற்ற லகாரம் வரும் ; அண்ணத்தை நா வளைந்து வருட ளகாரம் வரும்.

84. மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே. பொருள் வெளிப் படை.

85. அண்ண நுனிநா நனியுற றனவரும். அண்ணத்தை நுனிநா அழுத்திப் பொருந்த றனக்கள் வரும்.

87. எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில் திரியுந் தத்தமிற் சிறிதுளவாகும் முற்கூறிய ஒலிகள், எடுத்தல், படுத்தல், நலிதல், உழப்பல் இவைகளால் முன் தத்தமக்குக் குறித்தஓசையினின்றும் சிறிது வேற்றுமைப்பட்டு ஒலிக்குந் தன்மையு முள்ளனவாம்.

ஆங்கிலத்தில் Accent என்பதுபோல எடுத்துரைத்தலால் பொருள் பேதப் படுதலுமுண்டு. உதாரணம்: 'அறிவிலாதவன்' என்பதில் வகா இகரத்தை யெடுத் துரைக்க 'அறிவு அற்ற வன்' எனப் பொருள்பட்டும், லகா ஆகாரத்தை யெடுத்துரைக்க (அறிவில்-ஆதவன்) 'அறிவில் சூரியனை யொத்தவன்' எனப் பொருள் பட்டும் வரும்.

மெய்களின் வைப்புமுறை.

க் என்னும் மெய், உட்காற்று அடிப்படையாய் அகா வொலியுடன் வெளிப்படும் பொழுது அடிநாக்கு அடியண் ணத்தைப் பொருந்த அவ்வொலி தடைப்பட்டுப் பின் அக்காற்று வாயின்வழி வெளிவரும்போது 'க்' என்னும் ஓசையுடன் நிகழ்வதால் இம்மெய் முதலில் வைக்கப்பட்டது.

மேற்கூறியவாறு யாவும் நிகழ்ந்து காற்றின் வெளியீடு மட்டும் மூக்கின் வழி வெளிப்படுதலால் க் என்னும் மெய்க்குப் பின் ங் என்னும் மெய் வைக்கப்பட்டது.

மேற் கூறிய வாறே உதித்து, பின்னிடை நாக்கு (the hind part of the middle tongue) பின்னிடை யண்ணத்தைப் பொருந்திப் பிறக்கும் ஒலிகள் முறையே வாயாலும் மூக்காலும் வெளிவருவதால் ச், ஞ் என்னு மெய்கள் அடுத்தடுத்து வைக்கப் பட்டன.

இவ்வாறே ட், ண்; த், ந்; ப், ம் என்னு மெய்கள், முன் னிடை நா முன்னண்ணப் பொருத்தத்தாலும், நுனிநா அண்பல் பொருத்தத்தாலும், கீழ்மேலிதழ் பொருத்தத்தாலும் உண்டாகிய ஒலிகள் வாய் மூக்கு இவைகளின் வழி முறைமுறையே வெளி வருவதால் கிரமப்படி ட்; ண்; த்;ந்; ப்; ம் என ஒன்றன்பின் னொன்றாய் நிறுவப்பட்டன.

முன் கூறியவாறு ஓசைக்குக் காரணமான காற்றானது இடையின மெய்களின் உச்சரிப்பில் வாய் மூக்கு எனும் இவ்விரு

வழியாலும் வெளிப்படுவதால் வல்லின மெல்லின மெய்களுக்குப் பின் இடையின மெய்கள் வைக்கப்பட்டன.

அவற்றில் "அடிநாவடியண முறயத்தோன்றும்" என்னும் விதிப்படி யகர வொற்று முதலில் வைக்கப்பட்டது.

ரகர வொற்று முன் கூறிய சூத்திர விதிப்படி பிறப்பதால் யகரத்தின் பின் வைக்கப்பட்டது.

மேற்பற்களின் (முன் பற்கள்) அடியை நாவிளிம்பு உற்று ஒற்றுவதால் லகர வொற்றுப் பிறக்கும். எனவே ரகர வொற்றின் பின் லகர வொற்று வைக்கப்பட்டது.

மேற்சொன்னவாறு நா, அண்ணங்களின் இயக்கங்கள் முடியவும் இனி கீழிதழ் மேற் பற்களைப் பொருந்த ஒலிக்கும் வகர வொற்று லகர வொற்றையடுத்து வந்தது.

முற் கூறியபடி ரகர வொற்றுடன் பிறந்து நாவுழப்பால் வேற்றுமைப்பட்டு "ழ்" ஒலிப்பதால் இடையின இறுதியில் வைக்கப்பட்டது.

இனி ள, ற, ன வொற்றுக்கள் முன்னுரைத்த லகர, ரகர, ணகர வொற்றுக்களின் எடுப்பொலிகள் ஆதலின் இவை மிகை யான மெய்கள். இக்காரணங் கொண்டே இவை தத்த மினத் தோடு அடுத்தடுத்து வராமல் மெய்களினிறுதியில் தொகுக்கப்பட்டு, இடையினத் தொகுதி கடையில் வைக்கப்பட்டதால், அதனின மாகிய ளகர வொற்றை அக் கூட்டத்தோடு சேர்த்தும், றகர வொற்று வல்லினமானதால் அதை ளகர வொற்றின் பின்னும் மெல்லினமாகிய னகர வொற்றை வரிசைக் கிரமப்படி றகர வொற்றின் பின்னுமாக வைக்கப்பட்டன.

இம் மூன்று ஒற்றுக்களின் வைப்பு முறை எல்லாவகையி லும் ஒவ்வுமெனத் தோன்றவில்லை. ஆனால் முதலிற் காட்டிய பதினைந்து மெய்கள் ஏற்பட்ட காலத்திற்குப் பின் இம்மூ வொற்றுகளும் புகுந்தனவாயின் அத்தன்மையை எடுத்துக் காட்டவே இவை எல்லா வொற்றுக்களின் பின் வைக்கப்பட்டன எனக் கொள்வது பொருத்தமுடைத்தாம்.

ஓரொலிச் சொற்கள் (**Univocal Sounds or words**) வேறுபட்ட பொருள்களைத் தருமாயின், அவ்வேற்றுமையைக் காட்ட பிற்காலத்தில் இவ்வெழுத்துக்கள் சேர்க்கப்பட்டிருக்க லாம்.

சிறப்பெழுத்து

"இவற்றுள் ற, ழ, ன என்ற மூன்றெழுத்துக்களும் தமிழ் மொழியின் சிறப்பெழுத்துக்களாம். தமிழின் வழிமொழிகளல்லாத பிற பாஷைகளின் கண்ணே இவ்வெழுத்தொலிகளில்லை"

(தமிழ் மொழியின் வரலாறு P. 65)

"ழ" என்பது வேறு எம்மொழியிலுமில்லாத வோர் சிறப்பெழுத் தென்பதற்கோ ரையமில்லை.

உயிர்மெய்

மெய்யெழுத்துக்கள் தன்னம் தனியாக நிகழ்ந்து பொருள் கொடாவென முன்னம் உரைத்தேன். உயிரற்ற மெய் (உடல்) உணர்ச்சியற்ற தென்பது யாவரும் உணர்ந்ததே.

இவ்வுண்மைகளைத் தழுவியே "மெய்யினியக்கம் அகரமொடு சிவணும்" (தொல். எழு. சூ, 46.)

எனத் தொல்காப்பியனாரும் உரைத்தனர். இச் சூத்திரத்தில் அகர மென்பது அவ்வோருயிரை மாத்திரம் குறித்ததாகப் பொருள் கொள்ளாமல் உயிரெழுத் தோசைகள் எல்லாவற்றையும் குறித்து நின்றதாகப் பொருள் கொளல் சால்புடைத்தாம்.

இவ்வாறு புணர்ந்த உயிர், மெய்யின் வழியே (உடலின் வழியே) தோன்றுவது இயல்பு. எனவே

(தொல். எழு.) 'மெய்யின் வழிய துயிர் தோன்று நிலையே" என்னும் விதியும் ஏற்பட்டது. இத்தகைய இயல்பையே திருவள்ளுவரும் "உடம்போடு யிரிடை யென்ன மற்றன்ன மடந்தையோ டெம்மிடை நட்பு" என மொழிந்தார்.

(தொடரும்)

தமிழ் அறிவியற் சொற்கள்.

எண்ணளவை—(Arithmetic)

[திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள்]

(உஉ அ-ம் பக்கத் தொடர்ச்சி)

Addition	கூட்டல்
To add	கூட்ட

இவை வழக்காற்றிலுள்ளனவும் சரியானவையு மாகும். சேர் என்னும் பொருள் படும் Addre என்னும் பகுதியடியாப்

பிறந்தது Addition என்பதாகும். கூட்டச் செய்தல் என்பதன் சுருக்கம் கூட்டல் ஆகும் எனவே இவை யிரண்டின் ஒப்புமை புலனும்.

கூட்டுதலினுலாய முடிவைத் தெரிப்பதற்கு ஆங்கிலத்தில் Sum, Amount, Total என்னுஞ் சொற்கள் வழங்குகின்றன. தமிழிலும் அவ்வாறே தொகை, மொத்தம் என்ற இரண்டு சொற்கள் வழக்காற்றிலுள்ளன. இருமொழியிலுமுள்ள இச் சொற்கள் ஒருவாறு கருத்தை நன்கு தெரிப்பனவாயினும் அவைகள் add, கூட்டு என்ற சொற்களினடியாகப் பிறக்கவில்லை. தமிழில் கூடுதல், கூட்டு, கூட்டம் என்ற சரியான சொற்களிருக்கும்போது அவற்றை ஏன் பயன்படுத்தக் கூடாதென்று வினவலாமன்றே? ஆனுலும் இம் மூன்று சொற்களையும் எல்லா இடங்களிலும் நினைத்தவாறு பயன்படுத்தக் கூடாது. பொருளறிந்து ஏற்ற பெற்றி பயன்படுத்தல் சால்புடைத்தாம்.

The total of troops from Coonoor and Punjab to quell the Malabar riots was ten thousand—மலையாளக் குழப்பத்தை யடக்கக் குன்னூரிலும் பஞ்சாபிலுமிருந்து வந்த படையாட்களின் கூட்டம் பத்தாயிரம்.

The total of receipts from Murugan, Arumugam and Velan is Rs. 15-4-3—முருகன், ஆறுமுகம், வேலன் என்ற மூவரிடமிருந்து வரவு கூடுதல் வருவாய் ரூ. 15-4-3.

The sum of 10, 15 and 26 is 51—பத்து, பதினைந்து, இருபத்தாறுகளின் கூட்டு ஐம்பத்தொன்று.

இம்மூன்று ஆட்சிகளிலுமுள்ள பொருள் வேற்றுமை நுட்பம் கூர்ந்து நோக்கத்தக்கதாகும். மருந்துக் கூட்டு, கூட்டுக் கறி, கூட்டெழுத்து என்று வழங்கும் சொற்களிலுள்ளது போன்ற கூட்டு என்னும் சொல் தாமே கலக்கமுடியாத இரண்டு மூன்று உயிரற்ற பொருள்களைக் கூட்டிக் கலந்து ஒன்றுபடுத்துவது என்பதைக் குறிக்கும்.

கூடுதல் என்ற சொல்லோ சேர்க்கைக்காக இரண்டு உயிருள்ள பொருள்கள் தாமே முயன்று கூடுவதைக் குறிக்கும். அம் முயற்சியின்றேல் கூடுதலரிதாம். பூனையும் நாயுங் கூடுதல் எளிதல்ல என்பதை நோக்குக.

கூட்டம் என்ற மற்றொரு சொல்லோ ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத பல பொருள்கள் கூடுவதைக் குறிக்கும்.

Addendum — கூட்டு
Corrigendum — திருத்து
Addendum and corrigendum—கூட்டும் திருத்தும்
Additive — கூட்டற்குரிய, கூட்டு (உரிச்சொல்)

These are additive numbers—இவைகள் கூட்டெண்கள். இங்கே கூட்டு என்பது உரிச்சொல்லாய் வந்தது.

Addable — கூட்டற்கான

This balance is addable to the Loss account —இம் மிச்சம் இழப்புக் கணக்கொடு கூட்டற்கானது.

Loss — இழப்பு
Account — கணக்கு
Accountant — கணக்கன், கணக்கர்.
Column — நிரல், நிரை
Column of numbers — எண்ணிரல், எண்ணிரை
To arrange numbers in columns — எண்களை நிரல் படுத்த, எண்களை நிரலாக்க.
Pupil — மாணவர், மாணாக்கர்
Rules — வரைவு

ஆங்கிலத்தில் Rule என்ற சொற்கு இருவேறு பொருள்களுள்ளன. ஒன்று நேர் கோடு என்பது; மற்றொன்று விதி என்பது. இவ் விரண்டு பொருள்களும் வரை என்ற தமிழ்ச் சொற்கண் பொதிந்து கிடப்பது குறிப்பிடற்பாலது.

Quantity என்பது எத்தனை என்று பொருள்படும். Quantus என்னும் சொல்லடியாப் பிறந்ததாகும். தனை என்று தமிழிற் கூறுவது எத்தனை என்பதைக் குறிக்கும். எனவே Quantity என்பதற்கு நேர்ச் சொல்லாக எனைத்து என்பதைக் கொள்ளலாம். ஆனல் ஆங்கிலத்தில் Quantity என்பது மூவேறு பொருள்கள் படுமாறு வழங்கப்பட்டு வருகிறது. அம் மூன்று பொருள்களையுங் குறிக்கத் தமிழில் மூவேறு சொற்கள் தனிப்பட அமைந்துள்ளன, மேற் குறித்த Quantus என்றபகுதி குறிக்காத "இத்தனை" "அத்தனை" என்ற இரண்டுபொருள்களில் அதிகமாக இச்சொல் ஆங்கிலத்தில் வழங்கிவருகிறது.

இது ஆங்கில மொழியின் சொற் குறைவைக் குறிக்கும். "Unknown Quantity" என்பது "how much" என்ற எத்தனை என்பதையே குறிக்கும். "Known Quantity" எப்பொழுதும் "This much" என்ற இத்தனை என்பதையே குறிக்கும். "Determinable Quantity" என்பது அத்தனை என்று பொருள்படும் That much என்பதையே குறிக்கும். எடுத்துக் காட்டு —

(1) Find out by measuring with an ollock measure the quantity of water this pot holds—இப்பானையின் நீர் எனைத் தென்பதை ஆழாக்கா லளந்தறி.

இங்கே Quantity என்பது எவ்வளவென்று குறிக்கப்படாத தொன்று. அதனை எனைத்து என்ற சொல் நன்கு விளக்கி நின்றது.

(2) The quantity of water in this pot will fill ten ollocks—இந்தப் பானையின் நீர் அனைத்தும் பத்து ஆழாக்குகளை நிறைக்கும்.

இங்கே Quantity என்பது பத்து ஆழாக்கு நிறைக்கும் அளவு என்ற ஒரு அளவைக் குறித்து நின்றதாதலின் அனைத்து என்ற சொல் வேண்டப்படுவதாயிற்று.

(3) This Quantity of water cannot be contained by that pot—இனைத்து நீரையும் அப்பானை கொள்ளாது.

இங்கே முன்கூட்டியே நீர் பானை கொள்ளக்கூடிய அளவை விட அதிகமானதென்பது தெரிந்துளது. ஆதலால் இனைத்து என்ற சொல் கொள்ளப்பட்டது.

எனவே Quantity என்பது இனைத்து, அனைத்து, எனைத்து என்ற முப்பொருள்களையுங் குறிக்கும்; எனினும் தனைத்து என்பதே நேர்பொருளாம்.

உலகத்திலுள்ள மற்ற மொழிகளில் இது, அது என்ற இரண்டு சுட்டுச் சொற்கள் இருப்பதாக அறிகிறோமே யன்றி தமிழைப் போன்று உது என்ற மற்றொரு சுட்டு இருப்பதாகக் கேள்விப்படவில்லை. எனவே உனைத்து என்ற ஒரு அதிகமான அளவும் தமிழ் மொழியில் பெறக்கூடும் என்பது ஈண்டு நோக்கற்பாலது.

Compound—கலவை
Compound Quantity—கலவைத்தொகை
Simple Quantity—கலவாத்தொகை
(எளிய தொகை அன்று) (தொடரும்)

—காழி. சிவ - கண்ணுசாமி B.A.

கடல்

திருவாளர், S. தேசிக விநாயகம்பிள்ளையவர்கள் பாடியது.

[கற்களும் பாறைகளும் அடர்ந்த கடற்கரையில், கடல் கொந்தளிப்பாயிருந்த தருணத்தில், மணலில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை கடலை நோக்கிக் கூறியது]

எல்லை அறியாப் பெருங்கடலே! நீ தான்
இரவும் உறங்காயோ? கடலே!
அல்லும் பகலும் அலைகடலே! உனக்
களைப்பும் இலையோ? கருங்கடலே!
உருண்டு திரண்டு வருங்கடலே! உடைந்
தோடிப் போவதேன்? கடலே!
வெருண்டு மதிகெட்டாய் கடலே? பாறை
விலகிப் போகுமோ? கடலே!
பொங்கு திரைகளோ? கடலே அவை
புரவிநிரை தாமோ? கடலே!
எங்கும் உனதொலியோ? கடலே! அன்றி
இடியின் முழக்கமோ? கடலே!
ஓடம் எடுத்தெறி யுங்கடலே! தயை
உனக்குச் சற்றிலையோ? கடலே!
ஆடல் விடிதனைக்கடலே! நீயும்
அழிப்ப தழகாமோ? கடலே!
மலையை வயிற்றடக் குங்கடலே! எண்ணில்
மகா மீனுலவும் கடலே!
விலைகொள் முத்தளிக் குங்கடலே! சிப்பி
விளையாடற் குதவுங் கடலே!
மழைக்கு மூலமும் நீகடலே! அதை
வாங்கி வைப்பதும் நீ கடலே!
வழங்கும் பகிமை யெலாம் கடலே! எவர்
வழுத்தி முடிக்கவலார்? கடலே!

ஆறுவது சினம்

[திரு. சகாதேவமுதலியாரவர்கள்]

சினம் என்னுங் கோபம் கொடிய பாபமென்றும் அறக்கடியத் தக்க தொன்ருகுமென்றுங் கூறுவர். ஆயினும் தெவ்வரும் விரும்பும் ஔவைப்பிராட்டியாரின் 'ஆறுவது சினம்' என்னும் வாக்கில் இக்கருத்துக்கு இடம் இன்று. மகனுய்ப் பிறந்த எவனுக்கும் மகளாய்ப் பிறந்த எவளுக்கும் கோபம் இயல்பென்பதே நரை மூதாட்டியாரின் நன்காய்ந் தெடுத்தோதிய வாக்கின் தேர்ந்த கருத்தாகும்.

நமது பிராட்டியாரின் இன்னொரு வாக்கை எடுத்துக்கொள்வோம் :

'கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே—விற்பிடித்து
நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்ருேர் சினம்'

இவ்வெண்பாவின்கண் எவ்வகை மக்கட்குங் கோப முண்டென்றும், அது முத்திறப்பட்டதென்றும், அவற்றில் கீழ்மக்களின் கோபம் கற்பிளவுபோன்று எப்போதும் மாறுகொண்டு வேறுபட்டே நிற்குமென்றும், நடுத்திறமக்களின் கோபம் பொற்பிளவு போன்று சந்திசெய்யக் கூடி ஒன்றுபடுமென்றும், சிறந்தோரான சான்ருேர்தம் கோபம் நீர்ப்பிளவுபோன்று நில்லாது இருந்தவிடம் தெரியாம லறவொழியுமென்றும் தமிழுலகிற்கு நீதிமொழிகளைத் தேர்ந்து தீட்டிவைத்தருளிய நமது பாட்டியார் திட்டப்படுத்தி யெடுத்துக் காட்டியுள்ளார். அவர் 'ஆறுவது சினம்' என்று சுருங்கச் சொன்னதை இவ்வெண்பாவில் விளங்க வைத்தார்.

குணமென்னுங் குன்றேறி நின்ருர்க்கும் வெகுளியுளதாமாகையால் அதனை அறவொழித்தல் கூடாததாகும்; அதனை நீட்டித்தலே கடியத்தக்கது. வெகுளி காக்கத் தக்கதொன்றே யன்றிக் கடியத்தக்கதன்று. கொள்ளவேண்டியவும் தள்ளவேண்டியவுமாகிய அறநீதிகளை மக்கட்கு விள்ள வைத்துக் காட்டிய நமது வள்ளுவரும் தமது திருக்குறளில் 'வெகுளி' என்னும் அதிகாரத்தை இல்லறத்தின்கண் வைக்காமல் துறவறத்திற் சேர்த்த

தற்குக் காரணத்தை நாம் உய்த்துணரவேண்டும். "இல்லறத்தார்க்காயின் ஒரொருகால் சினவயப்படுதல் மறநிலை யறத்தொடு பட்டமையும். இறைமாட்சியும் படைச் செருக்குமெல்லாம் வெகுளி விரவாதாதல் அரிதன்றே."—எனத் திருக்குறளுக்கு ஒரு புத்துரை வகுத்துத் தண்டாப் புகழ்ப்பெற்ற தண்டபாணிப்பிள்ளையவர்கள் கூறுவதுங் காண்க.

கோபமென்பதொன்றில்லை யாயின் பள்ளிக்குச் செல்லப் பாசாங்கு செய்யும் பிள்ளையை எவ்வாறு பெற்ருேர் அடித்துத் தண்டித்துப் பள்ளிக்கனுப்புவர்? வேலையில் வஞ்சனைசெய்யும் தொழிலாளியை எவ்வாறு முதலாளி எந்தவிதத்திலாயினும் தண்டித்து அறிவுறுத்துவான்? கருத்துடன் நூல்களைக் கற்றுத் தேர்ச்சி யடையாமல் வீண்காலம் போக்கும் மாணுக்கனை ஆசிரியன் எவ்வாறு தண்டித்து வழிப்படுத்துவான்? சிறியோர் பெரும் பிழை செய்தனராயின் பெரியோர் அப்பிழையை அவர் மறுபடியும் செய்ய வொட்டாமல் தக்கபடி அவரைத் தண்டித்து நல்வழிப் படுத்துவதை விட்டுப் பொறுத்துக்கொண்டு போய்விடுவாராயின் அஃது உலகத்திற்கே தீமை விளைவிப்பதாகுமன்ருே!

வெகுளி மறக்கத்தக்கதேயன்றி வேரோடு அறுத்தொழிக்கத் தக்கதன்று. உலகத்தில் நாள்தோறும் காணக்கிடக்கும் தீமைகட்களவின்று. மக்கட்குக் கோபமில்லையாயின் அத்தீமைகளொழிவதெப்படி? தீமையைக் கண்டபொழுதே மக்கட்குக் கோபமுண்டாலன்றி அதற்கு வேண்டிய முயற்சி செய்து அதனை அவர்கள் நீக்க வல்லவராகார். உலகத்திலுண்டான சீர்திருத்தங்களெல்லாம் கோபங் காரணமாகவே நடந்தேறின. லூதர் என்னும் கிறிஸ்து மதச் சீர்திருத்தக்காரர்க்கு அக்காலத்தில் அம்மதத்தில் ஏற்பட்டிருந்த கெடுதிகளைக் கண்டு கோபம் வாராமலா அதன்கண் மாறுதல்களுண்டாயின? சொற்பொழிவு மேடைகளில் நீதி நிபுணர்கள் பேசும்போது கோபம் உள்ளுக்குள்ளே இருந்து வீரியச் சொற்களை அவர்தம் வாய்வழியாக வரச்செய்வதை யாம் கண்கூடாகக் காண்கின்ருேமல்லவோ! அத்தகைய கோபங்கொண்ட சொற்களானன்ருே அவைகளைக் கேட்கும் மக்கட்கு மனமாறுதலுண்டாகின்றது? நீதிகளை அறிவுறுத்தவந்த மென்மைக் குணமே உருவாகவமைந்த எள்ளாப்புகழுடை வள்ளுவாது

கோபம் அவர் தம் திருக்குறளில் ஆங்காங்கு மிளிர்கின்றதை யாம் கண்டேமல்லேமோ?

'செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்.'

'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.'

என்னுங் குறட்பாக்களை உய்த்து நோக்கி உட்பொருளை அறிவீர்களாக.

இவ்வாறாகிய உலகானுபவங்களை நோக்கியே, ஏனைச் சில நீதி நூலாசிரியர்கள் போன்று—'கோபமே பாபங்களுக்கெல்லாம் காரணம்' என்பது போன்ற வாக்கியங்களின்படி தமது வாக்குக்களையுஞ் சொல்லிவைக்காமல், மக்கள் நீதிகளை ஐயந் திரிபற வுணர வேண்டித் தாம் திருவாய்மலர்ந்த நீதிகளை யெல்லாம் வரையறைப் படுத்தி யோதிவைத்துள்ளார் நமது ஒளவைப்பிராட்டியார். அவர் அழிவது சினம் என்னுமல் 'ஆறுவது சினம்' என்றதன் ஆழ்ந்த உட்கருத்தை நாம் நமது மனத்தில் பதியவைத்துக்கொண்டு, அடங்காமை, பணியாமை, பொய், வஞ்சனை, முரட்டுத்தனம், திருட்டுத்தனம், அநீதி முதலிய தீக்குணங்களை ஏனையோரிடங் காணும்போது நமக்குள் தோற்றுங் கோபத்தை உடனே அடக்கிக்கொண்டு வேண்டிய சீர்பாடுகளைத் தவறாது செய்து முடித்து விடவேண்டுமே தவிர அக்கோபத்தை நீட்டித்து வைத்துக்கொண்டிருத்தல் நமக்கே கேடு விளைவிக்குமென்பதைக் கருத்திற் கொள்வோமாக.

மக்கட்குக் கோபம் என்பதொன் றுண்டென்பதும், அஃது அவர்கட்கு இன்றியமையாத தொன்றென்பதும், அஃது இன்றேல் உலகச் சீர்பாடு நிகழாதென்பதும் ஆயினும் அதனை உடனே ஆற்றிக்கொள்ள வேண்டுமென்பதும், அவ்வாறு செய்யாவிடின் அதுவே கேட்டை விளைவிக்குமென்பதும் நமது ஒளவையாரது "ஆறுவது சினம்" என்னும் வாக்காற் பெறப்பட்டன.

அறுபதாம் ஆண்டு நிறைவு விழா

நிகழ்ச்சி

(முகப்புப்படம் பார்க்க)

தூத்துக்குடி உயர்திரு "சித்தாந்த ஆசிரியர்" ந. சிவகுருநாத பிள்ளை அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவுவிழா, நிகழும் சிமுக ஆண்டு ஆடித்திங்கள் 11-ஆம் நாள் (26-7-33) புதன்கிழமை யன்று இதன் அடியிற் குறித்த வண்ணம் செவ்வனே நிறைவேறியது. காலை 11-மணிக்கு ஸ்ரீபாகம்பிரியாள் சமேத ஸ்ரீசங்கராமேசுரப் பெருமான் திருக்கோயிலில் சுவாமி அம்பாள் கணேசர் சமயாச்சாரியார் முதலிய மூர்த்திகட்கு நிறைகுட நீராட்டு (கும்பாபிஷேகம்) செய்யப்பெற்றது. உள்ளூர் வெளியூர் அன்பர்கள் பலர் போந்து தரிசனஞ் செய்து போந்தார்கள்.

பின்னர் மாலை 5½-மணிக்கு சைவசித்தாந்த சபையின் நிலையமான திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் மடாலயத்தில் பேரவை கூட்டப்பெற்றது.

திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த உயர் திரு. சங்கரலிங்கத்தம்பிரான் சுவாமிகள், சென்னை சைவசித்தாந்த மகாசமாஜம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், இவைகளின் தலைவரும் ரிட்டையர்டு தாசில்தாருமான உயர் திரு, மா. வே. நெல்லையப்பபிள்ளை அவர்கள் பி. எ., திருவாளர்கள், வ. திருவரங்கம்பிள்ளை அவர்கள் (ஷை கழக அமைச்சர் பாளையங்கோட்டை), S. முருகப்பிள்ளை அவர்கள் (சிந்துபூந்துறை), காருடை சூரியமூர்த்தி பிள்ளை அவர்கள் (ரிட்டையர்டு போஸ்டு மாஸ்டர் திருநெல்வேலி), S. முத்துக்குமாரசுவாமி பிள்ளையவர்கள் (சூப்பரின்டென்டென்டு மெஸர்ஸ் வீனஸ் அஷ்யூரன்ஸ் கம்பெனி, குலசை), இ. மு. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் (தலைமைத் தமிழாசிரியர், போர்டு ஹைஸ்கூல், நாங்குனேரி) A. பேச்சிமுத்துப்பிள்ளையவர்கள் (ஹெட்கிளார்க், ஸீ கஸ்டம்ஸ் ஆபீஸ் கொச்சி) முதலிய வெளியூர் கனவான்களும், P. V. கணபதியப்ப பிள்ளையவர்கள் பி. எ, பி. எல், M. சங்கர சுப்பிரமணிய பிள்ளையவர்கள் பி.எ, பி.எல், E. வெண்ணிமாலைப்பிள்ளை அவர்கள் பி. எ, பி. எல், V. O. சிதம்பரம் பிள்ளையவர்கள் வக்கீல், அ. இ. இளையபெருமாள் பிள்ளை

யவர்கள், பா. சு. அம்பலவாண பிள்ளையவர்கள், வர்த்தகர்கள் N. காளியப்ப பிள்ளை அவர்கள் (ரிடையர்டு காஷியர் மதுரை மில்ஸ் கம்பேனி லிமிட்டெட்) முதலிய பல கனவான்கள் திரளாக வந்து குழுமி யுள்ளார்கள். உயர்திரு மா. வே. நெல்லையப்ப பிள்ளை யவர்கள் தலைமை வகித்தார்கள். தலைவர் அவர்கள், உயர்திரு ந. சிவகுருநாத பிள்ளை அவர்கள் தமது இளம்பிராயந் தொடங்கி சைவத் தொண்டில் ஈடுபட்டு உழைத்துவரு வதைப்பற்றியும், சைவசித்தாந்த சபையை அவர்கள் சீருஞ் சிறப்பு மாக சுமார் நாற்பது ஆண்டுகட்கு மேலாக நடத்தி வருவதைப் பற்றியும், அவர்களது அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவை சைவ சித்தாந்த சபையார் சிறப்பாய்க் கொண்டாட வேண்டியதின் அவசியத்தைப்பற்றியும், அரைமணி நேரம் முன்னுரையாகப் பேசினார்கள். அதன்பின்னர் சைவ சித்தாந்த சபையார், உயர் திரு பிள்ளையவர்களின் மாணவர்கள், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி திரு. காருடைசூரியமூர்த்திபிள்ளையவர்கள், நாங்குனேரி போர்டு ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர், இ. மு. சுப்பிரமணியபிள்ளை யவர்கள், இவர்களால் இயற்றப்பெற்ற வாழ்த்துப்பாக்கள் வாசித்துப் பிள்ளையவர்கட்கு அளிக்கப்பெற்றன.

பின்னர் திருச்செந்தூர் திருப்பணி உயர்திரு ஆறுமுக சுவாமிகள், கோவிற்பட்டி விருதை உயர்திரு சிவஞான யோகி கள், சென்னை சைவசித்தாந்த மகா சமாஜம், ஷை அமைச்சர் திருவாளர், ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள், பி.ஏ., பி.எல்., G. கல்யாணம், பி.எ, அவர்கள், வித்வான் மறை திருநாவுக்கரசு அவர்கள், சென்னை இராயப்பேட்டை பால சுப்பிரமணிய பக்தஜன சபை, திருவாளர்கள், திரு. வி. உலகநாத முதலியார் அவர்கள், திரு. வி. கல்யாணசுந்தர முத லியார் அவர்கள், கோயம்புத்தூர் C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், பி. ஏ., பி. எல்., இம்பீரியல் பாங்க் ஹெட்கிளார்க் A. சிதம்பரம் பிள்ளை அவர்கள், மகிபாலன்பட்டி பண்டிதமணி, மு. கதிரேசன் செட்டியார் அவர்கள், லால்குடி, அ. மு. சரவண முதலியார் அவர்கள், வலையமாநகர் ஆசிரியர், ப. இராமநாத பிள்ளை அவர்கள், தென்காசி ஆசிரியர். ப. ரா. பரமசிவ முதலி யார் அவர்கள், சிந்துபூந்துறை ரிட்டையர்டு போலீஸ் சர்க்கிள்

இன்ஸ்பெக்டர், S. நாராயணசாமி நாயுடு அவர்கள், சித்தூர் தசாவதானி ஆறுமுகம் பிள்ளை யவர்கள் சுசீந்திரம், S. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் பி. எ., எல். டி. முதலியவர்க ளிடமிருந்து வந்துள்ள வாழ்த்துப்பாக்கள் கடிதங்கள் வாசிக்கப் பெற்றன. அதன்பின்னர் திருவாளர்கள், V. O. சிதம்பரம்பிள்ளை அவர்கள், காருடை சூரியமூர்த்தி பிள்ளை அவர்கள், A. பேச்சிமுத்துப் பிள்ளை அவர்கள், S. முத்துக்குமாரசுவாமி பிள்ளை அவர்கள் K. திருமலையப்ப பிள்ளை அவர்கள், முதலியவர்களால் பிள்ளையவர்களின் அரும்பெரும் குணங்களைப்பற்றியும், அவர்கள் தமிழ் நாடெங்குஞ் சென்று சைவமும் தமிழும் தழைக்கச் சொற்பொழிவுகள் செய்தும், மாணவர்கட்குத் திருக்குறள் முதலிய நீதிநூல்களும் சிவஞானபோதம், சித்தியார் முதலிய சித்தாந்தஞான நூல்களும் திருத்தொண்டர் புராணமுதலிய புராணங்களும் இன்னும் பிற நூல்களையும் கைம்மாறு கருதாது கற்பித்தும், சைவசித்தாந்த சபையைச் சீரும் சிறப்புமாக நடாத்தியும் வரும் பல அரும் பெரும் தொண்டுகளைப்பற்றியும் விரிவாகப் பேசப் பெற்றது.

பின்னர் திருநெல்வேலி செந்தமிழ்ப்புலவரும், ரிட்டையர்டு போஸ்டு மாஸ்டருமான திருவாளர் காருடை சூரியமூர்த்திபிள்ளை யவர்கள் பிரேரேபணையின் பேரில் உயர்திரு பிள்ளையவர்கட்கு "சித்தாந்த ஆசிரியர்" என்னும் பட்டம் சபையாரால் வழங்கப் பெற்றது.

முடிவாகத் தலைவர் அவர்கள் சொற்பொழிவாளர்கள் கூறியவற்றை ஆமோதித்துப் பேசியதுடன் தாமும் சில சிறப்புக்கள் கூறி பிள்ளையவர்கள் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்தி, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் சார்பாக ஒப்பற்ற திருத்தொண்டு புரிந்துவரும் பிள்ளையவர்கட்குப் பரிசாக ஒப்பற்ற பெருமையுடைய திருநீறு அளிக்கப்பெறுகின்றது எனக் கூறி கங்காளன் பூசுங் கவசத்திரு நீறடைந்த ஒரு வெள்ளிச்சம்புடம் பரிசாக வழங்கினார்கள். உயர்திரு பிள்ளையவர்கள் தமது அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவைச் சிறப்பாக நடாத்திய சபையாருக்கும் பிறருக்கும் நன்றி கூறினார்கள்.

சைவ சித்தாந்த சபையின் துணைத்தலைவர், M. சங்கர சுப்பிரமணிய பிள்ளையவர்கள் பி. எ., பி. ல்., தலைவர் அவர் கட்கும் உயர்திரு பிள்ளையவர்கட்கும் பூமாலை புனைந்து சபையோருக்கு வந்தன மளித்தார்கள். இரவு $9\frac{1}{2}$ மணிக்குச் சிவநாம முழக்கத்துடன் விழாப் பேரவை இனிது நிறை வேறிற்று.

அதன் பின்னர், பிள்ளையவர்கள் சிவாலயத்திற்கு நூற்றுக் கணக்கான அன்பர் குழாங்களுடன் சென்று சந்தனக்காப் பணிந்து விசேடமாய் அலங்கரிக்கப் பெற்றிருந்த பெருமான் பிராட்டி திருக்கோலங்களைக் கண்குளிரத் தரிசித்தார்கள். பின்னர் சபையின் நிலையமான திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் மடாலயத்திற்குச் சென்று அங்கு வழிபாடியற்றப் பெற்றது. அதன்மேல் பிள்ளையவர்களின் மாணவர்களாற் சபையின் நிலையத்தில் சுமார் இருநூறு கனவான்களுக்கு அறுசுவை யுண்டி அளிக்கப்பெற்றது.

இவ்வாறாக "சித்தாந்த ஆசிரியர்" உயர்திரு, ந. சிவகுருநாத பிள்ளையவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா இறைவன் திருவருளால் இனிது நிறைவேறிற்று.

S. N. கோட்டிலிங்கம்.

அருஞ்செய்யுட் பொருட் பகுதி

[சென்னை, கோ. இராமலிங்கத்தம்பிரான் அவர்கள்]

சீகாளத்தி புராணம், தென்கைலாயச் சருக்கம்

க௯-வது செய்யுள்

தரவு கொச்சகக்கலிப்பா

முருகுவிரி மலர்க்கொடிகள் மூங்கின் மிசைப் பதிந்துபோய்ப்
பொருவரிய துறக்கத்துப் புகுந்துவளர் கற்பகமா
மாமுழுதும் படர்ந்துலவும் வளர்மதியின் மேலாய
பெரியவரை யடைந்தொழுகப் பெறிற் றுறக்கம் புகலரிதோ.

(பதவுரை) முருகுவிரி - வாசனை வீசுகின்ற, மலர்க்கொடிகள் - பூங்கொடிகள், மூங்கில் மிசை - மூங்கிலை, பதிந்து போய் - பற்றிக்கொண்டு சென்று, பொருவு அரிய - ஒப்பு அற்ற, துறக்கத்துப் புகுந்து-சுவர்க்கலோகத்திற்குச் சென்று, கற்பகம் ஆம் - கற்பக மரமாகிய, மாமுழுதும் - மாமுழுமையும், படர்ந்து - பரவி உலவும் - உலாவும் , வளர்மதியின் - (ஆகாயத்தில்) வளர்கின்ற சந்திரமண்டலத்தினும், மேலாய - உயர்ந்த, பெரிய வரை - பெரிய மூங்கிலை, அடைந்து - சேர்ந்து, ஒழுகப் பெறின் - நடக்கப் பெற்றால், துறக்கம் - சுவர்க்கலோகத்தை, புகல் அரிதோ - செல்லுதற்கு அரிதாகுமோ?

(வி-கு.) போக்குரை, அறிவிற்சிறந்த பெரியவரை அடைந்து ஒழுகப்பெற்றால் சுவர்க்கலோகத்தைப் பெறலரிதோ என்பதாம்.

நன்கொடைகள்

திருக்கோவலூர் ஆதீனம், திருப்பாதிரிப்புலியூர் திரு. ஞானியார் மடாலயத்தலைவர் உயர்திரு. சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் தமது அறுபதாண்டு நிறைவு விழாவின் பொருட்டு நமது 'செந்தமிழ்ச் செல்வி'யைப் பாராட்டி ரூபா இருபத்தைந்து நன்கொடை அனுப்பியமைக்குப் பெரிதும் நன்றி செலுத்துகின்றோம்.

தூத்துக்குடி 'சித்தாந்த ஆசிரியர்' திருவாளர் ந. சிவகுருநாத பிள்ளையவர்களும் தமது அறுபதாவதாண்டு விழாவின் பொருட்டு நமது 'செந்தமிழ்ச்செல்வி' மாண்பினைப் பாராட்டி ரூபா மூன்று நன்கொடையனுப்பியமைக்குப் பெரிதும் நன்றி கூறுகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்தார்.

காழிக் கண்ணுடைய வள்ளலார்

அருளிச்செய்த

மாயப் பிரலாபம்

(உசஙு-ம் பக்கத் தொடர்ச்சி)

மிக்ககடைப் புதல்வர் வேருமுன் ருதைதனைச்
சிக்கெனவே நீதழுவச் செல்வாயோ—வொக்கவிவன்
பாழிலே நின்றவருட் பாவையார் தாம்வாழும்
வாழ்வெலா நானேகாண் மற்று. ௩௭

அன்னை யெனவறியா வப்பேயுன் னப்பனையிங்
கென்னே டிளகுவிக்க வெய்தாயோ—தன்னுடனு
னென்றவொணு தென்ருனை யொன்றுவியாய் நீயேயோ
வின்றிவடான் வாழா திட. ௩௮

பேதமறுங் காற்புதல்வா பேதமிலுன் ருதையாஞ்
சேதனனை யென்பாற் செலுத்தாயோ—போதத்
தடங்கிடுமுன் ருதையெனக் காயிடவான் பிள்ளா
யிடங்கொடுப்பான் செல்லா யினி. ௩௯

சுத்தபோ தன்றன்னைச் சோத்திரமே யுன்னுடைய
சத்தமே யாக்காய் சலியாதே—யொத்தணையு
மெய்யே பரிசத்தில் வீழ்த்தாய் விழியுருவிற்
செய்யா யவனைச் சென்று. ௪௰

சத்தமெனும் பிள்ளாய்நீ சார்போத னுங்கவனை
யொத்த செவியதனி லுய்த்துவிடாய்—மெய்த்தும்
பரிசமே தொக்கதனிற் பாய்ச்சாய் விழியி
லுருவே கலக்கச்செ யுற்று. ௪௧

உற்றதுதா னுவா னுன்னப்ப னீரதமே
பற்றருசி சிங்குவையிற் பற்றுவியாய்—முற்றுங்
கிராணமதில் வீழக் கிடத்துகந்த மேநீ
பிராணவுயிர்த் தாரையன்றே பேசு. ௪௨

என்பாணி யேயெங்கு மேற்பியா யினமலம்
வன்பாய நீவழங்கி வாதியாய்—துன்பான
வானந்த மேவடிவ மாக்குபக்க மேயவனை
ஞானம்போ லேவாழ நான். ௪௩

எச்சமிலா மானதமே பற்றுவியா யென்புத்தி
நிச்சயமே பண்ணுவிக்க நீடவா—யச்சமறக்
கொண்டெழுப்பா யாங்காரஞ் சித்தமே கொண்டவெல்லா
முண்டாகச் சிந்திப்பி யுற்று. ௪௪

விச்சையே நானவன்பான் மெய்யாக நல்கறிவை
யிச்சைய ராகம்பெருக வெய்திடா—யெச்சாயோ
வீங்கேவா ராய்புருடா வெப்போது மென்னையவ
னீங்காமற் கொண்டுதிரி நீ. ௪௫

காலமா மூவகையாங் காலையரே முன்புபோ
லேலவே யெல்லே யலம்புதுமை—யேலவே
பண்ணுவீர் போய்நியதி நிச்சயிக்கப் பண்ணுவியாய்
நண்ணுகலே யுன்றொழிலே நாடு. ௪௬

பொன்று வுடம்புகா ணம்புவனம் போக
மொன்று முயிரா முறவொழிந்து—நின்றேனைத்
தானான போதனருட் டையலேமுன் சார்ந்ததற்பி
னானா விதமானே னன். ௪௭

வித்தையே யீசுரமே மேலேச்சா தாக்கியமே
சத்திசிவ மேநீர் சடமாகி—மித்தையற
நின்றேனைச் சேட்டித்து நின்றவினைப் பாறவினி
யொன்றீர் குடிலையிலே யுற்று. ௪௮

நானேபின் கக்கினசோ ருய்விடுவேன் ஞானமோ
வானாத வின்னமுத மாயிடுவா—டானா
யறியாத போதாமுன் னானத வைந்து
பொறியாயி தென்னே புகல். ௪௯

இச்சாஞா னங்கிரியை யென்னுமுயிர்த் தோழிமீர்
சிச்சீநீர் மீளீர்போய்ச் சேயிழையீ—ரெச்சா
பவன்சிறிதும் பாரானன் பற்றுார்பின் பற்றிச்
சவங்குவதே நாமெல்லாந் தான், ௫0

அன்னையெனு மாணவமே யற்றவுயிர்த் தோழியா
முன்னை யிருவினையா மொய்குழலீ—ரென்னுரிமை
யாளனுடன் மெய்யறிவை யன்பாணு ளங்கவடான்
மீளவிடாண் மீளீர் விரைந்து. ௫௧

என்னை யழகாக வின்றளவு மொப்பித்தே
மன்னவனும் போதனுடன் வாழ்வித்தே—னன்னையெனு
மோவாத வாணவத்தாட் குற்றதிரோ தான
மாவாளே கெட்டே னற. ௫௨

தள்ளியெனைக் கைவிட்டுச் சத்தியப்பெண் டன்னுடனே
யுள்ள படியா யுருவழிந்தா—யெள்ளளவுஞ்
சார்வற்ருய் தாரணியோர் தம்வாக்காற் பேயென்னும்
பேர்பெற்ரு யென்பெற்ருய் பின். ௫௩

சத்த முதலாய தத்துவங்கா ளீயோபோ
மித்தனைபே ருக்கொருவ னெட்டானோ—வத்தனையோ
வென்றனைநே ரானபடி யெல்லீரு மொய்த்திரோ
நன்றுநமக் கிதோர் நகை. ௫௪

எல்லீரும் பற்றி யெறும்பிடைநாங் கூழ்போலென்
னில்லானைச் சென்றெரிக்க வெய்திரோ—புல்லிப்
பெறுமாபோற் சேதனன்பாற் பெண்பிள்ளை வாழு
மிறுமாப் பெலாம்போக வே. ௫௫

மெய்யறிவை வாழ்வொழிய வேறறியான் போதனினி
யையவத்தை நாம்பட்டா லாம்பயனென்—செய்யுநெறி
கேளீ ரவனுசை கெட்டுவிடும் புத்திரரே
மீளீ ருயிர்த்தோழி மீர். ௫௬

ஆணவமா மன்னையே யான்மாவா மென்றுணைவன்
காணவே வேண்டாமற் கைகழன்ருன்—வீணுக்கு
மாயவினி வேண்டாநாம் வாரீரோ வாழாப்பெண்
டாயுடனே யல்லவே தான். ௫௭

கற்றவெலா நீமறந்து வெற்றுடம்பாய்க் கற்பனையோன்
றற்றவெறும் பாழை யறிந்தழிந்து—பற்ருெழிக்குஞ்
சிற்பாவை தன்னுடனே சேர்ந்துபெருப் பேறெல்லாம்
பெற்ருயோ போதாநீ பின். ௫௮

நான்பெற்ற பேறுகாண் ஞானமே நீபெறுவாய்
தான்கெட்டு நின்ற தனிப்புதல்வ—னுன்கட்டுங்
கட்டெலா நீக்கியெனைக் கைகழன்றாற் போலுனையும்
விட்டெலா மாவான் விதி. ௫௯

ஆமாறு நின்றவிரு ளென்னையே நீங்காமற்
றீமாயை யென்றென்னைத் தான்செலுத்து—மாமாயைக்
கைத்தாயே நல்லவளங் காணச்சேர் மூவருநா
மொத்தோமின் றென்றுயி னேம். ௬௰

பொய்யடங்கச் சொல்லிப் புதியாரைப் போற்பழைய
வையகத்துக் காகாமல் வந்தவிவன்—மெய்யுறவா
யித்தனைநாள் வந்த வெனக்குமிவர்க் குஞ்சன்ம
சத்துருவே காணுமிவன் றான். ௬௧

அறியாமை யென்போமோ வாங்கறிவென் போமோ
வறியா வறிவுதா னுகிச்—செறிவொழியத்
தன்செய்தி யொன்றுமிலா வொன்றான தன்மையனை
யென்சொல்லி வாழ்த்துகோம் யாம். ௬௨

உற்றபெருங் கேடு கெடுவா யுருவழிவாய்
வெற்றவெறும் பாழாவா யென்றழன்று—சொற்றவெலாந்
தன்பேரிற் றிட்டென்று தாங்காம லித்தனையு
மென்பேரென் றானே யிவன். ௬௩

எத்தனையும் யானென்று லென்போதன் புண்ணுறுவே
லொத்தலறி நின்றுதறி யொன்றானே—யித்தனையு
மெய்ம்மாது பண்ணுவித்த வித்தார வல்லபமோ
வெம்மாய மென்றறியேன் யான். ௬௪

என்கா ரியமடங்கப் பொய்யாமா மின்றினையா
டன்கா ரியக்கேடு சத்தியமா—நின்காதல்
சந்தமலி வேதகத்தாற் சார்போதா நீபகர்ந்த
விந்தவுரைக் கென்னியம்பு கேன். ௬௫

இன்பமே யாமவள்பா லெய்திலெமை யெய்துங்காற்
றுன்பமே யாமென்னத் தான்சொல்லி—யன்பாள
னுண்ணெகிழ்ந்து போதையுட னெத்திரண்டுங் கெட்டவளை
யெண்ணூமக் கென்கா ரியம். ௬௬

போனான் பரதேசம் போதையுட னென்போத
ஞனதை யின்பவுரு வாகித்தான்—ஞான
யொழிந்தோ வொழிவறநின் றென்றாகி யுற்றுற்
றழித்தோ வுறுப்பறையா னான். ௬௭

என்பாலா மின்ப மெடுத்துரைப்பை யார்க்குமவ
டன்பாலா மின்பொருகாற் சாற்றாயோ—வன்பாகத்
தீதொன்றும் வாராமற் செய்தநான் பட்டபா
டேதென்று சொல்வா யினி. ௬௮

ஓரிடத்தா னென்றவனோ டொன்றவோ வொன்றிலவன்
பேரிடத்தா னென்றவனைப் பின்செலவோ—தீர்விடத்திற்
கொண்டதுகொள் ளானுடனே கூட்டற்ற நட்பையெலாங்
கொண்டவர்தா னென்பெறநீ கூறு. ௬௯

உன்வாழ்விற் கண்ணீர் சொரியவுரோ மஞ்சிலிர்ப்ப
தென்வாழ்விற் கண்டறியே னீதுரையா—யுன்வாழ்வைத்
தீர்த்தபோ தந்தீர வென்னுடனே கூடியுனைப்
பார்த்தபோ துள்ள பயம். ௭௰

நேராத நானழிந்து நீக்கம் பொருதவளாய்ச்
சாராத சார்வாகிச் சார்வுதொறு—மோருயிராய்த்
தன்னளவி னனிருக்கத் தான்போய்க் கணிகையர்போ
லென்னளவி லாயினா ளின்று. ௭௧

உருவாதி நால்வகைக்கு மோர்முதலாய் வாழ்வு
தருவானென் போதனவன் றன்னை—யொருவன்
றமராகு நானென்று சாற்றியிட வென்னோ
டமராநட் பான னவன். ௭௨

என்னளவி லென்போதா விப்போது நீர்க்கிடையு
மன்னிடமா மங்கணத்தி லாழ்புழுவும்—பின்னமற
மோதலைநீர் சேர்முளரிப் பத்திரமு மோரினவ
ணீதமும்போ லாவதே நீ. ௭௩

என்னை யறியாமை யென்றறிந்து மின்பிலியென்
றன்னை யறிந்தகன்று முற்றதுகே—ளுன்ளறவி
லன்பைத்தா னுங்கழற்றி நம்போத னாப்பே
ரின்பத்தாள் கைப்படவோ வின்று. ௭௪

இன்பத்தாள் கேளாயிங் கேனை யிருவருக்கும்
பின்பற்றுற் போனுனையும் பின்பாரா—னன்பாளன்
புல்லிடைங் தந்தத்தே போய்விடுவன் முன்புபோ
லெல்லையிடப் பட்டவனே யின்று. எ௫

என்னபிழை சொல்வோ மிருவர்க்கு மின்றளவாய்
மன்னு பதியாகி வந்ததுபோ—யுன்னையும்விட்
டெண்ணுதே யானந்த னென்பானுக் கெல்லையறப்
பெண்ணுனு னென்னவன் பின். எ௬

ஆணுமலை பெண்ணுமலை யன்றிவனை யென்றொருவன்
காணவெளி யேவந்து கட்டுரைத்தான்—வாணுதல்கே
ளப்பொழுதே யென்னோடு வாழ்வொழிந்தா னந்தவுரை
தப்பா திருப்பதே தான். எஎ

என்னே யிருவரும்விட் டிங்ககன்றோ மின்பத்தா
டன்னோடு தன்னுறுதி தற்போதன்—முன்னை
யிருவருமொன் றாயே யிருப்பதலா லுண்மைக்
கிருவரு மில்லை யினி. எஅ

அற்றநிலை யாணவமா மன்னையே தவ்வையா
முற்றதிரோ தான வுறுதுணையே—முற்றுமது
சங்கேத நாணமெலாம் போதனெனைத் தள்ளிவிட
வங்கேபோய் விட்டா னகன்று. எ௯

மெய்ம்மையெனும் பேர்பெற்ற மெல்லியலே யின்றுநாம்
பொய்ம்மையற வொன்றுகிப் போயிழந்தோ—நம்மிடத்தே
நண்ணியவ னீயென்று நானென்றும் வேருகப்
பண்ணியதென் றுவுளவோ பார். அ௰

நானெங்கே நீயெங்கே ஞானமே நம்போதன்
றனெங்கே மேல்கி ழுறத்ததும்பி—யானந்தம்
போதே பேதமாம் பெத்தக் கரையிடித்திட்
டோராறே யோத்தா லுரை. அக

தண்காழிச் சம்பந்தன் றண்டைத்தா ளின்பயனைக்
கண்காள் பருகிக் களியிரோ—நன்பாக
வந்தவிருண் மாயையார் வாழ்வையொழித் தப்பொழுதே
தந்திடுமே பேரானந் தம். அஉ

மெய்யே மனிதரைப்போன் மேதினியில் வந்தொருவன்
செய்யாது செய்தானென் செப்புகேன்—வையக்
கருவழிய நானழியக் கற்பழியப் போத
னுருவழியப் பார்த்தானே யுற்று. அ௬

மாயாப்பிரலபம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

காழிக் கண்ணுடைய வள்ளலார் கமலபதம் வாழ்க.

மதிப்புரை

"சேக்கிழார்"—

1930-ம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் சென்னைச் சர்வ கலா சங்கத்தாரின் ஆதரவில் சேக்கிழார் பெருமானைப்பற்றிய மூன்று அரிய சொற்பொழிவுகள் கோவை. வழக்கறிஞர் திருவாளர். C. K. சுப்பிரமணிய முதலியார் B.A., F.M.U., அவர்களால் பச்சையப்பன் கல்லூரியில் நிகழ்த்தப்பட்டன. அவைகளை ஒழுங்குபடுத்தித் திரு. முதலியாரவர்கள் நூல் வடிவில் அச்சேற்றி வெளியிட்டுள்ளார்கள். தில்லைவாழந்தணரே முதலாகச் சீர்படைத்த தொல்லையதாம் திருத் தொண்டத் தொகையடியார்களின் வரலாறுகளை உலகறிய விரித்துரைத்து அவர்தம் பெருமைகளை நிலைநாட்டிய தனிப்புகழ் சேக்கிழார் பெருமானுக்கே உரித்தாகும். தமிழ்நாட்டிலுள்ள ஓராயிர மாண்டுகட்கு முன்பேயே வரலாற்று நூலெழுதவல்லார் இருந்துளா ரென்பதற்கு எடுத்துக்காட்டாகச் சேக்கிழா ரியற்றிய "திருத்தொண்டர் புராணம்" நின்று நிலவுவது நந்நாட்டினர் செய்த தவப்பயனே யாம்.

அத்தகைய அரும்பெரும் நூலைத் துருவித் துருவிப் பல்லாற்றானும் ஆராய்ந்து (1) "பெரிய புராண ஆசிரியரும் அவர் காலமும்" (2) "பெரிய புராணமும் அதன் கலைஞானங்களும்" (3) "பெரிய புராணம்—கவிச் சிறப்பும் பயனும்" என்ற மூன்று பெரும் பிரிவுகளாகப் பகுத்துக்கொண்டு ஆழ்ந்தகன்ற தம் கருத்து முடிபுகளை எத்திறத்தாரும் ஒப்புமாறு திரு. முதலியாரவர்கள் வெளியிட்டுள்ளார்கள். காய்த லுவத்தல் என்ற இரு குற்றங்களு மில்லாதவகையில் பண்டையதா மிப்பனுவலை ஆராய்ச்சிக்

கண் கொண்டு அணுவணுவாய்ப் பகிர்ந்து சீர்தூக்கிக் குற்றங் களைந்து குணம் விளக்கிய இந்நூல் திரு. முதலியாரவர்களின் கல்விமேம்பாடு, ஆராய்ச்சித்திறன், நடுவுநிலைமை ஆகிய இவற்றை நன்கு விளக்குவதாகும். இந்நூலில் "பெரிய புராணம் என்ற பெருங் கடலினுள்ளே குளித்துத் திளைத்து அதனுட் பெறுபயன் யாவுந் தேர்ந் தெடுத்துக் கொடுத்துள்ளார் ஆசிரியர் சுப்பிரமணிய முதலியாரவர்கள்" என்று தேர்ந்த ஒரு ஆராய்ச்சி வல்லுநர் இந்நூலைப்பற்றி யெடுத்துக் கூறுவாராயின் யாம் மேலுங் கூறுதல் வேண்டுமோ ?

கடவுளின் இறைமைக் குணங்களிலேயே குற்றங் கண்டு பிடித்துக் கூறுவது ஆராய்ச்சி யறிவென்று போலிப் பெருமை பாராட்டு மிக்காலத்தில் அறிவுமிக்க பலரும் ஏற்றிப் போற்று மாறு திரு. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் எழுதிய நூலில் மொழிக்குற்றமும் எழுத்துக் குற்றமுங் காண ஒரு சுப்பிரமணிய சாஸ்திரியார் முன்வந்தது இயல்பே யாம். சாஸ்திரியா ரவர்கள் தமிழ் மொழியின் தூய்மையைக் காப்பாற்றக் கருதி இவ்வாறு தீரமாய்க் குற்றங்கூற முன்வந்துள்ளார்கள் போலும்! அற்றாயின் இருபதாம் நூற்றாண்டு "நக்கீரர்" சாஸ்திரியாரவர்கள் என்று சொல்லத் தமிழ்மொழிப் பற்றுடையார் பின்வாங்காரென்றே ஒரு வகையில் நம்புகிறோம்! தமிழ்த் தாயே! சாஸ்திரியாரவர்களைப்போன்ற தூய்மை விழைவோரை அன்பராய்க் கொண்ட உன் பெருமைதா னென்னே! நிற்க, மதிக்கும் மறுவுண்டென்பதை யறிந்தும் "திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்" என்று குறைவு நீக்கிக் குணங்கொள்ளும் பண்புடைய தமிழ் மக்கள் சாஸ்திரியா ரவர்கள் அரும்பாடுபட்டு எடுத்துக்காட்டியுள்ள குற்றங்கள் உளவென்று ஒப்புக்கொண்டாலும் நூலின் குணவிசேஷம் நோக்க அக் குறைவுகள் கொதுகனைய என்று ஒதுக்கி ஆராய்ச்சி யணிகலமாயும், தமிழுக்கும் சைவத்திற்கும் நல்லொழுக்கத்திற்கும் ஒருபடித்தாய்ப் பெருமை யளிக்க வல்ல கருவூலமாயும் விளங்கும் இவ்வழகிய நூலை வாங்கிப்படித்து இன்புறுவார்களென்பது திண்ணம். நூலின் விலை ரூ 1-8-0.
